1972 ஆகஸ்ட் 11]

வியாழக்கிழமை காலை 11 மணிக்குள் சட்டப்பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 17—8—1972 வியாழக்கிழமை, மாலை 3 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 18—8—1972, வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது நான்கு இடங்களுக்கு மேற்படுமாயின் 19—8—72 சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்குமிடையே சென்னை கோட்டையிலிருக்கும் உறுப்பினர்கள் ஓய்வறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

3. அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மைத் தீர்மானமும், அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, டாக்டர் ஹாண்டே அவர்கள் கொடுத்திருக்கும் அமைச்சரவைமீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதும், திரு. தங்கமணி அவர்கள் கொடுத்திருக்கும் அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தின் மீதும் மூன்றும் நாளாக இன்றும் விவாதம் தொடர்ந்து நடைபெறும்.

இந்த நேரத்தில் மன்றத்திற்கு ஒன்றைக் கூறுவது பொருத்தமுடையதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான விவாதம் அலுவல்குழுவின் நிர்மானப்படி நாளையோடு முடிவுற வேண்டும். அப்படி முடிவுறுவதானால் நம்மிடத்தில் இன்னும் 6½ மணி நேரம் தான் உள்ளது. ஆனால் இன்னும் நிறையபேர் பேசவேண்டியிருக்கிறது. இந்த நேரம் போதாது. எனவே, இன்றைக்கு மாலையிலும் இந்த மன்றத்தை வைத்துக்கொள்ளலாம் என்று எதிர்க் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடாரும், திரு. தங்கமணி அவர்களும், திருமதி அனந்தநாயகி அவர்களும் என்னிடம் தெரிவித்தார்கள். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், அவை முன்னவர் அவர்களையும் கேட்டு, அதுபற்றி தெரிவிப்பதாகச் சொன்னேன். அவர்களிடம் கேட்டதில் முதலமைச்சரவர்களும், அவை முன்னவர் அவர்களும் இன்று மாலை 4 மணி முதல் 7 மணி வரை இந்த மன்றத்தை நடத்துவதற்கு இசைவு தெரிவித்துள்ளார்கள். எனவே மன்றத்தின் நிகழ்ச்சிகள் இன்று காலையிலிருந்து மாலை 1½ மணி வரையிலும், பின் மாலை 4 மணியிலிருந்து 7 மணி வரையிலும் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நானைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்ற டாக்டர் ஹாண்டே அவர்களும், திரு. தங்கமணி அவர்களும் பேசுவதோடு விவாதம் முடிவுறும்.

எல்லோருமே இந்த விவாதத்தில் பங்குகொள்ள வேண்டுமென்று விரும்புவதால் மன்றத்தின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். பொதுவாக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டாலும், அல்லது வேறு எந்தத் தீர்மானம் கொண்டு வந்தாலும் இந்த இந்தக் கட்சிக்கு இவ்வளவு இவ்வளவு நேரம் ஒதுக்குவது என்ற மரபு இருக்கிறது. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் இருந்தாலும், எதிர்க் கட்சிகளுக்குப் பாதி நேரம், ஆளும் கட்சிக்குப் பாதி நேரம் ஒதுக்குவது என்பது விதிமுறையில் இல்லாவிட்டாலும் மரபாக இருக்கிறது. அந்த மரபின்படி கழிந்த இரண்டு நாள் விவாதத்தில்—ஆறு ஆறரை மணி நேரத்தில்—ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களில் திரு. அரங்கண்ணல் ஒருவர்தான் பங்குகொண்டிருக்கிறார். எதிர்க் கட்சியிலுள்ள எல்லோரும் இந்த விவாதத்தில் பேசவேண்டுமென்று விரும்புகிறார்கள். என்றாலும் அவர்களுக்கே அதிக நேரம் ஒதுக்குவது முறையாகாது. எனவே, இருக்கின்ற மரபின்படி இன்று இந்த விவாதத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் நேரத்தில் ஆளும் கட்சிக்குப் பாதி நேரமும், மற்ற கட்சிகளுக்குப் பாதி நேரமும் ஒதுக்க விரும்புகிறேன்.

இப்போது என்னிடம் 22 பேர்கள் இந்த விவாதத்தில் பங்குகொள்ள பெயர் கொடுத்திருக்கிறார்கள். அதிலே சில தலைவர்களின் பெயர் இல்லை. இன்று காலையில் மட்டும் சட்டமன்றம் நடப்பது என்றால் இருக்கிற மூன்று மணி நேரத்தை ஒதுக்குகிறபோது 183 பேர்களைக் கொண்ட தி.மு.கழகத்திற்கு 1½ மணி நேரமும், 13 பேர்களைக் கொண்ட காங்கிரஸ் (ஓ)வுக்கு 20 நிமிடமும், 8 பேர்களைக்கொண்ட சி.பி.ஐ-க்கு 20 நிமிடமும், பார்வேர்டு பிளாக்கிற்கு 15 நிமிடமும், முஸ்லீம் லீகிற்கு 10 நிமிடமும், சுதந்திராக் கட்சிக்கு 10 நிமிடமும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கு 15 நிமிடமும் வரும்.

ஆனால் இன்று மாலையும் மூன்று மணி நேரம் இந்த மன்றம் நடைபெற இருப்பதால் இந்த விவாதத்திற்கு இன்றைக்கு 6 மணி நேரம் கிடைக்கிறது. எனவே, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 3 மணி நேரமும், காங்கிரஸ் (ஓ)வுக்கு 40 நிமிடமும், சி.பி.ஐ-க்கு 40 நிமிடமும், பார்வேர்டு பிளாக்கிற்கு 30 நிமிடமும் முஸ்லீம் லீகிற்கு 20 நிமிடமும், சுதந்திராக் கட்சிக்கு 20 நிமிடமும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கு 20 நிமிடமும் ஒதுக்கலாம் என்று இருக்கிறேன். அதோடு தமிழரசு கழகத்திற்கும் கொஞ்சம் நேரம் ஒதுக்கப்படும். இப்படி நேரம் அதிகமாக்கப்பட்டிருப்பதால், இன்றைய விவாதத்தில் யார் யார் பங்கு கொள்ள இருக்கிறார்கள் என்பதற்கு அந்தந்தக் கட்சிக்காரர்கள்

கூடி, இன்னும் 15 நிமிடங்களுக்குள்—என்னிடம் கொடுக்கப்பட்டுள்ள 22 பேர்கள்—பட்டியலில் திருத்தம் செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். நீங்களே ஒரு ஒழுங்கை ஏற்படுத்திக்கொண்டுவிட்டால் என் பேரில் யாருக்கும் குறை வராது.

பேசுகிற உறுப்பினர்களும் ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள், தங்கள் உரையை முடித்துக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். ஒதுக்கப்பட்ட நேரத்திற்கு அதிகமாக யார் சென்றாலும்—ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், கட்சித் தலைவர்களாக இருந்தாலும், அமைச்சர்களாக இருந்தாலும்—மாண்புமிகு முதல் அமைச்சரைத் தவிர, காரணம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட நேரவரம்பை மீறுவதில்லை, அவர்களுடைய திறமையையும் ஆற்றலையும் நாம் அறிவோம்—யாராக இருந்தாலும் அனுமதிக்கமாட்டேன்; மணி அடித்து விடுவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு உறுப்பினர்கள் பேசும்போது அவசியமானால் ஏதாவது விபரங்களை அளிப்பதற்கு அமைச்சர்கள் குறுக்கிடலாமே தவிர, மற்ற நேரங்களில் குறுக்கிட வேண்டாமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர்களே, இன்றைக்கு மாத்திரம் ஆளும் கட்சியினர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மூன்று மணி நேரத்தில் ஒரு மணி நேரத்தைக் குறைத்துக்கொண்டு, அந்த ஒரு மணி நேரத்தை எதிர்க் கட்சிகளுக்கு வழங்க நான் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சரின் இந்த தாராள மனப்பான்மைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதேமாதிரி மற்றக் கட்சிகளும் தங்கள் தங்கள் கட்சியில் இருந்து பேச இருக்கிற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைத்துக்கொண்டு, அவர்கள் கட்சி சார்பாக பேசுகிறவர்களுக்கு கொஞ்சம் அதிக நேரத்தைக் கொடுக்கும் வகையில் இன்னும் 15 நிமிடங்களுக்குள் என்னிடம் கொடுத்திருக்கும் பெயர் பட்டியலை திருத்தி கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி க. ந. அனந்தநாயகி: கனம் சபாநாயகர் அவர்களே, இந்திய தேசிய காங்கிரசுக்கு நீங்கள் ஒதுக்கியிருக்கிற நேரம் 20 நிமிடம்தான். அதற்குள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது எதைப்பற்றி, எத்தனை பேர் பேச முடியும்? நேற்றைக்கு திரு. தங்கமணி அவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும் மணிக்கணக்கில் பேசினார்கள். ஆகவே, கொஞ்சம் அதிகமாக எங்களுக்கு நேரம் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஆளும் கட்சியிலிருந்து ஒரு மணி நேரத்தை நாங்கள் கொடுக்கிறோம். அதுவும் இன்றைக்கு மட்டும்தான். அதில் கொஞ்ச நேரத்தை இவர்கள் பயன்படுத்திக் கொள்ளட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாராளமாக நடந்துகொண்டிருக்கிறார்கள். அதற்கு அவர்களுக்கு தன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்த ஒரு மணி நேரத்தில் கொஞ்ச நேரத்தை இந்திய தேசிய காங்கிரசுக்கு ஒதுக்குகிறேன் ; தாராளமாகப் பேசுங்கள். இது என்னுடைய தீர்ப்பு.

அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நேரத்திற்குள் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் உரையை முடித்து, என்னோடு ஒத்துழைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்போது முதலில் முஸ்லீம் லீகைச் சேர்ந்த திரு. லத்தீப் அவர்களைப் பேச அழைக்கிறேன். அவர் ஐந்து நிமிடத்திற்குள் தம் பேச்சை முடித்துக்கொண்டால் நல்லது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, ஒரு சின்ன விளக்கம் கேட்க விரும்புகிறேன். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு 3 மணி நேரம், எதிர்க் கட்சிகளுக்கு 3 மணி நேரம் என்று ஒதுக்கி இருப்பதாகச் சொன்னீர்கள். எதிர்க் கட்சியில் உள்ளவர்களில், நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆளும் கட்சியோடு சேர்ந்து எதிர்க்கிறவர்களையும் சேர்த்து 3 மணி நேரம், நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரிக்கிறவர்களுக்கு 3 மணி நேரம் என்று ஒதுக்கி இருக்கிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளும் கட்சி என்றால் தி.மு.க.வை மட்டும்தான் குறிக்கும். ஆளும் கட்சி என்று சொல்லும்போது அதில் தோழமைக் கட்சிகள் சேர்மாட்டார்கள். ஆளும் கட்சிக்கு பாதி நேரம் என்றும், ஆளும் கட்சிக்கு அப்பாற்பட்ட கட்சிகளுக்கு பாதி நேரம் என்றும் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நீங்களே கூட நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை முடிவில் எதிர்க்கலாம். எப்படியும் நான் ஒதுக்கி இருப்பது, நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரிப்பவர்கள், எதிர்ப்பவர்கள் என்று அல்ல.

THIRU K. KANDASWAMY : Sir, on a point of clarification. For the Forward Block no opportunity was given yesterday and day before yesterday for participation in the debate. So, I request the Hon. Speaker to generously allot more time for it to-day.

1972 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பார்வேட் ப்ளாக் கட்சியின் சார்பில் 2 பேர்கள் பேச முன்வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு அரை மணி நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்களது "அதிக நேர நீதியில்" இருந்தும் கொஞ்சம் அனுமதிக்கலாம். இப்போது திரு. லத்தீப் அவர்கள் தம் பேச்சைத் தொடர்வார்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: நேற்றையதினம் நான் பேசுகின்றபோது நாட்டில் வன்முறை நடைபெற்றால் எந்த அரசும் அதைப் பார்த்துக் கொண்டு இருக்காது. நாட்டில் அமைதியை நிலைநாட்ட ஒவ்வொரு அரசும் கடமைப் பட்டிருக்கிறது. அதற்காகச் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். ஒரு சில சம்பவங்களைப் பற்றியும் நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சூலை 5 ஆம் தேதி கோவையில் நடைபெற்ற நிகழ்ச்சி எந்த அளவுக்கு வன்முறைகள் கையாளப்பட்டன என்பதற்கு எடுத்துக்காட்டு. கோவையில் சில முஸ்லிம் பெருமக்கள் தங்கள் தங்கள் கடைகளைத் திறந்துவைத்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். ஒரு ஜவுளி கடை—ஒரு முஸ்லிம் பிரமுகருக்குச் சொந்தமானது. அவர் சேலைகளையும், மற்ற ஜவுளிகளையும் வெளியில் அலங்காரமாகத் தொங்கவிட்டு—கடையைத் திறந்து வைத்திருக்கிறார். அந்தக் கடையில் மாட்டப்பட்டிருந்த சேலைகளை, துணிகளை எல்லாம் பறித்து, எறிந்து கடைக்குள்ளும் வைக்கப்பட்டிருந்த துணிகளை எல்லாம் சூறையாடி, அங்கிருந்து கடை சம்பந்தப்பட்டவர்களை கடையில் இருந்து வெளியேற்றிருக்கிறார்கள். இப்படி கோவையில் மட்டுமல்ல பல இடங்களில் நடைபெற்று இருக்கிறது.

அதுமட்டுமல்ல, ஊர்வலமாக வந்தவர்கள்—கோவையில் கோட்டைப் பகுதி என்கிற இடம் இருக்கிறது—அங்கே முஸ்லிம் பெருமக்கள் தான் அதிகமாக வசிக்கிறார்கள்—அவர்களது வீடுகளை எல்லாம் கற்களால் தாக்கியிருக்கிறார்கள். அங்கே ஒரு விறகுக் கடை இருக்கிறது, முஸ்லிம் பெருமக்களுடைய கடை—அங்கே இருந்த கட்டைகளை எல்லாம் எடுத்துக் கொண்டு அங்கே இருந்த மேசை நாற்காலிகளை உடைத்தெறிந்திருக்கிறார்கள். கடையில் வைத்திருந்த நாற்பது அறுபத்தாறு ரூபாய் சில்லரையை எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அது மட்டுமல்ல—திருநெல்வேலி, ஆத்தூர் பகுதியில் குறிப்பாக முஸ்லிம்கள் வாழக் கூடிய பகுதியில் . . . . .

திரு. என். மருதாசலம்: சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். சவ ஊர்வலத் தின்போதுதான் சோடா புட்டிகள் எல்லாம் வீசப்பட்டனவே தவிர மறியல் அமைதியாகத்தான் நடந்தது—அதுவும் விவசாயப் பெருமக்கள் ஏதோ

[திரு. என். மருதாசலம்] [1972 ஆகஸ்ட் 11

முஸ்லிம் பெருமக்களுக்கு விரோதமாக காரியங்களைச் செய்தது போலச் சொல்கிற தகவல்கள் எல்லாம் சரியானது அல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். வன்முறையைத் தூண்டிவிட்டதே தி.மு.க. தொண்டர்களும், முஸ்லிம்களும்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு உறுப்பினர்தான் உண்மைக்கு மாறுகச் சொல்கிறார்கள். என் இதைச் சொல்கிறேன் என்றால் சாதாரண விவசாயிகளது போராட்டமாக இது இல்லை—விவசாயிகள் இதுபோன்ற காரியங்களைச் செய்தார்கள் என்றும் சொல்லவில்லை. விவசாயிகள் என்ற பெயரால் சமூக விரோத சக்திகள் இதுபோன்ற வன்முறைச் செயல்களில் இறங்கி நாட்டின் அமைதியைக் குலைக்க முற்பட்டுவிட்டன. எதிர்க் கட்சிகள் ஆட்சியை மாற்ற நியாயமான முறைகளைக் கையாளக்கூடாது என்று சொல்லவில்லை. இன்றைக்கு எதிர்க் கட்சிகளாக இருக்கிறவர்கள் நாளை ஆட்சிக்கு வரலாம், ஆனால் ஆட்சியில் உள்ள ஒரு கட்சியை பலாக்காரத்தின் மூலம், வன்முறையின் மூலம் அகற்றிவிடுவதற்கு இதுபோன்ற தீய முயற்சிகள் மேற்கொள்வது என்று வந்துவிட்டால் நாட்டில் ஜனநாயகமே தேவையில்லை.

* * *

அரசு தவறுக நடந்துகொண்டால் அதை எடுத்துச் சொல்லி கண்டிப்பதற்குத்தான் எதிர்க் கட்சிகள் இருக்கின்றன. அதை நியாயமான முறைகளில் எடுத்துச் சொல்லி காரியங்கள் செய்வார்களானால் நாங்களும் அதற்கு ஆதரவு கொடுக்கத் தயாராய் இருக்கிறோம். ஆனால் வன்முறைச் செயல்களில் ஈடுபடுவது, தவறான குற்றச்சாட்டுகளை எல்லாம் மூன் வைப்பது என்பது சரியல்ல என்று சொல்ல விரும்புகிறேன்.

இன்னும் சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். என்றாலும் போவைத் தலைவர் காலம் பற்றி கடுமையான கட்டளை பிறப்பித்திருக்கிற காரணத்தினால் ஒரே ஒரு கருத்தைச் சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன். விவசாயிகளுக்கு நாங்கள் பாதகமானவர்கள் அல்ல. அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை எல்லாம் நாங்களும் ஆதரிக்கிறோம். ஆனால் வன்முறையை எற்படுத்தி அதன்மூலம் நாட்டில் அமைதியைக் குலைத்து, செம்மையான முறையில் நடைபெற்று வருகிற ஆட்சியைக் குலைக்க தீய சக்திகள் முற்பட்டால் அதற்கு நாங்கள் சாதகமாக இருக்க முடியாது. அந்த மாதிரியான போக்கு வளருமானால் இந்த நாட்டிற்கு ஜனநாயகமே தேவையில்லை . . . . . (மணி அடிக்கப்பட்டது)

---

* மாண்புமிகு போவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

1972 ஆகஸ்ட் 11] [திரு. என். மருதாசலம்]

திரு. கே. என். குமாரசாமி : அவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கட்சியின் சார்பாக இந்த அமைச்சரவையின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்ததை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

காரணம், கடந்த ஏப்ரல் மாதத்திற்குப் பின்னர் மே மாதத்தில் இருந்து தமிழ்நாட்டிலே அரசாங்கத்தின் செயல்கள் மிகவும் மாறுபட்டே வந்திருக்கிற தீலைமைகளை இந்தச் சபையில் உள்ள ஒவ்வொரு அங்கத்தினருடைய கவனத் திற்கும் கொண்டுவர விரும்புகிறேன். நாம் ஜனநாயகத்தை ஏற்றுக்கொண்ட வர்கள். சட்டசபை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் கையில் இருக்கிறது. விவசாயிகள் தங்களுடைய கோரிக்கைகளை எடுத்து வைத்தபோது முதல் அமைச்சர் அவர்கள் கடந்த ஏப்ரல் மாதத்திலே விவசாயிகளுடன் பேசி கிட்டத்தட்ட நான்கு பிரச்சினையில் முடிவு செய்துகொள்ள முடியும், பாக்கி இருக்கக்கூடிய பிரச்சினைகளை கொள்கை அளவில் ஏற்றுக்கொள்வதாகப் பத்திரி கையில் அறிக்கை விடுத்தார்கள். அந்த அறிக்கை வெளியிடப்பட்டதற்குப் பின்னாலே கடந்த மே மாதம் முதல் தேதியன்று பொள்ளாச்சியிலே நடந்த கூட்டத்திலே, மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கமாட்டோம் என்று முதலமைச்சர் அவர்கள் கூறியதன் விளைவுதான் இந்தப் போராட்டம் ஏற்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எந்த முதலமைச்சர் பிரச்னைக்கு முடிவுக்கு வந்துவிட்டு பிறகு மே மாதம் முதல் தேதியன்று அதை மறுத்ததற்குப் பிறகுதான் போராட்டமே தோன்றியது. அதற்குப் பிறகு மே மாதம் 19-ஆம் தேதியன்று விவசாயிகள் போராட்டத்தைத் துவங்கினார்கள். கிட்டத் தட்ட அதிலே ஆயிரம் இரண்டாயிரம் பேர்களை கைதுசெய்தார்கள். விவசாய சங்கத்தைச் சேர்ந்த அத்தனை தலைவர்களையும் சிறைசெய்து விட்டார்கள். நான் பார்த்திருக்கிறேன், கடந்த இருபத்தைந்து ஆண்டுக் காலமாக 151 பாதுகாப்புச் சட்டப்படி கைதுசெய்வது முக்கியமான சில தலைவர்களைத்தான் கைதுசெய்வார்கள். ஆனால் அன்றைக்கு சாதாரண விவசாயிகளையெல்லாம் கைதுசெய்து, போலீசார் மூலம் இந்த இயக்கத்தை எப்படியாவது தகர்த்திவிட வேண்டுமென்ற அளவிற்கு சிறையில் போட்டார்கள். எந்தவிதமான பிரச்னை களும் இல்லை என்று ஆக்கிவிடவேண்டுமென்ற அளவுக்கு அடக்குமுறை அவிழ்த்துவிடப்பட்டது. அதற்குப் பிறகு மே மாதம் 27 ஆம் தேதி பெரிய அர்த்தால் நடந்தது. ஒரு நாள் அர்த்தால் நடைபெற்றது. அவ்வளவுதான். மறுநாள் வழக்கம்போல் வேலை தொடங்கப்பட்டது. மறுநாளும் நினைத்திருப் பார்களானால் அவர்கள் செய்திருக்கலாம். ஆனால், அவர்கள் அப்படிச் செய்ய வில்லை. காரணம், மக்களிடையே இருந்த உணர்வை மதித்தார்கள்.

[திரு. கே. என். குமாரசாமி] [1972 ஆகஸ்ட் 11

ராஜாஜியினுடைய, முதலமைச்சர் மீது மத்தியப் புலனுய்வு அறிக்கையை வெளியிட வேண்டுமென்ற அறிக்கையை, கண்டிக்க வேண்டுமென்ற முறையிலே சூன் மாதம் இரண்டாம் தேதி நடைபெற்ற கண்டனக் கூட்டத்திலே என்ன பேசப்பட்டது. அங்கே அன்றைக்குப் பெண்கள் தலைமைதாங்கி ஊர்வலம் வந்தது. ஆனல் அவர்கள் ராஜாஜியைக் கண்டிக்கிற அளவுக்கு ஊர்வலம் நடத்தினர்கள் என்ருல் அதைப்பற்றி நாம் கவலைப்படவில்லே. அமைதியாக ஊர்வலம் நடத்தவில்லே. அந்த ஊர்வலத்திலே வந்தவர்கள் ஆயுதங்களேத் தாங்கி வந்தார்கள். விவசாயிகள் ஸ்தாபனத்தை அந்த ஆயுதங்களேக் கொண்டு தாக்கினர்கள். அலேலுசை, குமுதம் போன்ற பத்திரிகை இடங்களே ஆயுதங்கள் கொண்டு தாக்கினர்கள். அன்றைக்கே பலாத்காரமான சூழ்நிலே ஆரம்பிக்கத் தொடங்கிவிட்டது. ஒவ்வொரு ஜில்லாவிலும் சூலே 2 ஆம் தேதியோ அல்லது அதற்கு முன்போ செயல்வீரர்கள் கூட்டம் என்ற அளவிலே நடத்தினர்கள், அதன்மூலம் அவர்கள் வன்முறைகளேத் துவங்கினர்கள். ஆனல் விவசாயிகள் அமைதியான முறையிலே போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தார்கள். தொடர்ந்து அந்தப் போராட்டம் 48 நாட்கள் எந்த வன்முறையும் இன்றி நடந்தது. ஆகவே விவசாயிகள் வன்முறையாளர்கள் என்று கூறுவதற்கான எந்தவிதமான ஆதாரிட்டியும் கிடையாது. சூன் மாதம் ஒரு போராட்டம் நடந்தது. அதிலே கிட்டத்தட்ட 15 ஆயிரம் பேர்கள் கைதுசெய்யப்பட்டார்கள். சூன் மாதம் 7 ஆம் தேதி 15 ஆயிரம் விவசாயிகள் வண்டி ஊர்வலம் நடத்தினர்கள். வண்டிகளே விட்டுவிட்டு அவர்கள் மாலேயிலே வீடு திரும்புகிற நேரத்திலே அவர்களே போலீசார், வண்டிகளே நிறுத்தக் கூடாது, கடுமையான விளேவுகள் ஏற்படும், என்று சொல்லி எச்சரிக்கை செய்தார்கள். அவர்கள் எங்களுடைய கோரிக்கைகளே ஏற்றுக்கொள்கிற வரையிலும் நாங்கள் வண்டிகளே எடுத்துச் செல்லமுடியாது என்று தெரிவித்துவிட்டார்கள்.

அதற்குமேல்தான் இரவு 7 மணி இருக்கும். மாவட்ட ஆட்சித் தலேவர் என்னேக் கூப்பிட்டுவிட்டு இந்தப் பிரச்னையைப் பேசித் தீர்த்துக்கொள்ளலாமே என்று சொன்னர்கள். அதற்கு நான் விவசாயிகள் சங்கம் பேசுவதற்குத் தயாராகத்தான் இருக்கிறது, ஆனல் அரசாங்கம்தான் பேச்சுவார்த்தைக்கு முன்வரவில்லே என்று சொன்னேன். பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று சொன்னர்கள், எங்களிடத்திலே பேசவேண்டாம், சிறைக்கோட்டத்திலே விவசாயிகள் தலேவர்கள் இருக்கிறார்கள். அவர்களே அழைத்துப் பேசுங்கள் என்று சொன்னேன். பிறகு என்னிடம் கலெக்டர் அவர்கள் கேட்டார்கள், யாரோடு பேசவேண்டுமென்று. நான் 15 பெயர்கள் கொண்ட லிஸ்டை கொடுத்தேன். அதை வாங்கிக்கொண்டு அவர்கள் டெலிபோனிலே அந்த லிஸ்டை படித்தார்கள், பிறகு என்னிடம் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று

1972 ஆகஸ்ட் 11] [திரு. கே. என். குமாரசாமி]

சொன்னார்கள். நான் சரி என்று சொன்னேன். ஆனால் கலெக்டர் அவர்கள் உடனே ஒப்புதல் கொடுக்கவேண்டுமென்று கேட்டார்கள். நான் சொன்னேன், சிறைச்சாலையிலே இருப்பவர்களை விடுதலைசெய்ய வேண்டுமென்று. அவர்கள் சொன்னார்கள், முதலமைச்சர் அவர்கள் திருவாரூர் போவதற்கு பயணத்திற்கு தயாராக இருக்கிறார்கள். சீக்கிரம் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். நான் அதே டெலிபோனை வாங்கி பேசினேன் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: என்னைப் பேசினீர்களா? இது அபாண்டம். என்னைப் பேசவேயில்லை. மாதவனைப் பேசினதாக தாங்கள் நினைவு, எக்ஸ்பிரஸ் பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுத்திருக்கிறீர்கள்.

திரு. கே. என். குமாரசாமி: நாங்கள் அவர்களை சிறைச்சாலையில் சித்திரவதை செய்யவில்லை. வழக்கமாகப் பேசி முடிவு செய்வதற்குப் பிறகு விடுதலை செய்துகொள்ளலாம் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் எந்த எம்.எல்.ஏ.வோடு பேசவதையும் கௌரவக் குறைவாக நினைப்பதில்லை. திரு. கே. என். குமாரசாமி அவர்களோடோ அல்லது வேறு எந்த உறுப்பினரோடு பேசுவதையும் நான் கௌரவக்குறைவாக நினைப்பதில்லை. இதிலே நான் கௌரவம் பார்ப்பதில்லை, பேசுவதாலே என்னுடைய கௌரவம் ஒன்றும் குறைந்துவிடப் போவதில்லை. ஆகவே அவர்கள் இல்லாத ஒன்றை சொல்கிறார்கள். அவர்கள் மாதவனோடு தான் பேசினார்கள் என்று பத்திரிகைக்குச் செய்தி சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது அதை மாற்றிச் சொல்வது சரியல்ல.

திரு. கே. என். குமாரசாமி: முதலமைச்சர் அவர்களோடு பேசுகின்ற பொழுது . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: என்னைப் பேசியதாகச் சொல்கிறீர்கள். ஆனால் மாதவனைப் பேசியதாக பத்திரிகைக்கு அறிக்கை கொடுத்திருக்கிறீர்களே, என்ன காரணம்?

திரு. கே. என். குமாரசாமி: அதை இரண்டாவதாகச் சொல்கிறேன். நாம் பேசுவதற்கு நேரம் நிர்ணயிக்கவேண்டும் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மறுநாள் பத்திரிகையில் மாதவனைப் நீங்கள் பேசியதாக செய்தி கொடுத்திருக்கிறீர்களே என்ன காரணம்?

திரு. கே. என். குமாரசாமி: நான் என்னுடைய ஸ்டேட்மெண்டிலே அது சம்பந்தமாகவும் கொடுத்தேன். ஆனால் அவர்கள் அதை விட்டுவிட்டார்கள்.

[திரு. கே. என்.. குமாரசாமி] [1972 ஆகஸ்ட் 11

பத்திரிகையில் வருவதையெல்லாம் முழுவதையும் ஆதாரமாக எடுத்துக் கொண்டால் நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். கலெக்டர் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று சொல்லிவிட்டார்கள். நான் தேதி நிர்ணயிக்க வேண்டுமென்று சொன்னேன். அவர்கள் 10 நாட்களிலே பேச்சுவார்த்தை வைத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். நான் இரண்டு நாட்களிலே வைத்துக்கொள்ளவேண்டும் என்று சொன்னேன். அப்படியானால் முதலிலே சொல்லியிருக்க வேண்டுமே இப்பொழுது முதலமைச்சர் அவர்கள் திருவாரூர் போய்விட்டார்களே என்று சொன்னார்கள் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கலெக்டரிடத்திலே தாங்கள் என்ன எழுதிக்கொடுத்தீர்கள்?

திரு. கே. என். குமாரசாமி: அது உங்களிடத்திலேயே இருக்கிறது. . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: என்ன எழுதிக்கொடுத்தீர்கள் என்பதைத் தாங்களே சொல்லுங்கள்.

திரு. கே. என். குமாரசாமி: போராட்டத்தை நிறுத்துவதாகவும் ஏப்ரல் பேச்சுவார்த்தை தொடரவேண்டுமென்றும், தேதி நிர்ணயம் அதற்காகச் செய்யவேண்டுமென்றும் எழுதிக்கொடுக்கப்பட்டது. ஆகவே, தேதி தீர்மானிக்கும் விஷயத்தில் கலெக்டரைக் கேட்டபொழுது . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கடிதத்தில் முதலமைச்சர் பேச்சுவார்த்தைக்கு ஒப்புக்கொண்டதால் போராட்டத்தை நிறுத்திவிட்டோம் என்று எழுதிக் கொடுத்தீர்களா?

திரு. கே. என். குமாரசாமி: போராட்டத்தை நிறுத்துவது என்றும், முதலமைச்சருடன் கடந்த ஏப்ரல் மாத பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவது என்றும், குறிப்பாக பேச்சுவார்த்தைக்கான தேதியைத் தீர்மானிப்பது என்றும் தீர்மானித்தப்பட்டது. ஆகவே, அதற்குப் பிறகு கலெக்டர் தொழில் அமைச்சர் மாதவன் அவர்களோடு டெலிபோனில் பேசினார்கள். முதலில் உடனடியாகத் தேதியைத் தீர்மானித்துக் கொள்ளலாம் என்றும், 10 நாட்களில் வைத்துக் கொள்ளலாம் என்றும் சொல்லப்பட்டது. நான் தொழில் அமைச்சர் மாதவன் உடன் டெலிபோனிலே பேசி பிறகு இரண்டு நாட்களிலே வைத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னேன். திருவாரூருக்கு முதலமைச்சர் சென்றுவிட்டதால் திருவாரூரிலிருந்து முதலமைச்சர் இரண்டு நாட்களில் சென்னைக்கு வந்துவிடுவார்; உடனடியாக சென்னைக்கு வந்து

1972 ஆகஸ்ட் 11] [திரு. கே. என். குமாரசாமி]

பேச்சுவார்த்தை தொடங்கலாம் என்று சொன்னார்கள். சரி என்று சொல்லி விட்டு செக்ஷன் 151-இன் கீழ் கைது செய்யப்பட்ட 257 பேர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று சொன்னேம். டி.ஐ.ஜி. விடுதலை செய்கிறோம் என்று சொன்னார்கள். மேலும் ஸ்ரீவில்லிபுத்தூரில் கைது செய்யப்பட்ட பெண்களை விடுதலை செய்திருக்கிறார்கள். அதுபோல் இங்கேயும் கைது செய்யப்பட்ட பெண்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். ஸ்ரீவில்லி புத்தூரில் அவர்கள் போலீஸ் கஸ்டடியில் இருந்தார்கள், ஆகவே விடுதலை செய்தார்கள். இங்கே எஸ்.ஐ..ஆர். கோர்ட்டிலே போட்டு ரிமாண்டில் இருப்பதால் கோர்ட்தான் விடுதலை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். பேச்சு வார்த்தைக்குப் பிறகு விடுதலை செய்யலாம் என்று சொன்னார்கள். சரி என்று சொன்னேன். மறுநாள் விடுதலை செய்யப்பட்டார்கள். தலைவர் மீண்டும் கலெக்டருடன் பேசும்பொழுது சென்னைக்குப் புறப்படுங்கள், பேச்சு வார்த்தை நடத்தி சுமுகமாகத் தீர்த்துவிடலாம் என்று சொன்னார்கள் நானும் சரி என்று சொன்னதற்குப் பிறகு சென்னைக்குப் புறப்படுவதற்கு ஆயத்தம் செய்தார்கள். திருவாரூரிலிருந்து சென்னைக்கு வந்தபிறகு போராட்டத்திற்கும் பயந்து கொண்டு தாங்களாகவே நிறுத்திவிட்டு வருகிறார்கள் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: போராட்டத்தைப் பயந்து கொண்டு நிறுத்திவிட்டார்கள் என்று எந்தப் பத்திரிகையிலேயாவது வாசகத்தைக் காட்ட முடியுமா?

திரு. கே. என். குமாரசாமி: தினத்தந்தி, மாலைமுரசு பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உங்கள் அறிக்கையிலே இருப்பதைச் சொன்னேன். கலெக்டரிடத்தில் கையெழுத்துப்போட்டுக் கொடுத்திருக்கிறீர்களே, அதிலே இருக்கிறது.

The Agriculturists' Association representatives agreed to call off their agitation with immediate effect.

The Chief Minister has already discussed the problems raised by the Association with them and with members of the Legislature of Coimbatore District.

The discussion with them will now continue shortly.

(Signed) K. N. Kumaraswami. M.L.A.

(,,) Ponnuswami. B.A. B.L.

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 ஆகஸ்ட் 11

(,,) Subbiah

(,,) U. R. Narayanaswami, H. M. S.

(,,) T. Thalai Gounder.

ஆகியோர் கையெழுத்துப் போட்ட கடிதம். இதில் நீங்களே சொல்லியிருக்கிறீர்கள் 'கால் ஆப்' பண்ணிவிட்டோம் என்று. மறுநாள் பத்திரிகையில் 'கால் ஆப்' செய்யவில்லை, சஸ்பெண்ட்தான் என்று சொல்லியிருக்கிறீர்கள். திருபர்கள் கேட்டபொழுது, பேச்சுவார்த்தைக்கு ஒப்புக்கொண்டதால் போராட்டம் நிறுத்தப்படவில்லை, ஏனென்றால் நான் பேச்சுவார்த்தைக்கு மறுப்பவன் அல்ல, போராட்டத்தை நிறுத்திவிட்டு பேச்சுவார்த்தைக்கு வர இருக்கிறார்கள், திரு. குமாரசாமி அவர்கள் வந்தபிறகு தேதி நிர்ணயிக்கப் படும் என்றுதான் சொல்லியிருக்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி: உங்கள் அறிக்கையிலே என்ன சொல்லியிருக்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குமாரசாமி அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன், தெளிவாக இருக்கிறது. நீங்கள் ஒரு விவரத்தைச் சொன்னீர்கள். அதை மறுத்து முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். போராட்டம் நிறுத்தப்பட்டது, பேச்சுவார்த்தை தொடரும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதில் தெளிவாக இருக்கிறது. ஆகவே பின்னிப்பின்னி அதையே சொல்வதை விட்டுவிட்டு வேறு ஒரு விவகாரத்திற்குப் போகலாம், இன்னும் ஒரு நிமிஷம் தான் இருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, இதிலே தெளிவாக . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கையொப்பமிட்ட அறிக்கை இருக்கிறது. அவர்களுக்கும் உங்களுக்கும் இருக்கின்ற விவகாரம் எல்லாம், முதலமைச்சர் சொன்னதால் வாபஸ் பெறப்பட்டதா என்ற கருத்தைப் பற்றிப் போராடிக் கொண்டிருக்கிறீர்கள். அப்படி ஒரு எண்ணம் இல்லை என்று அவர்கள் சொன்னார்கள். சொன்னதோடு உங்கள் கையெழுத்தையும் ஆதாரமாக காண்பித்தார்கள். எனவே அடுத்த பாயிண்டுக்குப் போகலாம்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் சொன்னார்கள், போராட்டத்தைத் தாங்களாகவே நிறுத்திக்கொண்டு, இந்தப் பிரச்னையிலே பேச வருகிறார்கள், நான் ஒன்றும் அழைக்கவில்லை என்று. அப்படியென்றால் கலெக்டர் அங்கே கூப்பிட்டதும் பொய்யா? அப்படியானால்

1972 ஆகஸ்ட் 11] [திரு. கே. என். குமாரசாமி]

பேசியதும் பொய்யா? 151-இன் கீழ் கைது செய்யப்பட்ட 257 பேர்களை விடுதலை பண்ணியதும் பொய்யா, விடுதலை செய்தோம் என்று சொல்வதும் பொய்யா? அங்கே நடந்த நிகழ்ச்சிகள் அத்தனையும் பொய்யா? எழுதிக் கொடுத்தது ஒன்றைமட்டும் காட்டினால் போதாது, பதார்த்தமான சூழ்நிலையில் என்ன நடந்தது என்பதுகூட மறைக்கப்படுமானால் நான் ஒன்றும் சொல்லத் தயாராகயில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நான் அவைகளைப் பொய் என்று சொல்லவில்லை. பொய் என்ற வார்த்தை பார்லிமெண்ட்ரி முறை அல்ல என்றாலும் அவர் சொன்னதால் திருப்பிச் சொல்கிறேன். நான் அப்படியெல்லாம் சொல்லவில்லை, பொய் என்று சொல்லவில்லை. இன்னும் சொல்லப்போனால் கமிட்டிக் கூட்டம் நடத்த வேண்டும், அதில் முதலமைச்சர் அறிவித்திருக்கும் சலுகைகளைப்பற்றி விவாதிக்க வேண்டும், கமிட்டி உறுப்பினர்கள் சிறைச்சாலைகளில் இருக்கிறார்கள், அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று திரு. சின்னதுரை அவர்கள் தந்தி கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தந்தியை மதித்து கமிட்டிக் கூட்டம் நடத்தி சலுகைகளைப் பரிசீலனை செய்யுங்கள் என்று விடுதலை செய்தது இந்த அரசாங்கம் தான்; ஒவ்வொரு முறையும் அது பொய்யா, அது பொய்யா என்று கேட்டார்கள். இந்த அரசாங்கம் நிதானமாகவும், அதேநேரத்தில் மிகுந்த பெருந்தன்மையுடனும், பிடிவாத குணம் இல்லாமலும் நடந்திருக்கிறது என்பதைக் காட்டுகிறது. அதேபோல நிருபர்களிடத்திலே சொன்னேன், போராட்டத்தை நிறுத்திக் கொண்டிருக்கிறார்கள், நான் பேசுவதற்கு ஒப்புக்கொண்டதற்காக என்று சொல்வது சரியல்ல, ஏனென்றால் நான் என்றைக்கும் பேசுவதற்கு மறுத்தது இல்லை, எனவே நான் பேச ஒப்புக்கொண்டேன் என்றா அதோடு இணைப்பது தவறு, பேச ஒப்புக்கொள்வது வேறு விஷயம், போராட்டத்தை நிறுத்தியது இன்னொரு விஷயம், பேசத் தயார், இன்னும் தேதி நிர்ணயிக்கப்படவில்லை என்று எல்லாப் பத்திரிகைகளிடத்திலும் சொல்லியிருக்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, எனக்குக் கொஞ்சம் நேரம் அதிகமாகக் கொடுக்க வேண்டும், மற்ற சம்பவங்களைப் பற்றி அதிக மாகச் சொல்லவேண்டும். இந்தப் பிரச்னையிலே நாம் என்ன பார்த்தோம். கடந்த ஏப்ரல் மாதத்திலே ஒரு முதலமைச்சர் கொள்கையை ஏற்றுக்கொண்டு பத்திரிகைகளுக்கு ஸ்டேட்மெண்ட் விட்ட பிறகு அது முடியாது என்று சொன்னதை நான் இது வரையில் பார்த்ததில்லை. முதலமைச்சர் ஒப்புக் கொண்டு பிறகு மாட்டேன் என்று சொன்னதால் விளைவுகள் ஏற்பட்டன என்ற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன். அதற்காகவேதான் இந்தப்

[திரு. கே. என். குமாரசாமி] [1972 ஆகஸ்ட் 11

பிரச்னை. கடந்த ஏப்ரல் மாதத்தில் விவசாயச் சங்கப்பிரதிநிதிகளிடம் 4 பிரச்னைகளைத் தெளிவாக முடிவாகத் தெளிவு செய்துகொள்வோம், பாக்கிப்பிரச்னைகளைக் கொள்கை ரீதியிலே ஒப்புக் கொள்கிறேன் என்று சொன்னதாகப் பார்த்தேன். பிறகு பொள்ளாச்சி கூட்டத்தில் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மன்றுடியாரிடமும் மற்றவர்களிடமும் கொள்கை ரீதியில் எல்லாவற்றையும் ஒத்துக்கொள்கிறேன், அதுவரையில் மின் கட்டணத்தைக் கட்டிவிடுங்கள், பேச்சுவார்த்தை முடிந்தபிறகு அதிகமாகக் கட்டியிருந்தால் அட்ஜெஸ்ட் செய்து கொள்ளலாம், எனவே வரிகொடா இயக்கம் என்ற முறையில் ஆரம்பிக்க வேண்டாமென்று சொன்னேன். அவர்களும் அதை ஒத்துக்கொண்டு போனார்கள். ஆனால் மே மாதம் கோவைக்குச் சென்ற பொழுது போராட்ட அறிவிப்பைச் செய்து மின் கட்டணத்தை கட்ட வேண்டாம் என்ற முடிவைக் கண்டு கோவையில் நான் பேசியபொழுது ஒப்புகொண்டபடி அவர்கள் செய்யாததால் பேசுவதற்கு இப்பொழுது இடமில்லை என்று அப்பொழுதே சொன்னேன்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, அவர்கள் முதலமைச்சர் கூப்பிட்டு இந்தப் பிரச்னைக்கு முடிவுக்கு வந்தபிறகு போராட்டம் துவங்கியது நியாயமா, என்று கேட்டார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உங்களோடு இரண்டு முறை பேசியிருக்கிறேன். இதே சட்டசபை உள்ள இந்த மண்டபத்தில் கவர்னர் அறையில் இரண்டுமுறை பேசியிருக்கிறேன். அப்பொழுது, என்ன குமாரசாமி, என்னுடைய பிறந்தநாளை துக்க தினமாகக் கொண்டாடுவதாக அறிவித்திருக்கிறீர்களே என்று கேட்டபொழுது அதற்காக தீங்கள்கூட வருத்தப்பட்டீர்கள், இதை விட்டு விடுங்கள் என்று சொன்னீர்கள். பிறகு ஒருநாள் இரண்டு மணிக்கு வெளியே இளம்பிக்கொண்டிருந்த சமயத்தில் திரு. சுப்பிரமணியம் அவர்களே, நான் வெளியே இளம்பிக்கொண்டிருந்தபொழுது கவர்னர் அறையின் வாசலிலே நின்றுகொண்டிருந்தார்கள்—எல்லா வேலைகளையும் முடித்துக் கொண்டு மயக்கமுற்ற நிலையில் பசிக்களைப்போடு நான் இருந்த நேரத்திலும் அவர்களைப் பார்த்தபிறகு 2 மணிக்குப்பிறகு சுமார் முக்கால்மணி நேரம் அவர்களோடு பேசியிருக்கிறேன். ஆகவே நான் பேசுவதற்கு யாரிடத்திலும் என்றைக்கும் மறுத்ததில்லை.

1972 ஆகஸ்ட் 11]

திரு. கே. எண். குமாரசாமி: முதலமைச்சரவர்கள் கோட்டையிலே என்னுடன் பேசவில்லே. நான் வரவேயில்லேயே உங்களேச் சந்திக்க, இதுவரையிலும் பார்த்ததேயில்லேயே, எங்கே பார்த்தேன்? 3-ஆம் தேதி நான் சென்னேக்கு வரவேயில்லேயே? பார்க்கவும் இல்லே. நீங்கள் நன்முக ஞாபகப் படுத்திப் பாருங்கள். போராட்டம் ஆரம்பித்தபிறகு அவர்களுடைய அறைக்கு எப்பொழுதுதாவது நான் வந்தது உண்டா? அவருடைய பிறந்த தின விழா 3 ஆம் தேதி. 3 ஆம் தேதிக்குப்பிறகு சந்திக்கவே இல்லேயே உங்களே. முதலமைச்சரவர்கள் சொன்னர்கள், பிறந்த நாளே ஏன் தக்க நாளாகக் கொண்டாடினீர்கள் என்று கேட்டதாகச் சொன்னர்கள். என்னிடம் அப்படிக் கேட்டிருந்தால் அதற்கான சமாதானங்களே நான் சொல்லியிருப் பேன். காரணம், விவசாயிகள் சிறையில் சோளக் கஞ்சி கொடுத்ததால் வயிற்றுப்போக்கு உண்டாகியிருக்கிறது, ஆகவே கஞ்சியை மாற்றிக் கொடுக்கச் சொல்லுங்கள் என்று சொன்னர்கள். சோளக் கஞ்சிக்குப் பதிலாக கோதுமைக் கஞ்சி கொடுப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டதாக கலெக்டர் அவர்கள் சொன்னர்கள். விவசாயிகளுக்கு சோளக் கஞ்சிக்குப் பதிலாக கோதுமைக் கஞ்சி கொடுக்க மறுத்துவிட்டார்கள். அவ்வையகினம் செய்தியில் முதலமைச்சரின் பிறந்த நாளே முன்னிட்டு ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு அளிக்கப்படும் என்ற செய்தியைப் படித்தார்கள். முதலமைச்சர் பிறந்த நாள் விழாவுக்காக அறுசுவை உணவு அளிக்கப் படுகிறது, எங்களுக்குக் கோதுமைக் கஞ்சி கூட இல்லேயென்று கூறிவிட்டார் களே என்று கூறி அவர்கள் வந்து பார்க்கின்றவர்களிடமெல்லாம் முதலமைச்சர் பிறந்த தினத்தைத் தக்க தினமாகக் கொண்டாடுகிறோம், வெளியிலேயும் கொண்டாட வேண்டுமென்று சொல்லி விட்டார்கள். அன்றைய தினம் நடந்த விவசாயிகள் கூட்டத்தில் தலேமை வகித்தேன். அந்தக் கூட்டத் தில் விவசாயிகள் உண்ணுவிரதம் இருக்கப் போகிறோம் என்றும், முதலமைச்சர் பிறந்த தினத்தைத் தக்க தினமாகக் கொண்டாடப் போகிறோம் என்றும் பிடி வாதமாகத் தீர்மானத்தை நிறைவேற்றினர்கள். நான் சொன்னேன் என்று முதலமைச்சர் சொல்லுவது சரியல்ல. எனக்கு முதலமைச்சர் பேரிலோ அல்லது வேறு யார் பேரிலோ விருப்பு, வெறுப்பு கிடையாது. அரசியல் ரீதியாக பிரச்சனைகளே அணுகும்போது அரசியல் ரீதியாக எதிரிகளாக இருக்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: என்னுடைய பிறந்த நாளேத் தக்க தினமாகக் கொண்டாடியதைப் பற்றிக் கவலே இல்லே. எந்த நல்ல நிகழ்ச்சிக்கும் திருஷ்டிபரிகாரம் தேவை. திருஷ்டி கழித்ததற்காக உள்ள படியே நான் திரு. குமாரசாமி அவர்களுக்கு நன்றிக் கடன்பட்டிருக்கிறேன். அவர்களுடைய தலேமையில் நடந்த கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 ஆகஸ்ட் 11

பட்டிருக்கிறது என்பதை அவர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அவ்வளவுதான்.

திரு. கே. என். குமாரசாமி: கலெக்டர் அவர்களிடத்தில் சொன்னேன். அதற்குப் பின்னால் கூட பத்திரிகையில் ஸ்டேட்மென்ட் விட்டு நான் சொன்னதாக எடுத்துக்கொள்ளக் கூடாது; அவர்களுடைய மகாசபை தீர்மானித்தது என்று கூறியிருக்கிறேன். இதைப்பற்றி எப்படி எடுத்துக் கொண்டாலும் சரி மன சாட்சிக்கு விரோதமாக நடக்க நான் தயாராக இல்லை.

'பந்த்' ஜூலை 5-ம் தேதி நடைப்பெற்றது. இதற்கு முன்பு கடந்த ஜூன் மாதம் 26-ம் தேதி ஒரு பந்த் நடைபெற்றது. அப்போது வன்முறை எதுவும் கிடையாது. கடந்த மாதம் 5-ம் தேதி பந்த்; 4-ம் தேதி திராவிட முன்னேற்றக் கழக முக்கிய பிரமுகர்கள் சமூக விரோதிகள் என்று சொல்லப்படுகின்ற ரௌடிகளிடத்தில் ஆயுதங்களைக் கொடுத்து '5-ம் தேதி கடை திறக்கவில்லை என்றால் 6-ம் தேதி நடப்பதே வேறு; 5-ம் தேதி கடை திறக்கவில்லை என்றால் என்றைக்குமே திறக்கக்கூடாது' என்ற முறையிலே கூவிக்கொண்டு செல்லச் செய்தார்கள். எல்லா விவசாயிகளும் ஜெயிலுக்குள்ளே இருக்கிறார்கள். மூன்னணி வீரர்கள் யாருமே வெளியிலே கிடையாது. பந்த் அன்று நான் சிங்காநல்லூர் சங்கத்தில் இருந்தேன். அவரவர்கள் அவரவர்களுடைய ஸ்தாபனத்திலேதான் இருந்தார்களே தவிர வெளியே போய் 'பந்த்' நடத்துங்கள் என்று சொல்லவில்லை. ஐ.என்.டி.யு.சி. யினர் அவர்களுடைய ஸ்தாபனத்திலே இருந்தார்கள், கம்யூனிஸ்ட் கட்சியினர் அவர்களுடைய ஸ்தாபனத்திலே இருந்தார்கள். யாரும் வெளியே வரவில்லை. 5-ம் தேதி பிளை மேட்டில் 11 மணிக்கு வான் வருகிறது. அவர்கள் இறங்கி வீடு புகுந்து தாக்குகிறார்கள் என்று கேள்விப்பட்டு அங்கே சென்று பார்த்தால் அங்கே போலீசார் இருக்கிறார்கள், ஜனங்கள் இருக்கிறார்கள், ரௌடிகள் என்று சொல்லப்படுகின்ற கூட்டம் வீடு புகுந்து தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். பத்து பேர் அடிபட்டு ரத்தம் போய்க் கொண்டிருக்கிறது. போலீசாரைக் கேட்டால் 'நாங்கள் என்ன செய்ய முடியும்' என்று கூறினார்கள். அந்த ரௌடிகளுக்குப் பாதுகாப்பாகத் தான் போலீசார் இருந்தார்கள். பொதுமக்களுக்கு எந்தவிதப் பாதுகாப்பும் கொடுக்கவில்லை. அடித்தவர்களை ஏன் கைது செய்யவில்லை என்று கேட்டதற்கு நீங்கள் என்ன செய்ய முடியும் என்ற முறையிலே பேசினார்கள். அடிப்பட்டவர்களுக்கு ரத்தம் போகிறது. அந்த இடத்திலே டெபுடி சூப்பரின் டென்டென்ட் இருக்கிறார்கள். அந்தச் சமயத்தில் ஒரு லாரியிலிருந்து 50 பேர் ஆயுதம் தாங்கிக் கொண்டு இறங்குகிறார்கள். நான் நேரடியாக டி.எஸ்.பி யிடம் கேட்டேன். இப்படி லாரியில் ஆயுதம் தாங்கிக் கொண்டு வந்து இறங்கு

1972 ஆகஸ்ட் 11] [திரு. கே. என். குமாரசாமி]

கிறார்களே 'நீங்கள் பார்த்துக்கொண்டு இருக்கிறீர்களே, என்று கேட்டேன். அவர் என்னைப் பார்த்து தயவுசெய்து அமைதியாக இருங்கள் என்று சொல்லி விட்டு அவர்களைப் போகச் சொன்னார்களே தவிர கைது செய்யவில்லை. இதற்குப் பிறகு ஜனங்கள் 'அந்த சமூக விரோதக் கும்பலுக்குப் பாதுகாப்பு 'நமக்குப் பாதுகாப்பு இல்லையே' என்று பெண்களும் மற்றவர்களும் கண்ணீர் விட்டுக் கதறினார்கள். இரவு 12 மணியோடு பந்த் முடிந்துவிடும், கவலை இல்லாமல் தைரியமாக இருங்கள் என்று சொன்னேன்.

அந்தச் சமயத்தில் ஐயம்பாளையத்தில் துப்பாக்கிப் பிரயோகம் என்று செய்தி வந்தது. அங்கு சென்று பார்த்தால் போலீசாரைக் காணவில்லை. ஜனங்கள்தான் இருந்தார்கள். அந்த ரோட்டில் கிட்டத்தட்ட 15 கட்டை வண்டிகளைக் குறுக்கே வைத்திருந்தார்கள். அங்கு பஸ் போக்குவரத்தே இல்லை. தவிர அது ஹோ ரோடு. அங்கு போய் இப்படிப்பட்ட ரகளை ஏன் நடந்தது? போலீசார் வேண்டுமென்றே ஒரு பஸ்ஸைக் கொண்டு வந்து வழி விடவேண்டுமென்று சொன்னார்கள். அப்போது பெண்கள் மறியல் செய்தார்கள். கண்ணீர்ப் புகை விட்டார்கள், தடியடி செய்தார்கள். பெண்கள் கலைந்து சென்றார்கள். அப்போது ஒரு பெண் அங்கு நின்று கொண்டு 'நீங்கள் நாசமாகப் போகமாட்டீர்களா?' என்று சொன்னார். உடனே இன்ஸ்பெக்டர் பெண்ணின் மயிரைப் பிடித்து லாரியில் ஏற்றினார். ஆத்திரம் அடைந்த ஜனங்கள் முன்னுக்கு வர, துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது. துப்பாக்கி குண்டு தலையைத் துளைத்துச் சென்றிருக்கிறது, வயிற்றில் துளைத்துச் சென்றிருக்கிறது. பி.ஏ. அட்மிஷன் ஆகும் மாணவன் ராமசாமி வயிற்றில் அடிபட்டு குண்டு மறுபக்கம் சென்றிருக்கிறது. இரண்டு பர்லாங்கு தூரத்தில் கவலை இறைத்துக் கொண்டிருந்த விவசாயி குண்டடிப் பட்டிருக்கிறான். மண்டையில் அடி. பெண்கள் குண்டடிபட்டிருக்கிறார்கள். இந்தமாதிரி துப்பாக்கிப் பிரயோகம் அவசியந்தானா என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

ஒவ்வொரு பஸ்ஸிலும் பெட்ரோலையும், டீசலையும் தனியாக ஊற்றி எடுத்துக் கொண்டு போய் கட்டை வண்டிகளில் ஊற்றி தீ வைக்க முயற்சித்தார்கள். பேரூர் மேல்புரம் பகுதியில் போலீசாரே பெட்ரோலைக் கட்டை வண்டிகள் மீது ஊற்றி தீ வைத்தார்கள். மாட்டைப் பிடித்துக்கொண்டு போன அரிசனை அடித்தார்கள். ஏழைகள் பலர் போலீசாரால் தாக்கப்பட்டு பதினைந்து நாட்களுக்கு வேலைக்குப் போகமுடியாமல் பயம், பீதி கொண்டிருந்தார்கள். கூலி வேலைக்குக் கூடப் போக முடியாமல் அவர்களுடைய வீட்டுப் பெண்டு பிள்ளைகள் எப்படி வாழ முடியும்?

[திரு. கே. என். குமாரசாமி] [1972 ஆகஸ்ட் 11

காரமடையில் தாக்கப்பட்டிருக்கிறார்கள். சிறுமுகையில் பகிரங்கமாக மத்தியான வேளையில் டி.எம்.கே. தொண்டர்கள் என்று சொல்லிக்கொண்டு ஏ.ச்.எம்.எஸ் ஆபீசுக்குள் நுழைந்து தாக்கியிருக்கிறார்கள். ஜன்னல்கள் உடைக்கப்பட்டிருக்கின்றன. இந்த அளவுக்குப் பலாத்காரம் விளையாடியது. இந்த நிலைமைகள் 5-ம் தேதி நடந்தது. இறந்துபோன பிணத்தைக் கொடுக்கும்படி ஜில்லா கலெக்டரைக் கேட்டால் 'நீங்கள் போய் எடுத்துக்கொண்டு வாருங்கள்' என்று சொன்னார்கள்.

(மணி அடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் இதுவரை அரை மணி நேரம் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் . . . .

திரு. கே. என். குமாரசாமி: சீஃப் மினிஸ்டரே 10 நிமிடங்கள் எடுத்துக் கொண்டார்கள் . . . . (மணி அடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. திருப்பூர் துரைசாமி இப்போது பேசுவார்.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் எதிர்க்கட்சியினரால் கொண்டு வரப்பட்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நான் கடுமையாக எதிர்த்து, எனது கருத்துக்களைத் தெரிவிக்க லாம் என்று கருதுகிறேன்.

இந்த மன்றத்தில் பேசிய உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளேதான் செல்வாக்கு பெற்றிருக்கிறதே தவிர வெளியே அதற்கு செல்வாக்கு இல்லை என்ற கருத்தை எடுத்துச் சொன்னார்கள். இந்தப் போராட்டம் நடந்திருக்கிற நிலையில், கோவை மாவட்டத்தில் எந்தப் பகுதியில் விவசாயிகள் போராட்டம் பெரிய அளவிற்கு தீவிரமாக இருந்ததோ அங்கு வெள்ளமடை ஊராட்சி மன்றத்திற்கான தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் பங்கெடுத்துக் கொண்டது. அங்கு விவசாயிகள் சங்கத்தின் பெயரிலும் பங்கு எடுத்துக்கொண்டனர். வெற்றி யாருக்கு? திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்தான் அங்கு ஊராட்சி மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

கோவை வட்டத்தைச் சேர்ந்த நரசாபுரம் ஊராட்சி மன்றம், கோவனூர் ஊராட்சி மன்றம், நாய்க்கன்பாளையம் ஊராட்சி மன்றம் தேர்தல்களில்— விவசாயிகள் போராட்டம் கடுமையாக நடந்த இடங்களில்—அங்குள்ள பொது மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினரை ஆதரித்த விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்தவர்களை தோற்கடித்து மகத்தான வெற்றியை திராவிட

முன்னேற்றக் கழகத்தினருக்குத் தந்து பொதுமக்கள் தாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைத்தான் ஆதரிக்கிறோம் என்பதை தெளிவாக நிலை நாட்டியிருக்கிறார்கள் என்பதை பணிவோடு இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. இந்த அரசு அணுகிய முறை பற்றி பலரும் பேசினார்கள். அதுகுறித்து பலர் பேச இருப்பதால் நான் சுருக்கமாக ஒரு கருத்தை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன். விவசாயிகள் சங்கத்தின் கோரிக்கைகளில் ஒன்று பம்ப் செட்டுக்கும், உரத்திற்கும் இருக்கிற வரிகளைக் குறைக்க வேண்டும் என்பது. இந்தக் கோரிக்கையை தமிழ்நாடு அரசு செய்ய முடியுமா என்பதை இந்தப் போராட்டத்தை நடத்திய எல்லாக் கட்சியினரும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். சென்னை லிம்ப்ஸன் போராட்டத்தின் போது வந்த அமைச்சர் குமாரமங்கலம் அவர்களும், கோவையைச் சார்ந்த அமைச்சர் சுப்பிரமணியம் அவர்களும் இந்த விவசாயிகள் போராட்டத்தில் உள்ளடக்கியிருக்கிற பம்ப் செட்டிற்கும், உரத்திற்குமான வரிகளைக் குறைக்கிற காரியத்தில் ஏன் மத்திய அரசில் முயற்சி எடுத்திருக்கக்கூடாது? தமிழ்நாடு முதல் அமைச்சர் அவர்கள் அணுகிய முறை தவறு என்று சொல்லக் கூடிய இவர்கள் மத்திய அரசு இதில் தலையிட வேண்டுமென்று ஏன் கேட்டிருக்கக்கூடாது? உங்கள் வாயிலாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மத்திய நிதி அமைச்சர் திரு. சவான் அவர்கள் கோவைக்கு வந்திருந்தார்கள். அவர்கள் கோவைக்கு வந்திருந்தபோது நானும் நம் தொண்டாமுத்தூர் தொகுதி உறுப்பினர் திரு. மாணிக்கவாசகம் அவர்களும், அவினாசி உறுப்பினர் திரு. பெரியசாமி அவர்களும், சத்தியமங்கலம் உறுப்பினர் திரு. எஸ். கே. சுப்பிரமணியம் அவர்களும் சென்று, ஒரு மகஜர் கொடுத்தோம். அங்கு பம்ப் செட்டுகளுக்குப் போடப்பட்டிருந்த வரியைக் குறைக்க வேண்டும் பெட்ரோலுக்குப் போடப்பட்டிருந்த வரியைக் குறைக்கவேண்டும் என்று கேட்டிருந்தோம். இவை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு தெருக்கடியானவை என்று குறிப்பிட்டிருந்தோம். ஆனால் இன்றுவரை எந்த மத்திய அமைச்சரும் எங்கள் யாரையும் கூப்பிட்டுப் பேசவில்லை.

ஆனால், இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நமது முதல் அமைச்சர் அவர்கள் எவ்வளவோ முறை அணுகி பேசியிருக்கிறார்கள். எவ்வளவோ சந்தர்ப்பம் அளித்திருக்கிறார்கள் என்பது நாடு தெளிவாக அறிந்திருக்கக்கூடிய காரியமாகும். சிறைச்சாலைகளில் உள்ள கலவர்களை விடுதலை செய்து பேச்சுவார்த்தைக்கு அழைத்தோம். ஆனால் மத்திய

[திரு. சு. துரைசாமி] [1972 ஆகஸ்ட் 11

அமைச்சர்கள் ஏன் அப்படி எங்களைக் கூப்பிட்டிருக்கக்கூடாது? பல்வேறு கட்சியினர் நம் அரசை குறை கூறுகிறார்கள். எப்படி போராட்டத்தை நடத்தினார்கள்? நாட்டு மக்கள் கண்டிக்கத்தக்க முறையில் அது அமைந்திருந்ததா இல்லையா?

1967-க்குப் பின்னால் மேற்கு வங்கத்தில் கேரோ செய்ய ஆரம்பித்தார்கள். அப்போது இதே இடத்தில் இருந்த எதிர்க்கட்சித் தலைவர் என்ன சொன்னார்? கேரோ போராட்டத்தை அனுமதிக்கக்கூடாது, அதைத் தடை செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசவில்லையா? ஆனால் இன்று நடைபெற்றிருப்பது என்ன? கோவையில் கட்டை வண்டிப் போராட்டம் **நடத்தது. கடந்த ஜூன் 7-ம் தேதி அன்று** கட்டை வண்டிகளை நகரம் முழுவதும் நிறுத்திவிட்டார்கள். யுத்த காலத்தில் கூட, நெருக்கடியான நேரத்தில் கூட, மருத்துவ மனைக்குச் செல்ல எல்லோரையும் அனுமதிக்கிறார்கள். மருத்துவம் செய்துகொள்ள அனைவருக்கும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கிறார்கள். ஆனால் இங்கு அப்போது மருத்துவ மனைகளைச் சுற்றிலும் ஏராளமான கட்டை வண்டிகளை நிறுத்தி யாரும் மருத்துவம் பார்த்துக் கொள்ள முடியாத அளவிற்கு மிகக் பெரிய அராஜகத்தை விவசாயிகள் சங்கத்தின் பெயரால், பல ரௌடிகளும் சேர்ந்து கொண்டு அந்த போராட்டத்தில் 7-ம் தேதி திருப்பூரிலும் கோவையிலும் எல்லாயிடங்களிலும் கட்டை வண்டிகளை நிறுத்தினார்கள். மாணவர்கள் பள்ளிகளுக்குச் செல்ல முடியவில்லை. பள்ளிகளுக்குச் சென்ற குழந்தைகள் திரும்பி வரும்போது தடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

எந்த அளவிற்கு அராஜகத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றால், போராட்டம் நடந்தபோது மதுரை மாவட்டத்தைச் சார்ந்த ஆட்சித் தலைவர் சம்பந்தப்பட்ட இடத்திற்கு செல்லும்போது மாவட்ட ஆட்சித் தலைவரை மறித்து நிறுத்தியிருக்கிறார்கள். போலீஸ் அதிகாரிகளை மறித்து நிறுத்தியிருக்கிறார்கள். அதைக் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. கக்கன் வரவேற்றிருக்கிறார்கள். அந்தப் போராட்டத்தை காங்கிரஸ் கட்சியும் அதோடு சேர்ந்திருக்கிற எல்லாக் கட்சிகளும் ஆதரிக்கின்றன. காந்திஜி அவர்கள் போராட்டம் நடத்தினார்கள் என்றால் ஒவ்வொரு போராட்டத்திலும் தன்னைத் தானே வருத்தி மக்களுக்காக பாடுபட்டார். ஆனால் இன்று காங்கிரஸ் கட்சியின் போராட்டம் பொது மக்களை கொடூரமான நிலைக்கு ஆளாக்கி பொது மக்களுக்கு தொல்லை கொடுக்கிற முறையில் இந்தப் போராட்டம் நடைபெற்றிருக்கிறதே தவிர எந்த அளவிற்கு அது அமைதியாக நடந்தது என்று சொல்லுங்கள்?

1972 ஆகஸ்ட் 11] [திரு. சு. துரைசாமி]

ஐந்தாம் தேதி போராட்டம், அதற்கு முன்பு நடந்த போராட்டம்; இவை குறித்து ஒரு சம்பவத்தை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். 1970-ம் ஆண்டு மத்திய அரசு ஊழியர்கள் ஒரு மாத கால அடையாள வேலை நிறுத்தம் செய்தார்கள். அவர்களது கோரிக்கை சம்பளக் கோரிக்கை. அன்று மத்திய அரசு ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வேலை நிறுத்தத்தில் பங்கெடுத்துக் கொள்வது என்பது ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு ஒப்பான காரியமாகும் என்று கூறி பாதுகாப்பு சட்டத்தின்கீழ் பல பேர்களை கைது செய்தார்கள். ஆனால் இங்கு விவசாயிகள் சங்கத் தலைவர்கள் என்ன கூறியிருக்கிறார்கள்? மத்திய அரசு ஊழியர்கள், மாநில அரசு ஊழியர்கள் இவர்கள் வேலைக்குப் போகக் கூடாது, ரெயில் ஓடக் கூடாது, பஸ் ஓடக் கூடாது, எதுவும் நடக்கக்கூடாது என்று சொன்னால் அது எதற்காக? அன்று அவர்கள் சொன்னார்கள், ஆட்சியை கவிழ்க்கக்கூடிய சதி என்று. இப்படிப்பட்ட சதியைச் செய்வதன் மூலம் இந்த நாடு முழுவதும் எதிர்க்கட்சிகள் வசம் இருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிராக இருக்கிறது என்று உருவாக்குவதற்கு நீங்கள் முயற்சி செய்தீர்கள்; ஆனால் நாட்டு மக்கள் அதை நம்பவில்லை.

சென்னையிலும், தமிழ்நாடு முழுவதும் அன்று எல்லாயிடங்களிலும் கடைகள் திறந்து வைக்கப்பட்டிருந்தன. பொது மக்கள் அரசிடம் எதிர்ப்பு காட்டவில்லை. அதனால் உங்களுக்கு கோபம் ஏற்படுகிறது. அதனால் பலவித மான அசம்பாவிதங்களைச் செய்ய நீங்கள் முன்னுக்கு வருகிறீர்கள்.

திரு. குமாரசாமி அவர்கள் பல காரியங்களை எடுத்துச் சொன்னார்கள். கோவை போராட்டத்தில், ஊர்வலத்தில் நானும் பங்கெடுத்துக் கொண்டிருக் கிறேன். யாரும் ஆயுதம் ஏந்திச் செல்லவில்லை, எந்தக் கடைக்கும் யாரும் சென்றதில்லை. ஐயம்பாளையத்தில் போலீஸ் கூடியிருக்கும் மக்கள் மீது முதலில் கண்ணீர் புகை போட்டார்கள். பிறகு தடி எடுத்து கலைக்க முயற்சித் தார்கள். பிறகுதான் சுட்டார்கள்.

திரு. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டார்கள், இந்த அரசு கொல்வதற்கு சுடக்கூடிய அரசு என்று குற்றஞ்சாட்டினார்கள். நான் சொல்கிறேன், அப்படிப் பட்டதொரு எண்ணம் இந்த அரசுக்கு இருக்குமானால் எதற்காக முதலில் கண்ணீர் புகை போட்டிருக்க வேண்டும், எதற்காக பிறகு தடியடிப் பிரயோகம் நடத்தியிருக்க வேண்டும்? இவையெல்லாம் பயன் அளிக்காது போனதன் காரணமாகத்தான் போலீஸார் தங்களைப் பாதுகாத்து கொள்வதற்காக சுட்டார்களே தவிர மக்களை சாகடிக்க வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு என்றைக்குமே இல்லை.

[1972 ஆகஸ்ட் 11

திரு. கே. என். குமாரசாமி: ஐயம்பாளயத்தில் நடந்த துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாக போலீஸ் அநியாயம் செய்திருக்கிறது என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் பஞ்சாயத்து தலைவர் திரு. சுந்தரம் அவர்கள் சாஜிதாமா செய்திருக்கிறார்கள்—போலீஸ் கொடுமையைக் கண்டித்து ராஜின

1972 ஆகஸ்ட் 11] [பேரவைத் தலைவர்]

The hon. Member Thiru Kumarasami had his chance. Unless the Member (Thiru Duraisami) yields, another Member cannot rise up and speak. பல்லடம் உறுப்பினர் அரை மணி நேரம் எடுத்துக் கொண்டார். திருப்பூர் உறுப்பினரும் அதேமாதிரி அரை மணி நேரம் எடுத்துக்கொள்ளட்டும். பேரவைத் தலைவர் சொல்வதை யாரும் கேட்பதாகத் தெரியவில்லை. திரு. குமாரசாமி அவர்கள் அரை மணி நேரம் பேசினார்கள். திருப்பூர் துரைசாமி அவர்களும் அதேமாதிரி பேசட்டும். துரைசாமி அவர்கள் இன்னும் 20 நிமிஷம் பேசலாம்.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் போல கோவையில் கணபதி என்ற இடத்தில் பேரறிஞர் அண்ணா சிலையை உடைத்தெறிந்தார்கள். சட்டமன்ற உறுப்பினர் கோபால் அவர்களை விவசாயச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் தாக்கியதோடு மட்டுமல்லாமல் அவரிடமிருந்து பொருளையும் பறித்துக்கொண்டனர். ஈரோடில் நடேசன் என்ற தி.மு.க. மாவட்ட உறுப்பினர் கடையைத் தாக்கி படு சேதம் விளைவித்தனர். கருவூரில் கழகத் தோழர்களின் தையல் கடை, டீக்கடை தாக்கப்பட்டு, தகர்க்கப்பட்டன. கோவையில் மாலை முரசு, தினத்தந்தி பத்திரிகை நிலையங்கள் தாக்கப்பட்டிருக்கின்றன. திருப்பூர் தலைப்சும் மில்ஸ் தி.மு.க. தொழிற் சங்கத் தலைவர் ராமசாமி கம்பூனிலிடு தோழர்களால் தாக்கப்பட்டார். சிங்காநல்லூரில் தி.மு.க. தோழர்கள் தாக்கப்பட்டனர். காரமடையில் தோழர் ரங்கநாதன் தாக்கப்பட்டார். பள்ளிமடையில் தோழர்கள் கந்தசாமி, முத்து ஆகியோர் தாக்கப்பட்டனர். பிளேமேட்டில் கழகத் தோழர்களின் கடைகள் தாக்கப்பட்டன. அந்தியூரிலும் கழகத் தோழர்களின் கடைகள் தாக்கப் பட்டன. இப்படிப்பட்ட காரியங்களை விவசாயச் சங்கங்கள் என்ற பெயரைச் சொல்லிக்கொண்டு, விவசாயச் சங்கம் என்ற போர்வையை போர்த்திக் கொண்டு, அங்கே இருக்கின்ற பல்வேறு அரசியல் கட்சிக்காரர்கள், அவர்களோடு இருக்கிற ஏனைய ரௌடிகளையும் சேர்த்துக்கொண்டு அந்தக் காரியங்களைச் செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட கொடுமையான காரியங்களைச் செய்துவிட்டு, இங்கே வந்து தி.மு.க. வன்முறையை தூண்டிவிட்டது என்று பேசுவது எந்த அளவுக்கு பொருத்தமானது என்பதைப்பற்றி சிந்திக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் சிம்ப்லன் பிரச்னையைப் பற்றி விவாதிக்கையில் தி.மு.க. தொழிற் சங்கத்தை வளர்க்க அரசாங்கத்தைப் பயன்படுத்தி, அந்த இயக்கத்தை வளர்த்துவருகிறது என்ற ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். தி.மு.க. தொழிற் சங்கத் துறையில் ஏறத்தாழ 1958-ம் ஆண்டு முதல் நேரடியாக

[திரு. சு. துரைசாமி] [1972 ஆகஸ்ட் 11

ஈடுபட்டு வந்திருக்கிறது என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். தி.மு.க. செய்த காரியங்களினால் இன்றைக்கு தமிழ் நாடு முழுவதிலும் தி.மு.க-விற்கு நல்ல அந்தஸ்தும், செல்வாக்கும் ஏற்பட்டிருக்கிறது. அதைக் காண சகிக்காதவர்கள் இப்படியெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

அதேசமயத்தில் ஊழல்கள் என்றெல்லாம் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்ற மேலவை உறுப்பினர், **சிண்டிகேட் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு.** ஈசுவரமூர்த்தி அவர்கள் கோவையில் பள்ளிக்கூடம் நடத்துகிறார்கள். அந்தப் பள்ளிக் கூடத்தில் 15 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். 15 ஆசிரியர்களில் 10 ஆசிரியர்களை **நிறுத்திவிட்டார். அல்லே இருக்கிற டேபிள், நாற்காலிகளையெல்லாம் கடன் கொடுத்ததற்காக அட்டாச்மெண்டு செய்துவிட்டார்கள்.** அங்கே ஊழல் ஏற்பட்டிருப்பதுதான் அதற்குக் காரணம். அங்கே படிக்கின்ற 300 மாணவர்கள் மேலும் தொடர்ந்து படிப்பதற்கு வழியில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சாரக் கட்டணத்தைப்பற்றி ஒரு கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தம்முடைய தமிழ்நாட்டில் கும்பகோணத்தில் மின்சார நிறுவனம் தனிப் பட்டவரிடத்தில் இருக்கிறது. இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் என்று சொல்லிக்கொண்டிருக்கிற திரு. ராமசாமி அவர்களின் பொறுப்பில் இருக்கிறது. அவர் ஒரு யூனிட்டு மின்சாரத்திற்கு 18 பைசா வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் கரும்புக்கு, அங்கே சென்று யாரும் போராடக் காணேம். ஏன் அங்கு போய் போராடவில்லே என்பது நமக்குத் தெரிய வில்லே. சமதர்மம் பேசுகிறார்கள். இந்த அரசாங்கம் நாட்டுடமையாக்கியதை எதிர்த்து உயர் நீதிமன்றம் போகிறார்கள். சோஷலிஸத்தை இவர்கள் நாட்டுக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் பார்க்கிறோம். இதையும் இந்த நாடு தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற் காகத் தான் நான் இதை இங்கே தெரிவித்தேன்.

சுதந்திராக் கட்சித் தலேவர் டாக்டர் ஹாண்டே அவர்கள் தங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் தாக்கப்பட்டார்கள், பொய் வழக்குப் போடப் பட்டிருக்கிறது என்றெல்லாம் சொன்னர்கள். நம்முடைய மதிப்பிற்குரிய **மூன்னுள் விவசாய அமைச்சர் திரு. கோவிந்தசாமி** அவர்கள் தேவிகுளம், பீர்மேடு தமிழ் நாட்டுடன் சேரவேண்டும் என்பதற்கான **போராட்டத்தை** தாங்கள் அமைதியாக நடத்திய காலத்தில் ஒரு கடையிலே போய் ரூ. 7 **அல்லது 9 திருடிக்—கொள்ளே அடித்தார் என்று அவர் மீது—ஒரு பொறுப்பு** வாய்ந்த சட்டமன்ற உறுப்பினர் மீது—காங்கிரஸ் கட்சி அரசாங்கம்

1972 ஆகஸ்ட் 11] [திரு. சு. துரைசாமி]

அப்பொழுது வழக்கு போடவில்லையா? அப்படியிருக்கும்பொழுது, நீங்கள் கேட்கிறீர்கள் அநியாயமாக இந்த ஆட்சி வழக்கு போடுகிறது என்று. பொறுப்பு வாய்ந்த சட்டமன்ற உறுப்பினரின் மீது காங்கிரஸ் கட்சி அப்பொழுது வழக்கு போட்டது என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, பேரவைத் தலைவர் அவர்களே, நான் இறுதியாக **என் உரையை முடிப்பதற்கு முன் ஒரு கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.** இப்படியெல்லாம் நடந்துகொண்டிருக்கிறது என்று சொல்லும் மாற்றுக் **கட்சியைச் சேர்ந்தவர்கள் எந்தத் திட்டத்தை உருப்படியாகச்** சொல்லி இருக்கிறார்கள்? இந்த அரசாங்கம் இந்தக் காரியங்களைச் செய்யவேண்டும், இந்தக் காரியங்களை இப்படித்தான் செய்ய வேண்டும் என்பதாக எந்த ஒரு சந்தர்ப்பத்திலாவது, இந்த ஆட்சிக்கு சரியான பொறுப்புள்ள எந்தக் காரியத்தையாவது சொல்லியிருக்கிறார்களா என்றால், எந்த ஒரு காரியத்தையும் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்லவில்லை. அவர்கள் எதிர்க்கட்சி என்று கருதிக்கொண்டிருக்கிறார்கள். அந்த மனப்பான்மையை மாற்றிக்கொள்ள வேண்டும். இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கடுமையாக எதிர்த்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. சொ. காவேரிமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கடுமையாக எதிர்த்து ஒரு சில கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

உண்மையாகவே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஆதாரமற்றது, தேவையற்றது, தெளிவற்றது என்பதை இங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உணர்வார்கள் என்று நான் கருதுகிறேன். என்னுடைய அருமை நண்பர் திரு. லத்திப் அவர்கள் சொல்லியதுபோல இதிலே புதுமையும் இல்லை, உண்மையும் இல்லை. உண்மையில்லை என்பதற்காக நான் ஒரு சில ஆதாரங்களைக் கூற விழைகிறேன். இது எதற்காகக் கொண்டு வரப்பட்டது என்பதை இங்கே இருக்கின்ற உறுப்பினர்களுக்கு பேரவைத் தலைவர் அவர்களின் மூலமாகச் சொல்லிக்கொள்ள நான் விழைகிறேன்.

குறிப்பாக, அரசியல் நோக்கத்தின் காரணமாகவும், விளம்பர லாபத்தைக் கருதியும் இந்தத் தீர்மானம் இங்கே கொண்டுவரப்பட்டது. பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். மதுரை மேயர் அவர்கள் அவர்களுடைய தொகுதியில் பலாத்காரத்தை, வன்முறையை

[திரு. சொ. காவேரிமணியம்] [1972 ஆகஸ்ட் 11

ஆண்டினர்கள் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்கு மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்வேன். மேயர் அவர்கள் அங்கே பேசியது என்ன என்பதை இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்கள் உணர வேண்டும். வன்முறை நடக்கக்கூடாது; வன்முறை தலை காட்டக்கூடாது என்பதை மனதில் அடிப்படையாக வைத்துத் தான் அவர்கள் சில கருத்துக்களை அங்கே எடுத்துக் காட்டினார்கள். குத்தப்பட்டார்கள் தி.மு.க.-வில் இருக்கின்றவர்கள், வெட்டுக்கு ஆளானவர்கள் தி.மு.க.-வில் இருக்கின்றவர்கள் பழி வாங்கப் படுகிறார்கள், தி.மு.க.-வில் இருக்கின்றவர்கள், கடைகள் சூறையாடப்படுகின்றன, அவர்கள் உயிர்கள் பறிக்கப்படுகின்றன என்பதைப்பற்றி அடிப்படையாக வைத்து, அங்கே பலாத்காரம் ஏற்படக்கூடாது, தலைதூக்கக்கூடாது என்ற கருத்துக்களை அடிப்படையாக வைத்து தெளிவாகப் பேசினார்கள். மதுரை முத்து அவர்கள் மேயர் பொறுப்பை ஏற்றிருக்கக்கூடிய மதுரை மாநகரத்திலும், சென்னை மாநகரத்திலும் ஹர்த்தால் அன்று எவ்விதமான அசம்பாவிதமும் ஏற்படவில்லை என்பதை இங்கே நினைவு கூற விரும்புகிறேன். அவ்வாறு வன்முறை தாண்டப்பட்டிருக்குமானால், என்னவெல்லாம் நடைபெற்றிருக்கக் கூடும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க முடியும். அப்படிப்பட்ட எந்த விதமான முயற்சியிலும் ஈடுபடவில்லை. அப்படியிருக்கும்பொழுது இந்த அவையிலே இல்லாத மாண்புமிகு மதுரை மேயர் அவர்களைப்பற்றி குறை கூறியிருப்பது குறித்து என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே பேசிய பெருமதிப்பிற்குரிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் மதுரை மாநகரத்தில் நடைபெற்ற மிகச் சிறப்பு வாய்ந்த மகாநாட்டிற்குப் பலரையும் தன்புறத்தி, வற்புறுத்தி வசூல் செய்யப்பட்டது என்ற குற்றச்சாட்டை இங்கே குறிப்பிட்டார்கள். அது மட்டுமல்ல, மதுரை மேயர் அவர்களும், அவரைச் சார்ந்தவர்களும் குடித்து விட்டு தெரு வீதிகளில் வந்தார்கள் என்றெல்லாம் குற்றச்சாட்டைச் சாட்டினார்கள். பெருமதிப்பிற்குரிய கே. டி. கே. தங்கமணியை எனக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் எப்பொழுதும் உண்மைக்கு மாறாக எதையும் சொல்லமாட்டார்கள். அப்படியிருந்தும் வேண்டுமென்றே தொடுத்த உண்மைக்கு மாறான செய்திகளை இங்கே வெளியிட்டிருக்கிறார்கள்.

மதுரை மாநாடு மிகச் சிறந்த முறையில் நடைபெற்றிருக்கிறது என்ற காரணத்தினாலும் பல லட்சக்கணக்கானவர்கள் அங்கே கூடியிருந்தார்கள் என்ற காரணத்தினாலும் மதுரை மாநகரே ஒரு பெரிய தேவலோகம் போலக் காட்சியளித்த காரணத்தினாலும் அங்கே ஒரு வாரத்திற்கு முன்பே மக்கள்

1972 ஆகஸ்ட் 11] [திரு. சொ. காவேரிமணியம்]

இந்த விழாவினைக்காண கூட ஆரம்பித்து விட்டார்கள் என்ற காரணத் தினாலும் ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சி காரணமாக, கச்சத்தீவை காரணமாக நமது மதிப்பிற்குரிய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் இங்கே உண்மைக்கு மாறான கருத்தை வெளியிட்டிருக்கின்றார்கள் என்பது கருதுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, நான் ராயில் வந்தவர்களைத் தான் குறிப்பிட்டேன். எனக்குத் தெரியும், அவர் குடிக்க மாட்டார் என்று. ராயில் வந்தவர்கள்தான் குடித்துவிட்டு ஆயுதபாணிகளாக வந்தார்கள். முதலில் போலீஸ் அதிகாரிகள் கொண்ட ஒரு ஜீப்பும் பிறகு காரில் பெரியவர் களும் பின்னர் லாரிகளில் ஆயுதபாணிகளாக, குடித்தவர்கள் வந்தார்கள் என்று தான் சொன்னேன். ரிப்போர்ட்டைப் பார்த்தால் இது தெரியும்.

திரு. சொ. காவேரிமணியம் : அவர் பேசும் நேரத்தில் நான் இங்கே அமர்ந் திருந்தேன். ஒவ்வொரு வார்த்தையையும் தெளிவாகக் கேட்டுக் கொண்டு தான் இருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்தான் சொல்லுகிறாரே?

He is the final authority regarding his statement.

திரு. சொ. காவேரிமணியம் : அத்த அளவிற்குச் சிறப்பாக நடைபெற்ற மாநாட்டின் மீது ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சி காரணமாகத்தான் இங்கே வேண் டாத சிலவற்றைச் சொல்லுகின்றார் என்று பகிங்கரமாக நான் குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன்.

அது மட்டுமில்லை, நமது பொதுவுடமைக் கட்சித் தலைவர் மேலும் குறிப் பிட்டார்கள், நமது மதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள் தங்களை உலகத் தலைவராக விளம்பரப்படுத்திக்கொள்ள விரும்புகிறார் என்று. 'விளம்பரப் படுத்திக்கொள்ள விரும்புகிறார்' என்று சொல்லுவது தவறானது என்று தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஆனால் அதே நேரத்தில் நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள முடியும், எங்கள் தலைவர்கள்தான் உலகத்தில் சிறந்த பட்டங்களை வாங்கியிருக்கின்றார்கள். உலக மகா கவிஞர் என்ற பட்டத்தை எங்கள் மதிப்பிற்குரிய டாக்டர் கலைஞர் அவர்கள் பெற்றிருக்கின்றார்கள். இதைக்காட்டிலும் சிறந்ததொரு பட்டத்தை யேல் பல்கலைக்கழகத்திலிருந்து எங்கள் எல்லோரது இதயத்தில் வீற்றிருக்கும் அண்ணா அவர்கள் பெற்றிருக் கின்றார்கள், இதையெல்லாம் நான் சொல்லித் தெரியவேண்டியதில்லை, எங்கள் தலைவர்களுக்கு விளம்பரம் தேவையில்லை. ஆனாலும் வேறு

[திரு. சொ. காவேரிமணியம்] [1972 ஆகஸ்ட் 11

நோக்கங்களுக்காக எங்களைப்பற்றி வேறுவிதமாக விளம்பரப்படுத்தப்பட்டது என்பதைப் பொதுவுடமைக் கட்சி நண்பர் புரிந்துகொள்ள வேண்டும் என்று மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாநாட்டிற்காக யாரையும் வற்புறுத்தி வசூலிக்கவில்லை என்பதை அந்த மாநாட்டின் செயலாளர் என்ற முறையில் நான் மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். அங்கே உள்ள கடை உரிமையாளர்கள், மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொறுப்பிலுள்ள வட்டச் செயலாளர்கள், இளைஞர் கழகச் செயலாளர்கள் மற்றும் நண்பர்கள் எல்லோரும் தாங்களாகவே முன்வந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநாட்டிற்காக நன்கொடைகளை அளித்திருக்கின்றார்கள். இவற்றையெல்லாம் மறந்துவிட்டு, 'தாங்கள் வற்புறுத்திப் பணம் வசூல் செய்தோம்' என்று உண்மைக்கு மாறான கருத்தைப் பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு கே. டி. கே. அவர்கள் சொல்லுகிறார் என்பதில் நான் என் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இவ்வாறெல்லாம் அவர்கள் சொல்லுவதற்குக் காரணம் ஒரு காலத்தில் மதுரை என்றால் மதிப்பிற்குரிய இராமமூர்த்தி அவர்களையும் கே. டி. கே. அவர்களையும்தான் எண்ணத்தோன்றுமேயன்றி வேறு ஒருவரையும் எண்ணத் தோன்றாது. இன்றைக்கு அந்த அளவிற்குச் செல்வாக்கு இல்லாத காரணத்தினால் பெரு மதிப்பிற்குரிய மேயர் அவர்களைத் தவிப்பட்ட முறையில் தாக்க வேண்டும் என்று வந்திருக்கின்றார்கள் என்று நினைக்கிறேன். இன்னும் சொல்லப்போனால், 'மதுரை என்ன மேயர் முத்துவிற்குச் சொந்தமா' என்றுகூட கேட்டார்கள். உண்மையில் முள்பு மதுரை முத்து என்று இருந்தது மாறி இன்றைக்கு முத்து மதுரை என்று ஆகியிருக்கிறது என்று சொன்னால் அதில் என்ன ஆச்சரியம் இருக்க முடியும். இன்றைக்கு அவர்தான் மேயராக இருக்கின்றார்கள். பொதுமக்கள் எல்லோரும் சேர்ந்து, 'நீங்கள்தான் மேயராக இருக்க வேண்டும்' என்று சொல்லிய காரணத்தினால் தான் அவர்கள் மேயராக இருக்கின்றார்கள்.

இன்னும் ஒன்றைக்கூடச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஒரு காலத்தில் பொதுவுடமைக் கட்சியின் கோட்டையாக இருந்தது மதுரை. அந்தக் காலத்தில் அங்கே என்ன நடைபெற்றது என்பதைச் சற்று இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன். அந்தக் காலத்தில் பழைய காங்கிரஸ் அரசியல் வாதியான என். எம். ஆர். சுப்பராமன் அவர்களுடைய கார் வழி மறிக்கப்பட்டு, அவர் தாக்கப்பட்டு அவரது காருக்கும் பெருஞ்சேதம் விளைவிக்கப்பட்டது. அது மட்டுமில்லை, அரிசனங்களுக்காக வாதாடிய வைத்தியநாத ஐயர் அவர்களுடைய வீடு தொறுக்கப்பட்டது, அவரும் தாக்கப்பட்டார். அதைத்

1972 ஆகஸ்ட் 11] [திரு. சொ. காவேரிமணியம்]

தொடர்ந்து வெள்ளைச்சாமி என்ற தொழிலாளர் வெட்டிக் கொலை செய்யப் பட்டார். நீதி மன்றத்திற்குக் கொண்டுசெல்லப்பட்ட இராவணன், கிருஷ்ணன் என்ற இரண்டு தொழிலாளர்கள் வெட்டிக் கொலை செய்யப் பட்டார்கள். இன்னும் சொல்லப்போனால், நகை வியாபாரம் செய்துகொண்டு இருந்த இராமநாதன் செட்டியார் கொள்ளையடிக்கப்பட்டு பல்லாயிரக் கணக்கான விலை மதிப்புடைய பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டன. மதுரை நகரில் மிகச் சிறந்த விழாவெனக் கொண்டாடப்படுவது சித்திரைத் திருவிழா. அந்த விழாவினையொட்டி வைகையாற்றங்கரையில் லட்சக் கணக்கான மக்கள் கூடுவார்கள். அப்படிப்பட்ட நேரத்தில் ஆற்றில் வெள்ளம் வருகிறது என்று வீண் பீதியைக் கிளப்பிவிட்டு, கூடியிருந்த மக்கள் அல்லோல கல்லப்பட்டுக் கொண்டு இருக்கும் நேரத்தில் அவர்கள் கொள்ளையடிக்கப் பட்டார்கள். இதெல்லாம் நடந்தது எப்போது? யார் காலத்தில் நடந்தது? இந்த அக்கிரமங்களும் அராஜகங்களும் யார் காலத்தில் நடந்தது? நீங்கள் கொடிகட்டிப் பறந்த காலத்தில்தான் நடந்ததே தவிர திராவிட முன்னேற்றக் கழகம் செல்வாக்குப் பெற்றுள்ள மதுரையில் இவை நடைபெறவில்லை என்பதை பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எனவே இத்தத் தீர்மானம் தெளிவற்றது, உண்மைக்கு முற்றிலும் புறம் பானது என்று கூறி எனது எதிர்ப்பினைத் தெரிவித்து என் உரையை முடிக் கிறேன், வணக்கம்.

THIRU K. M. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, it is with great responsibility that the leaders of the opposition have jointly brought forward a No-Confidence motion against the ruling party. Sufficient emphasis has been given to the atrocious murder of about 70 people by the ruling party forces, whether it is the police or otherwise, whether intentional or not. It is worse than Calcutta Black-hole and Jallianwala Bagh. Seventy people have been murdered and the people of Tamil Nadu are agitated over the gruesome act. I am not going to deal with it further, for, sufficient has been said already.

Now, Sir, the duty of the opposition is to co-operate with the Government, they say. When the ruling party had profusely made promises to do many things and do not carry out their promises, it is the bounden duty of the opposition parties to oppose the Government and topple the Government, if necessary by all democratic methods—I emphasise democratic methods.

[Thiru K. M. Subramaniam] [1972 ஆகஸ்ட் 11

Sir, this Government promised that they would give if they come to power one measure a rupee of rice. Did they give one measure a rupee of rice? Instead of that, now we are giving three rupees a measure. What is their promise and what is their execution?

Again, they said—yesterday the hon. Member Thiru Rama Aranganna! said that the revenue of the State has increased from 194 crores to 394 crores. Is it not a shame that when they stood for election they said that they would reduce the taxes and when they got into power they have increased the taxes by subtle means? And within seven years, they have increased the revenue to 200 crores. Leave alone that.

Since the time is limited, I am only touching upon important points. You have introduced prohibition (Interruption). Yes, scrapped prohibition. I am sorry for the slip of the tongue. Well, generally the D.M.K. takes advantage of slips only rather than action. Now having scrapped prohibition, they get Rs. 40 crores of revenue by auction. Leaving alone foreign wines, if the Government should get Rs. 40 crores, that means there should be business for 400 crores and that means—I do not say all the four crores of the people of Tamil Nadu are drunkards—at least two crores of people are drinking toddy and that is 400 crores of rupees worth of liquor. To that extent the consuming power of the people is going down. The whole thing is a fraud on the people. If they had announced that they were going to scrap prohibition at the time of going to the election, they could now scrap prohibition. But having made profuse promises then and having gained power and having come to the Legislature, to scrap prohibition is something which is absolutely undemocratic to say the least.

Now, Sir, leaving alone all these, let us take the revenue increase. The Hon. Minister for Revenue has increased sales tax in a subtle way, ultimately with an increase beyond expectations. If you increase by one percent, the entire turnover is equal to four per cent and prices have increased because of that. You have increased sales tax, bus fare, electricity rate and many other things. They say they had given up land tax.

1972 ஆகஸ்ட் 11] [Thiru K. M. Subramaniam]

What is the land tax they have given up. It is only the basic land tax they have given up. Instead of that, they have increased water cess and other forms of tax on land. When such is the case, they cannot say that they have given up the land tax. These are the things that need great and deep thinking.

Now, Sir, take the unemployment problem. They have not solved the unemployment problem. In 1971 the number of persons registered in the Employment Exchange was 4,60,000 and in 1970 it was 4,04,000. Thus there is an increase of 56,000 unemployed persons. So the unemployment problem is increasing every day. Sir, apart from the unemployed persons registered in the Employment Exchange, what is the number of persons thrown out of employment on account of the labour dispute in the Simpson Group of Companies? How many persons are suffering on that account for the last six months? Hundreds of employees are without job and without food. Even the last tumblers in their houses have been sold and many persons came and represented to me about it. Sir, the Government may take satisfaction in saying that they have done everything and that it is only the Opposition Parties which are inspiring the strke. If the Government cannot solve the strike problem, they will have to get out. About 16,000 persons are starving, and how can the Government be self-complacent and say that it is only the Congress that has inspired the strike? Irrespective of the party question, the efficiency of the Government depends on their achievement and not on their excuses. What is the achievement of the Government? Though they have been saying that the Simpson Company would be open to-day or tomorrow nothing has been done so far. I leave it at that.

Coming to law and order problem, as soon as the 1971 election results were published, no Brahmin could walk on the streets of Theagaraya Nagar and even Nadars also came under the category . . .

THIRU S. KANDAPPAN : Sir, I rise on a serious point of order. The hon. Member has stated that soon after the elections of 1971 neither Brahmins nor Nadars could walk on the streets. This must be expunged from the official proceedings and the hon. Member must apologise.

MR. SPEAKER : Why?

THIRU S. KANDAPPAN : He should substantiate it.

MR. SPEAKER : Why had they chosen Brahmins for molestation?

THIRU K. M. SUBRAMANIAM : I do not know.

MR. SPEAKER : You must have information . . .

THIRU K. M. SUBRAMANIAM : Mr. Speaker, I know that tufts of many Brahmins were cut. One Brahmin was stabbed and so many things had happened.

MR. SPEAKER : When the hon. Member speaks in the Assembly, it is better that he should substantiate it. The hon. Member has stated that Brahmins had been attacked and molested. He may not withdraw it but he should substantiate it. He must take responsibility when he makes statements like that.

THIRU K. M. SUBRAMANIAM : In the Assembly I do not want to make an unnecessary statement.

MR. SPEAKER : Can the Hon. Member substantiate it?

THIRUMATHI T. N. ANANDANAYAKI : In my constituency such incidents like cutting of tufts took place and then I brought it to the notice of the Hon. Chief Minister.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்ததைச் சொல்கிறேன். அவர்கள் இத்தக் கட்சியைவிட்டு தேசிய காங்கிரஸுக்குப் போனபின்னால் நாடார்கள், அவர்களுடைய வீட்டுக்குப் போய் தொல்லை கொடுப்பதாக என்னிடம் புகார் கொடுத்திருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : நாடார்கள் என்று நான் சொல்லவில்லை. நாத்திகம் பத்திரிக்கையிலே அப்படி எழுதியிருக்கிறார்கள் என்று சொன்னேன். அவர்களுடைய தொல்லைகளிலிருந்து எனக்குப் பாதுகாப்பு வேண்டும் என்று சொன்னேன். நாடார்கள்தான் என்னைத் தாக்குகிறார்கள் என்று நான் சொல்லவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாடார்கள் தாக்குகிறார்கள் என்று நிச்சயமாகச் சொன்னார்கள். என்னுடைய தொகுதியாகிய மைலாப்பூர் மக்கள் என்னை எதிர்க்கவில்லை. அங்குள்ள நாடார்கள் நான் என்னைத் தாக்குகிறார்கள், தொல்லை கொடுக்கிறார்கள் என்று என்னிடம் சொன்னார்கள், அப்படி என்னிடம் புகார் கொடுத்தார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: எனக்குத் தொல்லை கொடுப்பதில் நாடார்கள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள் என்று சொன்னேன். என் தொகுதி மக்கள் என்னை வெறுக்கவில்லை. அங்கிருக்கின்ற கட்சித் தலைவர் மார்த் தாண்டத்தின் தாண்டுதலால் நாடார்கள் என்னைத் தாக்குகிறார்கள். அங்கே சிவாஜி ரசிகர் மன்றம் ஒன்று இருக்கிறது. அந்த மன்றத்தின் பெயரால் என்னைத் தாக்குகிறார்கள் என்று சொன்னேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சிவாஜி ரசிகர் மன்றம் என்ற பெயரால், நாடார்கள் என்னைத் தாக்கிவருகிறார்கள் என்று சொன்னார்கள். சிவாஜி உங்களுக்கு உறவினராயிற்றே (சிரிப்பு). அவர்கள் எப்படி உங்களைத் தாக்குவார்கள் என்று கேட்டேன். அவர்கள் தாக்கவில்லை. அவர்கள் பெயரால் நாடார்கள் வந்து தாக்குகிறார்கள் என்று சொன்னார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: முதலமைச்சர் அவர்கள் சொல்வதைத் தெளிவாகச் சொல்லவேண்டும். அதற்காக நான் ஒன்றும் பயப்படவில்லை.

THIRU V. KRISHNAMOORTHY: Sir, on a point of order. When the Prime Minister came to receive funds from the Hon. Chief Minister, she was sitting by my side. I asked for clarification from her. She stated that only Nadars were agitating against her for joining the Congress. So, now how can she go back?

திருமதி த. ந. அனந்தநாயகி: பக்கத்திலே இருந்து பேசினேன் என்னுல் பேசியது எல்லாவற்றையும் தெளிவாகச் சொல்லலாமே. ஏன் தவருகத் தெரிகின்ற பகுதியை மட்டும் சொல்லவேண்டும்? சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி சொல்ல வேண்டும். இப்போர்பட்ட நண்பர்களிடம் இனி பேசும்போது டேப் ரிக்கார்டர் கொண்டுபோய் வைத்துவிட்டுத்தான் பேசவேண்டும் போலிருக் கிறது. என்னுடைய தொகுதி மக்கள் நான் தேசிய காங்கிரஸில் சேர்ந்ததை வரவேற்கிறார்கள். ஆனால் அங்கே இருக்கின்ற நாடார்கள்தான்—அம்பட்டன் வராவதி பக்கத்திலிருக்கிற விறகுக்கடைக்காரர்கள்தான்—நான் தேசிய காங்கிரஸில் சேர்ந்ததை எதிர்க்கிறார்கள்; என்னைத் தாக்குகிறார்கள்; இந்தப் பிரச்சனையில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்று சொன்னேன் (சிரிப்பு). (சூறுக்கிடு) சொல்வதைத் தெளிவாகச் சொல்லுங்களேன். எனக் கொன்றும் பயமில்லை.

THIRU V. KRISHNAMOORTHY: Is it not communal?

THIRUMATHI T. N. ANANDANAYAKI: It is not communal. I am explaining my stand.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, இந்த சபையிலே ஒவ்வொரு ஜாதியைப் பற்றியும், எந்த ஜாதியினர் என்ன சொல்கிறார்கள், என்ன செய்கிறார்கள் என்று விவாதிப்பது பொருத்தமாக இருக்காது. அதை அனுமதிக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : நான் தேசிய காங்கிரசைச் சேர்ந்தது பற்றி என் தொகுதியிலுள்ள சில நாடார்கள் தான் என்னை எதிர்க்கிறார்கள். அவர்கள்தான் என்னைத் தாக்குகிறார்கள், எனக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று கேட்டேன். இருக்கக்கூடிய நாடார்கள் அத்தனைபேரும் என்னைத் தாக்குகிறார்கள் என்று நான் சொல்லவில்லை. அப்படியிருந்தால் ஏன் உங்கள் கட்சியிலும் (தி.மு.க.) நாடார் சமுதாயத்தைச் சேர்ந்த ஆசைத்தம்பி இருக்கிறாரே அவர் இப்படித் தாக்குகிறாரா என்று அவரைப்போய் கேட்பது தானே.

THIRU R. PONNAPPA NADAR : Sir, so far as the speech made by the hon. Member, Thiru K. M. Subramaniam is concerned, he has made only a general statement. He did not incite communal tension. Some persons have taken up such a thing. It is better that we should not indulge in communal politics and we do not talk ill of one particular community. We should not malign the name of one community. I belong to a particular community and that is not a sin which I have committed. I think it is in fairness that we should not create bickerings at this stage.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த சாதிப் பிரச்சினை கிளம்புகிற அளவுக்கு திரு. சுப்பிரமணியம் அவர்கள் தம் பேச்சைத் தொடங்கியிருக்க வேண்டியதில்லை. பிராமண நண்பர்கள், நாடார் நண்பர்கள் பயங்கரமான அளவுக்குத் தாக்கப்படுவதாகச் சொன்னார்கள். அன்றைக்கும் சொன்னேன். இன்றைக்கும் சொல்கிறேன். இந்த அரசு பிராமணர்கள் ஆனாலும், நாடார்கள் ஆனாலும் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களானாலும் எல்லோருக்கும் தகுந்த பாதுகாப்பை அளித்துக்கொண்டுதான் வருகிறது. இந்த அரசு தொடர்ந்து பாதுகாப்பை அளித்துக்கொண்டு வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்தச் சட்டசபையில் நாடார் வகுப்பைச் சேர்ந்தவர்கள் 16 பேர்கள் இருக்கிறார்கள். அப்படி இருக்கிறபோது நாடார்கள் பயந்துகொண்டிருக்கிறார்கள் என்பதாக திரு. சுப்பிரமணியம் சொன்னது அந்தச் சமூகத்தையே இழிவுபடுத்துவதாக இருக்கிறது. அதை அவர் திரும்பப்பெறவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் தம் பேச்சைத் தவறுக ஆரம்பித்துவிட்டார்கள். ஆரம்பத்திலேயே திரு. தங்கமணி தடுத்திருந்தால் பிரச்சினை இவ்வளவு தூரம் வளர்ந்திருக்காது.

THIRU K. T. K. THANGAMANI : I was not present at that time.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்போது திரு. தங்கமணி சபையில் இருந்தார்களா, இல்லையா என்பதை நான் கவனிக்கவில்லை. பிரசமணர்களும், நாடார்களும் மொலஸ்ட் செய்யப்படுகிறார்கள் என்று திரு. சுப்பிரமணியம் குறிப்பிட்டுவிட்டார். இதை அனந்தநாயகி அம்மையார் மைலாப்பூருக்கு அழைத்துக்கொண்டு போய்விட்டார்கள். (சிரிப்பு) பொதுவாக இங்குள்ள வர்கள் எல்லாம் முதலியார் என்றோ, நாடார் என்றோ, ஐயர் என்றோ சாதி அடிப்படையில் யாரும் கருதுவதில்லை. எல்லோரும் சமமாகத்தான் கருதப் படுகிறார்கள். பேச்சைத் துவங்கியவர் தவறுன உணர்ச்சிகளைத் தூண்டும் நிலைக்கு இழுத்துப்போய்விட்டார். இதுபற்றி நான் பெரிய ஸ்டேட்மெண்ட் எதுவும் கொடுக்க முடியாது. திரு. தங்கமணி அவர்கள் பேசும்போதுகூட நேற்று, நாயக்கர்கள் இருந்தார்கள், படையாச்சிகள் இருந்தார்கள் என்று குறிப் பிட்டார். பொதுவாக எந்த ஒரு சாதியைப்பற்றியும் இழிவுபடுத்தும் நிலையில் யாரும் பேசக் கூடாது. என் கவலை எல்லாம்—யார் குற்றம் செய்தார் கள் என்பது அல்ல—யாரோ ஒரு சிலர் குற்றம் செய்ய அதற்காக அந்தச் சமூகத்தையே இழிவுபடுத்தும் முறையில் பேசுவது நல்லது அல்ல. திரு. சுப்பிரமணியம் அவர்கள் இந்த விஷயத்தை விட்டுவிட்டு அடுத்த விஷயத்திற்குப் போகும்படியாக நான் அவரைத் தொடர்ந்து பேச அழைக்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : I do not mean any offence to any Government. I am not going to speak on that subject. I do not represent any particular community. I represent the entire community in my constituency. I wanted to talk how law and order is working in this State. I shall explain. On 5th July there was 'bandh'. What happened ? All Congressmen from my constituency under the excuse that they are likely to act and to create riot, all of them were arrested. Others went about the streets actually threatening the shop-keepers that if they closed on that day, they would be closing the shop for ever and that they would not re-open afterwards. Some closed the shops. About 20 to 30 people closed the shops. Next day, on the 6th night, a drum full of tar was melted in front of the police station (three policemen were watching, I have made a complaint to the police

station) and on all the shops which did not open on 5th, tar was smashed. Is this law and order ? How many instances I can quote? I do not want to waste my time by quoting indefinitely.

Ministers go on saying there is no corruption. I do not think Ministers are corrupt. I cannot prove they are corrupt. But I say definitely that there is corruption in administration. The massive victory in 1971 has intoxicated the party to such an extent that even the smallest DMK man is thinking that he is the Hon. Minister, that he is the sub-inspector of the police station, that he is the District Superintendent of Police. He gives orders and administration is afraid to disobey him. Of course, the Hon. Chief Minister has issued orders that DMK partymen should not interfere in administration. But what is happening? In the higher ranks, in the MLA level, there may not be interference. But in the lower ranks of DMK, everybody knows what is happening. Take my own constituency. The T. Nagar police station is almost DMK sub-station. If this sort of thing is allowed, where is law and order ?

(Mr. Speaker sounded the gong.)

I have lost 10 minutes. Others have interrupted.

MR. SPEAKER : You are also gaining. You have taken more time.

THIRU K. M. SUBRAMANIAM : We are spending Rs. 95 crores, it is said on Education. But the recent survey of the Hyderabad Institute has revealed that the spending by Tamil Nadu Government on education is a total waste and that there is no improvement in education. Yesterday some members from the other side were boasting of achievement of this State in education. In 1967 there were 30,000 elementary schools in the State. Today the number is only 32,000. In five years, they have increased only 2,000 elementary schools. What is the use of opening more colleges ? What is the use of having high schools unless you open more elementary schools, which form the basis ?

Now we have several autonomous boards. One is the Water Supply and Drainage Board. We have been asking from time to time for decentralisation of administration. Instead of panchayats and municipalities doing the work, the entire work is now taken away by Government, by this Board. Since it is a Board,

an autonomous Board, there is no Service Commission to make recruitment and all supporters of DMK are being employed in the Board, people who worked for DMK MLAs' victory in the recent elections, are being employed in the Board.

I say so far as finance is concerned, there is absolute financial chaos. I am referring to the Madras Corporation. Previously if the Corporation wanted loan, they have to prepare an estimate, get it passed by the Council and then come to Government, with an application for loan. Today the Corporation can submit simply an application. Nobody knows what is the estimate. ...

THIRU S. KANDAPPAN : On a point of Order, Sir, The hon. Member has referred to the Tamil Nadu Water Supply and Drainage Board. He has alleged that recruitment is taking place without any sort of regulation and discipline. I am afraid that it is totally misleading. First of all, the establishment was there even before the formation of the Board. There is little scope for any fresh recruitment. I am sorry that a senior member and responsible member should be talking in this vein without verifying the facts. I totally refute his saying that the Board has made numerous recruitments without any discipline. I am sorry that such an allegation should be made against an autonomous Board.

THIRU K. M. SUBRAMANIAM : The very fact it is an autonomous Board shows that the Service Commission has no control over its recruitment.

MR. SPEAKER : That does not mean that it is making irregular recruitment.

THIRU K. M. SUBRAMANIAM : When there is no recruitment by the Commission, the possibility which I have alleged is there. We are human beings. If Service Commission is there, it is different. If there is control it will be good; otherwise, it may be good, bad or indifferent. The present Chairman of the Board is good and he explained the recruitment, but tomorrow somebody else may come and what will be the position? That is my point.

MR. SPEAKER : Mr. Subramaniam, do you mean to say that if that is not within the purview of the Public Service Commission, everything will be irregular ?

THIRU K. M. SUBRAMANIAM: There is a possibility. Whether it is the Corporation, whether it is a Board or an autonomous body, when it is not controlled by the Public Service Commission, it has been found to have led to irregularities. So there is that possibility. I did not say that there was bad recruitment how. Today, he is the chairman and he is a good man, nobody disputes it. But tomorrow what happens ? (Thiru S. Kandappan stood in his seat).

MR. SPEAKER: He has corrected his statement.

THIRU S. KANDAPPAN: It is not as if I want to clear my position. My argument is that the very constitution of the Board whether it is the water board or any other board is such that there cannot be any irregularity.

MR. SPEAKER: Anyhow he has corrected his statement.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: May I invite the attention to the plea of the J. Es of the Public Works Department? The J. Es are left alone and in the Water Board which is born only yesterday, only Engineers far junior to them are taken and they become A.Es. This has been put up in posters and the problem is there. The Chairman of the Board cannot say that his hands are clean.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இத்தகைய குற்றச்சாட்டு பொருத்தமற்றது என்பதற்காக நான் விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு போர்டிலே பணியாற்றுவதற்கு அப்படி விரும்புகிறவர்கள் மட்டுமே பணியாற்ற எடுக்கப் படுகிறார்கள். விரும்புகிறவர்களுக்கு, விரும்பிப் பணியாற்றி வருகிறவர்களுக்கு இடையேதான் சீனியாரிடி கணக்கில் கொண்டுவரப்படுமே தவிர விரும்பாதவர்களும், விரும்பி அதில் பணியாற்ற முன் வராதவர்களுக்கு அந்த சீனியாரிடியிலே இடம் இல்லை. ஹவுஸிங் போர்டாக இருந்தாலும் அல்லது வேறு எந்த போர்டாக இருந்தாலும் விரும்பி அங்கே பணியாற்ற வருகின்றவர்களைத்தான் பணியாற்றச் செய்யமுடியுமே தவிர விரும்பாதவர்களைப் பணியாற்றச்சொல்ல முடியாது. விரும்பாதவர்கள் தாங்கள் பணியாற்றும் துறையிலேயே இருந்தால் தங்களுக்கு நல்லது என்று கருதி விரும்பாதவர்களைக் கட்டாயப் படுத்துவது இல்லை. அவர்களுக்கு போர்டிலே உள்ள பணியில் சீனியாரிடி கிடைக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1972 ஆகஸ்ட் 11]

திருமதி. த. ந. அனந்தநாயகி: அப்படியென்றால் எல்லோரையுமே அவர்கள் விருப்பப்படித்தான் போட்டுக்கொள்வார்கள். அவர்களுக்கு எல்லாம் சீக்கிரம் ஏ.இ. போஸ்ட் வந்துவிடும். ஆனால் போன்ட் டிபார்ட்மெண்டாக இருக்கிற பி.டபிள்யூ.டி.யில் பணியாற்றுகிறவர்கள் எல்லாம் கடைசிவரையில் ஜூனியர் எஞ்சினியர்களாகத்தான் இருக்க வேண்டுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலீவர் அவர்களே, 1967-க்கு முன்னாலே திரு. வெங்கட்டராமன் அவர்கள் அமைச்சராக இருந்தபொழுது ஹவுஸிங் போர்டில் யார் யார் நிலீப்படுத்திக்கொண்டு இருந்தார்களோ அவர்களுக்குத் தான் உயர்வுக்கு வாய்ப்பு அளிக்கக்கூடிய முறைதான் இருந்தது. இப்பொழுதும் அந்த முறைதான் தொடர்ந்து இருந்து வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஏற்கனவே இருந்தமுறைதான் தொடர்ந்து இருந்துவருகிறது என்றால் அதற்கு நீங்கள் இருக்கவேண்டாமே? வெங்கட்டராமனே இருக்கலாமே.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பொதுமக்கள் அதைத் தீர்மானித்துதான் பல பேர்களை வீட்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பொதுமக்களுக்கு விருப்பம் இல்லாத நிலீமையில்தான் இந்தச் சபையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பொதுமக்கள் தீர்மானிப்பதற்கு குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுக்காலம் இருக்கிறது.

(Thiru S. Kandappan stood in his seat)

MR. SPEAKER: He has corrected his statement.

THIRU K. M. SUBRAMANIAM: I have corrected it.

MR. SPEAKER: The ball is not in your court. He wants to explain.

திரு. செ. கந்தப்பன்: குடிநீர் வாரியம் சம்பந்தப்பட்ட வரையில் ஒரு விஷி இருக்கிறது. அதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசுத் துறைகளிலிருந்து, குடிநீர் வாரியத்தில் பணியாற்றுவதற்கு விரும்புகிறவர்கள் இருந்தால் அவர்களுக்கு 60 நாட்கள் காலம் தந்து அந்தக் காலத்திற்குள் அவர்கள் அப்படிப்பட்ட விருப்பத்தைத் தெரிவிக்கலாம் என்று நோடிபிகேஷன் கொடுத்து கேட்கப்பட்டது. யார் யார் எல்லாம் விருப்பம் தெரிவித்து இருந்தார்களோ அவர்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். ஏற்கனவே மற்ற துறையிலிருந்து பணியாற்றியவர்கள் டெபுட்டேஷன் என்ற அளவிலே இங்கே பணி

யாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(Dr. Hande stood in his seat).

MR. SPEAKER : I am not permitting you, Mr. Hande. Dr. Hande will resume his seat. This is not a general discussion. Thiru Subramaniam will continue.

THIRU K. M. SUBRAMANIAM : I think I have failed to discharge my duty, explaining it properly. I did not mean recruitment alone; I mean the very creation of the Board was against the spirit of decentralisation of administration and reduction of expenditure. That is what I have been after. Not only that, it may be that in the modern conception centralisation is attempted, whether it is the Panchayats, whether it is the Municipalities or any other body, you take away water supply, drainage and roads. You take away one by one, leaving only sweeping the streets to them. Nothing else. That is what is happening today under this administration. Sir, that is why I am opposed to this nethod. Formerly, whatever was done was done through proper authorities and after proper technical supervision.

Now, Sir, I come to the most important thing and that is about State Autonomy. State Autonomy.....

MR. SPEAKER : No, no. Thiru K. Rajaram will now speak.

*திரு. கே. ராஜாராம் : மதிப்பிற்குரிய சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, விசித்திரமான அரசியல் சூழ்நிலையில் வேடிக்கையான ஒரு தீர்மானம் இங்கே வந்திருக்கிறது. இந்தத் தீர்மானத்தை எதிர்த்துத் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்ன நண்பர்களோடு சேர்ந்து நானும் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இணைத்திட விரும்புகிறேன். 16, 17 மாதங்களுக்கு முன்புதான் இந்த நாட்டு மக்கள் ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை நிறை வேற்றினார்கள். அந்தத் தீர்மானத்தின் விளைவுதான் எதிர்க்கட்சி என்று சொல்லிக் கொள்கிறவர்களை எங்கே என்று தேடிப்பிடிக்கக்கூடிய நிலையிலே, அளவிலே சிறுத்து காரத்திலே குறைந்து வலிவிழந்து ஒளியிழந்து கலையிழந்து, பலனேப்பட்டு இங்கே இயங்கிக்கொண்டு இருக்கிறார்கள். அப்படி ஒரு ஒளியிழந்த, வலிவிழந்த, கலையிழந்த, பலனேப்பட்ட எதிர்க்கட்சி இந்த மன்றத்திலே இடம்பெற்றிருந்தாலும், மக்களுடைய போராதரவைப்பெற்று பெரும் சக்தியாக இன்றைய தினம் உருப்பெற்றிருக்கிற திராவிடக் முன்னேற்றக் கழகப் பேராசு டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் ஜனநாயக வழிநின்று

1972 ஆகஸ்ட் 11] [திரு. ஜி. ராஜாராம்]

எதிர்க்கட்சிகளுக்கு—நாங்கள் எல்லாம்கூட பொருமைப்படத் தக்க அளவில் அதிகப்படியான சலுகைகளை வாரி வழங்குவதை இந்த மன்றம் அறியும், அவர்களும் அறிவார்கள் மாற்றுரை மதிக்கின்ற மனவளத்தோடு இந்த அரசு நடை போடுவதை எல்லோரும் அறிவார்கள். "உங்களுக்கு இத்தகைய மனவளம் இருக்கலாமா?" "நீங்கள் இத்தனை உயர்-ஜனநாயகப் பண்பினை காட்டலாமா?" என்று கேட்பதைப்போல அதனாலேதான் உங்கள்மீது நம்பிக்கையில்லை எங்களுக்கு என்று சொல்லுவதுபோல இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந் திருக்கிறார்கள்.

இந்தத் தீர்மானத்திற்குப் பின்னாலே இருப்பவர்களைப் பார்க்கும் போது வேடிக்கையாக இருக்கிறது. கொள்கை முரண்பாடு கொண்டவர்கள், லட்சியத் திலே இணைப்பில்லாதவர்கள் யார் ஏமாந்தால் யாருடைய காலை எப்பொழுது எப்படி வாரலாம் என்று நேரம் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் இப்படி தங்களுக்குள்ளேயே நம்பிக்கையில்லாதவர்கள் எல்லாம் இணைந்து எங்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். பாராளுமன்ற ஜனநாயகம் எதிர்க்கட்சிகளுக்கு அளித்துள்ள வலிமையான ஆயுதம்தான் நம்பிக்கையில்லாத் தீர்மானம், அந்த வலிமையான ஆயுதத்தைக்கூட நேரம் அறிந்து காலம் அறிந்து பயன்படுத்தும் போது தான் அதற்குரிய பலனுண்டு பயனுமுண்டு. அதாவது பாரதத்தில் வருகின்ற நாகாஸ்திரத்தைப்போன்றது, இந்த ஆயுதம். கர்ணன் கையில் கிடைத்த நாகாஸ்திரம் எப்படிப் பயன் இல்லாமல் கெட்டதோ அதைப்போல இன்று எதிர்க்கட்சிகளுக்குக் கிடைத் திருக்கும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அவர்கள் வீணடித்துக் கொண்டிருக்கிறார்கள். கர்ணன் விசிய அஸ்திரமாவது அரசுனனது கிரீடத்தைத் தொட முடிந்தது. ஆனால் இந்த எதிர்க்கட்சிக்காரர்கள் வீசக்கூடிய இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் டாக்டர் மூதலமைச்சர வர்களைத் தொடக்கூடப் போவதில்லை. இந்த அரசை உரசக்கூடப் போவதில்லை என்பதை நம்மைவிட அவர்கள் நன்றாக அறிவார்கள். நான் இப்படிச் சொல் வதால் ஏதாவது வலதுசாரி கம்யூனிஸ்ட்கட்சிக்காரர்களையும், இந்திரா காங்கிரஸ்காரர்களையும் கர்ணனுக்கு ஒப்பிட்டுப் பேசுவதாகக் யாரும் கருத வேண்டாம். பாவம் கர்ணன் நல்லவன், நன்றி உள்ளவன், சேர்ந்த இடத்திலிருந்து செஞ்சோற்றுக் கடனைத் தீர்த்தவன், ஒரு உதாரணத்திற்காகத் தான் சொன்னேன்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் இன்று இவ்வளவு அவசரம் அவசரமாக வந்திருக்க வேண்டிய அவசியமென்ன? புத்தனுக்கு போதி மரத்தடியில் ஞானோதயம் வந்தது போல், தண்ணீர் தொட்டிக்குள் ஆர்க்கிமிடிசுக்கு திடீரென மிதவை தத்துவம் பிறந்ததுபோல் இவர்களுக்கு ஒரு நம்பிக்கையில்லை

[திரு. ஜி. ராஜாராம்] [1972 ஆகஸ்ட் 11

என்று ஒரு தீர்மானத்தை இன்றைக்குத் திடீரென்று உணர்வு பிறந்து நம்மீது எதிர்க் கட்சிக்காரர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். இதற்கு அவசர அவசியம் என்ன? ஒரு நிலையான பேரரசு ஒரு நிம்மதியான பேரரசு, அமைதியான பேரரசு இந்த நாட்டிலே உருவாக்கப்பட்டு தி.மு.க.-வால் உலவிடப்பட்டிருக்கிறதே அதனால் இவர்களுக்கு நம்பிக்கையில்லையா? இதனாலேதான் எதிர்க்கட்சிகாரர்கள் எங்கள் மீது நம்பிக்கை இழந்து விட்டார்களா? வேளாண்மைத்துறையிலே கோடிக் கணக்கில் செலவிட்டு பசுமைப்புரட்சியை உண்டாக்கியும், புஞ்சைக்கு நீர்வையை ரத்து செய்து; நஞ்சைக்கும் 5 ஏக்காவுக்குமேல் தான் அடிப்படையில் நீர்வை என விகிதத்து பலவிதமான புரட்சிகரமான விவசாய சட்டங்களால் விவசாயிகளை வாழவைக்க இந்த அரசு முயற்சிகள் எடுத்ததே அதனால் எதிர்க்கட்சிகளுக்கு இந்த அரசாங்கத்தின்மீது நம்பிக்கை இல்லையா? கண் சிகிச்சை முகாம் திட்டம், பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம் என்று யாருமே எண்ணிப் பார்க்காத அந்த அரிய திட்டங்களை செயல் படுத்தியதே இந்த அரசு அது பிடிக்கவில்லை. குடிசை வாரியத்தின் மூலம் குடிசைவாழ் மக்களுக்கு எற்றம் பெரும் எழில்மிகு திட்டங்கள் உருவாகி செயல்படுத்தப்பட்டனவே இவைகள் உங்கள் நெஞ்சங்களைத் தொடவில்லையா? இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்ததற்கு இந்த நல்ல காரியங்கள்தான் காரணமா? என்ன காரணம்? காரணம் என்னவென்று கேட்டால் விவசாயப் போராட்டமாம். துப்பாக்கிச் சூடாம்; பிணங்களாம், இதுதான் காரணம் என்று சொல்கிறார்கள். யார் அந்தப் போராட்ட விவசாயிகள்? எங்களுக்குத் தெரியாதா? பட்டக்காரர்களும், பாளையக்காரர்களும், மிட்டாக்களும், மிராசுகளும், இணைந்து போட்ட கொட்டம்தானே அது? ஏழை விவசாயிகளைப் பகடைக் காய்களாக வைத்து ஆடிய சதுராட்டமல்லவா அது? இந்த விவசாயிகள் யார்? காலையிலே கோழி கூவுவதற்கு முன்னாலே எழுந்திருந்து, தோளிலே கலப்பை தூக்கிச் சென்று வயல்களிலே முழங்கால் சேற்றிலே இறங்கி மாட்டுக்குப் பதில் ஏர்பிடித்து உழுகின்ற ஏழை விவசாயி எவன் அந்தப் போராட்டத்தில் உள்ளூர்வோடு கலந்து கொண்டான்? கோவையிலே எத்தகைய விவசாயி? 2,000 ஏக்கர்களுக்கு மேல் வைத்திருக்கின்ற மன்ருடியார் அங்கே போராட்ட தளபதி. சேலத்தில் 800 ஏக்கர்களுக்கு மேல் வைத்திருக்கின்ற பெரிய காட்டூர் கவுண்டர் போராட்ட நாயகன். எங்கள் பகுதியில் 500 ஏக்கர்கள் வைத்திருக்கின்ற மதுரப்பாக்கம் செட்டியார்கள் இவர்கள்தானே போராட்ட வீரர்கள்? எங்கள் ஊரில் நான் போராட்டத்தின் பொழுது பார்த்தேனே வண்ணவண்ணக் கார்கள், விதவிதமான கார்கள், அம்பாசிடர் கார்கள், பியட் கார்கள் இவைகளிலே வந்தார்கள் ஏழை விவசாயிகள்! போராட்டத்திலே இறங்கினார்கள். எந்த ஏழை விவசாயி போராட்டத்திலே கலந்து கொண்டான்?

1972 ஆகஸ்ட் 11] [திரு. ஜி. ராஜாராம்]

வன்முறை நடந்தது, துப்பாக்கிச் சத்தம் கேட்டது, பிணங்கள் விழுந்தன என்றெல்லாம் சொன்னார்கள். அந்தப் பிணங்கள் விழுந்தன என்பதை நான் மறுக்கவில்லை. அவர்கள் ஏழைகள் என்பதையும் நான் மறுக்கவில்லை. அவர்கள் ஏழைகள் என்பதால் தான் இந்த அரசு 5,000 ரூபாய் மானியமாகக் கொடுத்தது. ஆமாம் யாரும் கேட்காமலே. இங்கே டாக்டர் ஹண்டே அவர்கள் உருக்கமாக பேசினார்கள். நம்முடைய கட்சியின்மீது அவருக்கு நிறைய அன்பு உண்டு. அதுவும் கலைஞரிடம் தனி அன்பு கொண்டவர்கள். அவரே நீண்ட நாட்கள் அரசாட்சி செய்ய வேண்டுமென்று கூட அடிக்கடி சொல்வார்கள். அத்தனை அன்பு; ஆனால் எங்களுக்கு அவர் பேச்சில் சந்தேகந்தான். ஏன்? அவர்கள் கேட்டார்கள், இந்த 'பந்த்' இப்பொழுதுதான் நடக்கிறதா? மறியல் இப்போது தான் நடந்ததா? ஏற்கெனவே நடைபெறவில்லையா? தி.மு.க.-வினர் மறியல் செய்ய வில்லையா? என்றெல்லாம் கேட்டு அத்தோடு நின்று விட்டார்கள். உண்மையிலேயே அரசியல் நெறி உள்ளவராக இருந்திருந்தால் துப்பாக்கிச் சத்தம் இப்போதுதான் கேட்டதா? இதற்கு முன்பு கேட்கவில்லையா? பிணங்கள் இப்போதுதான் விழுந்ததா? இதற்கு முன்பு விழவில்லையா என்றும் கேட்டிருக்க வேண்டும். அப்படி கேட்டிருந்தால் அவர்களது அரசியல் நாகரீக உணர்வைப் பாராட்டியிருக்க முடியும். ஆனால் குற்றம் சொல்வதற்கு என்றே அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள், அதற்குத் தானே இந்தத் தீர்மானம்?

வன்முறைகள் நடந்தன, யாரால் நடந்தது, அதுதான் பிரச்சனை, இங்கே கூடப் பேசியவர்கள் மதுரையிலே ஒரு தி.மு.க. பெரியவரின் பின்னால் சென்று அராஜகம் நடத்தி கடையைத் திற என்று சொன்னார்கள் என்று நடவாததையெல்லாம் சொன்னார்கள். உண்மையில் நடந்தது என்ன? என்னுடைய பகுதியில், மிகச் சிறிய பகுதி, அதில் கூட மிகச் சாதாரண சிண்டிகேட் பிரமுகர் ஒருவர் கூட்டம் போட்டு "கடைகளை யாராவது திறந்தால் சூறையாடுவோம். கொள்ளையடிப்போம், சைக்கிள் ரிக்ஷாக்கள் ஓடினால் சக்கரத்தை உடைப்போம், பஸ்தல் ஓடினால் தடுப்போம்" என்று பயங்கரமான அராஜகவாதிகள் போல பேசினார். இப்படித்தான் பல பகுதிகளிலும் வன்முறையாளர் பேசினர். துப்பாக்கிச் சத்தத்தைக் கேட்டே தீருவோம், கண்ணீர்ப்புகையை சந்தித்தே திருவோம் என்ற ஒரு திட்டத்தோடு வன்முறை வெறியாட்ட நிலையை கட்டுக்கடங்காத நிலைமையை உருவாக்கிவிட்டு அங்கே துப்பாக்கி வெடித்து பிணங்கள் விழுகின்ற நிலையிலிருந்தபோது அதற்கு காரணமாகி விட்டவர்களே இன்று முதலைக் கண்ணீர் விடுகிறார்கள். குழந்தையின் மெல்லிய தோலை திருகி விட்டுவிட்டு இன்று ஏன் வேகவேகமாக தொட்டிலை ஆட்டிக்கொண்டிருக்கிறீர்கள்? உண்மையிலேயே மனச்சாட்சியிருந்தால் நெஞ்சிலே கை வைத்துச் சொல்லுங்கள். விவசாயிகளுக்காகவா போராடினீர்கள்? ஆசிரியர்கள் போராட்டம் வந்தபோது தொழிலாளர் போராட்டத்தின்

[திரு. ஜி. ராஜாராம்] [1972 ஆகஸ்ட் 11

போது மாணவர்கள் கிளர்ச்சியில் இந்த நிழலில் நீங்கள் பதுங்கவில்லையா? இந்த ஆட்சிக்கு எதிராக நீங்கள் ஒவ்வொரு முறையும் செயல்படவில்லையா? ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் தேர்தல் களத்தில் தோற்று ஓடியவர்கள், அதில் புறங்கண்டு போனவர்கள், இன்று திராவிட முன்னேற்றக் கழகம் பெரும் சக்தியாக இருக்கிறது என்பதைக் காணப் பொறுதவர்கள், அந்தப் பொறுமையிலிருப்பவர்கள் இன்றைக்கு இந்த ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும் என்று ஒன்றுக இணைந்து இந்த அரசுக்கு எதிராக எடுத்துவரும் பல்வேறு முயற்சிகளில் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒரு துணை முயற்சிதானே தவிர இது ஜனநாயக உரிமையைப் பிரயோகிக்கும் முறை அல்ல என்ற குற்றத்தைச் சாட்ட விரும்புகிறேன். நீங்கள் எப்படிப்பட்ட நிலைமையிலே இந்த அரசைக் கவிழ்க்க விரும்பினாலும் டாக்டர் கலைஞர் அவர்கள் சொல்வதைப் போல இந்த திராவிட முன்னேற்றக் கழகப் பேரரசு ஒரு கட்டுமரம் என்பதனையும் அதனை கவிழ்ப்பது ஏலாத காரியம் என்பதனையும் நீங்கள் உணரவேண்டும். திராவிட முன்னேற்றக் கழக அரசு மணல் வீடு அல்ல, கையால் அழித்து விடுவதற்கு. அட்டையால் எழுப்பப்பட்ட வீடு அல்ல, காற்றடித்தால் சரிந்து போவதற்கு. இது மக்கள் சக்தி மீது எழுந்த இரும்புக் கோட்டை, எஃகுக்கோட்டை? மக்கள் நம்பிக்கையை இழந்து விட்டார்கள் எங்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வேடிக்கையாகவே கொண்டு வந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட தீர்மானங்களை எதிர்கட்சிக்காரர்களாகிய நீங்கள் கொண்டு வருவதால் மக்கள் உங்கள் மீது வைத்திருக்கிற கொஞ்சநஞ்ச நம்பிக்கையும் இழந்து எதிர்காலத்திலே எதிர்கட்சிகளே இல்லாமல் போய்விடுகின்ற ஒரு துர்ப்பாக்கியமான நிலைக்குக் கொண்டு சென்று விடுவீர்களோ என்ற அச்சத்தை எங்களுக்கு தராதீர்கள் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். எதோ தங்களது மன அரிப்பைத் தீர்த்துக் கொள்வதற்காக மட்டுமே இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்த தங்களுடைய மிகப் பெரிய அரசியல் மன வளத்தைக் காட்டிக் கொண்ட எதிர்க்கட்சிகளுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, விசித்திரமான அரசியல் சூழ் நிலையில் என்று வர்ணிக்கப்பட்ட இந்த நிலைமையில் இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேச விரும்புகிறேன். அதற்குக் காரணம், இந்த விசித்திரமான அரசியலில் ஒரு விசித்திரத்தைக் காண்கிறோம். இத்தனை நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டுவரப்பட்ட பிறகும், மன்றுடியார்களும், பாளையக்காரர்களும் கவுண்டர்களும் இந்த அரசாட்சியிலே இருக்கிறார்களே, அது வேடிக்கையாகக் கூட இருக்கிறது. இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டு வருவது நாட்டு

1972 ஆகஸ்ட் 11] [திரு. க. சுப்பு]

மக்களை ஏமாற்றுவதற்காகவா அல்லது அதை அமல் படுத்துவதற்காகவா என்று இந்த நாட்டு மக்களுக்குத் தெரிவதற்கு நல்ல சந்தர்ப்பமாகத்தான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கம் கொண்டு வந்த சட்டங்களை உண்மையிலேயே அமல் நடத்தி வெற்றி கண்டிருக்கு மானால் இன்னமும் ஆண்டான் அடிமைகள், நிலப்பிரபுக்கள் என்று இருக்க மாட்டார்கள். கேரளாவிலே அந்த நிலை மாற்றப்பட்டது. இங்கே சட்டம் இருக்கிறது, ஆனால் இந்த சாமானியர்களின் அரசு அந்தச் சட்டத்தை அமல் படுத்த மாட்டோம் என்ற சூழ்நிலையில் விசித்திரமான நிலையைப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலையிலே விவசாயிகளின் 11 அம்சக் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு அமைச்சர் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். ஆனால் அதற்குப் பிறகு இது நிலப்பிரபுக்கள் போராட்டம் என்று சொன்னால் ஒன்று இந்த ஆட்சி நிலப்பிரபுக்களின் பக்கம் போய்விட்டது என்று அர்த்தம். அப்படியில்லையென்றால் இது மக்களை ஏமாற்றுகின்ற வேலை என்று அர்த்தம். இதில் எது உண்மை என்பதை முதலமைச்சரவர்கள் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில் 11 அம்சக் கோரிக்கைகளைப்பற்றி அழைத்துப் பேசுவதற்கு முதல் அமைச்சரவர்கள் இவ்வளவு அடம் பிடித்து, பல கோர சம்பவங்களைத் தடுப்பதற்கு பதிலாக அவைகளை நிகழவைத்து இருப்பது ஏன்?

இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இப்படிப்பட்ட கோரிக்கைகள் திடீரென்று எற்படவில்லை. கோவை மாவட்டத்திலே மின் கட்டணப் போராட்டம் நடக்கின்ற நேரத்திலே, இராமநாதபுரத்து விவசாயிகள் எங்களுக்குக் கடன் நிவாரணம் வேண்டும், பருத்தி போன்றவைகளுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கும்பொழுது அதற்காகக் கவனம் செலுத்தாமல் யாரோ ஆலைப் பத்திரிகைக்காரர்கள் தங்களை ஆதரிக்கிறார்கள் என்பதற்காக, இப்படி விலை வீழ்ச்சி ஏற்பட்டு, பாதிக்கப்படும் விவசாயிகளைக் கவனிக்காமல் இருந்ததன் விளைவாக ராஜபாளையத்திலும், ஸ்ரீவில்லிப்புத்தூரிலும் 5-ஆம் தேதி பதற்ற நடந்தது. அப்பொழுது பலரும் சிறையில் இருந்தோம். அப்பொழுது புதிய ஜனநாயக முறை கடைப்பிடிக்கப்பட்டது. 25-வது சுதந்திர வெள்ளி விழாவைக் கொண்டாட இருக்கிறோம். அந்த வெள்ளி விழாவில் தங்கள் கட்சியிலும் விருது பெறுபவர்கள் இருப்பார்கள் என்று நம்புகிறேன். அப்படியில்லாவிட்டாலும் பரவாயில்லை. அதைக் கொடுக்கின்ற பாக்கியமாவது தங்களுக்கு இருக்கிறது.

ராஜபாளையத்தில் பொன் விழா மண்டபம், காந்திஜி நூற்றாண்டு விழா படிப்பகம் இருக்கின்றன. காந்திஜி அந்த ஊருக்கு வந்திருந்தார் என்ற ஞாபகத்திற்காகவாவது அவைகள் இருக்கக்கூடாதா? அதற்காக அந்த சிலை

வைக்கப்பட்டிருப்பது பாவமா? பொன் விழா மண்டபத்திற்குத் தீயிட்டு, கண்ணாடிகளை உடைத்தார்கள். அதை நீங்கள் வந்து பார்க்க வேண்டும். தீயிட்டார்கள், அப்பொழுது போலீசார் பக்கத்தில் இருந்தார்கள். ஆனால் தீ வைத்தவர்களின் மீது நடவடிக்கை எடுக்கவில்லை.

இதைப்போல் காங்கிரஸ் அலுவலகம் தாக்கப்பட்டது, மற்றக் கட்சிகளின் கொடிகள் அகற்றப்பட்டன. ஸ்ரீவில்லிப்புத்தூரில் செயற்குழுக் கட்டடம் தாக்கப்பட்டது. மாதவன் அவர்கள் அங்கு வந்திருந்தபோது அதைப் பார்த்திருந்தால் தன்முகயிருந்திருக்கும். அவர் பார்பர் ஷாப்பை சென்று பார்த்தார். பிராந்திக் கடையைச் சென்று பார்த்தார். அதோடு அவரது அலுவல்கள் முடிந்து விட்டன என்று அவர் வந்துவிட்டார்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்த பார்பர் ஷாப் என்று தெரியவில்லை. அப்படி யாரையும் சென்று நான் பார்க்கவில்லை. பிராந்திக் கடை என்று சொல்கிறார்கள். ஒருவேளை முன்னாள் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் மகன் வைத்திருக்கிற பிராந்தி ஷாப்பை நினைவுபடுத்துகிறார்கள் என்று நினைக்கிறேன். அங்கொன்றும் நான் செல்லவில்லை. அதை வைத்திருக்கிறவரின் தகப்பனாரை அவர் வீட்டில் சென்று சந்தித்தேன்.

திரு. க. சுப்பு : அது சாராயக் கடை, பிராந்தி ஷாப் அல்ல.

THIRU R. PONNAPPA NADAR : All these allegations should be avoided.

இப்படி இன்னினுவேட் செய்வது நல்லதல்ல.

திருமதி த. ந. அனந்தநாயகி : தகப்பனார் ஒரு கட்சியாக இருக்கலாம், மகன் வேறு கட்சியாக இருக்கலாம். மகன் சாராயக் கடை வைத்திருக்கலாம்.

திரு. க. சுப்பு : அவர் பேரன் கடை. அமைச்சர் வந்து பார்த்த சாராயக் கடைக்கு ஒரு பிரமுகரும் கூட வந்திருந்தார்கள். நான் கூட வீட்டில் இருந்தேன். இந்தச் செயற்குழுக் கட்டடம் மூன்று மணி நேரமாகத் தாக்கப் பட்டது. போலீசும் கூட இருந்தது. மூன்று மணி நேரம் ஒரு அலுவலகம் தாக்கப்பட்டிருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம், காங்கிரஸ் கட்சி அலுவலகம் இவையெல்லாம் தாக்கப்பட்டிருக்கின்றன போலீஸ் முன்னிலையில். தாக்கியவர்கள் அந்த ஊர்க்காரர்கள், அவர்கள் அங்கேயே இருக்கிறார்கள். போலீஸ் அவ்வளவையும் பார்த்துக் கொண்டிருக்கிறது. எங்கே சட்டம்? எங்கே ஒழுங்கு? சட்டம், ஒழுங்கு, அமைதி இவை எந்த அளவிற்கு பாதுகாக்கப்பட்டிருக்கின்றன என்பதை நெஞ்சில் கை வைத்து நாங்கள் சொல்வதற்கு முன்பு நீங்களே சொல்லுங்கள். அதை உங்கள் மனச்சாட்சிக்கு விட்டு

1972 ஆகஸ்ட் 11] [திரு. க. சுப்பு]

விடுகிறேன். கட்டடங்கள் தகர்க்கப்பட்டிருக்கின்றன. கொடிகள் எரிக்கப்பட்டிருக்கின்றன. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களின் வீடு தாக்கப்பட்டது, எங்கள் வீடு தாக்கப்பட்டது, எங்கள் அலுவலகம் தாக்கப்பட்டது. ஆள்கள் இல்லாத நேரத்தில் தாக்குவது சரியா. சட்டப்படி அதற்காக யாரையாவது கைது செய்திருக்கிறீர்களா என்று கேட்கிறேன். இருந்தாலும் இங்கு சட்டம் இருக்கிறது, ஒழுங்கு இருக்கிறது என்பதை நம்பித்தான் ஆகவேண்டும், ஏனெனில் இங்கு நீங்கள் 183 பேர்கள் இருக்கிறீர்கள், ஆளும் கட்சியினரோடு தோழமைத் கட்சியினரும் இருக்கிறார்கள். ஆகவே அப்படி இருப்பதாக நம்பித்தானே வேண்டும். எவ்வளவு பேர்களை கைது செய்திருக்கிறீர்கள் அதற்காக என்று கேட்கிறேன்.

இரண்டு குழுக்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டு சேதம் ஏற்பட்டிருக்கிறது என்றால் ஏற்றுக் கொள்ளலாம். 5-ம் தேதி பந்தில் கடைகள் அடைக்கப்பட்டன. ஆதரிப்போர் இருக்கலாம், இல்லாமல் இருக்கலாம். போராட்டத்தை ஆதரிக்கிற கட்சியைச் சேர்ந்தவர்களின் கடைகள் குறி வைக்கப்பட்டு தகர்க்கப்பட்டிருக்கின்றன. ஜாலியன்வாலாபாக் என்று சொல்லமுடியாது, அங்கு 106 பேர்கள் சுடப்பட்டார்கள், இங்கு பெத்தநாய்க்கன்பாளையத்தில் அந்த அளவிற்கு இல்லை. கடைகள் பல சூறையாடப்பட்டிருக்கின்றன, வீடுகள் பல சூறையாடப்பட்டிருக்கின்றன. மூடப்பட்ட கடைக்காரர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப் போவதாக ஒரு மிரட்டல். ஹிட்லர் ஆட்சியில் பாராளுமன்றக் கட்டடத்திற்கு தீ வைக்கப்புட்டு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் மீது வழக்கு தொடுத்ததாக சரித்திரத்தில் படிக்கிறோம். இங்கு தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இரண்டு தரப்பிலும் அங்கு கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வழக்குகள் எல்லாம் வாபஸ் வாங்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. தொடர்ந்து இரு தரப்பிலும் நடவடிக்கை எடுக்கலாமா, விட்டு விடலாமா?

திரு. க. சுப்பு: முதல் அமைச்சர் அவர்களது தகவல் சரியல்ல. கைது செய்ததாக ரிக்கார்ட் செய்யச் சொல்லி கையெழுத்து வாங்கச் சொல்லியிருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் அவர்களுக்கு சரி என்று நினைப்பதைச் செய்யலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இரு தரப்பிலும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள், இன்னின்ன செக்ஷன்ஸ்படி என்று வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. நான் கேட்பது அந்த வழக்குகளை தொடர்ந்து நடத்தலாமா அல்லது விட்டு விடலாமா?

திரு. க. சுப்பு : கைது செய்யப்பட்டதாக ரிக்கார்ட் செய்யப்பட்டிருக்கிறது. நடவடிக்கை எடுக்காதது மட்டுமல்ல, சம்பவங்கள் நடந்தபோது ஒருவராவது கைது செய்யப்பட்டிருக்கிறார, அப்படி ஒருவரையாவது சுட்டு விரல் கொண்டு சுட்டிக்காட்ட முடியுமா. இப்போது டிபென்ஸுக்காக கேஸ்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. வேண்டுமென்றே வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. இப்படிச் செய்வதால் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளலாமே தவிர நாட்டு மக்களை ஏமாற்ற முடியாது. ஸ்ரீவில்லிபுத்தூருக்கு சட்ட அமைச்சர் வந்திருந்தபோது, சட்டத்தைப் பாதுகாக்கக்கூடிய அமைச்சர் வந்திருந்த போது கடைகளைத் தகர்த்த நபர்கள் அனைவரோடும் அவர்கள் வந்தார்கள். கடைகளை சூறையாடியவர்களோடு, விடுகளை சூறையாடியவர்களோடு அமைச்சர் ஊர்வலம் வருகிறார் என்றால் போலீஸ் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பார்களா. போலீஸ் சூப்பிரன்டென்டென்ட் சொல்கிறார்கள், போலிசை பாரட்டுவதாக. ஏதோ நடந்து விட்டது என்று சொல்லுங்கள், ஆனால் ஒன்றுமே நடக்கவில்லை என்று சொல்ல முடியாது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : திராவிட முன்னேற்றக் கழக கட்சிக்காரர்கள் கடைகள் நொறுக்கப்பட்டனவா இல்லையா?

திரு. கே. டி. கே. தங்கமணி : காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சார்ந்தவர்களின் கடைகள் எவ்வளவு நொறுக்கப்பட்டன? ஸ்ரீவில்லிபுத்தூரில் கம்யூனிஸ்ட் கட்சி ஆபீஸ், காங்கிரஸ் (ஓ) ஆபீஸ், இந்திரா காங்கிரஸ் ஆபீஸ் பூராவும் நொறுக்கப்பட்டதுண்டா, இல்லையா ? அம்மாதிரி வேறு சம்பவங்கள் ஸ்ரீவில்லிபுத்தூரில் நடந்திருக்கிறதா இல்லையா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கிச் சொன்னால் நலமாகயிருக்கும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நன்றி. இருதரப்பிலும் செய்திருப்பதாக முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இருவரும் செய்திருக்கிறார்கள். இருவர் மீதும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவை இருப்பது சரியா அல்லது விட்டுவிடலாமா?

திரு. கே. டி. கே. தங்கமணி : தாக்கப்பட்டிருப்பதை அவர்கள் போய் பார்த்தார்களா என்பதுதான் கேள்வி. ஸ்ரீவில்லிபுத்தூரில் எந்த சட்டமன்ற உறுப்பினராவனும், எந்தக் கட்சியைச் சேர்ந்தவராவனும் சரி இன்று கூட போய் பார்த்தால், மனிதத்தன்மை கொஞ்சமாவது இருக்குமென்று சொன்னால், இந்த அளவிற்கு காட்டுமிராண்டித்தனமான அளவிற்கு நடந்திருக்கிற விஷயங்களைக் கண்டிக்காமல் இருந்தால் அவர்களை உண்மையில் சாதாரண அளவிற்குக் கூட மனிதப் பண்பு இல்லாதவர்களாகத்தான் கொள்ளமுடியும்.

1972 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மணி, சாமி என்று கலி திகழ்ச்சிகள் நடத்துகிறவர்கள், மிச்சப்படுகிற பணத்தில் 8,000 ரூபாய்க்கு ஒரு வீடு கட்டி அது அடியோடு அழிக்கப்பட்டு நொறுக்கப்பட்டு அவர்கள் ஓட்டலில் குடி பிருந்து கொண்டிருக்கிறார்கள், காங்கிரஸ், கம்யூனிஸ்டுகள் செய்த காரியத்தி னுல், ராஜபாளையத்தில்.

திரு. கே. டி. கே. தங்கமணி: போலீஸ் ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் உள்ள கடை சூறையாடப்பட்டு சாமான்கள் எல்லாம் இனற்றில் போடப்பட்டிருப்பது நியாயமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இரு தரப்பிலும் கைதுசெய்யப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. வாபஸ் வாங்கவேண்டுமென்று சொல் லப்பட்டது. தொடர்ந்து நடத்த அனுமதிக்கப்பட்டால் நடத்தலாம், தாரள மாக நடத்தலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: எத்தெத்தக் கேஸுகளை வாபஸ் வாங்கவேண்டு மென்று தெளிவுபடுத்தியிருக்கிறோம். மறியல் செய்தவர்கள், தடுப்புக் காவல் சட்டப்படி கைது செய்யப்பட்டவர்கள் ஒரு அம்சம். போலீஸ் படு கொலைகள் நடந்திருக்கின்றனவே அதற்கு எதிர்ப்பாக பல பேர்கள் மீது கேஸ்கள் போடப் பட்டிருக்கின்றன, அது ஒரு அம்சம். இந்த விவகாரங்கள் தவிர ஆபீஸுகளை தாக்கியவர்கள்மீது, வீடுகளை தாக்கியவர்கள் மீது எத்தகைமான நடவடிக்கை யும் எடுக்கப்படவில்லை. துப்பாக்கிப் பிரயோகம் நடத்திவிட்டு அதை நடத்திய தற்கு நியாயம் கற்பிப்பதற்காக கேஸ்கள் போடப்பட்டுள்ளதை, அப்படிப்பட்ட கேஸ்களை வாபஸ் வாங்கவேண்டுமென்று சொன்னேம். ஆபீஸ்களைத் தாக்கிய வர்கள், வீடுகளைத் தாக்கியவர்கள் இவர்களில் ஆளும் கட்சிக்குச் சாதகமாக இருக்கக் கூடியவர்கள் யாராவது கைது செய்யப்பட்டார்களா? யார் மீதாவது கேஸ் போடப்பட்டதா? எங்களிடம் லிஸ்ட் இருக்கிறது. புகார் கொடுக்கப்பட் டுள்ளது. கம்ப்ளெயின்ட்ஸ் கிழேதான் போடப்பட்டிருக்கின்றன. யார் மீதும் நடவடிக்கை எடுத்ததாகவோ அல்லது கைது செய்யப்பட்டதாகவோ தெரியவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வழக்குகள் வாபஸ் பற்றி விளக்கம் தந்ததற்கு நன்றியுள்ளவனுக இருக்கிறேன். எந்தெந்த வழக்குகள் வாபஸ் வாங்க வேண்டும் என்று பட்டியல் கொடுத்திருக்கிறார்கள். துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமான வழக்குகள், மறியல் சம்பந்தமான வழக்குகள் இவை வாபஸ் வாங்கப்பட வேண்டுமென்று உடன்பாடு ஏற்பட்டிருப்பதாகச் சொன்னர் கள். அது தவிர ஆபீஸ் இடிக்கப்பட்டது, வீடு இடிக்கப்பட்டது போன்ற இப் படிப்பட்ட வழக்குகள் தொடர்ந்து நடைபெறும் என்று தெரிவித்துக்கொள்கி றேன்.

[1972 ஆகஸ்ட் 11

திரு. கே. டி. கே. தங்கமணி : ஏற்கனவே கேஸ்கள் வாபஸ் வாங்கப்பட்டன என்று சொல்லி பலரைத் தேடி தொந்தரவு பண்ணுகிறார்கள் மானமதுரையில் என்பது தெரியும். எங்கள் பேரில் கேஸ் போட்டு நடத்துவதைப் பற்றி எந்த விதமான பயமும், அச்சமும் எங்களுக்கு இல்லை.

திரு. க. சுப்பு : முதலமைச்சர் அவர்கள் நடுநிலைமையில் இருந்து சொல்ல வேண்டும். ஒரு கட்சியாக நின்று கொண்டு பேசக்கூடாது. கைது செய்து விட்டதாக இப்போது கையெழுத்து வாங்குகிறார்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானம் வரும்போது சந்திக்கத் திறமையாகச் செய்திருக்கிறார்கள். அந்தத் திறமையைப் பாராட்டுகிறேன். நடுநிலைமையில் நின்று உண்மையில் தாக்கப் பட்டவர்கள் யார், பாதிக்கப்பட்டவர்கள் யார் என்பதை மனசாட்சியோடு தெரிந்து கொள்வதற்கு விசாரணை செய்ய முன்வரவேண்டும். ராஜபாளையத்தில் வீட்டை இடித்துவிட்டதாகக் கூறினர்கள். அந்த நண்பர்கள் இந்தப் போராட்ட காலத்தில் மக்கள் மத்தியில் பேசியதும், பாடல்கள் பாடியதும் எந்த அளவுக்கு இருந்தது என்பதை ரகசியப் போலீஸ்காரர்களை வைத்து நீங்களே பாருங்கள். அவர்களைப்போய் உங்கள் கட்சிப் பாடகர்கள் என்று ஏற்றுக் கொண்டிருக்கின்றீர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்கள் அப்படிப் பாடிய காரணத்தால் அந்த வீடு இடிக்கப்பட்டது என்பதை ஒத்துக் கொண்டிருக்கிறீர்கள். நன்றி.

திரு. க. சுப்பு : அவர்கள்தான் உங்கள் இயக்கப் பாடகர்கள் என்று நீங்கள் ஏற்றுக்கொண்டால் அதற்காக நன்றி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எங்களுக்குக் கட்சிகளைப் பற்றித் தெரியும். எவ்வளவு நன்றியுடையவர்கள் எந்தெந்தக் கட்சியில் இருக்கிறார்கள் என்று தெரியும்.

திரு. க. சுப்பு : நம்முடைய நன்றி சாதாரண மக்களை விட்டு விட்டு வேறு பக்கத்தில் போய்விட்டது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். தொடர்ந்தாற்போல ஆட்சிக் கட்டிலில் இருப்பதற்காக எப்போது வேண்டுமானாலும் கை தூக்க வேண்டுமென்றால் அதை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தேர்தலில் மட்டுமல்ல, என்ன வாங்கிக் கொண்டீர்கள் என்பதும் தெரியும்.

திரு. க. சுப்பு : வாங்கிக் கொண்டவர்கள் கொடுத்தால் திருப்பி வாங்கிக் கொள்ளுங்கள்.

1972 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நீங்களே வாங்கிக் கொண்டிருக்கிறீர்கள்.

திரு. க. சுப்பு: இந்தக் குற்றச்சாட்டு கடுமையான குற்றச்சாட்டு. நான் என்ன வாங்கிக் கொண்டேன்? யாரிடத்தில் வாங்கிக் கொண்டேன்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கம்யூனிஸ்டு கட்சிக்கு ஆதரவு மாத்திரமல்ல; பணமும் கொடுக்கப்பட்டது.

திரு. க. சுப்பு: என்னுடைய உரிமையைப் பாதுகாக்க வேண்டும். கம்யூனிஸ்டு கட்சியைப் பற்றிச் சொல்லுவதற்கு நான் பொறுப்பாளி ஆக முடியாது. நான் என்ன வாங்கிக் கொண்டேன்? மற்றவற்றுக்கு என்னைப் பொறுப்பாளியாக்க முடியாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உங்கள் தொகுதிக்காக உங்கள் கட்சியின் சார்பில் வாங்கப்பட்டது.

திரு. க. சுப்பு: அதை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். ஆதாரம் ஏதாவது இல்லாவிட்டால் வாபஸ் வாங்கவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இல்லாமல் வரமாட்டேன். (ஆரவாரம்.)

புதுக்கோட்டை தொகுதிக்கு ஏ. ஆர். சுப்பையா, எம்.எல்.ஏ.வுக்காக 5,000 ரூபாய் திராவிட முன்னேற்றக் கழகத்திடமிருந்து வாங்கப்பட்டது.

"திரு. நாராயணன், முகவை மாவட்ட கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்,

1971 பொதுத் தேர்தலில் ராஜபாளையம் தொகுதியில் எங்கள் கட்சித் தேர்தல் செலவுக்காக கழகத்திடமிருந்து ரூ. 5,000 மட்டும் பெற்றுக்கொண்டேன்.

அன்புள்ள,
(ஒ—ம்) நாராயணன்"

THIRU K. T. K. THANGAMANI: Sir, I want to know the propriety.

தேர்தல் காலத்தில் அவர்கள் சொல்ல வேண்டும்—எந்தெந்தக் கட்சியிடமிருந்து வாங்கினார்கள் என்று. ஏழு கட்சிக் கூட்டணி இருந்தது. இந்திரா காங்கிரஸ் இருந்தது; இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி இருந்தது. ஒவ்வொரு கட்சியிடமிருந்தும் திராவிட முன்னேற்றக் கழகம் வாங்கியதா அல்லது வாங்காமலே இருந்தார்களா? தாங்கள்தான் எல்லோருக்கும் கொடுக்கக்கூடிய அன்னதாதா

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1972 ஆகஸ்ட் 11

என்ற நிலைமை ஏற்படுகிறது என்பதில் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் பொதிந்திருக்கிறது. தங்களுக்கு இருக்கக்கூடிய மெஜாரிடியின் மூலமாக எதைச் சொன்னாலும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எதைச் சொன்னாலும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றில்லை. ஆதாரத்தைக் காட்டுகிறேன், மறுத்து விடுங்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். கட்சிகளுக்குள்ளே நன்றிப் பிரச்சினை பேசினால் ஒவ்வொரு கட்சியும் அப்படிப் பேசிக் கொண்டிருக்கலாம். கோவையில் திராவிட முன்னேற்றக் கழக நகரச் செயலாளர், வட்டச் செயலாளர் கையெழுத்திட்டு எங்களுடைய கட்சியிலிருந்து, என்னிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டதற்கு ரசீது முதலமைச்சர் அவர்களுக்குத் தேவையானால் எவ்வளவு வேண்டுமானாலும் காட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுப்பு அவர்கள்தான் இந்தப் பிரச்சினையைக் கிளப்பியதே . . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நண்பர் சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள். அந்தந்தத் தொகுதியில் வேலை செய்தவர்களுக்கு அவர்களுடைய செலவுகளுக்காகக் கொடுத்தது வேறு, தொகுதிச் செலவுக்காகக் கொடுக்கப்பட்டது வேறு. சுப்பிரமணியம் அவர்கள் கேட்டதாகச் சொல்லவில்லை. அவர்கள் வாங்குகின்ற அளவுக்கும் இல்லை, கொடுக்கவும் இல்லை, வாங்கியவர்களுடைய கையெழுத்து இருப்பதைச் சொன்னேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: கம்பூனிஸ்டு கட்சி திராவிட முன்னேற்றக் கழகத்திடம் பணம் வாங்கித்தான் பிழைக்க வேண்டுமென்ற நிலைமையில் இல்லை என்பதை கட்சியின் தலைவர் என்ற முறையில் தெரிவித்துக் கொள்கிறேன். யார் என்ன வாங்கினார்கள் என்பதெல்லாம் இருக்கட்டும். தேர்தலில் ஏழு கட்சிக் கூட்டணி இருந்தது. அதிலே ஒரு கட்சி ஆட்சிக்கு வந்த நிலையில் எந்த அளவுக்கு மற்றக் கட்சிகளைக் கலந்து கொண்டு கொள்கைகளை வகுக்கிறார்கள்? இந்திரா காங்கிரஸ் கட்சியை வெளியேற்றினார்கள். யாரைக் கலந்து கொண்டு செய்தார்கள்? கடைசியில் மற்றக் கட்சிகளை வேட்டை நாய்கள் என்று சொல்லுகிறார்கள், விஸ்வாசம் இடையாது என்று கூறுகிறார்கள். இதுதான் அரசியல் பண்பா? அவர்கள் கட்சியை வேண்டுமென்றால் குடும்பப் பாசத்தோடு வளர்த்திருக்கலாம். எங்களுக்கு குடும்பப் பாசம் எல்லாம் இல்லை. கொள்கை அடிப்படையில்தான் எங்கள் கட்சி நிற்கும். தேர்தல் காலத்தில் நடந்த இப்பேர்ப்பட்ட விஷயங்களைப் பெரிதுபடுத்திச் சொல்லுவது, அதை இந்தச் சட்டமன்றத்தில் உபயோகப்படுத்துவது முதலமைச்சர் போன்றவர்களுக்கு அழகல்ல என்பதை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1972 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எனக்கு என்ன அழகாக இருக்க வேண்டுமென்பதை நிர்ணயிப்பது தங்கமணி அவர்கள் அல்ல; பொதுமக்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். நான் எப்படி நடக்க வேண்டுமென்பதை நானே கூட நிர்ணயிப்பதில்லை. கட்சியானது கட்டளையிடுகிறது, கட்சியின் கட்டளைகளுக்குத் தலைவணங்கி நிற்கிறேன். நான் எப்படி இருக்க வேண்டுமென்று நிர்ணயிக்கும் பொறுப்பு தங்கமணி அவர்களுக்கு இல்லை. தவறான காரியங்களாக வெளியில் எவ்வளவோ பேசினார்கள். 'என்ன வாங்கினேன்' என்று கேட்டதால் முதலமைச்சர் என்ற பொறுப்போடு கூற வேண்டுமென்று கேட்டதால், ஆதாரம் காட்டினேன்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, in this discussion unnecessary details are introduced and it is not fair and just that what had happened during the time of elections should be divulged by any of the parties which formed the United Front. I think it is inappropriate and it is better that we should not indulge in such tactics.

Also I want to bring to the notice of the Chair that approbation and misapprobation are taking place even in the visitors' gallery and that also should be prevented so that this House could maintain decency and decorum which it deserves. I think all Opposition Parties will stick to this.

திரு. எம். சுரேந்திரன்: இந்தச் சர்க்கார் மீது கடுமையான குற்றச்சாட்டாக நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்திருக்கிறது. தனி நபர்கள் மீது இருக்கிற பிரச்சினைகள் மீது திசைதிருப்பும் முறையைக் கையாள்வது அரசாங்கத்திற்கு நல்லதல்ல. இந்தச் சபையில் கொள்கை ரீதியாக, முறையாக, குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்வது தான் சரியானதாக இருக்குமே தவிர, இந்தமாதிரி முறைகளைக் கையாள்வது சரியல்ல.

MR. SPEAKER: There is no point of order.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டுமென்று சொன்னதிலிருந்து இதெல்லாம் வந்தது. தேர்தலிலே வெற்றி பெற்றதற்குப் பெரும்பான்மையான பொறுப்பு திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களுக்கு உண்டு. அதை நான் மறுத்துச் சொன்னது இடையாது. முதலமைச்சர் அவர்களும் எம்.ஜி.ஆர். அவர்களும் என்னுடைய தொகுதிக்கு வந்தது நான் ஜெயித்ததற்குக் காரணம் என்று பகிரங்கமாக ஏற்றுக் கொள்ளுகிறேன். ஆதாரத்தோடு சொல்ல வேண்டுமென்று

[திரு. க. சுப்பு] [1972 ஆகஸ்ட் 11

சொன்னதற்கு 5,000 ரூபாய் கொடுத்ததாகச் சொன்னார்கள். அவர்கள் பணமாகக் கொடுத்திருக்கலாம், எங்கள் கட்சித் தோழர்கள் வேலை பார்த்து இருக்கலாம். அப்படிக் கொடுத்ததற்காக இந்த அசாசங்கத்திற்கு தன்றி உடையவர்களாக இருக்க வேண்டுமென்றால் கொள்கை பூர்வமாகக் கூட எதிர்ப்பைத் தெரிவிக்காமல் ஆதரிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்களா? அப்படி முதலமைச்சர் அவர்கள், உலக மகா கவிஞர் அவர்கள், எதிர்பார்ப்பது சரிதானு? அப்படியானால் மதுரையில் நடைபெற்ற மாநாட்டுக்கு எங்கிருந்தெல்லாம் நிதி வசூல் செய்யப்பட்டது?

ஜி. ஆர். கோவிந்தராஜுலு, டெக்ஸ்மோ சாமசாமி, டி.பி.எப். துரைசாமி, மெட்ராஸ் போர்ஜிங்ஸ், ராமகிருஷ்ணா ஸ்டீல்ஸ், இந்தியா சிமென்ட்ஸ்-சங்கரி, மேட்டூர் கெமிகல்ஸ், சேஷசாயி பேப்பர் போர்டு, வசந்தா மில்ஸ், சிங்காரப்பா, வெங்கடசாமி நாயுடு, மால்கோ, எ.சி.சி., ஆல்பெஸ்டாலை, மிரிமியர் மில்ஸ், மருதமலை முருகன் டெக்ஸ்டைல்ஸ் ஆகியவர்களிடமிருந்து நிதி வசூல் செய்திருக்கிறார்கள். கோவையில் ஒவ்வொரு சினிமா தியேட்டர் அதிபர்களிடமிருந்தும் 250 ரூபாய் வாங்கி இருக்கிறார்கள். அதற்கான ரசீதுகளை எல்லாம் என்னால் காட்ட முடியும். அப்படி எல்லாம் வாங்கியதன் காரணமாகத்தான் சினிமா தியேட்டர்களை தேசியமயமாக்கும் கொள்கை நிறைவேற்றப்படாமல் இருக்கின்றதா? இந்தமாதிரி நன்கொடை பெற்ற காரணத்தால் இந்தத் தொழில் அதிபர்களுக்கெல்லாம் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டுமென்றால் அது சாதாரண மக்களிடத்தில், ஏழை மக்களிடத்தில் நன்றியுடையவர்களாக இருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டாது.

சன் பேப்பர் மில், அமைச்சர் ஆதித்தனார் அவர்கள் குடும்பத்திற்குச் சொந்த மானது. அவர்கள் நான்கு லட்சம் ரூபாய் மின்சாரக் கட்டணம் பாக்கி செலுத்த வேண்டியிருக்கிறது. என்ன செய்துவிட்டார்கள்? பேப்பர் விற்கவில்லை. ஸ்டாக் இருந்துகொண்டிருக்கிறது. ரூ. 4 லட்சம் கொடுபடாமல் பாக்கியிருக்கிறது. அதைப்போல ரூ. 71 லட்சம் லாகூர் ஜெயிலிடத்தில் பாக்கியிருக்கிறது. ரூ. 40 லட்சம் தள்ளிக்கொடுத்து விட்டார்கள். பாக்கிக்கு நீண்ட காலத் தவணை கொடுத்திருக்கிறார்கள். இதையெல்லாம் எடுத்துச் சொன்னால் கோக்மாட்டார்கள். விவசாயிகள் என்ன ஜமீன்தார்களா? அவர்களிடத்தில் கெடுபிடி வசூல் செய்வது மிகவும் பொருத்தமற்றது. இனிமேலாவது இந்த ஆட்சியில் இருக்கக் கூடியவர்களும், முதல் அமைச்சர் அவர்களும் இதை நிதானமாகப் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும்.

11 அம்சக் கோரிக்கைகளை வைத்துப் போராடினார்கள். மே மாதம் 19-ம் தேதியிலிருந்து ஜூலை மாதம் 19-ம் தேதி வரை 61 நாட்கள் போராடினார்கள். பிறகு பிரச்னைகள் பேசித் தீர்க்கப்பட்டு ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது என்பதை அரசு

மனதில் கொள்ளவேண்டும். மீண்டும் மீண்டும் மிட்டா மிராசுதார்கள், பட்டக்காரர்கள் என்று பேசிக்கொண்டிருப்பதில் என்ன அர்த்தம்? அரசு ஒப்பந்தத்தின்படி ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய கொள்கையை அமல் நடத்துவதில் அக்கறை செலுத்தவேண்டும். போலீஸ்காரர்களும் அராஜகர்களோடு ஒன்றுகச் சேர்ந்துகொண்டு பொது மக்களுடைய உயிருக்கும் உடைமைக்கும் ஊறு விளைவிக்கக்கூடாது. பல அராஜகங்கள் நடைபெறுகின்றன.

சூற்றச்சாட்டை கவர்னர் அவர்களிடத்தில் கொடுத்தாலும் சரி, மத்திய அமைச்சரிடத்தில் கொடுத்தாலும் சரி, மாநில அமைச்சரிட்த்தில் கொடுத்தாலும் சரி, அதிலே பொதுவாக இருக்கக்கூடிய காமன் ஃபேக்டர் போலீஸ் சௌடி எலிமெண்டுகளோடு சேர்ந்துகொண்டு இப்படிச் செய்கிறார்கள், இது சரியா என்பதைப் பரிசிலித்துப் பார்க்கவேண்டும். இப்படிச் செய்தோம், அப்படிச் செய்தோம் என்று சொல்வதில் என்ன அர்த்தம்? இரண்டு தரப்பினர் மீதும் வழக்குப் போட்டிருக்கிறோம் என்றால் என்ன அர்த்தம்? மாவட்டச் செயலாளர், கம்யூனிஸ்டு செயலாளர், காங்கிரஸ்காரர் எல்லோர் மீதும் வழக்குப் போட்டிருக்கிறோம் என்று எதிரும் புதிருமாக வழக்கு சிருஷ்டித்துக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. அப்படிச் செய்வது பாசிஸ்டு மெத்தேடு தான். இட்லர் ஆட்சியில் கூட அப்படிச் செய்ததில்லை. ஏதோ முன்பு செய்தது தவறு என்றால், பரவாயில்லை, வருந்துகிறோம் என்று சொல்லிவிட்டு, ஒப்பந்தத்தை அமல் நடத்துவதில் அரசு அக்கறை செலுத்தவேண்டும். விவசாயிகள் அத்தனை பேர்களும் ஏதோ சமூக விரோத சக்திகள் என்று சொல்வதில் அர்த்தமேயில்லை. அதில் வழக்கறிஞர்களும் இருக்கிறார்கள், நீதிபதிகளின் குழந்தைகளும் இருக்கிறார்கள், மாணவர்களும் இருக்கிறார்கள், ஆசிரியர்களும் இருக்கிறார்கள், இப்படிப்பட்ட வர்க்கமெல்லாம் சமூக விரோத சக்திகள்....

THIRU M. A. LATHEEF : On a point of order.

THIRU K. SUPPU : I am not yielding. The point of order is a guise.

THIRU M. A. LATHEEF : I am on a point of order.

THIRU R. PONNAPPA NADAR : The member should address the Chair.

THIRU K. SUPPU : Where is the point of order?

THIRU M. A. LATHEEF : You must protect my right, Sir.

MR. SPEAKER : Both hon. Members may first resume their seats.

பாயின்டு ஆப் ஆர்டர் இருந்தால் மட்டும் லத்தீப் அவர்கள் பேசலாம். கொஞ்சமாவது அது பாயின்டு ஆப் ஆர்டருக்குப் பொருத்தமாக இருக்க வேண்டும். சபையின் நடவடிக்கைகளை அப்ஸ்ட்ரக்ட் செய்வதற்காகப் பேசுவதாக இருக்கக்கூடாது. பாயின்டு ஆப் ஆர்டர் இருந்தால் என்ன என்று சொல்லுங்கள்.

THIRU M. A. LATHEEF : The hon. Member has given wrong information; so far as my statement is concerned, when I said anti-social elements took part in some agitation in Pedda-naickenpalayam, I meant anti-social elements alone and nothing else. I was very careful to say that in incendiarism and anti-social acts, the farmers did not take part. That was my statement which is on record. But he is twisting my statement and says that I said something about farmers. I still say that I did not say anything about farmers. I am entitled to protect my right.

THIRU K. SUPPU : Where is the point of Order?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயிண்டு ஆப் ஆர்டர் அல்ல. இந்த மாதிரி உறுப்பினர் அவர்கள் விளக்கம் சொல்லவேண்டுமானால், பேசிக் கொண்டிருக்கிற உறுப்பினர் முடித்தபிறகு இப்படி அவர் பேசும்பொழுது சொன்னார் என்று கூறி அதற்கு சாந்தமாக விளக்கம் கொடுப்பதுதான் பொருத்தமானதாக இருக்கும்.

திரு. துரைமுருகன் : இந்தச் சபையிலே பாயிண்டு ஆப் ஆர்டர் என்று சொல்லிவிட்டு எழுந்திருந்து பேசினால், அது பாயிண்டு ஆப் ஆர்டர் இல்லை யென்றால் அந்த உறுப்பினருக்கு தகுந்த தண்டனை கொடுக்கவேண்டும். லத்தீப் அவர்கள் எழுந்திருக்கக் கூடாது என்று சொல்வதில் பயன் இல்லை. எல்லோரும் தான் பாயிண்டு ஆப் ஆர்டர் என்று சொல்லி எழுந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதை அனுசரிக்கவேண்டும். சுப்பு அவர்கள் இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்து விடவேண்டும்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, நேரத்தைக் கொஞ்சம் கூட்டிக் கொடுங்கள். வன்முறைச் செயல்கள் தமிழகத்தில் இடம் பெற்றுவிட்டது, சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று ஆளுநரிடத்தில் விளக்கம் தெரியாதவர்கள் விண்ணப்பம் கொடுக்கக்கூடாது என்ற மனப்பான்மை மாறவேண்டும். விளக்கம் இல்லாதவர்களின் விளக்கத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும் என் பதற்குத்தான் நம் நாடு சுதந்திரம் அடைந்தது. ராஜாஜி, ராவ் பகதூர்,

1972 ஆகஸ்ட் 11] [திரு. க. சுப்பு]

நிவான் பததார்கள்தான் கவர்னரைப் பார்க்கலாம் என்றிருந்தது நிலைமை அந்தக் காலத்தில். ஆனல் சுதந்திரத்திற்குப் பிறகு தெருவிலிருக்கும் குப்பனும், சுப்பனும் கூட கவர்னரைப் பார்த்து விண்ணப்பம் கொடுக்கலாம். விலாசம் இல்லே, பிளாட்பாரத்தில் இருக்கிருன் என்றல் அவனிடம் விண்ணப்பம் வாங்கக் கூடாதா கவர்னர் அவர்கள்? கவர்னர் அவர்கள் பிளாட்பாரத்திற்குப் போய் மனுக்களே வாங்கவேண்டும். அந்த நிலைமை இந்த நாட்டில் உருவாக வேண்டும். அதற்காகத்தான் நாம் சுதந்திரம் பெற்றிருக்கிறோம். இந்த ஆண்டு வெள்ளி விழா கொண்டாடப்போகிறோம். (மணி அடிக்கப்பட்டது.)

இறுதியாக ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். செய்த தவறுகளே தவறு என்று ஒத்துக்கொண்டால் பரவாயில்லே. இனிமேலாவது அம்மாதிரி நடக்காமல் பார்த்துக்கொள்கிறோம் என்றாவது சொல்லவேண்டாமா? 15 பேர்கள் இறந்திருக்கிறார்கள் என்றல், முதுகுளத்தூரில் சுடவில்லேயா என்று கேட்பது? வரக்கூடிய ஒவ்வொருவரும் இப்படி கேட்டுக்கொண்டே போவதா? காங்கிரஸ்காரர்கள் முதுகுளத்தூரில் சுடவில்லேயா? தி.மு.க. வினர் பெத்த நாயக்கன்பாளையத்தில் சுடவில்லேயா என்று வரக்கூடியவர்கள் சுடுவதற்கு உரிமையைக் கேட்பதா? அவர்கள் சுட்டார்கள், ஆகவே, நாங்களும் சுடுவோம் என்று உரிமை கேட்பதா? சபையில் உள்ள 183 பேர்களும் சேர்ந்துகொண்டு சுடுவதற்கு உரிமை வேண்டும், அவர்கள் சுட்டார்கள், என்று தீர்மானம் போடுங்களேன்? அதேமாதிரி ஏதேதோ கற்பனே செய்துகொண்டு மதிப்பிற்குரிய ஆசிரியர் திரு. காவேரிமணியம் அவர்கள் ஏதோ கம்யூனிலடகள் திருடிவிட்டதாகச் சொன்னர்கள். அதை நிரூபிக்க முடியுமா? திருடு என்றாலும் மதுரை பெரிய மனிதர் முத்துக்குத் தெரியாமல் நடந்துவிட முடியுமா? அதை நிரூபிக்க முடியுமா?

திரு. கே. கந்தசாமி: ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் பேசும்பொழுது மதுரையில் கௌரவமிக்க மேய்ருக்குத் தெரியாமல் எதுவும் நடந்துவிட முடியுமா என்று பேசிகிறபொழுது, அது நல்ல வாதமாக இருந்தாலும், அந்த வாதத்திலே திருடு கூட என்று சொல்கிறார்கள். அது ஆட்சேபணைக்குரியது. அதை நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: நான் சொல்வதைத் தவருகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். மதுரையில் இருக்கக்கூடிய சொம்பப் பெரிய மனிதர் முத்து அவர்கள், அவருக்குத் தெரியாமல் எதுவும் நடந்து விடுமா என்று தான் கேட்டேன். கம்யூனிஸ்டுகள் களவாடினர்கள் என்று மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்கள் கடுமையாகக் குற்றம் சாட்டினர்கள். கம்யூனிஸ்டுகள் திருடினர்கள்

என்ருல், அதை நிரூபிக்க முடியுமா, யார் என்ருவது சுட்டிக்காட்ட முடியுமா? ஆதாரமில்லாமல் நண்பர் அவர்கள் இப்படிப் பேசுவது முறையா? முதுகுளத்தூரில் சுட்டார்கள் என்ருல் அது துப்பாக்கி, பெத்தநாயக்கன்பாளையத்தில் சுட்டார்கள் என்ருல் அது சோளத் தட்டையா? தவறு செய்யட்டும், தவறு என்று தெரிந்தவுடன் அதை ஒத்துக்கொள்ளவேண்டும். அப்படியில்லாமல், ஒரு கேள்வி போட்டால், அதற்கு எதிர்க் கேள்வி போடுவதாலா பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்? ஒப்பந்தம் ஏற்பட்டவுடன் அதை அரசாங்கம் அக்கறையோடு அமல் நடத்தும் என்று மக்கள் எதிர்பார்த்தார்கள். 11 அம்சக் கோரிக்கைகள் ஒத்துக்கொள்ளப்பட்டன. ஆனல், இன்றைக்கு நடப்பது என்ன? ஒப்பந்தத்திற்குப் பிறகு கூட வகுப்பு கெடுபிடி நடந்துகொண்டிருக்கிறது. மோட்டார் செட்டுகளையும் மாடுகளையும் ஜப்தி செய்கிறார்கள். ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர், கோவில்பட்டி ஆகிய இடங்களில் இருந்து இம்மாதிரி புகார்கள் வருகின்றன. அரசு ஒப்புக்கொண்ட ஒப்பந்தத்தை உள்ளத் தூய்மையோடு அதிக அக்கறை செலுத்தி அமல்படுத்த வேண்டும். அப்படிச் செய்யாமல் ஒப்பந்தத்திற்கு விரோதமாக ஏதேதோ வாதங்களை அடுக்கிக் கொண்டு, வேடிக்கையாக வேண்டாத பிரச்னைகளை யெல்லாம் எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள். ஒப்புக் கொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்ற அக்கறை எடுத்துக் கொள்ளாத நிலையில், இந்த அரசின் மீது கொண்டுவந்திருக்கக் கூடிய நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. சொ. காவேரிமணியம்: போவைத் தலைவர் அவர்களே, நான் பேசுகின்ற நேரத்தில் கம்யூனிஸ்டு கட்சி செல்வாக்குடன் இருந்த நேரத்தில் மதுரை நகரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி சொன்னேன். அது சம்பந்தமாக பல கம்யூனிஸ்டு நண்பர்களும், ஆதரவாளர்களும் அன்று கைது செய்யப்பட்டார்கள். நண்பர் சுப்பு அவர்கள் ஒரு வழக்கறிஞர். நானும் 7 ஆண்டு காலமாக ப்ராக்டீஸ் செய்கிறேன். வேண்டுமானல் தக்க ஆதாரங்களைத் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். யார் யார் கைது செய்யப்பட்டார்கள், அந்த வழக்கு என்ன என்பதைப் பற்றி சொல்லலாம்.

இதைச் சொல்லுவதற்குக் காரணம் மதுரையில் நமது பெருமதிப்பிற்குரிய முத்து அவர்கள் மேயராக இருக்கும் இந்தக் காலத்தில் எந்தவிதமான அசம்பாவிதமும் ஏற்படவில்லை என்பதைச் சுட்டிக் காண்பிப்பதற்காகவும் பொதுவுடமைக் கட்சியினர் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் எப்படிப்பட்ட நிகழ்ச்சிகளெல்லாம் நடைபெற்றிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காண்பிப்பதற்காகவும்தான் சொன்னேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, அந்த நேரத்தில் நாங்கள் பலரும் சிறையில் இருந்தோம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

1972 ஆகஸ்ட் 11]

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, வழக்கில் தீர்ப்புக் கொடுக்கப்பட்டிருந்தால் அதைக் குறிப்பிடலாம். வழக்கினைப் பதிவு செய்துவிடுவதாலேயே சொல்லி விடுவது என்ன்ல், அப்போது உங்கள் காலம் சென்ற தலைவர் ஏழு ரூபாய் திருடியதாக காங்கிரஸ்காரர்கள் கேஸ் போட்டார்கள், வழக்கு பதிவு செய்தார்கள் என்ன்ர் இப்போது. அதை ஏற்றுக்கொள்ளுகிறீர்களா. அரசியலில் எதிர்தரப்பிலுள்ள தலைவர்களை இழிவுபடுத்துவதற்காக பல வழக்குகள் போடப்பட்டன. ஆனல் போட்டவை எல்லாம் ஏற்றுக்கொள்ளுகிறீர்களா ? விவசாயப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், ஆதரித்தவர்கள் மீது எல்லாம் வழக்குகள் போடப்படவில்லையா ? போட்டதாலேயே அந்த வழக்குகள் உண்மையாகிவிட்டதா ?

*திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவரவர்களே, இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் தமிழக கழக அரசின் மீது எதிர்க்கட்சியினர் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க்கும் முறையில் பார்வேர்டு ப்ளாக் கட்சியின் சார்பில் எனது கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நான் இங்கே பேசுவதற்கு முன்பு பல கோணங்களிலே இதைப் பற்றி பல நாட்களாக யோசித்துப் பார்த்தேன். 'எந்த அடிப்படையில் இந்தத் தீர்மானத்தை கொண்டு வந்திருக்கின்ருர்கள்' என்று சிந்தித்துப் பார்த்தேன். கடந்த இரண்டு நாட்களாக இங்கே பேசப்பட்டு வந்ததையும் கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருந்தேன். கடந்த காலங்களிலே இப்படிப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்ட நேரத்திலே அவற்றை பார்வையாளர்களில் ஒருவனுக கேட்டுக்கொண்டு இருந்திருக்கிறேன். பல கடுமையான குற்றச் சாட்டுகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அரசு என்னென்ன விவகாரங்களில் எந்தெந்த நிலையில் தவறியிருக்கிறது, எப்படி எப்படி சட்டம்-ஒழுங்கைப் பாராமரிக்கத் தவறிவிட்டது, அரசு அதிகாரங்கள் எந்தெந்தத் துறையில் தவருகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்ற புள்ளிவிவரங்களோடு பேசுவார்கள், கேட்டிருக்கின்றேன்.

(மாண்புமிகு போலைத் துணைத் தலைவர் தலைமை)

ஆனல் நம்முன் உள்ள தீர்மானத்தின் மீது பல எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசினர்கள், கேட்டேன். பெருமைக்குரிய, கௌரவத்திற்குரிய திரு. கே.டி.கே. அவர்கள் 1957-ம் ஆண்டில் முதுகுளத்தூர் விவகாரம் நடந்த காலத்தில் அவர் கட்சிக்குத் தலைவராக இருந்த, இன்று எங்களோடு இல்லாவிட்டாலும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு அடிப்படையாக வெளியிலிருந்து இயங்கி வரும் திரு. எம். கல்யாணசுந்தரம் அவர்கள் முதுகுளத்தூர் சம்பவங்களோயொட்டி அன்றைக்கு எங்கள் தெய்வத் தலைவர் தேவர் அவர்கள் மீது பழி சுமத்தப்பட்டதைக் கண்டிக்கும் வகையில், அந்த அரசுக்கு எதிராக நம்பிக்கை

[திரு. கே. கந்தசாமி] [1972 ஆகஸ்ட் 11

யில்லாத் தீர்மானத்தை கொண்டு வந்தார்கள். அன்றைக்கு அவர் பேசிய பேச்சுக்கும் இன்றைக்கு அவர் கட்சியைச் சார்ந்த பெருமதிப்பிற்குரிய தலைவர் பேசும் பேச்சுக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்பதைப் பார்க்கிறேன். அன்றைக்கு அரசு சுட்டது முறைதானா என்று, சுட்ட முறை எப்படிப் பட்டது, சுடுவதற்கு அவசியம் இருந்ததா என்ற அடிப்படை எழுந்தது. அன்றைக்கு சட்ட நிலையைப் பார்க்கும்போது அன்றைக்கு நடைபெற்ற விசாரணைக்காக வெங்கடேஸ்வரன் என்ற அதிகாரியை நியமித்தார்கள் அரசின் சார்பிலே ஒரு தலைப்பட்சமாக. அவர் 'ஐந்து பேரை பட்டப்பகலில் கையைக் கட்டி' சுட்டதாகச் சொல்லியிருக்கிறார். போலீசாரே கையைக் கட்டிச் சுட்டதாகச் சொல்லியிருக்கிறார். சுட்ட முறை தவறு என்று ஆயிற்று. கூட்டத்தில் தற்காப்பிற்காகச் சுடுவது என்ற நிலையை விட்டு மக்களை கையைக் கட்டிப் போட்டு சுட்டதாக அங்கே குறிப்பிட்டிருக்கிறார். சுட்ட முறை தவறு என்று அன்றைக்கு குற்றம் சாட்டப்பட்டது. ஆனால் இன்று நம்முன் உள்ள தீர்மானத்தின் மீது பேசும் தலைவர்கள் வேறு நிலையில் பேசுகின்றார்கள். சுட்டது உண்மைதான் என்பதை ஏற்றுக்கொண்டு சுடுவதற்கு யார் காரணம் என்ற நிலையை பரிசிலிக்கும்படி இப்போது இம்மன்றத்தின் உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். பல கட்சியினைச் சேர்ந்தவர்களும் தலைவர்களும் நடந்து முடிந்த விவசாயிகளின் போராட்டத்திற்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்று செயல் கமிட்டிகளை அமைத்துக் கொண்டு செயல்படும் நேரத்தில், மாண்புமிகு குமாரசாமி அவர்கள் தலைமையில் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்ததாகவும் அந்தச் சந்திப்பில் அவர் ஏற்றுக்கொண்ட முடிவினை கூட இருந்த சிலர் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் கேள்விப்பட்டேன். பிறகு வரும்போது மன்றுடியார் போன்ற நிலப்பிரபுக்கள், அரசின் நில உச்சவரம்புச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் விவசாய வருமான வரிச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்கள், சர்வோதய சங்கத்தில் சேர எப்போது மனுக் கொடுக்கலாம் என்று காத்துக் கொண்டு இருந்தவர்களும், இவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து இந்தப் பிரச்சனையைப் பெரிதாக்கி தங்களுக்குச் சாதகமான ஒரு சந்தர்ப்பத்தினை உருவாக்க நினைத்தார்கள். அதோடு எங்களோடு தோழமை பூண்டிருந்த கே. டி. கே. போன்றவர்கள், சுப்பு போன்றவர்கள்—இவர்கள் இன்னும் எங்களோடு இருப்பதாகச் சொல்லுகின்றார்கள், அவர்கள் எங்களோடு இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்பவில்லை, கொள்கைக்காக இருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள் பாராட்டுகிறோம். ஆனால் கடைபிடிக்கும் கொள்கை மக்களுக்குரிய கொள்கையாக இருக்க வேண்டுமேயன்றி மக்களுக்கு விரோதமான கொள்கையாக இருக்கக்கூடாது என்பதுதான் எங்கள் கருத்து. இன்றைக்கு கலைஞர் அவர்கள் பதவியில் இருப்பதால் நாங்களும், முஸ்லீம் லீக் கட்சியும் கழகத்தோடு ஒட்டிக்கொண்டு இருக்கிறோம் என்று யாரும் எண்ணவேண்டாம். அப்படிப்பட்ட அற்பபுத்தி

1972 ஆகஸ்ட் 11] [திரு. கே. கந்தசாமி]

எங்களுக்கு இல்லை என்பதை நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பதவிக்கு வருவதற்கு முன்பும் நாங்கள் இணைந்திருந்தோம். சிலர் குறிப்பிட்டுக் காண்பித்தார்கள், எதோ நாங்கள் சுயபலம் இல்லாதவர்கள் என்று மறைமுக மாகச் சொன்னார்கள். நேரடியாகச் சொல்லவில்லை. அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளுகிறேன், இப்போது நாம் சுதந்திர வெள்ளி விழாவினைக் கொண்டாட இருக்கிறோம். ஆனால் 1967 வரையில் ஆளப்பட்டவர்கள் இன்று மக்களிட மிருந்து தூக்கியெறியப்பட்டார்கள். கடந்த காலத்தில் நடந்த அட்டகாசங் களையும் வன்முறைகளையும் நீங்கள் ஒர்தாக்கிப் பார்க்க வேண்டும். பெருமைக் குரிய கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள், 'பிராமணர்களுக்கும், ஆஸ்திகர்களுக்கும் பாதுகாப்பில்லை' என்று. இந்த மன்றத்திற்கு சமர்ப் பித்துக் கொள்ளுகிறேன், மதிப்பிற்குரிய காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில்தான் திருச்சியில் பல பிராமணர்களுடைய பூணூல் அறுக்கப் பட்டது. இது தெரியாதா? அன்றுதான் தேசிய பாரம்பரியத்தில் வந்த வைத்தியநாத ஐயர் மேலமாசி வீதி வழியாக வரும்போது பிள்ளையார் கோவில் முன்பு தாக்கப்பட்டார். அன்று உங்கள் ஆட்சியில்தானே தாக்கப்பட்டார்? இதை மறந்திருந்தால் மதிப்பிற்குரிய கே. எம். எஸ். அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். அன்றைக்கு கலைஞர் இருந் தாரா, கழக அரசு இருந்ததா? எனவே, இன்றைக்குச் சொல்லப்படும் குற்றச் சாட்டுகள் பல சோஷலிசத்தை விரைவில் செயல்படுத்த வேண்டும் என்று செயல் பட்டு வரும் கலைஞர் ஆட்சிக்குக் களங்கம் கற்பிக்க வேண்டும் என்று அரசியல் நோக்கோடு கற்பிக்கப்படும் உண்மைக்குப் புறம்பான காரணங்களாகும். இன்று நமது மாண்புமிகு அமைச்சர் ஆதித்தனார் அவர்கள் பதில் சொன்னார் கள், அவருக்கே பொறுக்க முடியாமல். "என் சமூதாயத்தைக் குறிப்பிடுகிறீர் களே, இதோ நான் இருக்கிறேன்" என்று. மாண்புமிகு அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள், 'ஆசைத்தம்பி இருக்கிறார்' என்று. என் இதைக் குறிப் பிடுகிறேன் என்றால் கடந்த காலம் போலன்றி, இந்த அரசு ஜாதி மதங்களைக் கடந்த நிலையில் எப்படி ஒரு தாய் தன் குழந்தைகளுக்கு பாரபட்சம் காட்ட மாட்டாளோ அதுபோன்று கலைஞர் ஆட்சி நடைபெறுகிறது என்பதைச் சுட்டி காட்டுவதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேன். நமது சுப்பிரமணியம் அவர் கள் குறிப்பிட்டதற்கு பதில் சொல்லும் வகையில் இவற்றைக் குறிப்பிட்டேன்.

கடந்த கால சரித்திரத்தைச் சற்று திரும்பிப் பாருங்கள். இன்றைக்கு நடை பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் வேதனைக்குரியதுதான், விசனத்திற்குரியதுதான். இப்படிப்பட்ட நிலை உருவாகிவிடுமோ என்று அச்சப்பட்டோம். நமது நிலை பற்றி பார்வர்டு பிளாக் கட்சியின் மத்தியக் குழு கூட்டம் ஜூன் 20-ம் தேதி நடந்தது. குழுவின் பரிசீலனைக்கு இது வைக்கப்பட்டது. 'நீங்கள் தோழமைக் கட்சியாக இருக்கின்றீர்கள், இருந்தாலும் இத்தப் பிரச்சனையில்

[திரு. கே. கந்தசாமி] [1972 ஆகஸ்ட் 11

அவர்களோடு சேர்ந்துவிட்டால் நியாயம் சொல்லுவதில் நாம் தவறிவிடுவோம், எனவே பொதுவான நிலையை மேற்கொள்ள வேண்டும், எப்படி கிராமத்தில் சிக்கலைத் தீர்ப்பதற்கு பஞ்சாயத்து வைத்து முயற்சிப்பார்களோ அதுபோன்று நீங்கள் நியாயம் சொல்ல வேண்டும்' என்று கேட்டார்கள். எனவேதான் எங்கள் பெருமைக்குரிய தலைவர் மூக்கையாத் தேவர், எ. ஆர். பெருமாள், சின்னப்ப கௌண்டர், சக்தி மோகன் ஆக ஐந்து பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. கலைஞர் அவர்கள், 'நாங்கள் எப்போதும் யாரையும் சந்திக்கத் தயாராயிருக்கிறோம், இன்று மட்டுமில்லை, என்று சொல்லுகின்றீர்களோ, எங்கு சொல்லுகின்றீர்களோ, அங்கே சந்திக்கத் தயாராயிருக்கிறோம்' என்று வெளிப்படையாக பட்டவர்த்தனமாகச் சொன்னார்கள்.

நாங்கள் ஐந்து பேரும் போராட்டக் குழுத் தலைவரைத் தேடிச் சென்றோம். பல தலைவர்களைச் சந்தித்தபோது, 'எங்களுக்கு அரஸ்ட் வாரன்ட்' பிறப்பித்திருக்கிறார்கள். அதனால் நாங்கள் வெளியே உலாவ கூட முடியாமல் இருக்கிறது என்று சொன்னார்கள். உடனே நாங்கள் கலைஞர் அவர்களைச் சந்தித்து அவர்கள் போலீஸ் கைது செய்து விடுவார்கள் என்ற பயத்தில் இருக்கிறார்கள், அதனால் அவர்கள் 'ஃபிரியாக' வெளியே வருவதற்கு வகை செய்யுங்கள், ஐ.ஜி. அவர்களுக்கு இன்ஸ்டரக்ஷன் கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டோம். அவர்கள் எங்கு வேண்டுமானாலும் போகலாம், எந்த இடத்தில் வேண்டுமானாலும் பேசலாம், அதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்று கலைஞர் அவர்கள் சொன்னார்கள்.

அதன் பிறகு நாங்கள் மன்றுடியாரைச் சந்திப்பதற்காக அவருடைய பங்களாவுக்கு 3, 4 தடவைகள் சென்று பார்த்தோம். கடைசியில் 4-ந் தேதி இரவு 12 மணிக்கு பார்க்க முடிந்தது. கலைஞர் அவர்கள் எந்த நேரத்தில் வேண்டுமானாலும், எந்த இடத்தில் வேண்டுமானாலும் பேசத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள் என்ற விபரத்தைத் தெரிவித்தோம். அதை ஒரு மாஜி எம்.எல்.ஏ—கவுண்டர்—ஏற்றுக்கொண்டார். இந்தப் போராட்டமே தேவையில்லை. விவசாயிகளின் கோரிக்கைகள் பலவற்றை ஏற்கனவே அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். இன்னும் பல மத்திய அரசோடு தொடர்பு கொண்டு தீர்க்கப்பட வேண்டும். ஆகவே இப்போது இந்தப் போராட்டம் தேவையில்லை. ஏற்கனவே இதை ஒரு அரசியல் பிரச்சினையாக மாற்றி, இதை வைத்து ஒரு சிக்கலை உண்டாக்க விருக்கிறார்கள். வேண்டாத இந்தச் சிக்கலில் எங்களையெல்லாம் சிக்க வைத்து விட்டார்கள். இந்தச் சிக்கலிலிருந்து எப்படியாவது எங்களை நீங்கள் விடுவிக்க வேண்டுமென்று, எங்கள் தலைவர் மூக்கையாத் தேவர் அவர்களின் கையைப்பிடித்து கண்ணீர் விட்டு, கெஞ்சிக் கேட்டுக்கொண்டார் திரு. ஜம்பையா கவுண்டர்.

1972 ஆகஸ்ட் 11] [திரு. கே. கந்தசாமி]

கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் பேசிக்கொண்டிருந்தோம். பிறகு மன்றுடியார் அவர்கள் எங்கள் தலைவர்களை கலந்து கொண்டு பேசுகிறேன் என்று சொன்னார்கள். பின் 4 மணிக்கு அவரைச் சென்று பார்க்கிறபோது அவர் வீட்டிலே இல்லை. அங்குள்ளவர்களைக் கேட்டதில் எப்போது வருவார் என்று எங்களுக்குத் தெரியாது என்று சொல்லிவிட்டார்கள். அதன் பிறகு போராட்டக் குழு செயலாளர் நாராயணசாமி நாயுடு அவர்களைச் சந்திக்கச் சென்றோம். முடியவில்லை. பிறகு ஊருக்குப் போகலாம் என்று புறப்படுகிறபோது, எங்கள் தலைவர் மூக்கையாத் தேவர் அவர்களை, இரண்டு டாக்டர்கள் வந்து சந்தித்தார்கள். 'ஐயா, தலைவரவர்களே, நீங்கள் இருக்க வேண்டும். எப்படியாவது கலைஞர் அவர்களைச் சந்திக்க வேண்டும். போராட்டம் வேண்டாம். நாராயணசாமி நாயுடு அவர்கள் மிகவும் பயந்து போய், ஒரு இடத்தில் மறைந்து இருக்கிறார்கள். நாங்கள் அவரை சந்தித்துப் பேசிவிட்டு, இன்னும் ஒரு மணி நேரத்தில் வந்து சொல்கிறோம்' என்று சொல்லிவிட்டுப் போனவர்கள் இன்று வரை வாயில்லை.

பல மாடமாளிகைகளில் ஆங்கிலேயர் காலத்தில் பல மர்மங்கள் நடப்பதாக கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இந்தப் போராட்டக் குழுத் தலைவர்கள் மாளிகையில் என்ன மர்மம் நடக்கிறதோ தெரியவில்லை. துரதிருஷ்டவசமான இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெறக் கூடாது என்பதற்காக அதற்கு முந்திய நாள் மீண்டும் மன்றுடியார் மாளிகையில் அவரைச் சந்திக்கச் சென்றோம். அவரைப் பார்க்க முடியவில்லை. அதற்கு முன்னால் அவரைச் சந்தித்தபோது, 'எங்கள் தலைவர்களை இன்னும் சந்திக்கவில்லை, எனக்கு 100, 200 டெலிபோன் செய்திகள் வந்திருக்கின்றன. எந்த நேரத்திலும், எந்த இடத்தில் வேண்டுமானாலும் சந்திக்கத் தயார் என்று கலைஞர் அவர்களுடைய 'பிரின்டெட் லெட்டர் பாடில்' அவரே எழுதி கையெழுத்துப் போட்டுக் கொடுக்க வேண்டும், அப்போதுதான் சந்திக்க முடியும்' என்று சொல்கிறார்கள், என்று மன்றுடியார் தெரிவித்தார்கள்.

நீங்கள் கேட்டுக்கொண்டபடி கலைஞர் அவர்கள் கோட்டையில் உங்களைச் சந்திக்கத் தயாராக இருக்கிறார்கள். பிரச்னைகளைத் தாராளமாக பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். இன்று கூட எங்களிடம் பேசியிருக்கிறார்கள். இந்தச் செய்தி மெயில், அலை ஓசை, முரசொலி போன்ற பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது என்று சொல்லி பத்திரிகைகளையும் காட்டினோம். பத்திரிகையில் வந்தால் போதாது, நீங்கள் எழுதிக் கொடுங்கள் என்று கேட்டார்கள். 'எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் நான் போராட்டக் குழுவுடன் பேசத் தயாராக இருக்கிறேன்' என்ற கலைஞரின் வாசகத்தை எழுதிக் கொடுத்தோம். அதற்குப் பின்னால் 10 மணிக்கு போனால், 'நீங்கள்

ஏதாவது எழுதிக் கொடுப்பீர்கள், அதை நாங்கள் நம்பமாட்டோம், கலைஞரே எழுதி கையெழுத்துப் போட்டுக் கொடுக்க வேண்டும்; இல்லையென்றால் முடியாது' என்று சொல்லிவிட்டார்கள்.

இவ்வளவு முயற்சிகளுக்குப் பின்னால், அவர்கள் கலைஞரைச் சந்தித்துப் பேசுவதற்கு ஒப்புக்கொண்டிருப்பார்களானால், இவ்வளவு உயிர்ச்சேதம், பொருள் சேதம் நம்முடைய நாட்டில்—தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்காது. இவ்வளவு முயற்சிகளுக்குப் பின்னால் இன்றைக்குக் கேட்கிறார்கள், என் போராட்டக் குழுவினரைச் சந்தித்துப் பேசியிருக்கக்கூடாது என்று. போராட்டக் குழுவிலுள்ள ஒருவர் சொன்னார், "போராட்டம் தேவையில்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன், இருந்தாலும் எங்களையெல்லாம் நம்பி பல விவசாயிகள் போராட்டத்திலே இறங்க முடிவு செய்து விட்டார்கள். நான் இப்போது வேண்டாம் என்று சொன்னால் அவர்கள் என்னைத் தெருவிலே நடக்க விடமாட்டார்கள். ஆகவே முடிவு செய்யப்பட்டபடி போராட்டம் நடக்கும் கலைஞரே எழுதி கையெழுத்துப் போட்டுக் கொடுத்தால் நாங்கள் பேசுவதற்கு வருகிறோம், இல்லை என்றால் வரமாட்டோம்" என்று.

இவ்வளவு நடந்ததற்குப் பின்னால்தான், போராட்டக்காரர்களின் கௌரவப் பிரச்சனையினால்தான் இன்றைக்கு இந்த 15 பேர்கள் துப்பாக்கிப் பிரயோகத்தில் இறந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள்தான் இன்றைக்கு கலைஞர் அவர்களுடைய கௌரவப் பிரச்சனையால்தான் இந்த துர்ப்பாக்கியம் ஏற்பட்டது என்று சொல்லுகிறார்கள். இதையெல்லாம் நான் என் விபரமாக இங்கே சொல்கிறேன் என்றால், சமாதானக் குழுவில் நான் இடம் பெற்றிருந்ததால் தான், அதை இந்த மன்றத்திற்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். சில தனிப்பட்ட நிலச்சொந்தக்காரர்கள்—நிலக் குபேரர்களின் தனிப்பட்ட கௌரவப் பிரச்சனையால் இன்றைக்கு இவ்வளவு உயிர்ச் சேதமும், பொருள் சேதமும் ஏற்பட்டிருக்கிறது என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

போராட்டக் குழுத் தலைவர்களை சந்தித்தீர்களா, பார்த்து பேசினீர்களா என்று கேட்டுத் தெரிந்து கொள்வதற்காக இரவு 12 மணிவரையில் கடற்கரை மணலில் காத்துக்கொண்டிருந்த கலைஞர் அவர்களைப் பார்த்துக் கௌரவப் பிரச்சனைவாதி என்று மாளிகைவாசிகள் சொல்கிறார்கள். அது நாட்டு மக்களுக்குத் தெரியாது என்று நினைக்கிறார்கள்? மக்களுக்கு நன்றாகத் தெரியும். இன்னும் சட்டம், அமைதி, ஒழுங்கு குலைந்துவிட்டது என்றெல்லாம் சொல்கிறார்கள். போலீசார் வேண்டுமென்றே சுட்டுக் கொன்றார்கள் என்று சொல்கிறார்கள். யாரை எந்த இடத்தில் வேண்டுமென்று சுட்டுக் கொன்றார்கள். அப்படி

1972 ஆகஸ்ட் 11] [திரு. கே. கந்தசாமி]

எதுவுமே கிடையாது. அவர்கள் கட்டை வண்டிகளை ரோட்டிலே திறுத்தி வைத்தார்கள். பெட்ரோலை ஊற்றி கார்களை எரித்தார்கள். போராட்ட தினத்தன்று அருப்புக்கோட்டையில் கிழவர் ஒருவர் டீ கடையில் இருக்கும் போது மயங்கி விழுந்து செத்தார். அவரையும் போராட்டத்தில் இறந்தவர்கள் பட்டியலோடு சேர்த்து விட்டார்கள்.

இங்கே இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர் களுக்குத் தங்களுக்குள்ளேயே நம்பிக்கை இருக்கிறதா என்பது சந்தேகந் தான். இந்த அரசாங்கத்திற்குக் களங்கம் கற்பிக்க வேண்டுமென்ற நோக்கத் தோடுதான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதனால் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரக்கூடாது என்று சொல்லவில்லை. கொண்டுவருவதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. கொண்டுவரலாம்; ஆனால் அது ஜனநாயக மரபுக்கு உகந்ததாக இருக்க வேண்டும்.

மதிப்பிற்குரிய கல்யாணசுந்தரம் போன்றவர்கள் இந்தக் கழக அரசுக்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று சில மாதங்களுக்கு முன்பே முயற்சி செய்து வந்ததை நான் நன்றாக அறிவேன். கழக அரசில் சோஷலிசத் திட்டத் தினால் தனக்கு இனி அரசியல் உலகில் வேலை இல்லை; அதனால் சர்வோதய இயக்கத்தில் சேரவேண்டுமென்று விரும்பிக் கொண்டிருந்த காமராஜருக்கு ஒரு புகலிடமாக இருந்து விட்டது இந்த துரதிர்ஷ்டமான போராட்டக் குழு. அப்படிப்பட்டவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து இந்தப் போராட்டத்தை மிகைப்படுத்தி, கழக அரசைக் கவிழ்க்கப் பார்த்தார்கள். உண்மையில் ஏழை விவசாயிகள் நெஞ்சில் கை வைத்துப் பார்க்க வேண்டும், ஏழை விவசாயிகளுக்காகப் பாடு படுகிறவர்கள் என்றால் தங்கள் சொந்த கௌரவத்தை விட்டுப் பேசப்போயிருக்க வேண்டும். அப்படி ஏன் போக வில்லை? ஏழை எளியவர்களுக்காக நல்ல பல திட்டங்களை உருவாக்கி வருகிற கலைஞரோடு ஒரு பொது இடத்தில் உட்கார்ந்து பேசக் கூடாதா? எங்களைக் கூப்பிட்டுப் பேசவில்லை என்கிற கௌரவத்தை ஏன் பாராட்டியிருக்க வேண்டும்? ஆக நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை இன்றைக்குக் கொண்டு வர அடிப்படை உரிமையே இவர்களுக்கு இல்லை என்பது என் கருத்து. இது சரியா, தப்பா என்பதைப் பின்னால் பேசுகிறவர்களே ஆலோசித்துச் சொல்லட்டும்.

துப்பாக்கிச் சூடு நடைபெற்றது. பதினைந்து உயிர்கள் பலியிடப்பட்டிருக் கின்றன. அது கழக அரசால் அல்ல. துப்பாக்கிச் சூடு வேண்டுமென்றே நடத்தப்பட்டது என்று யார் சொல்வது? திரு. சுப்பு போன்றவர்கள், கே. டி. கே. போன்றவர்கள் சட்டம் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். அரசு மீது

[திரு கே. கந்தசாமி] [1972 ஆகஸ்ட் 11

நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து, ஒரு பெரிய குற்றத்தைச் செய்து விட்டவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள யாரை ஏமாற்றுவது? நியாயம் புலப்பட வேண்டும் என்பதற்காக ஜூடிஷியல் என்குயரி வேண்டும் என்று நான்கு மாவட்ட நீதிபதிகளை உடனே கலைஞர் அவர்கள் நியமித்தார்களே. மனிதாபிமான உணர்ச்சியோடுதானே நியமித்தார்கள். நீதி விசாரணை நடை பெற்றிருந்தால் உண்மை புலப்பட்டிருக்கும். சமாதானப் பேச்சில் கலந்து கொண்டவர்கள் ஏன் நீதி விசாரணை வேண்டும் எப்பதை வற்புறுத்தவில்லை. மாவட்ட நீதிபதிகளைக் கொண்ட விசாரணையோ, சுப்ரீம் கோர்ட் நீதிபதி விசாரணையோ தேவையில்லை என்று ஏன் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். நீதி விசாரணை என்று நடைபெறுமானால் தங்களது சதித் திட்டங்கள் எல்லாம் வெளி யாகும். பதினைந்து உயிர்களைப் பலியிட்ட தங்களது கோரச் செயல் வெளிப்பட்டு விடும். அப்புறம் மக்கள் நம்மைத் தலைவர்களாக மதிப்பார்களா, அரசியல் உலகத்திலேயே இல்லாமல் போய்விட வேண்டிய நிலை அல்லவா வந்துவிடும் என்கிற அச்சத்தில்தானே நீதி விசாரணையே வேண்டாம் என்று கொடுத்துவிட்டு வந்தார்கள். வேண்டாம் என்று எழுதிக் கொடுத்து விட்டு வந்தார்கள்.

(திரு. க. சுப்பு குறுக்கீடு).

MR. DEPUTY SPEAKER : If it is a point of order the Hon. Member can raise it, otherwise, no.

திரு. க. சுப்பு : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். நாட்டில் உள்ள மனித உயிர்கள் எல்லாம் அரசாங்கத்திற்குச் சொந்தம். அந்த உயிர்கள் துப்பாக்கிச் சூட்டினால் பறிக்கப்பட்டிருக்கிறபோது அரசாங்கத்திற்குச் சொந்தமான உயிர் கள் பறிக்கப்பட்டதற்கு அரசாங்கமேதானே நீதி விசாரணை நடத்தியிருக்க வேண்டும்? அதை பேரப்பொருளாக ஆக்கி பேச வேண்டிய நிலை எதற்காக?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது போம் பேசக்கூடிய பொருள் அல்ல என்பதை உடன்பாடுபற்றிப் பேச வந்த தலைவர்கள் சொல்லியிருக்க வேண்டும்.

திரு. க. சுப்பு : பேரப்பொருளாக வைத்திருக்க வேண்டியதில்லையே. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மத்திரி குமாரி—இல்லை பராசக்தி சினிமா வசனத்திலேயே எழுதியிருப்பவர் ஆயிற்றே.

திரு. கே. கந்தசாமி : கடந்த கால சினிமாச் சரித்திரங்களை எல்லாம் நினைவு வைத்துக்கொண்டிருக்கிற திரு. சுப்பு அவர்கள் saviours and champions of the farmers' cause என்று சொன்ன அவர்களிடம் நினைவுறுத்தியிருக்க வேண்டும்? ஏன் அதைச் செய்யவில்லை என்று கேட்கிறேன்? தாங்கள் செய்த

சதி, தாங்கள் செய்த தவறு மக்களுக்குப் புரிந்துவிடுமே என்றுதான் நீதிபதிகள் விசாரணை வேண்டாம் என்று சமாதானம் பேச வந்த தலைவர்கள் ஒத்துக் கொண்டார்கள் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். பத்தை நடத்திலே திருவோம் என்று கொடி தூக்கி, படுகொலை செய்துவிட்ட கக்கன் அவர்கள், "நாங்கள் பண்ணியது கொலை, நாங்கள் பண்ணியது உயிர்ச்சேதம்" என்பதை உணர்ந்ததாகத்தானே அர்த்தம்—நீதி விசாரணை வேண்டாம் என்று ஒத்துக் கொண்டதற்கு?

THIRU R. PONNAPPA NADAR: On a point of order, Sir. The hon. Member said that Mr. Kakkan hid himself somewhere and things like that. I do not think any legal estoppal is operating. If any aspersions are cast against a pesron, he should be present in the House. Otherwise, he is not in a position to defend himself. What transpired in the Conference, only the participants may know, the Chief Minister may know and I think that there is no reason or rhyme in reiterating that something had been agreed and therefore nobody in this House should rake up things connected with the incident. The point about judicial enquiry raised by my learned friend is incorrect and it is out of order. And he should not speak bringing in allegations against persons who are not inside the House and therefore not able to defend themselves.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கந்தசாமி அவர்கள் பேசும் போது வெளியில் உள்ள தலைவர்களைப்பற்றி உள்ளே இழுக்க வேண்டாம். இங்கேயே எத்தனையோ பேர் இருக்கிறார்கள்.

திரு. கே. கந்தசாமி: நான் இல்லாத குற்றச்சாட்டைச் சொல்லவில்லை.

THIRU K. NAGARAJAN: Mr. Speaker, Sir, in such a case, the members of the Opposition Parties also should not bring in the Hon. Mayor of Madurai. I do not think that is also correct. He is not in the House and he cannot defend himself. Why should they refer to him here?

MR. DEPUTY SPEAKER: It is not correct, it is wrong.

திரு. கே. கந்தசாமி: அவர்கள் மீது இல்லாத குற்றச்சாட்டை நான் சொல்லவில்லை. அவர்கள் தலைமையில் நடத்தப்பட்ட அறிமுகப் போராட்டம் முடிந்தது—இன்றைக்கு சர்வோதயத்திற்குச் செல்ல இருக்கிறவர்களைத்தான் குறிப்பிட்டேன்.

திரு. ஆர். பொண்ணப்ப நாடார்: அரசியல் காழ்ப்பு உணர்ச்சியின் பேரில் மூதறிஞர் ராஜாஜி அவர்கள் சம்பவங்களைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். மறுமுறையும் விசாரிப்பதில் ஆட்சேபணை இருக்காது. அன்றைக்கு அரசாங்கத்தின் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு நிராவிட முன்னேற்ற கழகம் அவர்களுக்கு ஆதரவாக இருந்தார்கள் என்று நினைத்துப் பேசினார்கள் என்றால் 'மூட சொர்க்கத்தில்' வாழ்கிறார்கள் என்றுதான் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. ஏ. ஆர். பெருமாள்: சார் ஆன் பாயிண்ட் ஆப் ஆர்டர். திராவிட முன்னேற்றக் கழகம் தங்களை ஆதரிப்பதாக நினைப்பது 'உங்களை நீங்களே ஏமாற்றிக்கொள்வதாக ஆகும்' என்கிறார்கள். அதை முழுமையாக மறுக்கிறேன். 1955-இல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தபோது அறிஞர் அண்ணா அவர்கள் என்ன பேசினார்கள் என்பதை நான் இரவு முழுவதும் படித்துப்பார்த்தேன். நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை முழுக்க முழுக்க ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள். வேண்டுமானால் அதனை இங்கே படித்துக் காட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. உட்காருங்கள்.

திரு. கே. என். குமாரசாமி: சார், ஆன் ஏ பாயின்ட் ஆப் ஆர்டர். நீதி விசாரணை நடத்தினால் தங்கள் பேரில் குற்றம் வந்துவிடுமே என்று நீதி விசாரணை வேண்டாம் என்று சம்மதித்ததாக திரு. கந்தசாமி கூறினார்கள். அதேமாதிரி 70-ஆம் வருஷம் நடந்த . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதிலே என்ன பாயிண்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது? திரு. கந்தசாமி ஒரு அமைச்சர் அல்ல. அமைச்சர்களில் யாராவது அத்தகைய குற்றச்சாட்டைச் சொன்னால் நீங்கள் மறுத்துப் பேசலாம். திரு கந்தசாமி பேசுகிறார் என்றால் அது அவர் கருத்து. உங்கள் தரப்பில் இருந்து பேசுகின்றவர்கள் பின்னர் அவர் சொன்னதை வேண்டுமானால் மறுத்துப்பேசட்டும். அதற்காக பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்ப வேண்டிய தில்லை. மறுக்க போதிய அவகாசம் உங்களுக்கும் இருக்கிறது.

திரு. கே. கந்தசாமி: கொடுத்த சந்தர்ப்பத்தை அவர்கள் பயன்படுத்தவில்லை. பயன்படுத்தாதற்குக் காரணம் தன்பயம் தான். அறிஞர் அண்ணா அவர்கள், தேவர் அவர்களை எனக்குத் தெரியாது, நான் அவர்கள் கட்சியைச் சேர்ந்தவன் அல்ல, அவர்கள் கொள்கையைச் சார்ந்தவனும் அல்ல என்று கூறி, நம்பிக்கையில்லை என்று தெரிவிக்கக் கூடிய தீர்மானம் வருகின்றபொழுது,

1972 ஆகஸ்ட் 11] [திரு. கே. கந்தசாமி]

கட்சியில் உள்ள சூழ்நிலை காரணமாக நடுநிலைமை வகிக்கிறோம் என்றுதான் சொன்னார்கள். அவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் சரி என்று சொல்லவில்லை, இழத்துவலில் 5 பேர்களின் வைகளை; கண்களை கட்டிச் சுட்டது சரியென்று சொல்லவில்லை. அதை அவர்கள் வன்மையாகக் கண்டித்தார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தத் தலைவர்கள் போராட்டத்திற்கு முன்பு நாட்டுக்குப் பாதகமான நிலைமை வரும் என்பதை முன்னிட்டு சமாதானம் பேசியிருக்க வேண்டும். அதைவிடுத்து, போராட்டத்தையும் நடத்தி, வெற்றிவிழாக் கொண்டாடுவோம் என்கிறார்கள், கூட்டம் எங்கே, குற்றாலத்திலே பார்த்தேன் நானும், ஆஹா! பல உயிர்களைப் பலிகொடுத்ததற்குக் கொண்டாட்டமா? நான் சொல்லிக் கொள்கிறேன், இன்றைக்கு ஏழை எளிய மக்களுக்கு ஒரு அரசு என்று சொன்னால் அது கலைஞர் அவர்களுடைய அரசுதான், கலைஞர் அவர்களால்தான் நடத்த முடியும். இந்த அரசுதான் நிலைக்கமுடியும், வருகிற பதினைந்து ஆண்டுகளுக்கு இந்த அரசுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றவர்கள் கனவுகளைக் காணட்டும், மக்களுக்குக் கொள்கைகளை எடுத்து உரைக்கட்டும், ஜனநாயக ரீதியாகப் போராடட்டும், மக்களுடைய சக்திக்கு எதிராக வன் முறைகளைக் கையாண்டு, அதற்காக ஏழை விவசாய மக்களை, தொழிலாளர்களை மாணவர்களைத் தூண்டிவிடாதீர்கள். தூண்டிவிட்டால் தோல்வியைத்தான் சந்திப்பீர்கள். தங்களுக்குள்ளே நம்பிக்கையில்லாதவர்களால்தான் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. நம்பிக்கையில்லாக் கூட்டத்தினால், கொள்கையால், கொடியால் முரண்பாடு கொண்டவர்கள் இன்றைக்கு அரசியல் காரணத்திற்காகத்தான் கொண்டுவந்திருக்கிறார்கள். நம்பிக்கையில்லை என்பது சட்டப் பூர்வமாக மட்டும் ஒத்துக்கொள்ளக் கூடியதல்ல. மக்கள் மன்றம் இருக்கிறது. நீதி விசாரணை வேண்டாம் என்று சொன்னவர்களுக்கு தங்கள்மேலேயே நம்பிக்கையில்லை, பயம் வந்துவிட்டது. ஒரு குற்றவாளி நீதிபதிக்கு முன்னால் பேச பயந்துகொண்டு போலீஸ் பொய்கேஸ் போடுகிறான் என்று சொல்வதைப் போன்று இருக்கிறது. இந்த அரசுக்கு தமிழகத்திலே ஜாதியை, மதத்தை, மண்ணைக் கடந்த அளவிலே எத்தனை ஆதரவு இருக்கிறது என்பதை சமீபத்திலே மதுரையம்பதியிலே நடைபெற்ற மாநாட்டிலே பல லட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்டிருக்கிறார்களே அதிலிருந்து தெரிந்துகொள்ளலாம். கலைஞர் அவர்கள் ஏழை எளியவர்கள் உள்ளத்திலே இருக்கிறார்கள், பிச்சைக்காரர்கள் உள்ளத்திலே இருக்கிறார்கள். பெருநோயாளிகளுக்கு அவர்கள் ஆஸ்பத்திரிகளைக் கட்டியிருக்கிறார்கள். அன்று தி லாஸ்ட் என்று ரஸ்கின் எழுதியதை காந்தி படித்தார்கள். அதைச் செய்துகாட்டுவது கலைஞர் அவர்கள்தான். பெரு நோயாளிக்கு பல நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். இப்படி கலைஞர் அவர்கள்

பல தன்மைகளைச் செய்திருக்கிறார்கள். எனவே கலைஞர் அவர்களுடைய அரசு நம்பிக்கைக்குரியது, ஆளுவதற்குத் தகுதி உடையது, எனவே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் எதிர்க்கப்பட வேண்டியது என்று எனது கட்சியின் சார்பாகக் கூறி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவடைந்து மீண்டும் மாலை நான்கு மணியளவில் பேரவை கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

மாலைக் கூட்டத் தொடர்.

இடைவேளைக்குப் பிறகு பேரவை மீண்டும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் மாலை 4-00 மணிக்கு கூடியது.

* THIRU B. VENKATASWAMY : Mr. Deputy Speaker, Sir, I rise to say a few words on the no-confidence motion brought by our party leader and Thiru K. T. K. Thangamani. At the outset I want to state that people have lost their confidence on this Government for so many reasons that I am going to give later.

First of all, I know and everybody knows that this Government is having a big majority and nobody can bring this Government down or pull this Government down. However, it is the duty of healthy opposition to bring to the notice of Government the defects of the ruling party and how the people outside feel about it. There is a proverb in Telugu which says that every man thinks he is perfect but it is for other men to point out the defect. Like that, the Opposition party is there to point out the defects of the ruling party so that we can have a very clean and good Government in Tamil Nadu. With that object I am rising here. I want to bring some important facts to the notice of Government.

Regarding agricultural farmers agitation on the day of "bandh" so many people have been shot at Perianaickenpalayam, nine people nave been shot dead ; I was also at Central Jail, Salem at that time. I came to understand that police have used the 'strong rifle' which can go to the range of one mile. I do not understand the reason behind it. They have not used lathi charge or tear gas. No warning was given. Purposefully the Police have shot the people and nine people have been shot dead.

1972 ஆகஸ்ட் 11] [Thiru B. Venkataswamy]

Regarding Dharmapuri district, the police have committed havoc there, especially in certain villages. In Palayampudur village, the havoc is worse. I had been there personally after my release. About 40 ladies have been beaten severely by the police, robbed of their jewels. Even their 'thalis' have been snatched away brutally. I came to understand that in all about Rs. 20,000 worth of jewels have been snatched away by the police. This kind of thing has taken place in our State. Instead of protecting the people, if the police themselves begin to steal, there is no end to such evils. People will have to suffer a lot.

Regarding my arrest I want to bring in some important legal points. I have been arrested under Indian Penal Code Section 120 (b), Section 117, Section 148, Section 431 and Section 126 of the Railway Act. I am a legislator. I am a responsible man in my constituency. Section 117, Indian Penal Code is abetting commission of an offence by the public or more than ten persons. This involves imprisonment upto three years or fine or both. Section 120 (b) is criminal conspiracy to commit an offence punishable with imprisonment upto two years. Same punishment is provided for abetment of the offence which is the object of conspiracy. Section 148 Indian Penal Code is rioting, armed with deadly weapons. Section 431 is doing mischief rendering any public road, navigable river etc., impassable. This is punishable with imprisonment upto five years. Above all is the Section 126 of the Railway Act. Actually I was charged with committing this offence at 2-30 a.m. At that time I was sleeping in my house. The police came. I opened the door and asked them 'what is the matter'. They told me 'You are arrested'. I knew that because I was in the action committee of this agitation for Dharmapuri district. I went away with the Police. What I say is these offences had been imposed on me with a view that I should be spoiled. When the police came they took away some 'mochu' (Telugu word) 'small weapon in the houses, in order to bring the charge later on that I was armed with deadly weapons. That is how they foist the cases on people, by letting in some evidence or other. What I say is this kind of thing should be put an end to. Some member was saying that even during the Congress regime, the late Hon. Mr. Govindaswamy was charged with such offences. Let it be any Government. Government must see that these kind of charges are not foisted on innocent people.

[Thiru B. Venkataswamy] [1972 ஆகஸ்ட் 11

Sir, I am least bothered about me. But even those who were walking on the street have been taken away and charged under some section or other. This thing should be investigated and the Government should see that such things do not occur hereafter.

Then I want to point out another thing. The people in Hosur have been telling that a police lorry came and the policemen asked the people whether they were going to Sulagiri. When they replied in the affirmative they took them in the lorry on the understanding that they would be dropped at Sulagiri. But they brought those pepole to the police station at Hosur and locked them up there. They were crying in the police station. This is what the policemen had done there. When I asked the Policemen why they had done so, they had stated that a quota had been fixed and that they should arrest 50 or 60 persons. This state of affiairs had prevailed at that time and I would be very happly if action was taken against the persons who had done that mischief. If mischief was actually done, they should be punished. But the poor people should not be arrested like that.

In my own village at about 2-30 in the night they went to a house and broke open the doors. A member of the Panchayat Board was also taken into custody. When the Lady members questioned the action of the police, they have beaten her and torn her jacket. It is a great shame to the Government that the police had acted in that fashion and committed atrocities in the name of the Government. This matter I am bringing to the notice of the Government and I hope the Hon. Chief Minister will take necessary action in the matter.

Even in Palyampudur, the people have been mercilessly beaten and in the houses of Harijans pots and drums had been broken mercilessly like veri-attam. Law of jungle prevailed in Dharmapuri District on bandh day.

MR. DEPUTY SPEAKER : The Hon. Member has already taken 13 minutes.

THIRU B. VENKATASWAMY : Five more minutes.

Regarding the juidicial enquiry, the Hon. Chief Minister has stated that after the compromise was entered into, there was no need for it. But I feel that even though the Action Committee has

accepted the proposal that a judicial enquiry is not necessary, as a perfect and honesty Government, they should come forward to hold the judicial enquiry. After all, the ryots also are your people and they are not your enemies. If the judicial enquiry is held, the people will know who are responsible for this state of affairs. At least that courtesy is necessary so that we can know what the facts are.

Finally, regarding collections to the Defence Fund, in our taluk no receipt is given to any ryot who has subscribed to it. In spite of that, people contributed to it as they thought they had contributed to a national cause. Recently I understand that the amount collected for the Defence Fund has not reached the proper quarters and misappropriations have taken place throughout the State and that also should be enquired into. Also much corruption is taking place. The Hon. Chief Minister can ask, 'Are you in a position to substantiate it'. But the people are talking that so much corruption is taking place. So I request the Government to take note of my remarks. With these words, I conclude my speech in support of the Non-Confidence Motion moved by my leader.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இனி பேசுகிற உறுப்பினர்கள் பத்து நிமிடங்களில் தயவு செய்து பேசி முடித்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

***திரு. எஸ். ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, ஒன்றையிரண்டு தாட்டு மக்களிடத்திலே நம்பிக்கை இழந்தவர்கள், ஜனநாயகத்தில் நம்பிக்கையில்லாத பலாத்காரவாதிகள் இன்றைக்கு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதை நான் கடுமையாக எதிர்க்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சேலம் மாவட்டத்தில் நடந்த துப்பாக்கிப் பிரயோகங்கள்பற்றி இன்றைக்கு தமிழ்நாடு எங்கும் பெரிதாகப் பேசப்படுகிறது. அவைகளைப் பற்றி மட்டும் இந்த மன்றத்தின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். 14—6—72 அன்று சேலம் மாவட்டத்தில் விவசாயக் குழுவினர் என்ற பெயரால் சிலர் கூடி கலெக்டர் அலுவலகத்தின் முன்னர், தாலுகா அலுவலகத்தின் முன்னர் மறியல் நடத்துவது என்று முடிவு செய்து 16—6—72ம் தேதி அர்த்தநாரீஸ்வர கவுண்டர் தலைமையில் 127 பேர்கள் கைது செய்யப் பட்டார்கள். அதைத் தொடர்ந்து 30—6—71-ம் தேதி வரையில் பலர் கைது செய்யப்பட்டார்கள். இதில், கைது செய்யப்பட்டு சைதாப்பேட்டையில்

[திரு. எஸ். ஆறுமுகம்] [1972 ஆகஸ்ட் 11

இருந்த 91 பேர்கள் மன்னிப்பு எழுதிக்கொடுத்து போராட்டத்திற்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை, தெரியாமல் எங்களைச் சிக்க வைத்துவிட்டார்கள், எங்களை விட்டுவிடுங்கள் என்று மன்னிப்புகோரி 91 பேர்கள் குறுகிய காலத்தில் வெளியே வந்துவிட்டார்கள். அதன் பிறகுதான் 5-ம் தேதி கடையடைப்பு, ஹர்த்தால் என்ற பெயரால் வன்முறைச் சம்பவங்கள் தமிழ்நாடு எங்கும் ஏற்பட்டது என்பதை நாட்டுமக்கள் நன்கு அறிவார்கள். சேலம் மாவட்டத்தில் நரசிங்கபுரம், பெத்தநாய்க்கன்பாளையம், ஆத்தூர், நாமக்கல் ஆகிய பகுதிகளில் வன்முறைச் செயல்கள் அதிக அளவில் தலை தூக்கியது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நரசிங்கபுரத்தில் மாட்டு வண்டி களையும், கற்களையும் எடுத்து பொதுப் பாதைகளை வழி மறித்துவிட்டார்கள். இதேபோல் பெத்தநாய்க்கன்பாளையத்திலும் செய்தார்கள்.

நேற்றையதினம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. தங்கமணி அவர்கள் பேசும்போது பெத்தநாய்க்கன்பாளையம் சம்பவத்தைப்பற்றி எடுத்துப் பேசி னார்கள். வன்முறைச் சம்பவங்கள் எப்படி நடந்தன என்பதை அங்கு சென்று விசாரித்ததாகச் சொன்னார்கள். ஏன் உண்மையை மறைத்து இந்த மன்றத்தில் பேசுகிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன். 4-ம் தேதி இரவு 12 மணி அளவில் பெத்தநாய்க்கன்பாளையத்தில் சுமார் ஐநூறு பேர்கள் சேர்ந்து குடித்துவிட்டு சேலம்-சென்னை வரும் பொது பாதையை வழிமறித்தார்கள். பெரிய கற்களை எடுத்துப் போட்டும். கட்டை வண்டிகளைக் கொண்டு வந்து நிறுத்தியும், தார் டின்களைக் கொண்டு வந்து போட்டார்கள். இதனால் போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்பட்டது. அரசாங்க பஸ்கள், லாரிகள் எல்லாம் தடைபட்டு நின்றுவிட்ட செய்தியை ஆத்தூர் போலீஸார் தெரிந்து அவர்கள் உடனே அங்கிருந்து வந்து ராத்திரி 12 மணிக்கு பாதைகளுக்கு முன்பு போடப்பட்ட கற்களையும், மாட்டு வண்டிகளையும் அப்புறப்படுத்தி விட்டு மீண்டும் போக்கு வரத்திற்கான வழியை ஏற்பாடு செய்துவிட்டு சென்றுவிட்டார்கள். ஆத்தூரில் சேலம் டி..எஸ்.பி. ஒருவர், இன்ஸ்பெக்டர், சில காவலர்களே ஆத்தூரில் பிறகு தங்கி இருந்தார்கள். காலை எட்டு மணி இருக்கும். மீண்டும் நரசிங்கபுரத்தில் வழி மறித்து விட்டார்கள். இரண்டு அரசாங்க பஸ்களை வழிமறித்து சேதம் விளைவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி ஆத்தூரில் உள்ள டி..எஸ்.பி.-க்கு கொடுக்கப்பட்டது. உடனே அங்கு இருக்கக்கூடிய டி.எஸ்.பி., போலீஸ் இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர் ஆகியோர் நரசிங்கபுரத்திற்கு வந்திருக்கிறார்கள். அரசாங்க பஸ்களுக்கு சேதம் விளைவிப்பதைத் தடுத்து நிறுத்திவிட்டு, போக்குவரத்திற்கு மீண்டும் வழிவகை செய்துகொண்டிருக் கிறார்கள். அதே நேரத்தில் பெத்தநாயக்கன்பாளையத்தில் பெரிய கலவரம் ஏற்படுகிறது. 4,000 பேர்கள் கூடிக்கொண்டிருக்கிறார்கள். அங்கே போக்கு

1972 ஆகஸ்ட் 11] [திரு. எஸ். ஆறுமுகம்]

வரத்திற்கு இடைஞ்சல் ஏற்படுத்தி பலாத்கார செயலில் ஈடுபடுகிறார்கள் என்ற தகவல் நரசிங்கபுரம் காவலர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய டி.எஸ்.பி., இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர் ஆகியோர்கள் உடனே பெத்தநாய்க்கன்பாளையத்திற்கு 8-45 மணி அளவில் வந்து சேர்ந்தார்கள். அங்கு அவர்கள் வந்து சேர்ந்த நேரத்தில் பாதையில் இரட்டை மாட்டு வண்டிகளின் சக்காத்தைக் கழட்டி போட்டுவைத்திருந்தார்கள். டிச்சு கட்டுவதற்கென ஓமாகப் போட்டு வைத்திருந்த பெரிய பெரிய கற்களை எடுத்துப் பாதை மத்தியில் போட்டும், தார் டின்களைப் போட்டும் வைத்திருந்தார்கள். போலீஸ் அதிகாரிகளும், அதிகாரிகளுடன் லாரியில் வந்த காவலர்களும் அங்கு கூடியிருந்த 4,000 மக்களைப் பார்த்து போக்குவரத்திற்கு இடைஞ்சலாகப் போட்டு வைத்திருந்த சாமான்களையெல்லாம் எடுத்துவிடுங்கள்; போக்குவரத்திற்குத் தடங்கலாக நாம் இருக்கக்கூடாது என்று எவ்வளவோ மன்றுடிக் கேட்டார்கள். மன்றுடிக் கேட்டும் வன்முறையாளர்கள் ஒத்து வராத காரணத்தினால் காவலர்கள் வந்த லாரியில் கழற்றப்பட்டு கிடந்த மாட்டு வண்டிகளுடைய சக்கரங்களையும், கற்களையும், தார் டின்களையும் எடுத்து லாரியில் ஏற்றி ஆத்தூருக்கு லாரியை அனுப்பினார்கள். லாரி கொஞ்ச தூரம் புறப்பட்டுப் போனவுடனே போலீஸ்காரர்களை வன்முறையாளர்கள் சூழ்ந்து கொண்டார்கள். சூழ்ந்துகொண்டதும், 'லாரியில் கொண்டுபோன சாமான்களைத் திருப்பிக் கொண்டுவந்து கொடுக்கவேண்டும், இல்லாவிட்டால் உங்களை விடமாட்டோம்' என்று வழிமறித்துக்கொண்டார்கள். போலீஸாரை வழி மறித்துக்கொண்டவுடன் வன்முறையாளர்கள் தொலைபேசித் தொடர்பையும் ரத்து செய்துவிட்டார்கள். மேலும் சூரல் டி.எஸ்.பி. அவர்கள் கூட வந்து 5, 6 போலீஸ்காரர்களையும் எவ்வளவு அவமானப்படுத்தவேண்டுமோ அவ்வளவு அவமானப்படுத்தி, பொது மக்களுடைய மத்தியில் கைதிகளைப் போல் அவர்களை அடைத்து வைத்திருந்தார்கள். கூண்டில் உள்ள கிளி போல் அடைத்து வைத்திருந்தார்கள். போலீஸ் அதிகாரிகளை உட்கார வைத்து காலில் அணிந்திருக்கக்கூடிய அணியினால் அடிக்கக்கூடிய அளவுக்கு அவமானம் செய்து இருக்கிறார்கள். போக்குவரத்து தடைபட்டது. நிலைமை என்ன ஆகுமோ என்ற அச்சம். ஆத்தூருக்குத் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முடியவில்லை. சேலத்திற்கும் தொலைபேசியின் மூலம் தொடர்பு கொள்ள முடியவில்லை. அந்த நேரத்தில் அதன் வழியாக வந்த பாரெல்டி டிபார்ட்மெண்டைச் சேர்ந்த அதிகாரி திரு. காதர் என்பவர் மோட்டார் சைக்கிளில் சேலத்திற்குத் திரும்பி வந்து போலீஸ் கண்ட்ரோலுக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். பெத்தநாயக்கன்பாளையத்தில், போலீஸ்காரர்களை வன்முறையாளர்கள் சூழ்ந்துகொண்டுவிட்டார்கள், உட்கார வைத்திருக்கிறார்கள் அவர்களுக்கு என்ன ஆகுமோ தெரியாது என்று

[திரு எஸ். ஆயமுகம்] [1972 ஆகஸ்ட் 11

சொன்னர். உடனே எஸ்.பி. ஆயுதம் தாங்கிய போலீஸ்காரர்கள் 9-20 மணிக்கு பெத்துநாய்க்கன்பாளையம் வந்து சேர்ந்தார்கள். போலீஸ்காரர்கள் எவ்வளவு கண்ணியமாக நடந்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். சில போலீஸ்காரர்களே வன்முறையாளர்கள் சிறைப் பிடித்து வைத்து, அவமானப்படுத்தியிருக்கிறார்கள் என்று தெரிந்தும் சேலத்திலிருந்து சென்ற ஆயுதம் தாங்கிய போலீஸ் படையினர் அந்த ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பக்கத்திலேயே போலீஸ் வண்டியை நிறுத்திவைத்துவிட்டு ஒரு பர்லாங்கு தூரம் நடந்து வந்து, கூடியிருந்த மக்களைப் பார்த்து, 'கைது செய்து பிடித்து வைத்துள்ள போலீஸ்காரர்களை விட்டுவிடுங்கள் நீங்களாகவே' என்று எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தார்கள். 'கூட்டம் போடாதீர்கள் கலைந்து செல்லுங்கள்' என்று ஆயுதம் தாங்கிய போலீஸ் படையின் டி.எஸ்.பி. (திரு. ராமமூர்த்தி என்று கருதுகிறேன்) கெஞ்சிக் கேட்கிறார், வன்முறையாளர்கள் அவரையும் போலீஸ்காரர்களையும் கொலை செய்யவேண்டும், என்ற நோக்கத்தோடு, எவ்வளவு பலாத்காரத்தில் ஈடுபடலாமோ அதைச் செய்யலாம் என்ற அளவுக்கு வன்முறையாளர்கள் பேசினர்கள். அவர்கள் என்ன பேசினர்கள்? "கருணாநிதி போலீஸ் சுடாதே, போலீஸ்காரர்களை அடி, உதை, கருணாநிதிக்கு சுடுவதற்கு உத்தரவு கொடுப்பதற்கு தைரியம் இல்லை, கருணாநிதி போலீஸ் படை கோழை, கவலைப் படாதே" என்று சத்தம் போட்டார்கள். அதில் வன்முறையாளர் ஒருவர் பெரிய கல்லைத் தூக்கி தலையை நோக்கி அடித்தார். பக்கத்திலுள்ள போலீஸ் காரர் ஒருவர் டி.எஸ்.பி. யினுடைய தலையில் கல் விழும் என்று கருதி டி.எஸ்.பி. அணிந்திருந்த மூக்கு கண்ணாடியைக் கழட்டிவிட்டார். டி.எஸ்.பி. யின் தலையில் பலமான, அடிப்பட்டு ரத்தம் கொட்டிற்று. அப்படி அடிப்பட்டு ரத்தம் சிந்திக் கொண்டிருக்கும்போதும் காயத்தை கையால் பொத்திக்கொண்டு டி.எஸ்.பி. அவர்கள் கெஞ்சி கேட்கிறார். 'எனக்குப் பிள்ளைகள் இருக்கிறார்கள். உங்களுக்கும் இருக்கிறார்கள். அரசுக்குக் கெட்ட பெயர் தேவையில்லை. இது ஜனநாயகம். ஜனநாயகத்தில் எத்தனையோ வழிகள் உண்டு, பலாத்காரம் வேண்டாம், கலைந்துவிடுங்கள்' என்று அடிபட்ட காயத்தை ஒரு கையால் அழுத்திக்கொண்டு கெஞ்சிக் கேட்டார். முடியவில்லை. அதற்குப் பின்னாலே இவர் சொன்னர். 'நாங்கள் பின்னாலே போய்விடுகிறோம், நீங்களும் கலைந்து விடுங்கள், எங்களை விட்டு விடுங்கள்' என்று சொல்லி, பின்னாலேயே போலீஸ்காரருடன் டி.எஸ்.பி. நகர்ந்து கொண்டிருக்கும்பொழுதே என்ன நடந்தது? ஆடுகளைத் துரத்துவது போல, மாடுகளைத் துரத்துவது போல, அங்கு கூடியிருந்த வன்முறையாளர்கள் கைகளில் கிடைத்த வண்டி முனைக்குச்சிகளை எடுத்து அடித்தார்கள், காலில் அணிந்திருந்த செருப்பையும் கல்லையும் எடுத்து காவலர்கள் மீது அடித்துத் துரத்தினர்கள், காவலர்கள்.

1972 ஆகஸ்ட் 11] [திரு எஸ். ஆலமுகம்]

அத்தனை பேர்களும் வன்முறையாளர்களால் விசப்பட்டவைகளை, துப்பாக்கியால் தடித்துக்கொண்டே பின்னால் நகர்ந்து சென்று கொண்டிருந்தார்கள். ஒரு பார்லாங்கு தூரத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த லாரியில் ஒவ்வொருவராக போலீஸ்காரர்கள் ஏறினர்கள். அப்படி ஏறிக்கொண்டிருக்கும்போதே டி.எஸ்.பி.-க்குப் பக்கத்தில் ஒரு வன்முறையாளர் நெருங்கி கையினுல் டி.எஸ்.பி.-யின் விலா எலும்பைப் பார்த்து குத்தினர், அப்பொழுதுதான் டி.எஸ்.பி.-க்கு ஆத்திரம் ஏற்பட்டு, அதற்குப் பின்னாலே கையில் வைத்திருந்த ரிவால்வரினால் சுட்டார். அதனால் காயமே தவிர, யாரும் உயிர் துறக்கவில்லை. அதற்குப் பின்னாலும் வன்முறையாளர்கள் லாரியை சூழ்ந்துகொண்டு அத்தனை காவலர்களையும் லாரிக்குள்ளே இருக்கும் போதே லாரிக்கு தீ வைத்துக் கொளுத்தி அத்தனை காவலர்களையும் கொளுத்தி விடுவது என்ற நிலையில் திட்டமிட்ட செயல் நடந்தது. அதன்பின் எவ்வளவோ எச்சரிக்கை செய்தும் வன்முறையாளர்கள் ஒதுங்கிக்கொள்ளாததால், போலீஸ் காரர்கள் போலீஸ் லாரியில் இருந்த துவாரத்தில் துப்பாக்கி வைத்து, துப்பாக்கிப் பிரயோகம் நடத்தக்கூடிய அளவுக்கு சூழ்நிலை ஏற்பட்டது. இல்லாவிட்டால் அங்கே காயம் அடைந்த 21 போலீஸ்காரர்களும் டி.எஸ்.பி. ஒருவரும் இன்ஸ்பெக்டர் அவர்களும் செத்திருப்பார்கள், இப்படிப்பட்ட வன்முறைச் செயல்கள் ஒரு திட்டமிட்ட அளவில் நடந்தது எங்கே? பெத்துநாய்க்கன் பாளையம் என்று பேசுகிறீர்களே வலதுசாரி கம்யூனிஸ்டு கட்சியைக் கேட்கிறேன், உங்களுடைய கட்சி அங்கே செல்வாக்கு பெற்றுள்ள இடம். அங்கே கட்சியில் இருப்பவர்கள் வசதி பெற்றிருப்பவர்கள். அங்கேதான் பெத்துநாயக்கன் பாளையத்தில் இதெல்லாம் நடந்தது, இவ்வளவு கொடுமைகள் நடந்தன. விவசாயிகள் என்ற பெயரால் வன்முறையாளர்கள் நீங்கள் திட்டமிட்டு, சதி செய்து, பலாத்காரச் செயலில் ஈடுபட்ட காரணத்தினால் ஏற்பட்ட துப்பாக்கி பிரயோகத்தைப்பற்றி இங்கே வந்து நீங்கள் நீலிக் கண்ணீர் வடிக்கிறீர்கள். பொது மக்களுக்கு நீங்கள்தான் பதில் சொல்லவேண்டுமே தவிர, இந்த அரசாங்கம் பதில் சொல்லவேண்டியதில்லை. இந்த அரசாங்கம் பதில் சொல்ல வேண்டுமென்று நீங்கள் கருதுகிறீர்கள்? பெத்துநாயக்கன்பாளையத்தில் மக்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள். என்ன இருந்தாலும், இவ்வளவு அக்கிரமம் கூடாது. போலீஸ்காரர்கள் கையை எடுத்துக் கும்பிட்டு ரத்தம் சிந்துகிற பொழுதும் கெஞ்சிகேட்டார்கள். பாவிகள் குடித்துவிட்டு வெறியில் கொல்லி கொடுத்தார்கள். அதனால் நமக்கு இந்தக் கதி ஏற்பட்டது என்று தாலி அறுத்த தாய்மார்கள் பிள்ளைகளை இழந்த தாயும் தகப்பனும் கதறுகிறார்கள். அந்த அளவுக்கு வன்முறையை நாட்டில் தூண்டிவிட்டவர்கள் வலதுசாரி கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்கள், பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், புதிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1972 ஆகஸ்ட் 11] [திரு. எஸ். ஆறுமுகம்]

இன்னும் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரத்தநாரீஸ்வர கவுண்டர் இன்றைக்கு அந்தப் போராட்டத்திற்குத் தலைமை தாங்குகிறார். 800 ஏக்கர் நிலத்திற்குச் சொந்தக்காரர் அவர். 1966-ஆம் ஆண்டு வனவாசி-பக்கநாடு பகுதியில் 1,500 ஏக்கர் வனஇலாகாவிற்குச் சொந்தமான நிலங்களைத் தனக்குச் சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும் என்று அன்றைக்கு இருந்த ஆட்சியாளர்களைக் கைவசப்படுத்திக்கொண்டு அந்த 1,500 ஏக்கர், பாரம்பரையாக விவசாயம் நிலத்தில் செய்துகொண்டு குடியிருந்து வந்த 800 விவசாயக் குடும்பங்களையும் காலி செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு அவர்களுடைய வீடுகளுக்கெல்லாம் தீ வைத்துக் கொளுத்தி அவர்களையெல்லாம் லாரியில் ஏற்றிக்கொண்டு போய் 50 மைல், 100 மைல்களுக்கு அப்பால் கொண்டு போய் விட்டுவிட்டு வந்தார். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்ததும் 'பன்னெடுங்காலமாக உழுது பயிரிட்டுக் கொண்டுவருகின்றார்கள் எழை விவசாயிகள், அவர்களை வெளியேற்றுவது கூடாது, அந்த நிலங்களை அவர்களுக்கே நீண்டகால குத்தகையாகக் கொடுக்கலாம்' என்று முடிவு செய்து பேரறிஞர் அண்ணா அவர்கள், அரத்தநாரீஸ்வர கவுண்டரால் 50 மைல், 100 மைலுக்கு அப்பால் கொண்டு போய்விடப்பட்ட அந்த விவசாயிகளுக்கே அந்த நிலத்தை பத்தாண்டுக் கால குத்தகைக்கு விட்டார்கள். அதே விவசாயிகளுக்குத்தான் நமது பெருமதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள் ஒரு ஆண்டு காலத்திற்கு முன்பு மேட்டூர் பகுதிக்கு வந்த நேரத்தில் 'அந்த நிலங்கள் தங்களுக்கே சொந்தமாக்கப்படவேண்டும்' என்று அவர்கள் கேட்டபோது அப்படியே கொடுக்கப்பட வேண்டும் என்று உத்திரவினைப் பிறப்பித்தார்கள். இது நமது சுப்பிரமணியம் அவர்களுக்குத் தெரியும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, அரத்நாரீஸ்வர கவுண்டர் அவர்களோடு சேர்ந்து கொண்டு 'அந்த நிலங்களைக் கொடுக்கக்கூடாது' என்று எதிர்த்தவர்களும் அந்த வரிசையில் இருக்கின்றார்கள். திருவாளர் கந்தப்பனும் திருவாளர் ஆறுமுகமும் கடுமையாக அன்றைக்கு எதிர்த்தார்கள், 'அந்த நிலம் மேய்ச்சல் நிலத்திற்கு வேண்டும்' என்று பகிரங்கமாக நோட்டீஸ் போட்டு, கூட்டம்போட்டுச் சொன்னார்கள். இது வரலாறு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் மேட்டூருக்கு வந்த நேரத்தில் கந்தப்பன் அவர்கள்தான் இந்த வனவாசி—பக்கநாடு நிலங்களையெல்லாம் அதில் பன்னெடுங்காலமாக உழுது வாழ்ந்துவந்த விவசாயக் குடும்பங்களுக்கே பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்தார். அது பற்றி அதே கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டு, தொடர்ந்து பட்டா செய்து கொடுக்கப்

1972 ஆகஸ்ட் 11] [மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி]

பட்டு இருக்கிறது. கந்தப்பன் அவர்கள், அவர்களுக்கு ஆதரவாகத்தான் இருந்தார்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: நான் சொல்லுவது தாங்கள் முதலமைச்சராக வருவதற்கு முன்பு அவர் எடுத்திருந்த நிலை. 'வேறு வழியில்லை' என்று வந்த பிறகு, கடைசியாக அவர் எடுத்துக்கொண்ட நிலை இது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கடைசியாக வந்த நிலை என்ன கூறலாமே தவிர, கந்தப்பன் அவர்கள் ஆரம்பக்காலத்திலிருந்தே அந்தக் குடும்பங்களுக்கு ஆதரவாகத்தான் சொல்லிவந்திருக்கின்றார்கள். வாதத்திற்கு வேண்டுமானால், 'கந்தப்பன் கொடுக்கக்கூடாது என்று சொன்னார்' என்று வைத்துக்கொண்டாலும், கந்தப்பன் அவர்களையே மாற்றி விவசாயத் தொழிலாளர்களுக்கு நிலத்தைப் பகிர்ந்துகொடுத்த அரசு இது. ஆனால் இன்றைக்கும் ஆரம்பத்திலிருந்தே எதிர்த்துவந்த அர்ந்தநாரீஸ்வர கவுண்டர் அவர்கள் தலைமையில் இயங்குகின்றவர் தாங்கள்.

திரு. எஸ். ஆறுமுகம்: 1962 ஆம் ஆண்டிலிருந்து இந்த சட்ட மன்றத்தில் பணியாற்றிக்கொண்டிருக்கிறேன். இந்த மன்ற நிகழ்ச்சிகளைப் பாருங்கள், நான் அர்த்தநாரீஸ்வர கவுண்டருடைய அக்கிரமங்களை எதிர்த்தும் கண்டித்தும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும் என்றும் அல்லையநினம் எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில் இதே மன்றத்தில் நான் பேசியிருக்கிறேன். விஷயங்களைத் தவருகப் புரிந்து கொண்டு நண்பர் பேசுகிறதைப் பார்த்து வேதனைப் படுகிறேன். எடப்பாடி சட்டமன்ற உறுப்பினரும் நானும் கந்தப்பன் அவர்களும் விவசாயிகளுக்கு சாதகமாக வாதாடியிருக்கிறோம். நாங்கள் எடுத்துச் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் பாதிக்கப்பட்ட அந்தப் பொதுமக்கள் போறிஞர் அண்ணா அவர்களிடம் அவர்கள் 1967-ல் பொறுப்பேற்றுக்கொண்ட நேரத்தில் மனுக்கொடுத்தார்கள். அண்ணா அவர்கள் உடனே சட்டமன்ற உறுப்பினர் எல்லோரையும் அழைத்து வைத்துப்பேசி நிலைமையை நன்கு தெரிந்துகொண்டு, 'விவசாயிகள் கேட்பது நியாயம்' என்று ஒப்புக்கொண்டு எந்தவிதமான விசாரணையுமின்றி "அவர்களுக்குத்தான் நிலம் கொடுக்கப்படவேண்டும்" என்ற முடிவிற்கு வந்தார்கள், கலைஞர் அவர்கள் பட்டா கொடுத்தார்கள். இந்த உண்மைகள் முழுதும் மதிப்பிற்குரிய சுரேந்திரன் அவர்களுக்குத் தெரியும், ஆனால் அவர் அந்தப் பக்கத்திற்குப் போய் விட்டார்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: அண்ணா அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். உண்மை. ஆனால் அதற்கு இடையூறு செய்தவர்கள் இன்று ஆளும் கட்சியில் இருக்கிறார்கள். அந்த விவசாயிகள் சென்னைக்கு வந்து அண்ணா அவர்கள்

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1972 ஆகஸ்ட் 11

வீட்டிற்கு வந்து, முறையிட்டுக்கொண்டு 'இதில் நியாயம் கிடைக்கவில்லையென்றால் போராட்டம் நடக்கும்' என்று சென்னையில் சுவரொட்டிகள் போட்ட பிறகுதான் அண்ணா அவர்கள் அமல்படுத்தினார்கள். அண்ணா அவர்கள் சொன்னார்கள், ஆனால் இடையிலே பலர் தடுத்தார்கள். இன்று அவர்கள் ஆளும கட்சியில் இருக்கின்றார்கள்.

திரு. எஸ். ஆறுமுகம்: யார் யார் என்று சொல்லமுடியுமா? சும்மா பொய் சொல்லக் கூடாது. அப்பட்டமான பொய்யைச் சொல்லக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அப்படிப் பேசக் கூடாது. பொதுவாக அந்த வார்த்தையை உபயோகப்படுத்தக்கூடாது.

திரு. எஸ். ஆறுமுகம்: இப்படி வெளியேற்றப்பட்டவர்களுக்கு மீண்டும் நிலம் கொடுக்கப்படும் என்று அறிவித்தபோது, அவர்களுக்குக் கிடைக்காமல் ஒரு சிலர் சங்கத்தை வைத்துக்கொண்டு, தங்கள் சங்கத்தில் உள்ளவர்களுக்குத் தான் நிலம் கொடுக்கப்பட வேண்டும் என்று முயற்சி செய்தார்கள். அதைத் தான் கந்தப்பன் அவர்கள் எதிர்த்தார்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்படிக் குறுக்கிட்டால் அவர் எப்படி முடிக்க முடியும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நானே சொல்லுகிறேன். சிலர் சங்கத்தை வைத்துக்கொண்டு அந்தச் சங்கத்தின் மூலம் அந்த நிலங்களைத் தாங்கள் பகிர்ந்துகொள்ளலாம் என்று நினைத்தாலும், அதற்கு இடம் கொடுக்காமல் கந்தப்பன் அவர்கள் தடுத்ததுதான் உண்மை. உண்மையான விவசாயிகள் யாரோ, யார் உண்மையிலேயே அவற்றை உழுதுகொண்டு இருந்தார்களோ அவர்களுக்குத்தான் அந்த நிலங்களைப் பகிர்ந்துகொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் முடிவெடுத்தது. அண்ணா அவர்கள் முதலில் அவர்களுக்குப் பத்தாண்டு குத்தகையில் கொடுக்கலாம் என்று எண்ணினார். பின்னர், நான் முதலமைச்சராக வந்தபிறகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், போஸ்டர்கள் போட்டார்கள் என்றெல்லாம். அதெல்லாம் எனக்கு நினைவில்லை. ஆனால் நான் மேட்டூருக்குக் கூட்டத்திற்குப் போயிருந்த நேரத்தில் இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டது. உடனடியாக அதை ஏற்றுக்கொண்டு இரண்டொரு மாதகாலத்தில் அந்தக் கோரிக்கை அமலுக்கு வந்தது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே,

1972 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவுசெய்து குறுக்கிட வேண்டாம். நீங்கள் அடுத்துப் பேச இருக்கின்றீர்கள். அப்போது பேசுங்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: முதலமைச்சர் அவர்கள் உண்மைக்குப் புறம்பாகப் பேசும்போது அதை நான் மறுத்தாகவேண்டும். யார் யார் எப்படி எப்படி இதில் நடந்து கொண்டார்கள் என்பது எனக்குத் தெரியும். இந்தப் பிரச்சனை இங்கே வரும் என்று தெரிந்திருந்தால் அவர்கள் வெளியிட்டிருந்த அந்த நோட்டீசைக் கொண்டு வந்திருக்க முடியும். பொறுப்புள்ள முதலமைச்சர் அவர்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து நீங்கள் பேச இருக்கின்றீர்கள். உங்கள் பெயர் இருக்கிறது. அப்போது நீங்கள் பேசலாம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, வனவாசி-பக்கநாடு நிலங்களில் ஆக்கிரமிப்புச் செய்திருந்தார்கள். செய்தவர்கள் ஐந்து பத்து ஏக்கர் முதல் ஐம்பது ஏக்கர் வரையில்கூட செய்திருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்பது கோரிக்கை. ஆனால் நஞ்சை நிலமாக இருந்தால் ஒன்றரை ஏக்கரும் புஞ்சை நிலமாக இருந்தால் மூன்று ஏக்கர் நிலத்தையும்தான் பட்டா செய்து கொடுக்கலாம் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அங்கு வந்த நமது முதலமைச்சர் அவர்களும் அந்த அடிப்படையில் பட்டா செய்துகொடுங்கள், மிச்சமுள்ள நிலத்தை நிலமற்ற ஏழைகளுக்குக் கொடுங்கள் என்று உத்தரவிட்டார்கள். இதைத்தான் அரசு நிறைவேற்றிவருகிறதே தவிர பட்டா கொடுக்கக்கூடாது ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்கே நிலத்தை விட்டுவிட வேண்டும் என்று சொன்னால் அது விவசாயிகளுடைய போராட்டமில்லை, அது முதலாளித்துவப் போராட்டம்.

திரு. எஸ். ஆறுமுகம்: அந்த அளவிற்கு விவசாயப்பெருங்குடி மக்கள்மீது அக்கறை கொண்ட அரசுதான் இந்த அரசு. ஆனால் அவர்களுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு சிலர் போராட்டத்தில் இறங்கினால் அந்தப் போராட்டத்திற்குப் பொதுவுடமைக்கட்சி என்று சொல்லிக்கொண்டு இருக்கின்றவர்களும் ஆதரவு கொடுத்ததன் நோக்கம் இந்த நாட்டில் ஜனநாயக அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடந்துகொண்டு வருகிறது. இந்த ஆட்சியை மாற்றுவதற்குப் பலாத்காரம் தவிர வேறு வழியில்லை என்று ஒரு முடிவிற்கு வந்தபிறகு இன்று இவைகள் எல்லாம் திட்டமிட்டுச் செய்யப்படும் காரியங்களே தவிர வேறு ஒன்றும்இல்லை. போராட்டக் காலத்தில் மத்திய அமைச்சர்கள் எல்லாம் இங்கே வந்திருக்கிறார்கள். வந்து எப்படிப்பட்ட

[திரு. எஸ். ஆறுமுகம்] [1971 ஆகஸ்ட் 11

கருத்துக்களைப் பேசியிருக்கிறார்கள்? எங்கள் மாவட்ட மந்திய அமைச்சர் திரு. மோகன் அவர்கள் ஏற்காட்டிற்கு வருகின்றார்கள். அங்கே சிலரை உட்காரவைத்து, நமது மாநில போலீசைக்கூட வெளியேறச் சொல்லிவிட்டு ரகசியமாகப் பேசுகிறார். சோஷலிசத் தத்துவத்தைத்தான் போதிக்கிறாரா அல்லது அது போதாது என்று கம்யூனிஸத் தத்துவத்தைச் சொல்லி, ஒருவேளை இந்திராகாந்திக்கு அவரது அரசுக்கு ஆபத்து ஏற்படுத்துவதற்குத் திட்டம் இடுகிறாரோ என்னவோ எனக்குத் தெரியாது. பின்னால்தான் இந்திராகாந்தி காங்கிரஸ்காரர்கள் அதை உணருவார்கள். இன்றைக்கு கம்யூனிஸ்டு கட்சியிலிருந்த பலர் மந்திய அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கின்றார்கள். பல மாநிலங்களிலே கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்தவர்கள் இந்திரா காங்கிரசில் இணைந்து அங்கே அமைச்சராக இருக்கின்றார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்கிறதை அவர்களால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை.

இப்படிப்பட்ட செயல்களிலே இன்றைக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், இந்திரா காங்கிரஸும், இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரிக்கும் மற்றவர்களும் ஈடுபட்டு, திறமையாகச் செயல்பட்டு வருகின்ற கழக அரசின் மீது பழி சுமத்தி வருகிறார்கள். இப்படிப்பட்டச் சம்பவங்கள் தமிழ்நாட்டிலே ஏற்படுவதற்கு இந்தக் கட்சிகள் தான் முழுப் பொறுப்பும் ஏற்கவேண்டும். நீங்கள்தான் மக்களுக்கு பதில் சொல்லவேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் மக்களிடத்திலே கொண்டிருக்கிற நம்பிக்கை நிலையானது. மக்கள் இந்த ஆட்சியின் பக்கம் இருக்கிறார்கள். இன்றைக்கு மக்களின் நம்பிக்கையை இழந்திருக்கும் இந்தக் கட்சிகள்தான் இந்த அரசின்மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதைப் பார்த்து தான் வேதனைப் படுகிறேன்.

உத்திரபிரதேசத்தில் துப்பாக்கி சூடு. 30 பேர்களுக்குமேல் பெண்கள் கற்பழிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இங்கே நடந்த சம்பவங்களைப்பற்றி சொல்லி, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப்பற்றி விவாதிக்கும்போது எங்கெங்கேயோ உள்ள சம்பவங்களைச் சொல்கிறார்கள்.

திரு. எஸ். ஆறுமுகம்: அப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்ற உத்தரப் பிரதேசத்தில் நீதிவிசாரணை இல்லை. அங்கிருந்து மந்திய அமைச்சர்கள் இங்கே வந்து விசாரணை வைக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். டில்லியிலிருந்து 20 மைல் தொலைவில் உள்ள உத்தரப்பிரதேசத்தை விட்டுவிட்டு அந்த முதலமைச்சரை நீதிவிசாரணை வைக்கச்சொல்வதை விட்டுவிட்டு, இங்கே வந்து சொல்கிறார்கள். ஏன் அங்கே போய் அதைச் சொல்வதுதானே?

1972 ஆகஸ்ட் 11]

இவ்வளவும் சொல்ல விரும்புகிறேன். அங்கே சந்திரசேகரன் என்பவர் கொலை செய்யப்பட்டார். வழக்கு கோர்ட்டிலே இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: உயிரோடு இருப்பவர்களை எல்லாம் செத்து விட்டார் என்று சொல்கிறீர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: செத்தவர்களை எடுத்துக்கொள்ள வேண்டியதுதான்.

திரு. எஸ். ஆறுமுகம்: அது சம்பந்தமாக வழக்கு கோர்ட்டிலே இருக்கிறது. ஆனால் அந்த வழக்கு சம்பந்தப்பட்ட ரிக்கார்டுகள் காணாமல் போய்விட்டன. இன்றைக்கு வடக்கே அப்படி நடக்கிறது. ஆகவே, அங்கே ஒரு நீதி, தமிழ் நாட்டுக்கு ஒரு நீதியா? தமிழ்நாட்டிலிருக்கிற கழக அரசு மக்களை மதிக்கிற அரசு; மக்களைப் புரிந்து கொண்ட அரசு, சமதர்ம கொள்கைகளைக் கடைப் பிடிக்கிற அரசு தமிழுக்காகப் போராடிய அரசு, இப்படிப்பட்ட இந்த அரசை தமிழ் நாட்டு மக்கள் என்றும் மறக்க மாட்டார்கள், விலக்க மாட்டார்கள். இப்படிப்பட்ட இந்த கழக அரசின் மீது கொண்டுவந்திருக்கிற இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை நான் வன்மையாகக் கண்டித்து விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இங்கே இன்னொரு விளக்கத்தையும் கொடுக்க விரும்புகிறேன். மேட்டூர் பகுதியில், நீர்ப்பிடிப்புப் பகுதியில் தண்ணீர் குறையக் குறைய 3000 ஏக்கர் நிலத்தை ஆக்கிரமிப்புச் செய்து இருக்கிறார்கள். தண்ணீர் ஏறுகிறபோது காலிசெய்துவிடுவது. தண்ணீர் வற்றும்போது மீண்டும் ஆக்கிரமித்துவிடுவது, இப்படி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கிறபோது அரசாங்கம் விவசாயிகளுக்குத் துரோகம் செய்கிறது என்று உண்மைக்குப் புறம்பான செய்தியைக் கிளப்பிவிடுகிறார்கள். நீர் பிடிப்பு பகுதியில் 20 ஏக்கர், 30 ஏக்கர், 200 ஏக்கர் வரைகூட ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை அரசு அப்புறப்படுத்தி, நீர்ப் பிடிப்பு பகுதியின் மேல் பகுதியில் நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்குப் பட்டா வழங்கியிருக்கிறது. அரசாங்கத்தை கவுண்டர் கூட அங்கே . . .

திரு. கே. டி. கே. தங்கமணி: எந்தப் பிரச்சனையை எடுத்துக்கொண்டாலும் அர்த்தநாரீஸ்வரரை ஏன் இழுக்க வேண்டும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மேட்டூர் நீர்ப்பிடிப்புப் பகுதியில் 50 ஏக்கர், 60 ஏக்கர் என்று 3000 ஏக்கர் வரை ஆக்கிரமித்திருக்கிறார்கள்,

[திரு. ப. உ. சண்முகம்] [1972 ஆகஸ்ட் 11

அரசாங்கத்தினுல் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து நிலங்களை கைப்பற்றி, நீர்ப் பிடிப்பின் மேல் பகுதியில் உள்ள நிலத்தை நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு 1½, ஏக்கர் 3 ஏக்கர் என்ற வீதத்தில் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை இம்மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. ஒ. என். சுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தி.மு.க. அரசின்மீது கொண்டுவந்திருக்கிற நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய ஒன்றிரண்டு கருத்துக்களையும், அனுபவங்களையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக நடந்த போராட்டங்களிலே தி.மு.க. அரசானது ஆங்காங்கே பல இடங்களில் வன்முறையை உண்டாக்கியிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டி, அதை ஒரு குற்றச்சாட்டாக நான் கூற விரும்புகிறேன். அடுத்து, போலீஸ் இலாகாவை நிர்வகிக்கக்கூடிய முதலமைச்சர் அவர்களுடைய கட்சிக் காரர்கள் செய்யக்கூடிய அட்டூழியங்களை ஆங்காங்கே உள்ள போலீசார் கண்டும் காணாததுபோல் இருந்துவிடுகிறார்கள். அதற்கு தி.மு.க. அரசுதான் காரணம் என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன்.

அடுத்ததாக, ஜனநாயக அமைப்பிலே இருக்கின்ற எதிர்க்கட்சிகளின் அமைப்பை ஒழுங்கினப்படுத்துவதற்குத் தன்னுலான முயற்சியைச் செய்கிறார்கள் என்று நான் வன்மையாகக் குற்றஞ்சாட்டுகிறேன். அதனுல்தான் பெத்தநாயக்கன்பாளையத்திலே துப்பாக்கியால் சுடப்பட்டு, பல உயிர்கள் சாகடிக்கப்பட்டன. அப்படியிருந்தும் போராட்டக் குழுவினர் அமைதியாகவே நடந்து கொண்டனர் என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திண்டுக்கல்லிலே ஜூன் மாதம் 3-ம் தேதி ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டமானது 3, 5, 7, 11 என்ற பல்வேறு தேதிகளில் சாத்வீகமான முறையில் நடைபெற்று வந்தது. அப்படி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது 28-ம் தேதி அன்று விவசாயிகள் சார்பாக ஒரு மாட்டுவண்டிகள் ஊர்வலம் நடத்தவேண்டுமென்று போராட்டக் குழுவின் தலைவர் என்ற முறையிலே எனக்குத் தெரிவிக்கப்பட்டது. 27-ந் தேதியில் நடைபெற்ற சர்வகட்சிகள் கூட்டத்தில் முடிவெடுத்து, அந்தக்கருத்தைப் பொதுக்கூட்டத்தில் வெளியிட்டிருக்கிறோம். அப்படி முன் கூட்டியே தெரியப்படுத்தியிருந்தும் கூட அன்று மாலை 4 மணியிலிருந்து எங்கள் கட்சியிலுள்ளவர்களையும், சர்வகட்சித் தலைவர்களையும் முன் எச்சரிக்கையாகத் தடுப்புக்காவல் சட்டத்தின்படி கைது செய்தார்கள். அது சம்பந்தமாக அன்று ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நானும் இருந்தேன். குடந்தை இராமலிங்கமும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார். போலீஸ் பாதுகாப்பும் இருந்தது. அப்படி இருந்தும்கூட

1972 ஆகஸ்ட் 11] [திரு. ஒ. என். சுந்தரம்]

அந்தக் கூட்டத்திலே ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் கல் எறிந்தார்கள். அப்படி எறியப்பட்ட ஒரு கல் ஒரு துண்டு காகிதத்தில் சுற்றப்பட்டிருந்தது. அந்த காகிதத்தில், "டேய் இராமலிங்கம் நீ உயிரோடு திரும்பிப் போக மாட்டாய்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இப்படி போலீஸ் பாதுகாப்பு இருந்தும்கூட இம்மாதிரி நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றனவே என்று போலீஸ் அதிகாரிகளிடம் சொன்னேன்.

அதற்குப் பிறகு கூட்டம் முடிந்து, இரவு 11 மணிக்கு என்னுடைய மகன் வீட்டிலே குடந்தை இராமலிங்கத்தைத் தங்கச் செய்திருந்தேன். அங்கிருந்து காப்பி, டீ, பலகாரம் எல்லாம் சாப்பிட்டு முடிந்த பிறகு சுமார் 12½ மணி வரை அங்கே இருந்தேன். அதன்பிறகு என் வீட்டுக்கு வந்தேன். அன்று அதாவது இரவு முடிந்து காலையில் விவசாயிகள் போராட்ட மாட்டுவண்டி ஊர்வலம் வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இரவு 12 மணிக்கு பின்னால் நகர எல்லைக்கு அப்பால் சென்று வருகின்ற விவசாயிகளையும் மாடுகளையும், வண்டிகளையும் கைது செய்தார்கள். (சிரிப்பு) கைது செய்தார்கள். உண்மை.

மாண்புமிகு போரவைத் துணைத் தலைவர்: மாடுகளையும், வண்டிகளையும் கைப்பற்றினார்கள் என்று சொல்லுங்கள்.

திரு. ஒ. என். சுந்தரம்: மாடுகளையும் வண்டிகளையும் கைப்பற்றிப் போராட்டத்தில் கலந்துகொள்ள வந்த விவசாயிகளை கைது செய்தார்கள். வந்தவர்கள் அப்படி கைது செய்யப்படுகின்ற நேரத்தில், அங்கே முனிசிபல் லிமிட்டுக்குப் பக்கத்தில் இரண்டு மூன்று டாக்ஸிகளிலே பலர் இருந்தார்கள். அவர்கள் நிலையை எப்படி வர்ணிப்பது என்று எனக்குத் தெரியவில்லை. அவர்கள் கையில் வழக்கம்போல் சைக்கிள் செயினும், தடிகளும் வைத்திருந்தார்கள் கைது செய்யப்பட்ட விவசாயிகள் அவர்களை ஏன் கைது செய்யவில்லை என்று போலீஸ் அதிகாரிகளைக் கேட்டபோதும் அவர்களை கைது செய்யவில்லை. அதற்குப்பதிலாக 'யு ஆர் நாட் ரெஸ்பான்ஸிபிள் ஃபார் தட்' என்று சொல்லியிருக்கிறார்கள். கைது செய்யப்பட்ட விவசாயிகள் இதையெல்லாம் சொன்னார்கள். 28-ந் தேதி காலை 3 மணி அளவில் அந்த மூன்று டாக்சிகளில் இருந்தவர்கள் யார் யார் என்பதை நாங்கள் தந்திகள் மூலம் ஐ.ஜி.-க்கு தெரிவித்திருக்கிறோம். அந்த விபரம் சகல பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. பொறுப்பான பதவி வகிக்கக்கூடிய நகரசபைத் தலைவர் அந்தக் கோஷ்டிக்குத் தலைமை வகித்திருக்கிறார் என்பதை வேதனையோடு, வெட்கத்தோடு சொல்லிக் கொள்கிறேன். இரவு 3 மணி அளவில் அந்த வீட்டுக்கு இந்தக் கோஷ்டியினர் வந்து வீட்டில் ஏறிக் குதித்து அவருக்குத் துணையாக இருந்த ஊழியனை அடித்துக் காயப்படுத்தி, டாக்சியிலேயே அவனைக் கொண்டுபோய் போலீஸ்

[திரு. ஓ. என். சுந்தரம்] [1973 ஆகஸ்ட் 11

ஸ்டேஷனின் பக்கத்தில் போட்டிருக்கிறார்கள். மறு படியும் அந்த வீட்டிற்கு வந்து கற்களை எல்லாம் எடுத்து வீசி, அங்கிருந்த பெண்களை—தேவ பாஷை என்று கூடச் சொல்லாம்—அதுபோன்ற தகாத வார்த்தைகளை எல்லாம் உபயோகப்படுத்திப் பேசியிருக்கிறார்கள். அதுபற்றி எல்லாம் நான் தந்தி ஐ.ஜி.-க்கு கொடுத்திருக்கிறேன். சம்பல் கொள்ளைக் காரர்கள் தாக்குவதுபோல இவை இருந்திருக்கிறது. இவை கட்சிக்காரர்கள் செய்கிறமாதிரியா இருந்தது? மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் இவற்றை எல்லாம் கண்டித்தார்களா? அதுபற்றி என்ன பதில் சொல்லப்போகிறார்கள்? தக்க பதில் சொல்வார்கள் என்று நம்புகிறேன்.

29, 30 ஆம் தேதிகளில் கல்லூரி மாணவர்கள் எம்.ஏ., பி.எஸ்.ஸி. பி.காம், படிக்கிறவர்கள் எல்லாம் 24 பேர்கள் கையெழுத்திட்டு மறியலில் ஈடுபட போராட்டக் குழுத் தலைவன் என்ற முறையில் என்னிடத்தில் லிஸ்ட் கொடுத்தார்கள். இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர் என்னிடம் வந்தபோது கூடச் சொன்னேன், மாணவர்களே இதில் சம்பந்தப்படுத்தக்கூடாது என்பதாக. அவர்களும் என் கருத்தை ஆதரித்தார்கள். ஆக, நிண்டுக்கல்லைப் பொறுத்த வரை போராட்டம் விவசாயிகளால்—பல கட்சிக்காரர்களும் இருந்தார்கள்—அமைதியான முறையில்தான் நடத்தப்பட்டது. அப்படி அமைதியாக நடை பெற்று வந்த இடத்தில் 2 ஆம் தேதி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கூட்டப்பட்ட கூட்டத்தில் பலர் ஆவேசமான பேச்சுக்களைப் பேசி—5 ஆம் தேதி ஹர்த்தாலின்போது கடைகள் அடைக்கப்பட்டால் கமிஷன் வியாபாரிகள் கைவெட்டப்படும் என்பதாக எல்லாம் சொன்னார்கள். இப்படிப் பகிரங்கமாக வன்முறையைத் தூண்டிவிட்டவர்கள் யார்? இருந்தும் 5 ஆம் தேதி பெரும்பான்மையானவர்கள் கடைகளை அடைத்திருந்தார்கள். மறியலில் ஈடுபட்டவர்கள் அங்கே எங்காவது வன்முறையில் ஈடுபட்டார்கள் என்று நிரூபிக்கப்பட்டால் போராட்டக் குழுவின் தலைவன் என்ற முறையில் நீங்கள் என்ன தண்டனை கொடுத்தாலும் நான் ஏற்றுக்கொள்ளத் தயார். ஆளும் கட்சியினர்கள்தான் வன்முறையைத் தூண்டிவிட்டார்கள். 4 ஆம் தேதி நள்ளிரவு முதலே தமிழர் படை என்கிற பாட்சை அணிந்தவர்கள் தெருக்களில் சுற்ற ஆரம்பித்தார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் நான் 5 ஆம் தேதி காலை மருத்துவ மனைக்கு இன்சுலின் ஊசி போட்டுக்கொள்ளச் சென்றபோது என் கண்ணாலேயே காலை பத்து மணிக்குப் பார்த்தேன், தமிழர் படை என்கிற பாட்சை அணிந்துகொண்டு இவர்களது தொண்டர்கள் கும்பலாகப் போய்க் கொண்டிருந்ததை. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மதுரையில் நிருபர்களிடம் பேசும்போது, 'தமிழர் படை என்கிற அமைப்பே இல்லை' என்று சொல்லியிருக்கிறார்கள். வழக்கம் போலுள்ள ஆயுதங்களை வைத்துக்

[திரு. ஒ. என். சுந்தரம்] [1972 ஆகஸ்ட் 11

கொண்டு அவர்கள் தெருக்களில் திரிந்துகொண்டிருந்ததை நானே பார்த்தேன். அப்படி இருந்தும் 90 சத விதம் கடைகள் திண்டுக்கல் நகரத்தில் திறக்கப்பட வில்லே பந்த் வெற்றியா, தோல்வியா என்பது ஒருபுறம் இருந்தாலும் இந்தத் தமிழர் படை தொண்டர்கள் 6-ஆம் தேதி புறநகர்ப் பகுதிகளில் கடைகளே மூடினார்கள் என்பதற்காகச் சிறு கடைக்காரர்களே எல்லாம் தாக்கி அடித்துத் துன்புறுத்தியிருக்கிறார்கள். இதுபற்றி போலீசிலும் புகார் செய்யப் பட்டிருக்கிறது. இப்படிப் பலச் சம்பவங்கள் ஆளும் கட்சியினர் தான் வன்முறையில் ஈடுபட்டார்கள் என்கிற குற்றத்தை நான் சாட்டுகிறேன்.

3-ம் தேதி அன்று காலே 9 மணி அளவில் சென்னே கவர்னர் அவர்கள் மதுரை சர்க்யூட் ஹவுசில் தங்கியபோது அவரைப் போய்ப் பார்க்க ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. நானும் ஒரு சட்டமன்ற உறுப்பினன் என்ற முறையில், விலாசம் இல்லாவிட்டாலும், அந்தக் குழுவோடு சென்றிருந்தேன். நாங்கள் கவர்னரிடம் கொடுத்த மகஜரில் முக்கியமாகக் குறிப்பிட்டிருந்தது தான்கு பாயிண்டுகள் தான். பந்த் நடந்தபோது வன்முறைச் செயல் நடைபெற்றது, சிறப்புச் கூட்டத்திற்காக வசூலிக்கப்பட்ட கட்டாய வசூல்கள், சுதந்திரப் போராட்ட வீரர்கள் பற்றிய பட்டியலில் பல பேர்கள் விடப்பட்டிருந்தது, பொன்னுடை போர்த்துவதற்கு இந்த மகாநாட்டில் திராவிட முன்னேற்றக் கழக மாவட்டச் செயலாளர்—வணக்கத்திற்குரியவர் நடந்துகொண்ட முறை போன்ற நான்கு குறிப்புகளேத்தான் கொடுத்தோம். அவர்கள் அனுதாபத்தோடு கேட்டுக் கொண்டிருந்தார்கள். சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் லிஸ்ட் இருக்கிறதா என்று கேட்டார்கள். இருக்கிறது என்று சொன்னதற்கு கலெக்டர் மூலமாக ஆளுநர் அலுவலகத்திற்கு அதை அனுப்பி வைக்கும்படி சொன்னர். எந்த இடத்திலும் கட்டாய வசூல்பற்றி அவர் எதுவும் பதில் சொல்லவில்லே. அதைப்பற்றிய பேச்சும் விரவில்லே. இதைச் சபைக்குத் தெரிவிக்க வேண்டுமென்ற காரணத்திற்காக நானும் அந்தக் குழுவினருடன் சென்ற காரணத்தினுல் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கடைசியாக ஆளுநர் தெரிவித்தது ' My Powers are limited. So I shall consider this. ' என்பதுதான்.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Sir, on a point of order. Sir, under rule 67, a Member, while speaking must not use the Governor's name for the purpose of influencing a debate. Now the hon. Member is tryiny to influence the debate by using the Governor's name and so, that portion should be expunged.

திரு. ஒ. என். சுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, அது மாதிரியான பிரச்னைகள் வந்த காரணத்தினுல் அதை நான் குறிப்பிட வேண்டியதா

யிற்று. சபை விதிகளின்படி தவறுக இருந்தால், நீங்கள் எடுத்துச் சொன்னால் தான் திருத்திக் கொள்ளத் தயார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் ஆளுநர் அவர்களைப்பற்றி இங்கே குறிப்பிடாமல் இருப்பது நல்லது. அவரை இந்த அவையில் எந்த விதமான விவாதத்திற்கும் உள்ளாக்கக்கூடாது.

திரு. கே. டி. கே. தங்கமணி: கவர்னர் அவர்களிடம் மகஜர் கொடுத்திருக்கிறோம். அந்த மகஜரை சர்க்கார் கவனிக்க வேண்டும் என்று சொல்வதற்கு உரிமை உண்டு.

Mr. DEPUTY SPEAKER: Mere reference is all right.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கவர்னர் அவர்களிடம் விண்ணப்பம் கொடுக்கலாம். அந்த விண்ணப்பத்தை அரசு கவனிக்க வேண்டுமென்று சொல்லலாம் என்று கூறினார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் கூறியது அது அல்ல. கவர்னர் அவர்களிடம் வன்முறைச் சம்பவங்கள் பற்றிக் குறிப்பிட்டதாகவும், மற்ற சில பாயிண்டுகளும் குறிப்பிட்டதாகவும், அவர் தாம் செயலற்ற நிலையில் இருப்பதாகக் கூறியதாகவும் இப்படி தன்னுடைய வாதத்திற்குச் சாதகமாக கவர்னர் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர் குறிப்பிட்ட செய்தி உண்மை என்றோ, தவறு என்றோ நான் சொல்லத் தயாராய் இல்லை. தன்னுடைய வாதத்திற்குச் சாதகமாக கவர்னரைப் பற்றிக் குறிப்பிட்டு நிசை திருப்புகிற முறையில் பேசக்கூடாது என்பதுதான் சபை விதி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது சட்டசபை நடவடிக்கைக்கு மாறுபட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். இந்த மன்றத்திலே கவர்னர் அவர்களைக் குறிப்பிட்டு பேசுவது முறையல்ல.

'the name of the Governor should not be used to influence the debate' என்ற வகையிலே இருக்கும் என்பதால் அப்படிப் பேசக்கூடாது என்று மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அதே நேரத்திலே நான் துணைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த மன்றத்திலே இரண்டு தினங்களுக்கு முன்பாக மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் பேசும்பொழுது மதுரையிலே காங்கிரஸ் கட்சித் தலைவராக இருக்கும் மாறன் அவர்கள் கவர்னர் அவர்களைச் சந்தித்துப் பேசியதாகவும், சில குற்றச்சாட்டுக்களைச் சொன்னதாகவும், அதற்கு கவர்னர் அவர்கள் அதை நிரூபிக்க முடியுமா என்று

1972 ஆகஸ்ட் 11] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

கேட்டதாகவும் சில தகவல்களை முதலமைச்சர் அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்னால் இந்த மன்றத்திலே கொடுத்தார்கள். அந்த வார்த்தைகளைச் சட்ட மன்றக் குறிப்புகளிலிருந்து தலைவர் அவர்கள் நீக்கிவிடவில்லை. தவருகவோ, சரியாகவோ அது டீவியேஷன் ஆகிவிட்டது. ஆகவே அந்த வாய்ப்பு முதலமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதைப் போல் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் அந்த வாய்ப்பைக் கொடுக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே வாய்ப்புக் கொடுத்துவிட்டு இன்னொரு உறுப்பினருக்கு அதே வாய்ப்பைக் கொடுக்காமல் விட்டுவிட்டால் அங்கே ஒரு நிலைமையும் இன்னொரு உறுப்பினருக்கு ஒரு நிலைமையும் கொடுப்பது என்ற நிலை ஏற்பட்டால் வேறு நிலைமையில் கொண்டு போய்விடும். நேரு கான்பிடன்ஸ் மோஷன் கொடுத்தாலே அதன்மேல் விவாதம் கொஞ்சம் காரசாரமாகத்தான் இருக்கும்.

THIRU K. T. K. THANGAMANI: Sir, with your permission I would like to read Rule 67. It says—

'. . .

'(iv) reflect upon the conduct of the President or Governor or any Court of Justice;

(v) use the Governor's or President's name for the purpose of influencing a debate; . . .'

Sir, using the name of the Governor for the purpose of influencing the debate and bringing in a fact where the Governor is concerned, are two different things. That is why even yesterday I mentioned the constitutional position clearly stated by the Chief Minister of Kerala. Anybody is free to meet the Governor and give a memorandum but he cannot take action on it. The policy has to be decided by the Government and implemented by the Government. So, we, as Members, are at perfect liberty to bring to the notice of this House and through you to the Government that the Memorandum has been given. If the hon. Member wants to read the contents of the Memorandum, he can hand over a copy of it to the Hon. Speaker and if he permits he can read out the contents of the memorandum.

THIRU R. PONNAPPA NADAR: So far as this point is concerned, the learned Member has just referred to certain facts mentioned in the Memorandum. Certain facts mentioned in the Memorandum will not in any way influence the debate, as also the dragging in the name of the Governor.

[R. Ponnappa Nadar] [1972 ஆகஸ்ட் 11

So far as the contents of the Memorandum are concerned, the hon. Member has mentioned certain points and that does not mean that he is not in a legal position to use that on the floor of the House. Certain observations have been made in this House and that is the reason which has impelled him to clarify that point. That is how this came in and so there is no impropriety or infringement of the rule as stated by the Hon. Minister for Co-operation. Therefore, there is no point of order.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: So far as this rule is concerned, the name of the Governor should not be brought in to influence the debate. But here everybody knows that the Governor was receiving petitions from the public and it was published in the newspapers and the hon. Member is only narrating the fact and his conversation with the Governor. . .

MR. DEPUTY SPEAKER: It depends upon the mode and manner. . .

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இங்கே எழுப்பப் பட்ட ஒழுங்குப் பிரச்னைகள், நேற்றைய தினம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்ன காரணத்தால், அந்த முறை அப்படியே தொடரவேண்டும் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். எத்தனையோ பிரச்சனைகளில் சில நேரங்களிலே உண்மை உடனடியாகத் தெளிவாவதில்லை. எந்த நிமிடத்திலே உண்மை தெளிவாகிறதோ அந்த நிமிடத்திலிருந்து தருந்த முறையைக் கையாள்வதுதான் வழக்கம். பாயிண்ட்ஸ் ஆப் ஆர்டர் எழுப்பப்பட்டால் அவற்றிலே எந்த நிமிடத்திலே தெளிவான முறை ஏற்பட்டுவிடுகிறதோ அந்த நிமிடத்தில் இருந்து அந்த முறையைக் கடைப்பிடிப்பதுதான் சட்ட மன்ற உறுப்பினர்களின் கடமையும் உரிமையும் ஆகும். இது ஒன்று. இரண்டாவதாக, ஆளுநர் அவர்களுடைய பெயரைக் குறிப்பிட்டுச் சொல்வது தவறு என்று சொல்லவில்லை. உறுப்பினர்கள் தங்களுடைய வாதத்திற்கு கவர்னர் அவர்களைத் துணைக்கு வைத்துக்கொள்ளக் கூடிய வகையில் பேசக்கூடாது என்பதுதான் சொல்லப்பட்டது. மேதகு ஆளுநர் அவர்களிடம் மகஜரைக் கொடுத்துவிட்டதாகச் சொல்லிவிட்டு பிறகு உங்களுடைய கருத்துக்களைச் சொல்லலாம். அப்படியில்லாமல் ஆளுநர் அவர்களுடன் நடத்திய வாதத்தை உறுப்பினர்கள் தங்களுடைய விவாதத்திற்குத் துணையாக வைத்துக்கொள்வது முறையல்ல என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆளுநரிடம் கொடுத்ததைப் பற்றி இங்கே குறிப்பிடலாம். ஆனால் ஆளுநர் அவர்களுடன் பேசிய கருத்தை

கூடி எடுத்துச் சொல்வது கவர்னர் அவர்களே இங்கே இழுப்பதாகத்தான் போய் முடியும். ஏற்கனவே பேசிய நேரத்திலே கருத்தைத் தெளிவில்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் தெளிவான பிறகு தெளிவான முறையைக் கடைப்பிடிப்பதுதான் மரபாகும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: உங்களுக்குச் சாதகமாக இருக்கிற நேரத்திலே கருத்தைத் தெளிவு ஏற்படுவதில்லை. ஆனால் . . . . .

MR. DEPUTY SPEAKER: Yesterday the hon. Member could have raised the point of order. . .

DR. H. V. HANDE: Yesterday the point of order was raised அப்பொழுது குறிப்புகளிலிருந்து எடுக்காமல் இருப்பது. ஆனால் இப்பொழுது அப்படிப் பேசக்கூடாது என்று சொல்வது. நடந்தது நடக்கட்டும். இனிமேல் நான் ஒத்துழைப்புத் தருகிறேன். இனிமேல் சரியாக நடந்து கொள்ளலாம்.

Let us not be very sensitive about it.

மாண்புமிகு போலவைத் தலைவர்: ஆளுநர் அவர்களிடம் கொடுத்ததைச் சொல்லலாம். ஆனால் ஆளுநர் குறிப்பிட்டதாகச் சொல்லி அவற்றையெல்லாம் இங்கே கூறுவது சரியல்ல.

திரு. நா. சீராசாமி: ஆன் ஏ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், நடந்தது நடக்கட்டும், இனிமேல் சரியாக நடத்துகொள்வோம் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். எதிர்க்கட்சிகள் எல்லாம் கவர்னரை இங்கு இழுத்துச் சொல்ல வேண்டிய கருத்துக்களையெல்லாம் சொல்லியாகிவிட்டது. இந்த நிலையில் ஆளுங்கட்சி உறுப்பினர்கள், கவர்னர் பேச்சை வைத்துக் கொண்டு இங்கு பேசக்கூடாது என்ற கட்டுப்பாட்டைப் போடுகிறார்கள். அதற்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஒழுங்குப் பிரச்சனைகளிலே கருத்துத் தெளிவு ஏற்பட்டதற்குப் பிறகு தெளிவான முறையைத்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பின்பற்ற வேண்டும். அது அனைவரையும் கட்டுப்படுத்தும்.

THE HON. THIRU SI. PA. ADITANAR: Sir, I will explain my point of order. I have stated that the Governor's name must not be used for the purpose of influencing the debate. The learned Lady Member has stated that the Governor's name was not used

for influencing the debates. If it was not used for the purpose of influencing the debate one way or the other, even then it is not advisable because it is stated in another rule that every speech must be directly related to the matter before the House and so in that case also it becomes irrelevant and it is out of order.

DR. H. V. HANDE: What happened to it yesterday ?

மினிஸ்டருக்கு நேற்று என்ன ஆயிற்று ?

(திருமதி அனந்தநாயகி அவர்கள் எழுந்தார்கள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள். விதிமுறைகள் ஒரு புறம் இருக்கின்றன. நாம் அப்படியே அவற்றைக் கடைபிடிக்கிறோம் என்று எப்படிச் சொல்ல முடியும்? ஆனால் விதிமுறைகளுக்கு மூன்றை நாம் நடக்கமல் பார்த்துக் கொள்ள வேண்டும். முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்குப் பிறகு நம்முடைய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போன்று அப்பொழுது யாராவது அதைப்பற்றி எழுப்பியிருந்தால் சரியாக இருந்திருக்கலாம். அதைத்தான் நான் ஹாண்டே அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டரை எழுப்பியிருக்கிறார்கள். கூடியவரையில் ஆளுநர் அவர்களே இந்தச் சபையிலே இழுக்காமல் இருப்பதுதான் நல்லது. அப்படியில்லாமல் ஆளுநர் அவர்களோடு பேசியதை எல்லாம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் வாதத்திற்குத் துணையாக ஏற்படுத்திப் பேசுவார்களானால், ஆளுங்கட்சி உறுப்பினர்கள் நம்மைவிட சுபீரியர் அதாரிடியிடம் அவர்கள் போகிறார்கள், அதைப் பற்றிச் சொல்கிறார்கள் என்பதால், தாங்களும் தங்களுடைய வாதங்களைச் சொல்லக் கூடிய நிலை வரும். ஆகவேதான் கூடிய வரையில் கவர்னரை விவாதத்திற்கு இழுக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒ. என். கந்தசாமி : நேற்று அவர்கள் அதைக் குறிப்பிட்டுச் சொல்லிய காரணத்தினாலேதான் நான் குறிப்பிடவேண்டியதாயிற்று. கவர்னருடைய பெயரை நான் டெனிக்ரேட் பண்ணவோ அல்லது எதிர்த்துப் பேசவோ பயன்படுத்தவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழகத்தில் தொழில் அமைதி மிகவும் சீர்கெட்ட நிலையில் இருக்கிறது. ஜூன் மாதம் 22-ஆம் தேதி முதல்வரவர்கள் நிருபர்கள் கூட்டத்தில், தமிழ்நாட்டில் தொழில் அமைதி மிகவும் கெட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். ஜூன் மாதம் 26-ஆம் தேதி அன்று சேம்பர் ஆஃப் காமர்சில்

1972 ஆகஸ்ட் 11] [திரு. ஓ. என். சுந்தரம்]

பேசும்பொழுது, 62-வது ஆண்டு விழாவில் பேசும்பொழுது அங்கே, தமிழகத்தில் இன்னும் நடைபெறும் சம்பவங்கள் ஒன்றிரண்டு சம்பவங்களைத் தவிர தொழில் அமைதியாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி முன்னுக்குப் பின் முரணாகப் பேசும்பொழுது நாங்கள் எதை சரி என்று நினைப்பது, நாங்கள் எந்தக் கண்ணோட்டத்தில் பார்ப்பது என்று தெரியவில்லை.

கடைசியாக இந்தத் திராவிட முன்னேற்றக் கழகத்தவர் செய்த பலாத்காரச் செயல்களைப் பார்க்கும்பொழுது, என்னுடைய தொகுதியிலே நடந்த சம்பவங்களைப் பார்க்கும்பொழுது, எதையும் தாங்கும் இதயம் படைத்தவர்கள் எதையும் தாக்கும் இருதயத்தை எப்படி அடைந்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இப்படி வன்முறையைக் கையாளுகின்ற இந்தச் சர்க்காரின் மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தை நான் ஆதரித்து என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆலடி அருணா: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் விழுமிய தலைமையில் இருக்கும் இந்த அமைச்சரவைக்கு எதிராக எதிர்க்கட்சிகளால் கொடுக்கப்பட்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து என்னுடைய கருத்துக்களை இந்த மேலான அவையின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு ஆசைப்படுகிறேன்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிந்திருப்பவர்கள் எதற்காக இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம், என் கொண்டு வந்திருக்கிறோம், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் முன்மொழிவதால் மக்கள் மத்தியிலே எதை எதிர்பார்க்கிறார்கள் என்பதை ஏற்கனவே விளக்கியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த அளவில், அவர்கள் திட்டமிட்ட அளவிற்கு அல்லது அவர்கள் ஆசைப்படும் அளவிற்கு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் மக்கள் மத்தியிலேயோ அல்லது பத்திரிகைகளின் மத்தியிலேயோ அவர்கள் பரபரப்பை உண்டாக்க முடிந்ததா என்றால் நிச்சயமாக இல்லை என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கூர்மையுந்த கத்திகளை இந்த மாமன்றத்திலே உபயோகிக்கிறார்கள். முதல்வரவர்கள் ஒவ்வொரு கட்டத்திலும் எடுத்துக் கூறுகின்ற ஆதாரங்களைச் சந்திக்க முடியாமல் இன்றையதினம் மக்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எவ்வளவு நகைப்பிற்குரிய பொருளாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இனி பேசுகின்றவர்களாவது எதிர்காலத்தில் நம்புவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

இன்றைக்கு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பவர்கள் 1971-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் இந்தத் தமிழக மக்களைச் சந்தித்த நேரத்தில் எதைச் சொல்லி வாக்குகளைக் கேட்டார்கள்? எந்த

[திரு. ஆலடி அருணா] [1972 ஆகஸ்ட் 11

நியாயத்தை மையமாகச் சொல்லி வாக்குகளைக் கேட்டார்கள்? திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கும், திராவிட முன்னேற்றக் கழக அரசை நடத்திச் செல்லும் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் தோழமையோடு இருப்போம், தாய தொண்டாற்றுவோம், அவர்களுக்குப் பக்க துணையாக இருப்போம், அவர்களது படை வரிசையாக விளங்குவோம் என்றுதான் வாக்குகளைக் கேட்டார்கள். ஆனால் அப்படி வாக்கு பெற்ற கணிசமான பகுதியினர் மக்களுக்கு நம்பிக்கையை உண்டாக்கிவிட்டு பிறகு துரோக சிந்தனையோடு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் வைத்திருக்கின்றார்கள். எனவே, நாம் மக்களுக்குத் துரோகம் இழைத்தால் மக்கள் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்பதைப்பற்றி அவர்களே தெளிவான முடிவுக்கு வரமுடியாமல் சஞ்சலப் பட்டு வருவதற்காக நான் அனுதாபப்படுகிறேன்.

இந்த அரசு, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவரக்கூடிய அளவில் என்ன கொடுமையைப் புரிந்து விட்டது, எந்தத் தவறைப் புரிந்து விட்டது, எந்தவிதத்தில் சோஷலிசத்திற்கு எதிராகச் சென்றது, எந்த வகையில் சட்டம் அமைதியைப் பாதுகாக்கத் தவறிவிட்டது என்பதைத் தீர்மானத்தை முன்மொழிந்த தலைவர்கள் தெளிவாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசாங்கத்தினுடைய பெருமையையும், இந்த அரசாங்கத்தினுடைய ஆக்கபூர்வமான வேலைகளையும், இந்த அரசாங்கம் சோஷலிச சமுதாயத்தை உருவாக்குவதற்காக எவ்வளவு தீவிரமாகச் செயல்படுகிறது என்பதை உண்மையிலேயே உணர்ந்துகொள்ள வேண்டுமானால், இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள பல்வேறு மாநிலங்களும் எந்தச் சூழ்நிலையில் இருக்கின்றன என்பதைப் பரிசீலித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

ஜூன் மாதத்தில் பள்ளிகள், கல்லூரிகள் திறக்கப்பட வேண்டும். ஆனால் ஜூன் மாதம் முடிந்து 2 அல்லது 2½ மாதங்கள் ஆகியும் இன்னும் கேரளாவில் பள்ளிகள் திறக்கப்படவில்லை. ஆனால் அதைப்பற்றி அந்த அரசாங்கத்திற்கு ஆதரவானவர்கள் அல்லது அந்த அரசாங்கத்திற்கு ஆதரவாகக் கொடியைத் தூக்குகின்றவர்கள் ஞாபகப்படுத்திப் பார்த்தார்களா? கேரளாவில் இருக்கும் விபரீதமான, விரும்பத்தகாத சூழ்நிலை இந்த மாநிலத்தில் இருக்கின்றதா? பீஹாரிலும், மேற்கு வங்காளத்திலும் இருக்கின்ற அளவிற்கு பஞ்சம் தலைவிரித்தாடுகின்றதா இந்த மாநிலத்தில்? 70-க்கு மேற்பட்டவர்கள் பஞ்சத்தால் இறந்திருக்கிறார்கள், எழுமையால் இறந்திருக்கிறார்கள். அந்த அளவிற்கு வறுமை இந்த மாநிலத்தில் இருக்கிறதா? இந்த அரசாங்கத்தால் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை, உடமையைக் காப்பாற்ற முடியவில்லை என்ற சூழ்நிலை வங்கத்தைப் போன்று இந்த மாநிலத்தில் இருக்கிறதா? அப்படி இருந்து

1972 ஆகஸ்ட் 11] [திரு. ஆலடி அருணா]

அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருந்தால் அதிலே ஓளவிற்குப் பொருத்தம் இருந்திருக்கக்கூடும். அப்படிப்பட்ட சூழ்நிலை இல்லை.

பக்கத்திலுள்ள மகாராட்டிரத்திலே மூன்று மாதங்களுக்கு முன்பு அரிசனப் பெண்கள் நிர்வாணமாக வீதியிலே நடத்தப்பட்டார்கள், பகிரங்கமாகக் கற்பழிக்கப்பட்டார்கள். இரண்டு மாதங்களுக்கு முன்பு மகாராட்டிரத்திலே பெரிய அமளி துமளி ஏற்பட்டதே அந்த மாதிரியான நிலைமை இங்கே ஏற்பட்டதா? வங்கத்தில் இருக்கும் சூழ்நிலை, பிஹாரிலே இருக்கின்ற சூழ்நிலை மகாராட்டிரத்திலே இருக்கின்ற சூழ்நிலை, கேரளாவிலே இருக்கின்ற சூழ்நிலை போன்ற இப்படிப் பட்ட சூழ்நிலைகள் எதுவும் இந்த மாநிலத்தில் இல்லை. மக்கள் நிம்மதியாக இருக்கிறார்கள். நம்பிக்கையோடு இருக்கிறார்கள். நம் அரசைப் பெற்றுவிட்டோம், நல்ல அரசைப் பெற்று விட்டோம் என்ற நம்பிக்கையில் இருக்கிறார்கள். அப்படி நம்பிக்கையோடு இருக்கும் நேரத்தில், தங்களுக்கு எதிர்காலம் இல்லை என்ற முடிவிற்கு வந்தவர்கள், 67-தான் போய்விட்டது, 71-வது பலிக்காதா என்று பார்த்தார்கள். 71-ம் போய்விட்டது இனி என்றைக்கும் நாம் தலை தூக்கும் காலம் கிடைக்காது என்று எண்ணி செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு பிணங்களால் பாதை அமைக்க ஆசைப்படுகிறார்கள். இதுதான் அவர்கள் முடிவு. எதிர்காலம் இருண்டுபோட்டதே என்று எண்ணி இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

அவர்கள் இந்த அரசாங்கத்தைப்பற்றி மக்கள் மன்றத்திலே என்ன சொல்கிறார்கள்? இந்த அரசாங்கம் விவசாயிகளுக்கு எதையும் செய்யவில்லை, உழவர் பெருங்குடி மக்களுக்கு எதையும் செய்யவில்லை என்று உண்மைக்கு மாறுக, மனச்சாட்சியைக் கொன்று இந்த மக்கள் மன்றத்திலே சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன், இந்தத் திராவிட முன்னேற்றக் கழகம் இந்த அரசாங்கத்தின் பொறுப்பையேற்பிறகுதான் நஞ்சைக்கும், புஞ்சைக்கும் அடிப்படைத் தீர்வை ரத்து செய்யப்பட்டது. அதன் மூலம் 3 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு வருவாய் இழப்பீடு ஏற்பட்டது. இது விவசாயிகளுக்குச் செய்த நன்மை இல்லையா? 20 ஆண்டுக்காலத்தில் சுமார் 2½ லட்சம் பம்பு செட்டுகள்தான் அமைக்கப்பட்டன, ஆனால் இந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 5 ஆண்டுக்காலத்தில் 3 லட்சம் பம்பு செட்டுகள் அமைக்கப்பட்டன. இது விவசாயிகளுக்குச் செய்த நன்மை இல்லையா? காங்கிரஸ் ஆட்சியில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 5 கோடி ரூபாய்தான் ஏழை விவசாயிகளுக்கு நீண்டகாலக் கடனைக் கொடுக்கப்பட்டது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சுமார் 25 கோடி ரூபாய் வரையில் நீண்டகாலக் கடனைக் கொடுக்கப்பட்டது. இது ஏழை விவசாயிகளுக்கு இந்த அரசாங்கம் எடுத்த முயற்சியைக் காட்டவில்லையா? இதை எண்ணிப் பாருங்கள். அதே

[திரு. ஆலடி அருணா] [1972 ஆகஸ்ட் 11

அடிப்படையிலே மிட்டா மிராசுகளின் கொட்டத்தை அடக்குவதற்காக 1960-ஆம் ஆண்டில் காங்கிரஸ் அரசு கொண்டு வந்திருந்த சட்டத்திலுள்ள ஓட்டை உடைசல்களை அடைத்து நல்ல நிலச்சீர்திருத்தச் சட்டத்தை உண்டாக்கி நிலச்சீர்திருத்தத்திற்குப் புதிய அமைப்பை, திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறதே, இது ஏழை விவசாயிகளுக்கு இந்த அரசாங்கம் எடுத்துக் கொண்ட முயற்சி இல்லையா? இதை எண்ணிப் பாருங்கள். தஞ்சையிலே விவசாயக் கூலியை நிர்ணயிக்க முடியாமல் கடந்த காலத்தில் தத்தளித்துக் கொண்டிருந்த நேரத்தில் கணபதியா பிள்ளை குழுவை அமைத்து தஞ்சையிலுள்ள விவசாயிகளுக்குக் கூலி நிர்ணயம் செய்ததே அது ஏழை விவசாயிகளுக்கு இந்த அரசாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சியில்லையா?

1947-ஆம் ஆண்டிலிருந்து 1967-ஆம் ஆண்டு வரையில் 20 ஆண்டுக்காலத்தில் காங்கிரஸ் நண்பர்கள் சுமார் 2 லட்சத்து 88 ஆயிரம் ஏக்கர் நிலத்தைத்தான் ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்தார்கள். ஆனால் இந்த அரசாங்கம் 5 ஆண்டுக் காலத்தில் 5,29,425 ஏக்கர் நிலத்தை ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கிறது. இது இந்த அரசாங்கம் விவசாயிகளின் மீது அக்கறை கொண்டிருக்கிறது என்பதற்கு ஆதாரம் இல்லையா என்பதை எண்ணிப்பாருங்கள். இந்த உண்மைகளையெல்லாம் மக்கள் மறந்துவிடுவார்களா, அந்த விவசாய மக்களுக்குத் தெரியாதா என்பதை கம்யூனிஸ்ட் நண்பர்களே, சிந்தித்துப் பாருங்கள்.

இந்த விவசாயப் போராட்டம் எப்படி ஏற்பட்டது? ஆரம்பத்தில் மின் கட்டணத்திற்கு மட்டும்தான் ஏற்பட்டது. அந்தப் பிரச்னையைக் கோவையிலே இருக்கின்ற மிட்டா மிராசுகளும் அல்லது சில அரசியல் கட்சிகளும் செய்த நேரத்தில்—நான் உண்மையை ஒத்துக்கொண்டு பேசுகிறேன்—பலாத்காரம் தலைகாட்டவில்லை, ஆரம்ப கட்டத்தில் ஆவேசம் இல்லை. ஆனால் இந்தப் போராட்டத்தில் எப்படி பலாத்காரம் வந்தது? எப்படி 12 அம்சத் திட்டம் வந்தது? மே மாதத்திற்கு முன் இந்தத் திட்டம் இருந்ததா? மின் கட்டணத்திற்காக இருந்த இந்தப் போராட்டத்தில் எப்படி 12 அம்சத் திட்டம் நுழைந்தது? எண்ணிப் பாருங்கள். இன்றைக்கு விவசாயிகள் சங்கத்தில் கம்யூனிஸ்ட் நண்பர்கள் உள்ளே நுழைந்ததால் இந்தத் திருப்பம் ஏற்பட்டது. வித்தியாசம் புரிகிறதா?

திரு. கே. டி. கே. தங்கமணி: 12 அம்சத் திட்டம் கம்யூனிஸ்ட்டுகள் நுழைந்ததால் வந்தது என்று உறுப்பினர் அவர்கள் சொல்வதற்கு நான் சொம்பவும் நன்றியுடையவனாக இருக்கிறேன்.

[1972 ஆகஸ்ட் 11

திரு. ஆலடி அருணா: மிட்டா மிராசுதார்களிடமிருந்து போராட்டத்தை கம்யூனிஸ்ட்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி இந்தத் திட்டத்தை வைத்தார்கள். எனவே அவர்களுக்குள் கருத்து வேறுபாடு இருந்தாலும் கருத்து மோதல் எவ்வளவு இருந்தாலும் அந்த 12 அம்சத் திட்டப்படி செயல் பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் ஜூலை 5-ம் தேதி அந்தப் போராட்டத்தை நடத்தியவர்கள் நியாய அடிப்படையில் நடந்தார்களா, ஜன நாயக அடிப்படையில் நடந்தார்களா, சர்க்காரின் சட்டதிட்ட விதிகளின்படி அதற்கு மிரட்டி அதன் அடிப்படையில் நடந்து கொண்டார்களா? ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள், முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கக் கூடாதா, இனி நாங்கள் சரியாகச் செய்கிறோம், இனி திருத்திக் கொள்கிறோம் என்று சொல்லக்கூடாதா என்று.

வாதத்திற்காகக் கேட்கிறேன், மதிப்பிற்குரிய தங்கமணி அவர்கள் பேசி விட்டார்கள், மதிப்பிற்குரிய டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசிவிட்டார்கள். மற்ற நண்பர்கள் எல்லாம் பேசி விட்டார்கள். யாராவது ஒரு நபர், போராட் டத்தில் கலந்துகொண்டவர்கள் இந்த ஊரில் தப்பாக நடக்கவில்லே. இந்த ஊரில்தான் தப்பாக நடந்தது, இந்த ஊரில் அதிகாரிகள் அடிப்பட்டார்கள், அந்த ஊரில் இல்லே என்று சொன்னார்களா ஒரு கட்டத்திலாவது? இந்தப் போராட்டம் எந்தெந்த ஊர்களில் வெடித்துக் கிளம்பியிருக்கிறது, எங்கெங்கு அமைதி இருக்கிறது என்பதைப் பாருங்கள். நெல்லே மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் தென்காசி தாலுகாவில் போராட்டம் இல்லே. என் தொகுதியில் சுமார் 2,000 கடைகள் உள்ளன. அதில் ஒரு கடை கூட மூடப்படவில்லே. காங்கிரஸ் நண்பர்கள் கூட திறந்து வைத்திருந்தார்கள். நான் அவர்களேப் பாராட்டுகிறேன். போராட்டத்தின் பித்தலாட்டத் தன்மையை அவர்கள் தெளிவாகப் புரிந்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என் தொகுதியைப் பொறுத்தமட்டில்.

ஆனால் கோவில்பட்டி, சங்கரன்கோவில், ராஜபாளையம் போன்ற இடங்களில் என்ன நடந்திருக்கிறது? திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள், கோவையில் நடந்ததைப்போல் மின் பிரச்சினே அல்ல அவ்விடங்களில், அங்கு பருத்திக்கு விலே இல்லே. உண்மை, ஒத்துக்கொள்கிறோம். பருத்திக்கு விலே இல்லே என்றால் அதற்கும் இந்த அரசுக்கும் எப்படிப் பொருந்தும்? எந்த அளவிற்குப் பொருந்தும்? இந்த சர்க்கார் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்லுங்கள். பருத்திக்கு விலே இல்லே என்றால் இந்தச் சர்க்கார்தான் அதற்குக் காரணம் என்று சொல்ல முடியுமா? பருத்திக்கு விலே வேண்டும், நியாயம், ஒப்புக்கொள்கிறோம். ஆனால் சங்கரன்கோவில் விவசாயிக்கு பருத் திக்கு விலே இல்லே, அவன் சங்கநாதம் புரிகிறான். கோவில்பட்டியில் விவசாயிக்கு

[திரு. ஆலடி அருணை] [1972 ஆகஸ்ட் 11

பருத்திக்கு விலை இல்லை, அவன் கொஞ்சம் எழுகிறான். ஆனால் திருநெல்வேலியில் உள்ள விவசாயி அமைதியாக இருக்கிறான், காரணம் என்ன? மதுரை மாவட்டத்தில் பருத்தி பயிரிடப்படவில்லையா? மதுரை மாவட்டத்தில் ஜீலை5-ம் தேதி அமைதியாக இருந்ததற்குக் காரணம் என்ன? கம்யூனிஸ்ட் கொடி எங்கெல்லாம் பறக்கிறதோ அங்கெல்லாம் பலாத்காரம் தலை விரித்தாடியிருக்கிறது என்பதைத் தவிர வேறு என்ன காரணம் கூற முடியும்? (ஆரவாரம்) கேட்டால் நாங்கள் பலாத்காரவாதிகளா என்பார்கள். அவர்களது தத்துவத்திற்கு பச்சைத் துரோகம் செய்வார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அது அவர்களது தத்துவம். பலாத்காரம் என்பது அவர்கள் பெற்றெடுத்த குழந்தை. அது அவர்களது சித்தாந்தம். ஆனால் அவர்கள் ஜனநாயகத்தின் கண்ணில் மண்ணைத் தூவி விட்டு எப்படியாவது சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு ஆட்சியைக் கைபிடிக்க வேண்டும் என்பதுதான் அவர்களது திட்டம். இவர்கள் பலாத்கார வாதிகளாக இல்லாவிடில் விவசாயிகளின் போராட்ட கால துவக்கத்தில் பலாத்காரம் ஏற்பட்டிருக்க வேண்டுமே. ஆனால் அப்படி ஏற்பட வில்லை. இவ்வளவு விபரீத சம்பவங்களும், இத்துணை வேதனைச் சம்பவங்களுக்கும் வலதுசாரி கம்யூனிஸ்ட்கள்தான் பொறுப்பு என்பதை இந்த மன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு: கம்யூனிஸ்ட்கள் பலாத்கார்வாதிகள் என்று சொன்னார்கள். 1967-க்கு முன்னால் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கம்யூனிஸ்ட்கள் தலைமை தாங்கி நடத்தினார்களா அல்லது வேறு யாராவது தலைமை தாங்கி நடத்தினார்களா?

திரு. ஆலடி அருணை: இந்தப் போராட்டத்தில் இவ்வளவு வேகம் காட்டுகிறவர்கள், இவ்வளவு விறுவிறுப்பு காட்டுகிறவர்கள், விவசாயப் பிரச்னை விபரீதமாக மாறியிருக்கிற வேறு மாநிலங்களில் அங்கெல்லாம் இந்தக் கட்சிக்காரர்கள் இருக்கிறார்களே, அவர்கள் எல்லாம் இந்த மாநிலத்தில் நிராவிட முன்னேற்றக் கழகம் இருப்பது போல் அந்தந்த மாநிலங்களில் மட்டும் இருப்பவர்கள் அல்லது குரல் கொடுக்காதவர்கள், அங்கு கம்பிரமாக ஒலிக்காதவர்கள் இங்கு மட்டும் அப்படிக் கம்பிரமாக ஒலிக்கக் காரணமென்ன? அப்படி ஒலிப்பதற்கான தைரியம் கம்யூனிஸ்ட்களுக்கு எப்படி வந்தது? எந்த நிலையில் வந்தது? ஆரம்பத்தில் அந்த ஆத்திரம் வராமல் இப்போது மட்டும் என் வேகம் ஏற்பட்டிருக்கிறது? அதுதான் இந்திரா காங்கிரசுக்கு ஏற்பட்டிருக்கிற திருப்பம். அதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி, இந்திரா காங்கிரசைக் கருவியாகப் பயன்படுத்திக்கொண்டு மேலே வளரலாமா என்று திட்டம் இட்டுச் செய்கிறார்கள். இதை இந்திரா காங்கிரஸ் காரர்கள், அவர்கள் புத்திசாலித்தனமுள்ளவர்கள் என்றால் . . . .

1972 ஆகஸ்ட் 11] [திரு. ஆலடி அருணா]

திருமதி த. ந. அனந்தநாயகி: நீங்கள் பேசுவதைப் பார்த்தால் இந்திராக் காங்கிரசை கம்யூனிஸ்ட்கள் ஏமாற்றிவிடுவார்கள் என்ற முறையில் இருக்கிறது. நீங்கள் அவர்களோடு சேர்ந்திருந்தபோது உங்களையே ஏமாற்றமுடியவில்லை என்றால் எங்களை ஏமாற்றிவிடுவார்களா?

திரு. ஆலடி அருணா: திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கம்யூனிஸ்ட்களால் ஏமாற்ற முடியவில்லை. ஒன்றரை ஆண்டுக் காலம் இருந்து பார்த்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் அவர்களது பாதச் சுவடுகளை ஒழுங்காகக் கண்காணித்து வந்தது. இங்கிருந்துகொண்டு எதிர்காலத்தில் ஒளியை உண்டாக்க முடியாது என்ற ஏமாற்றத்தின் அடிப்படையில் இங்கிருந்து ஓடி ஏமாளிகளின் முகாமைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

போராட்ட காலத்தில் பருத்திக்கு விலை இல்லை என்றால் இன்றைக்கு நிலை என்ன? அதற்கு விலை கூடியிருக்கிறது. காரணம் இந்த அரசின் முயற்சி என்று நான் சொல்லவில்லை. ஒன்றை திரு. தங்கமணி அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். விவசாயப் பொருள்களுக்கு, சில பொருள்களுக்கு சில நேரங்களில் எதிர்பாராத வகையில் நல்ல விலை கிடைக்கிறது. சில சமயங்களில் மிளகாயின் விலை ஏறுகிறது. சில சமயங்களில் வெங்காயத்தின் விலை ஏறுகிறது, சில சமயங்களில் பருத்தி விலை ஏறுகிறது. ஆக உற்பத்தி செய்யப்படுகிற எல்லாப் பொருள்களின் விலையும் ஒரே கட்டத்தில் நாடு பூராவிலும் சீராக இருக்குமென்று சொல்லமுடியாது. இது நாம் உணர்ந்திருக்கும் உண்மை. பருத்திக்கு அதிக விலை ஏற்பட்டு, தக்காளிக்கும் அதிக விலை ஏற்பட்டு, மிளகாய்க்கும் அதிக விலை ஏற்பட்டு, கத்திரிகாய்க்கும் அதிக விலை ஏற்பட்டுவிட்டால் இதே கம்யூனிஸ்ட்கள் சென்னையில் கூட்டம் கூட்டி, "பார்த்தீர்களா பொருள்களின் விலைகள் கைக்கு பிடிக்க முடியவில்லை. பொருள்களின் விலைகள் ஏறியிருப்பதைப் பார்த்தீர்களா" என்று சொல்வார்கள்.

THIRU R. PONNAPPA NADAR: May I request the hon. Member to address the Chair.

திரு. ஆலடி அருணா: உணவுப் பொருள்களின் விலைகள் ஏறுத சமயங்களில் கிராமங்களுக்கு வந்து விவசாயப் பெருங்குடி மக்களே, நீங்கள் கடுமையாக உழைக்கிறீர்கள், ஆனாலும் உங்களுக்கு நியாய விலை கிடைக்கவில்லையே என்று நீலிக் கண்ணீர் வடிக்கிறார்கள். விலை ஏறிவிட்டால் நகர்ப்புறங்களுக்கு வந்து பண்டங்களின் விலைகள் உயர்ந்து விட்டதைப் பார்த்தீர்களா என்று சொல்கிறார்கள். இதை ஒரு அரசியல் ராஜதந்திரம் என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் இதுதான் அரசியல் கலப்படமற்ற முட்டாள்தனம் அல்லது பயித்தியக்காரத்தனம் என்று நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்). நான் தனிப்பட்ட யாரையும் முட்டாள் என்று சொல்லவில்லை. ஒரு தத்துவத்தை பற்றித்தான் குறிப்பிடுகிறேன். முட்டாள்தனமானது என்று,

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: பைத்தியக்காரத்தனம், முட்டாள்தனம் என்று சொல்வதை தாங்கள் ஒப்புக்கொண்டால் நாங்களும் ஒத்துக் கொள்கிறோம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: 'Muttalthanam' is not a parliamentary word. He must withdraw it.

THIRU V. KRISHNAMOORTHI: He is saying it is a 'mad policy'. That is all. It is quite parliamentary.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: உறுப்பினர் அவர்கள் பேசுகிற கருத்தில் மாறுபாடு இல்லை. ஆனால் இத்தகைய கடும் வார்த்தைகளைப் பயன்படுத்தாமல் இருப்பது இந்த மன்றத்திற்கு நல்லது.

திரு. ஆலடி அருணா: இந்த அரசின் மீது, ஏழைகளுக்காக இருக்கிற அரசின் மீது, பாட்டாளிகளுக்காகப் பாடுபடுகிற அரசின் மீது, தமிழைக் காப்பதற்காக இருக்கின்ற அரசின் மீது, தன்னம்பிக்கை உணர்வோடு இருக்கின்ற அரசின் மீது அரசியல் பித்தலாட்டம் என்ற முறையில் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த அரசின் தலைமை மீது இந்த மன்றம் மட்டுமல்ல, தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தத் தலைமுறையே இந்த அரசின் தலைமையைத்தான் நம்பியிருக்கிறது என்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் கலைஞர் அவர்களின் அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பது இது வெற்றிபெறும் என்ற நம்பிக்கை இல்லை என்று தெரிந்தபிறகுதான் இந்த அவையின் முன்னால் வைத்திருக்கிறார்கள்.

இங்கு பேசிய நம் மதிப்பிற்குரிய தங்கமணி அவர்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசுகிற நேரத்தில் அவர்கள் அவர்களுடைய பாணியில் பேசவில்லை. ஏதோ மதுரை மாநாட்டில் உலக உருண்டையில் முன்னேற்றக் கழகத் தலைவர்களின் படத்தை வைத்து பெருமையடித்துக் கொண்டார்கள் என்று தூர்பாக்கியவசமான பத்திரிகை பாணியில் பேச ஆரம்பித்து கடைசியில் ஆவேசமாக நடந்து முடிந்த போராட்டம் இந்த அரசுக்கு ஏற்பட்ட ஒரு கறுப்புப் புள்ளி என்று கூறியிருக்கிறார்கள். நடந்து முடிந்த போராட்டம் இந்த அரசாங்கத்திற்கு கறுப்புப் புள்ளியாக இல்லை என்பது மட்டும் அல்ல, இந்த அரசாங்கத்தை வீழ்த்திவிட வேண்டும் என்று சதித் திட்டம் போட்டவர்களுக்கு இந்த அரசு ஒரு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது என்பதை நான் தெரியப்படுத்திக் கொள்கிறேன். திரு. கே. டி. கே. தங்கமணி

[திரு. கா. காளிமுத்து] [1972 ஆகஸ்ட் 11

அவர்களுக்கு பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன், கறுப்புப் புள்ளி என்பது இந்த அரசுக்கு விழவில்லே. சமதர்மப் பாதையிலே சென்றுகொண்டிருக்கக் கூடிய இந்த அரசை வீழ்த்திவிட வேண்டும் என்று ஜமீன்தார்களுக்குப் பின்னுலே சென்ற கம்யூனிஸ்டு கட்சியின் வரலாற்றுக்கு கறுப்புப் புள்ளி விழுந்திருக்கிறது. இந்த அரசுக்கு கறுப்பு புள்ளி விழவில்லே என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே மன்ருடியார் போராட்டத்தில் கலந்துகொண்டார் என்று சொன்ன நேரத்தில் குமாரசாமி அவர்கள் மன்ருடியார் கலந்துகொண்டார் என்பது உண்மை என்று சொன்னர். அவர் உம் போடக்கூடிய அளவுக்கு மன்ருடி யாருடைய பங்கு இதில் குறைவாக இருந்ததா? போராட்டத்திற்கு பிள்ளேயார் சுழி போட்டது மன்ருடியார். போராட்டத்திற்கு மிக முக்கியமான செயல் திட்டங்கள் உருவாக்கப்பட்டது மன்ருடியார் மாளிகையில் என்பதை இந்த நாடு மறந்துவிடவில்லே. அப்போர்ப்பட்ட ஜமீந்தார்கள் தலேமை தாங்கித் தான் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள். இந்த அரசாங்கத்தின் மீது ஆத்திரம் கொண்டவர்கள், உச்சவரம்பு சட்டத்தினுல் பாதிக்கப்பட்ட ஜமீன் தார்கள்தான் போராட்டத்தை முன் நின்று நடத்தியுள்ளார்கள் என்பதை மிகத்தெளிவாக உணர்த்திவிட்டார்கள்.

இங்கே பேசிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் உருக்கமாகப் பேசினர்கள். அண்ணு அவர்கள், முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் சொன்னதை யெல்லாம் எடுத்து ஆதாரம் காட்டினர்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன், அவர்கள் மிக நன்முக உணர்வார்கள். மாஞமதுரை துப்பாக்கிச் சூடு எப்படி நடந்தது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த வாகித் கட்சி செயலாளர் கடைக்கு முன்னுல் ஆர்ப்பாட்டம் நடத்தினர்கள். இது காலேயிலே 5½ மணிக்கு நடந்தது. கடையைத் தாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு முதல் நாள் இரவு வைகை ஆற்றுக்குள்ளே கூடி இருந்து திட்டமிடப்பட்டு கடையைத் தாக்க வேண்டும் இந்த சந்தர்ப்பத்தை வைத்து, வாகித் உயிரை வாங்க வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறார்கள். முதல் நாள் இரவு முகவை மாவட்டத்தில் களத்துமேட்டில் முக்கியமான கம்யூனிஸ்டு தோழர் தங்கியிருக்கிறர். கிழப்பசலேயில் அதிகாலேயில் 5½ மணிக்கு கடையை மூடவேண்டும் என்று அரிவாள், வேல் கம்பு இவைகளே தூக்கிக் கொண்டு எதற் காகப் போனர்கள் என்பதை மதிப்பிற்குரிய கே. டி. கே. தங்கமணி அவர் களுடைய யூகத்திற்கே விட்டுவிடுகிறேன். துப்பாக்கிச் சூடு நடந்தது. அதற்கு முக்கிய காரணம் முதல் நாள் இரவு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த முக்கிய மான தோழர் நடத்திய சதிதான் என்பதை மிகவும் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். போலிஸ் அதிகாரிகள் போய் அந்த வாகித் என்ற தி.மு.க.வை

சேர்ந்தவரை விசாரணை செய்து கொண்டிருக்கிற நேரத்தில், கூட்டத்தில் ஒருவன் சொல்லுகிறான் 'உங்களுக்கெல்லாம் எத்தனை நாட்களுக்கு போலீஸ் பாதுகாப்பு கொடுக்க முடியும்? குடும்பத்தை கருவறுத்துவிடுவோம், விட மாட்டோம்' என்று சொல்லுகிறான். இப்பொழுது கூட அந்த வாகித் என்ற தோழருடைய உயிருக்கு ஆபத்து இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் மிகப் பெரிய கூட்டம் போட்டு போலீசார் மீது கல்லை எறிந்து, நிலைமை எல்லை மீறிய சமயத்தில்தான் போலீஸ்காரர்கள் தற்காப்புக்காக சுட்டார்கள்.

திரு. கே. டி. கே. அவர்கள் பேசும்பொழுது நாடு முழுவதும் பற்றி இருக்கும்பொழுது திராவிட முன்னேற்றக் கழகக்காரர்களும் ஏன் கடைகளை மூடக்கூடாது என்று கேட்டார். நடந்தது என்ன ஒரு தேசிய போராட்டமா? அது என்ன சீனர்களையோ, பாகிஸ்தானியர்களையோ எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டமா? அன்னியனை எதிர்த்து நடத்தப்பட்ட விடுதலைப் போராட்டமா? கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி நடக்கிற காலத்தில், அந்த ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நாலிந்து கட்சிகள் சேர்ந்து பற்றி நடத்தினால் கம்யூனிஸ்டு கட்சி நண்பர்கள் அதில் பங்கு கொண்டால் நீங்கள் அவர்களின் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்காமல் விடுவீர்களா? தி.மு.க. தோழர்கள் உங்கள் போராட்டத்தை முறியடிக்க வேண்டும், உங்கள் பற்றை முறியடிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு கடையை திறக்கத்தான் செய்வார்கள். அவர்கள் கடையைத் தாக்கி வன்முறையைக் கையாண்டு மூடவைப்பது என்னால், வன்முறையை வன்முறையால் சந்திப்பதற்கு தி.மு.க. தயாராக இருக்கிறது. தி.மு.க.வைப் பொறுத்த வரையில் எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் வன்முறையை நன்முறையால் தாக்க வேண்டும் என்று எழுதிக் காட்டினார்கள். தாக்கக்கூடியவர்கள் தம்பி அல்ல, தாங்கக் கூடியவர்கள்தான் என்னுடைய தம்பி என்று எழுதினார். வன்முறைக்குப் பதிலாக நாங்கள் வன்முறை செய்ய மாட்டோம். ஆனால் அதே நேரத்தில் வன்முறைக்கு தி.மு.க. நிச்சயம் பணிந்து விடாது என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கோவில்பட்டியில் கலைமணியின் கடையை மூடவேண்டும் என்று ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கலைமணி அவர்களின் கடைக்குள் நாட்டு வெடி குண்டுகள் இருந்தன என்று கூடச்சொன்னார்கள். எனக்குக்கூட ஆச்சரியமாக இருந்தது. கலைமணி அவர்களின் ஹோட்டலில் இருந்த போண்டாக்கள் ஒரு வேளை நாட்டுக் குண்டுகளைப் போல அவர்களுக்குத் தெரிந்ததோ என்னவோ என்று சந்தேகமாக இருக்கிறது.

சாத்தூரில் துப்பாக்கிச் சூடு நடந்தது. சட்டமன்ற உறுப்பினர் அழகுத் தேவர் உயிருக்கு ஆபத்து ஏற்பட்ட சூழ்நிலையில் துப்பாக்கிச் சூடு நடந்தது.

1972 ஆகஸ்ட் 11] [திரு. கா. காளிமுத்து]

காவல் துறை அதிகாரிக்கு தகவல் வந்தது. அங்கே வங்கியின் முன்னால் ஒரு பெரிய கூட்டம் சேர்ந்து வங்கிக்குள் நுழைய முயற்சி செய்தார்கள். இடையிலே போலீஸ் நிற்கிறார்கள். கண்ணீர்புகை விடுகிறார்கள். இரண்டு பக்கமாகப் பிரிந்துபோன கூட்டம் ஒன்றுசேர்ந்து இடையிலே போலீஸ்காரர்களை நெருக்குகிறார்கள். தற்காப்புக்காக போலீஸ் சுடுகிறது. சாத்தூரில் சட்டமன்ற உறுப்பினரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டது. விருதுநகர் சூலக்கரையில் மாட்டு வண்டிகளை குறுக்கே நிறுத்தியிருக்கிறார்கள். சாத்தூருக்குப் போகக் கூடாது என்று தடுக்கிறார்கள். தான் போன பிறகு வேண்டுமானால் மீண்டும் வழியை மறித்துக்கொள்ளுங்கள் என்று கலெக்டர் கெஞ்சிக் கேட்கிறார். பாதையை விடவில்லை. வேறு வழியில்லை. பின்னால் வருகிற ரேசத்தில் கல்லை விட்டு எறிந்திருக்கிறார்கள். பக்கத்தில் இருக்கிற மூக்கா நாடார் வாழைத் தோட்டத்திலிருந்து சரமாரியாக கல்மாரி பொழிந்தன. டி.ஐ.ஜி.யும், மாவட்ட கலெக்டரும் சொல்லியும் கேட்காமல் அந்தச் சூழ்நிலையில் வண்டியை எடுங்கள் என்று கலெக்டருடைய ஆணையின் பேரில் வண்டிகளை அகற்றுவதற்கு போன கான்ஸ்டேபிள்களை தாக்க முயற்சிக்கிறார்கள். இந்த நிலையில்தான் துப்பாக்கிச் சூடு நடந்தது. அண்மையிலே ஏதோ தி.மு.க. அரசு இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை தேடிப் பிடித்து அவர்களுடைய உயிருக்கு ஊலை வைக்கப்பார்க்கிறார்கள் என்ற ஒரு பிரமையை தயவு செய்து உண்டாக்காதீர்கள். வன்முறையை முடுக்கிவிட்டது யார் என்பதை தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். ஸ்ரீவில்லிப்புத்தூரில் பல இடங்களில் கட்சித் தோழர்கள் வன்முறையால் தாக்கப்பட்டிருக்கிறார்கள். எங்கள் கட்சியைச் சேர்ந்த சக்தி, துரை என்பவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். நண்பர் சுப்பு அவர்களுடைய வீடும் தாக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. நான் சுப்புவின் மிக நெருங்கிய நண்பர். அவருடைய வீடு தாக்கப்பட்டது என்றால் அவருடைய கட்சியினரை விட நான் அதிகமாக வருத்தப்படுகிறவன். எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். வன்முறை என்பது இருபக்கத்திலும் கூறு வாய்ந்தது.

திரு. க. சுப்பு : அவர்கள் சொல்லும்பொழுது தி.மு.க. வினர் தாக்கப் பட்டார்கள் என்று சொன்னார். என்னுடைய வீடு தாக்கப்பட்டதாகச் சொல்லப் படுகிறது என்று கூறினர். ஸ்ரீவில்லிப்புத்தூரில் என்னுடைய வீடு தாக்கப் பட்டது என்று சொல்கிறார்களா ? இல்லை என்று சொல்கிறார்களா ?

திரு. கா. காளிமுத்து : என்னுடைய வாதம் எல்லாம் வன்முறையை ஆரம் பித்து வைத்தவர்கள் உங்களைச் சேர்ந்தவர்கள்தான். ஸ்ரீவில்லிப்புத்தூரில் மேலத்தெருவில் ம கடையை மூடவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். நான் மூடிவிடுகிறேன் என்று கடைக்காரர் பலகையை தூக்கும்பொழுது அவருடைய தலையில் ஒரு கல்லைவிட்டு எறிகிறார்கள். அவர் கையிலிருந்த பலகையால் அவரை

[திரு. கா. காளிமுத்து] [1972 ஆகஸ்ட் 11

எதிர்த்து அடித்தார். அப்படி கலவரம் ஏற்பட்டிருக்கிறது. வேண்டுமென்றே வன்முறைச் செயல்கள் நடந்திருக்கின்றன. நான் சொல்லியதுபோல் வன்முறைக்கு இரண்டு பக்கமும் கூறு உண்டு. வினையை விதைத்தவன் வினையை அறுக்கவேண்டும். இராஜபாளையத்தில் எங்களுடைய கட்சித் தோழர் சாஞ்சி என்ற பாடகர் தாக்கப்பட்டார். மகளிர்க்கு மாற்றுத் துணி கூட இல்லாமல் துணிமணிகளையெல்லாம் தூக்கி எறிந்திருக்கிறார்கள். வன்முறை, பலாத்காரம் அந்த அளவுக்கு நடந்திருக்கிறது. அந்த அளவுக்கு வன்முறையை தூண்டிவிட்டிருக்கிறார்கள். மாட்டு வண்டிகளை குறுக்கே நிறுத்தி உள்ளே போலீஸ் நுழைய முடியாதபடி செய்திருக்கிறார்கள். விருதுநகரில் வி.வி.ஆர். கடை தாக்கப்பட்டது. 10,000 ரூபாய் அளவுக்கு சொத்து கொள்ளையடிக்கப்பட்டது. வடிவேலு நாடார், சங்கரபாண்டியன் நாடார் இவர்கள் கடைகள் தாக்கப்பட்டன. மிளகாய்க் கடைக்காரர் சுப்பிரமணியம் கடை தாக்கப்பட்டது.

மதிப்பிற்குரிய துணைத் தலைவர்களே, உங்களுடைய அனுவலகம் கூட தாக்கப்பட்டது என்ற தகவல் கூட தங்களுக்கு கிடைத்திருக்கும். வன்முறையைத் தொடங்கி வைத்தவர்கள் அந்தப் பகுதியைச் சார்ந்தவர்கள்தான். வன்முறையைத் தூண்டியவர்கள் விவசாயச் சங்கத்தைச் சார்ந்தவர்கள் அல்ல. வேறு யாரோ வன்முறையை தூண்டிவிட்டிருக்கிறார்கள் என்று சொல்லி விடுங்கள். நடந்த சம்பவம் உண்மை அல்ல என்று சொல்கிறீர்கள். அந்த அளவுக்கு வன்முறையை உருவாக்கிவிட்டு, துப்பாக்கிச் சூடு ஏற்படக்கூடிய நிலைமையை உருவாக்கிவிட்டு, தி.மு.க. வீற்கு ஒரு இக்கட்டான நிலைமையை உருவாக்கிவிட்டு, உருக்கமான பேச்சைப் பேச கருப் பொருளாக ஆக்கிக் கொள்ள வேண்டாம்.

கடந்த காலத்தில் மொழிப் போராட்டத்தின்போது பக்தவத்சலம் அவர்களுடைய அரசினால் 50 பேர் சுடப்பட்டு மாண்டபிறகும் 'அவர் கற்பாறை போல் இருந்தார்' என்று மத்திய அமைச்சர்களே பாராட்டும் அளவிற்கு எங்கள் கலைஞர் அவர்கள் நடந்துகொள்ளவில்லை. உடனே நீதி விசாரணைக்கு உத்திரவிட்டார். இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு உதவித் தொகையாக 5,000 ரூபாய் தரப்படும் என்று உடனே அறிவித்தார். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு முதன்முதலாக அனுதாபச் செய்திகளை வழங்கினார். 'எவ்வளவுபேர் பலியானாலும் பரவாயில்லை, அவற்றின்மூலம் அரசியல் ஆதாயம் தேடிக் கொள்ளலாம்' என்று எண்ணினால் அதை முறியடிப்பதற்கு இந்த அரசு தயாராயிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் வன்முறையைச் சிறிதும் பயன்படுத்தவில்லை. கழகத் தோழர்களுக்கு தலைமைப்பீடம் மிகத் தெளிவாகக் கட்டளையிட்டிருக்கிறது, 'யாரும் வன்

1972 ஆகஸ்ட் 11] [திரு. கா. காளிமுத்து]

முறையில் ஈடுபடக்கூடாது, வன்முறையைப் பயன்படுத்தி அவற்றின்மூலம் இந்த அரசுக்குக் கலங்கம் உண்டுபண்ணக்கூடாது, என்று கண்டிப்பான ஆணை பிறப்பித்திருக்கிறது. எனவே கழகத் தோழர்கள் எங்கும் வன்முறையில் ஈடுபடவில்லை. ஆனால் இதில் பாதிக்கப்பட்டவர்கள் எல்லாரும் கழகத் தோழர்கள்தான், பாதாக்கப்பட்ட பொருள்கள் கழகத்தினருக்குச் சொந்தமானவை என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆட்சியும் கட்சியும் ஒன்றாக இருக்கிறது என்று அடிக்கடி சொல்லுகிறார்கள். ஆனால் இந்தப் போராட்டத்தில் பாதிக்கப்பட்டவர்கள் கழகத் தோழர்கள். அவர்களில் மூவர் தங்கள் இன்னுயிரை இழந்திருக்கிறார்கள். சிவகங்கையில் கொல்லப்பட்ட முத்து என்ற தோழர் கழகத்தைச் சேர்ந்தவர்தான்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நேற்றுவரையில் முத்து காங்கிரஸ் கட்சியில் இருந்தாரே, என்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்தார்?

திரு. கா. காளிமுத்து: முத்து என்பவர் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் அவரைக் கொலை செய்து இருப்பது கம்யூனிஸ்டு கட்சிக்காரர்களால் அதைச் சொல்லாமல், மிகுந்த அரசியல் நாகரிகத்தோடு, 'கொலை செய்யப்பட்டிருக்கிறார்' என்றுதான் சொன்னேன். ஸ்ரீவில்லிப்புத்தூருக்கு அருகில் இராஜா என்பவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அவர் ஒரு கழகத் தோழர். ஆளும் கட்சியாக உள்ள இந்தக் காலத்தில் எங்கள் கட்சித் தோழர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மானமதுரை நிகழ்ச்சிகளை மதிப்பிற்குரிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் மனதார நினைத்துப் பார்க்க வேண்டும். அங்கே துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர் மானமதுரையைச் சேர்ந்தவர்தான். ஆனால் பக்கத்திலுள்ள கீழப் பசலியைச் சேர்ந்தவர்கள் கம்யூனிஸ்டு கட்சியினரால் தூண்டிவிடப்பட்டு இருக்கிறார்கள். இதையெல்லாம் காரணம் காட்டி 'இந்த அரசின் மீது நம்பிக்கையில்லை, இந்த ஆட்சியின் மீது நம்பிக்கை இல்லை' என்று நீங்கள் சொன்னால், இந்த நாட்டு மக்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நீதியின்பால் நம்பிக்கை உள்ளவர்கள், உண்மையில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள், நேர்மையின் பலத்தில் நம்பிக்கை உள்ளவர்கள்—இவர்களுக்கு இந்த அரசின் மீதுள்ள நம்பிக்கை என்றென்றும் குறையாது என்று கூறி முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

*திரு. சோ. அழகர்சாமி: துணைத் தலைவரவர்களே, சபையின் முன்பு உள்ள இரண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானங்களையும் ஆதரித்து சில வார்த்தைகளைச் சொல்ல முன்வருகிறேன்.

[திரு. சோ. அழகர்சாமி] [1972 ஆகஸ்ட் 11

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பங்கேற்று நிமிடங்கள்தான்.

திரு. சோ. அழகர்சாமி: இங்கே பேசிய ஆளும் கட்சியினர் பலர் இந்தக் கிளர்ச்சியின்போது அதில் சேர்ந்திருந்த கம்யூனிஸ்டு கட்சியினரால் பல வன் முறைகளும் பலாத்காரங்களும் தாண்டிவிடப்பட்டதாகச் சொன்னார்கள். எனக்குத் தெரிந்தமட்டில் கடந்த 20 ஆண்டு காலத்தில் பல கிளர்ச்சிகள் நடந் திருக்கின்றன. பலவற்றில் நானும் பங்குகொண்டிருக்கிறேன். ஆனால் இப்போது நடந்து முடிந்த கிளர்ச்சியில் விவசாயிகள் அதிகமாகப் பங்கு கொண்டதுபோல எத்தக் கிளர்ச்சியிலும் அவர்கள் பங்குகொண்டதை இதற்குமுன்பு நான் பார்த்தது இல்லை. அவ்வளவு அதிகமாகப் பங்கு கொண்டிருக்கிறார்கள் என்றால் அதற்கு என்ன காரணம்? அவர்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் என்ன? என்பதை எண்ணி அவற்றைப் போக்க என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை யோசிப்பதற்குப் பதிலாக இந்த அரசு அமைச்சர்களும், தி.மு.க. தலைவர்களும் 'இது மிராசுதாரர்களின் போராட்டம். மிட்டாதார் களுடைய போராட்டம், பட்டயக்காரர் போராட்டம்' என்று சொல்லி, விவசாயி களை மிகமிகக் கேவலமான முறையில் சொன்னது மட்டுமின்றி விவசாயி களுடைய நியாயமான கோரிக்கைகளை மிகவும் கொச்சைப்படுத்திப் பேசி னார்கள்.

இது மட்டுமில்லை, இந்தப போராட்டத்தைப் பொறுத்தமட்டில் விவசாயி களுக்குள்ளான கஷ்டங்கள் என்ன என்று சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள விவசாயிகளுடைய கஷ்டங்கள் இந்த சட்டமன்றத்தில் அடிக்கடி சொல்லப்பட்டிருக்கின்றன. முதலமைச்சர் அவர்களிடமும், வருவாய்த் துறை அமைச்சரவர்களிடமும், விவசாயத் துறை அமைச்சரவர்களிடமும் அவர்கள் கஷ்டங்கள் பற்றி அடிக்கடி சொல்லப்பட்டிருக்கின்றன. சொன்ன பிறகாவாது என்ன நடந்தது? 'ஓட்டக் கூத்தன் பாட்டிற்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்று சொல்லுவதுபோல நிலைமைகள் மோசமடைந்தன. அங்குள்ள விவசாயிகளுக்குள்ள கஷ்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல. அவர்களுக்கு விளைவு கம்மி, நீர்ப்பாசன வசதிகளும் கிடை யாது, பருவ மழை இல்லை, ஆனால் கொடுக்கப்பட்ட கடன்களை அவர்களிட மிருந்து வசூலிப்பதில் கெடுபிடி சிறிதுகூட குறையவில்லை. ஆடுமாடுகள் ஜப்தி, கையிலுள்ள விவசாயப் பொருள்கள் ஜப்தி, பம்புசெட் ஜப்தி, இவைகள் எல்லாம் நடந்தன. இவ்வளவு கொடுமைகளுக்குப் பிறகும், அரசாங்கத்தில் உள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் சொல்லுவதை நம்பத் தயாராயில்லை. அதிகாரிகள் சொல்லுவதையே நம்பிக்கொண்டு விவசாயிகளுடைய கஷ்டங்களைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருந்தால் என்ன பண்ணுவது சாத்வீக முறையில் கோரிக்கையைச் சமர்ப்பித்தார்கள். அதற்குப் பதில் இல்லை.

1972 ஆகஸ்ட் 11] [திரு. சோ. அழகர்சாமி]

பிறகு வேறு வழியின்றி விவசாயிகள் தாலுக்கா அலுவலகத்தின் முன்பு மறியலைச் செய்து ஜெயிலுக்குப் போவதற்குத் தயாராக இருந்தார்கள். அதை ஓட்டி முகலை, நெல்லை மாவட்டத்தில் மட்டும் 30 நாட்களுக்கு மேல் சிறையிலும் அடைக்கப்பட்டார்கள். 5,000-க்கும் மேற்பட்ட விவசாயிகளும் விவசாயத் தொழிலாளர்களும் சிறையில் அடைக்கப்பட்டார்கள். எல்லாக் கட்சியினரும் இருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் கூட இருந்தார்கள். தி.மு.க. பஞ்சாயத்துத் தலைவர்களும் இருந்தார்கள். நியாயமான முறையில் பிரச்சனையைச் சந்திப்பதற்குப் பயந்து இந்த அரசு, இந்தப் போராட்டத்தைத் திசை திருப்பும் முயற்சியில் இறங்கினர்கள். இது 'பத்திரிகைப் போராட்டம், பேப்பர் போராட்டம்' என்றெல்லாம் சொல்லி திசை திருப்பினர்கள். எனவே தான் இருபது உயிர்களை இழக்கக்கூடிய காரியங்கள் நடைபெற்றன. கோவையில் நடந்தது என்ன? குடுமி வைத்திருந்து தூண்டு போட்டுக்கொண்டு நகரத்திற்கு வந்தால் போதும், விவசாயிகள் என்று அவர்களையெல்லாம் போலீஸார் தாக்கி இருக்கிறார்கள். எந்தப் போராட்ட காலத்திலும் இவ்வளவு எண்ணிக்கையில் விவசாயிகள் தாக்கப்பட்டதில்லை. போராட்டத்தின்போது போலீஸார் எண்ணி யிருந்தால் முறையாக அவற்றை ஒழுங்குபடுத்தியிருக்கலாம். ஆனால் இப்போது நடந்த போராட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் போலீசை பக்கபலமாக வைத்துக்கொண்டு தாக்குதல்களை நடத்தி யிருக்கின்றார்கள். பல இடங்களிலே விவசாயிகளுடைய வண்டிகள் உடைத்து நொறுக்கப்பட்டிருக்கின்றன. மன்னார்குடியில் 39 வண்டிகளை சேதப்படுத்தியிருக் கிறார்கள். சாத்தூர் வட்டாரத்தில் இதுபோலவே சேதப்படுத்தியிருக்கிறார்கள். பெத்தநாயக்கன்பாளையத்தில் சேதப்படுத்தியிருக்கிறார்கள். இவ்வளவிற்குப் பிறகும் விவசாயிகள்தான் வன்முறையில் ஈடுபட்டார்கள் என்று சொன்னால் என்ன அர்த்தம்? எதிர் தரப்பிலுள்ளவர்களுக்கு யாருக்காவது சேதம் உண்டா? எவ்வளவு தர்ம நியாயமான போராட்டம்? காந்தியடிகள் நடத்தியதுபோல அகிம்சா முறையில் நடந்த போராட்டத்தை எப்படி எப்படியெல்லாம் அடக்க முயன்றார்கள்? எதிர்க்கட்சியினர் அதாவது இன்று ஆளும் கட்சியில் அமர்ந் திருப்பவர்கள் நடத்திய போராட்டங்கள் தெரியும் உங்களுக்கு. அந்தப் போராட்டங்களில் எவ்வளவு பலாத்காரம் நடந்தது தெரியுமா? இவ்வளவு பேரைச் சுடுக்கொன்று விட்டு, 'வன்முறைகளில் ஈடுபட்டது எதிர்க்கட்சியினர் தான், அவர்கள் முட்டாள்தனமான கொள்கைகளை வைத்துக்கொண்டு இருப்ப வர்கள்' என்று சொன்னால் அதை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். இவ்வள வுக்கும் பிறகு அரசாங்கம் என்ன சொல்லுகிறது என்று பாருங்கள். 'கோவில் பட்டி வட்டாரத்தில் நல்ல பருவமழை காரணமாக விளைச்சல் உள்ள காரணத் தினால் அங்குள்ள விவசாயிகளுடைய கடன் மற்ற பாக்கிகளைத் தள்ளி வைக்க வேண்டியதில்லை' என்று செக்டரி எழுதியிருக்கிறார்கள். 'விஜயதசமன்'

[திரு. சோ. அழகர்சாமி] [1972 ஆகஸ்ட் 11

என்பவர் கையெழுத்துப் போட்டிருக்கிறார். இப்படி விவசாயிகள் போராடித் தான் தீரவேண்டும் என்ற நிலைமைக்கு வந்த பிறகும் இராமநாதபுரம் மாவட்ட அபிவிருத்தி கௌன்ஸிலில் தீர்மானம் போடுகிறார்கள். இதற்கும் செவி சாய்க்க வில்லை. இதற்குப் பிறகுதான் இந்த விவசாயிகள் எல்லாம் மறியல் செய்து சிறைக்குப் போகவேண்டிய நிலை ஏற்பட்டது. இப்படி சிறைபுகுந்த பிறகு வெளியே உள்ளவர்கள் எல்லாம் விவசாயிகளுக்கு ஆதரவாக ஒரு நாள் கடை யடைப்பு நடத்துவது என்று தீர்மானித்தார்கள். இது எந்த போராட்டத் திலும் செய்யக்கூடிய காரியம்தான். இது நடத்தப்படக் கூடாது என்று இதற்கு எதிராக ஒரு வன்முறையை நடத்தும் முறையை இந்த ஆட்சியில்தான் பார்க்கிறோம். முன்பு நீங்கள் நடத்திய போராட்ட காலங்களிலே 'கடை திறக்கப்பட வேண்டும், கிளர்ச்சியில் ஈடுபடக்கூடாது' என்று அன்று ஆளும் கட்சியில் உள்ளவர்கள் எதிர்ப் போராட்டம் நடத்தியதாக சரித்திரம் இல்லை. இது வருந்தக்கூடிய போக்குதான். கோவில்பட்டியில் நடந்தது என்ன? கடை யடைக்கப்பட வேண்டும் என்று விவசாயிகள் கேட்டுக்கொண்டார்கள். ஆனால் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் போலீஸும் சேர்ந்துகொண்டு சைகிள் செயின் போன்றவற்றைக் கையில் வைத்துக்கொண்டு தாக்கியிருக்கிறார்கள் விவசாயிகளை. நிலைமை மீறியது என்று போலீஸார் எண்ணும் நேரத்தில் கண்ணீர் புகை, தடியடி என்று ஏதாவது இருந்ததா? எடுத்த உடனே துப்பாக்கிச் சூடுதான். ஒருவர் கொல்லப்பட்டது மட்டுமில்லை. 20 பேருக்கும் அதிகமாக துப்பாக்கி குண்டுகளால் அடிபட்டு காயமடைந்திருக்கிறார்கள். இவ்வளவு பயங்கரமான நிலைமைக்குப் பிறகும் விவசாயிகளுடைய கோரிக்கை யில் நியாயம் இருக்கிறதா என்று பரிசீலனை செய்யக்கூடத் தயாராயில்லை. அடக்குவதுதான் முறை என்று மனத்தில் எண்ணிக்கொண்டு மூர்க்கத்தனமாக அவர்களைத் தாக்கியிருக்கிறார்கள். சிறையிலே அடைக்க வேண்டும். அதற்கு

(திரு. நா. ஸ்ரீராசாமி தலைமை)

மேல் போராட்டம் நடத்துபவர்களைச் சுட்டுத்தள்ள வேண்டும். இனிமேல் விவசாயிகள் இம்மாதிரியான கோரிக்கைகளை எழுப்பக்கூடாது என்ற முறை யிலே இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதனால்தான் சொல் கிறேன், நியாயமான முறையிலே விவசாயிகள் பிரச்சனையில் இந்த அரசாங்கம் நடந்துகொள்ளவில்லை என்று. முன்னால் விவசாயிகள் கேட்பது கோரிக்கையே இல்லை என்று சொன்னார்கள். இத்தனை போர்களைச் சுட்டுத்தள்ளிய பிறகு, இவ்வளவு பொருள் நஷ்டம் ஏற்பட்ட பிறகு அவர்கள் கோரிக்கைகளை ஏற்று, அரசாங்கம் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கிறது. விவசாயிகள் மீது இப்படி நடவடிக்கை எடுத்துக்கொண்ட அரசாங்கம் பெரிய, பெரிய மனிதர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறது. நண்பர் திரு. சுப்பு அவர்கள் சொன்

1972 ஆகஸ்ட் 11] [திரு. சோ. அழகர்சாமி]

னர்கள். ஆகித்தனருக்குச் சொந்தமான பேப்பர் மில்லில் 4 லட்சம் ரூபாய் பாக்கி இருப்பதாகச் சொன்னார்கள். அதை வசூல் செய்வதில் அரசாங்கம் தயக்கம் காட்டுகிறது. ஆனால் ஏழை விவசாயிகள் கொஞ்சம் கருணை காட்டுங்கள், கஷ்டமாக இருக்கிறது என்று சொன்னால், தடியடியும், துப்பாக்கிச் சூடும் தான் மிச்சம். ஆகவே, இந்த அரசாங்கம் விவசாயிகளுக்கு மிகப்பெரிய துரோகம் செய்துவிட்டது. அதனால் இந்த அரசாங்கத்தின்மீது நம்பிக்கை இல்லை என்று சொல்கிறோம்.

அடுத்து, வ.உ.சி. கல்லூரி மாணவர்கள் ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்கான கல்லூரியை விட்டு வெளியே வந்தார்கள். அந்த நேரத்தில் சமூக விரோதிகள் உள்ளே புகுந்து அவர்களைத் தாக்கியிருக்கிறார்கள் பொருட்கள் சேதப்படுத்தியிருக்கிறார்கள். அது சம்பந்தமாக கல்லூரி பிரின்ஸிபால் கலெக்டருக்கு தெரிவித்தார்கள். டிப்டி கலெக்டர் அங்கு வந்து பிரின்ஸிபாலோடு பேசி, சமாதானம் செய்து, மன்னிப்பு கேட்டு, மழுப்பிவிட்டுச் சென்றிருக்கிறார்.

விவசாயிகளுக்காகப் பாடுபடுவது இந்த அரசாங்கம் என்று சொல்கிறவர்கள் விவசாயிகளின் கோரிக்கை என்ன என்றுகூட எண்ணிப்பார்க்க மனம் இல்லாமல் அவர்கள் கொடிய அடக்குமுறையைக் கையாண்டிருக்கிறார்கள். இந்தப் போராட்டத்திலே ஈடுபட்டுள்ள பலர் கடந்த தேர்தலிலே தி.மு.க.-வுக்கு, தி.மு.க. கூட்டணிக்கு ஓட்டளித்தவர்கள். நம்முடைய நியாயமான கோரிக்கைக்குக் கூட அரசாங்கம் செவிசாய்க்க மறுக்கிறதே என்று இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டார்கள். அப்படியும் அவர்களின் கோரிக்கையை இந்த அரசாங்கம் ஏற்காமல் அவர்களை சிறையிலே தள்ளிவிட்டார்கள்.

பொதுவாக ஒரு 'பந்த்' நடக்கிறதென்றால் எடுத்த எடுப்பிலேயே சுட்டுத் தள்ளுவதுதான் இந்த அரசாங்கத்தின் கொள்கையா? கண்ணீர் புகை கிடையாதா? தடியடிப் பிரயோகம் கிடையாதா? இவைகளுக்குப் பிறகுதானே மற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது வழக்கம். இந்தப் போராட்டத்தில் எடுத்த எடுப்பிலேயே சுட்டுத்தள்ளி, பல உயிர்களைப் போக்கிவிட்டீர்களே. இவ்வளவு மோசமாக வேறு எந்த அரசாங்கம் நடந்திருக்கிறது?

அதுமட்டுமல்ல. இன்றைக்கு தர்மபுரி மாவட்டத்தில் 55 லட்சத்திற்கு மேல் பிஞ்மி கடன் வசூலாகாமல் இருப்பதாகச் சொல்கிறார்கள். வசூலாக வேண்டிய 1¼ கோடி கடனில் 55 லட்சம் பிஞ்மி கடன். கடன் வாங்காத விவசாயிகளைப் போய் நீ கடன் வாங்கியிருக்கிறாய், கடனைத்திருப்பிக் கட்டு என்று சொன்னால் அந்த விவசாயி எங்கிருந்து கட்டுவான்? கட்ட முடியாத அந்த விவசாயியை

[திரு. சோ. அழகர்சாமி] [1972 ஆகஸ்ட் 11

கட்ட வேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்துகிறார்கள். இப்படிப்பட்ட பினாமி கடன் 55 இலட்சம் இருப்பதாக தர்மபுரி கலெக்டர் தெரிவித்திருக்கிறார். உண்மையாக கடன் வாங்கியவர்களை கண்டுபிடித்து, கடனை வசூல் செய்வதற்குப் பதிலாக ஏழை விவசாயிகளைக் கஷ்டப்படுத்துகிறார்கள். ஆக இந்த வகையிலும் இந்த அரசாங்கம் விவசாயிகளின் நம்பிக்கையை இழந்துவிட்டது என்று கூறிக்கொள்கிறேன்.

(பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதுமட்டுமல்ல, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு சரியான நியாய விலை கிடையாது. பொருளை உற்பத்தி செய்த விவசாயி விற்பனை செய்த பொருளை அவனுக்குத் தேவைப்படும்பொழுது வாங்க வேண்டுமானால் கட்டுப்படியான விலை கிடைக்கவில்லை. இரண்டு மடங்கு விலை கொடுக்க வேண்டியிருக்கிறது. விவசாயப் பொருள்களை உபயோகிப்பவர்களுக்கும் நியாய விலையில் பொருள் கிடைக்கவில்லை. அரசாங்கத்தின் கொள்கையின் காரணமாக இந்த நிலை ஏற்படுகிறது. அதை சீரமைப்பதற்கு இந்த அரசாங்கத்தினால் முடியவில்லை. தக்க நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தவறிவிட்டது.

இப்படிப்பட்ட பல நியாயமான கோரிக்கைகளுக்காகப் போராடிய விவசாயிகளை அரசாங்கம் இனி இவர்கள் இம்மாதிரியான போராட்டங்கள் நடத்தக் கூடாது என்ற முறையில் கொடும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதனால் இந்த அரசாங்கம் விவசாயிகளின் நம்பிக்கையை முழுக்க முழுக்க இழந்து விட்டது. ஆகவே இந்த அரசாங்கத்தின் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று கூறி, இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரித்து, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. வி. பழனிவேலு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, விவசாயிகள் போராட்டம் என்ற பெயராலே சில கட்சிகள் ஒன்று சேர்ந்து நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். பொதுவுடைமை பூங்கா என்று சொல்கின்ற கம்யூனிஸ்டு கட்சியும், சுதந்திரமாக இருக்க வேண்டும் என்று சொல்கின்ற சுதந்திரா கட்சியும், சோஷலிஸம் பேசுகின்றவர்களும், மன்னர் மானியம் இருக்க வேண்டுமென்று சொன்ன கட்சிக்காரர்களும் ஆக இந்த நான்கு கட்சிக்காரர்களும் சேர்ந்து விவசாயிகள் என்ற போர்வையிலே புகுந்து கொண்டு, பெத்தநாயக்கன் பாளையத்திலே உள்ள பல உயிர்களை போக்கி விட்டார்கள். பல உயிர்களை அழித்துவிட்டது மட்டுமல்லாமல் பல லட்சக் கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள பொருள் சேதத்தையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

1972 ஆகஸ்ட் 11] [திரு. வி. பழனிவேலு]

போராட்டம் நடத்தக்கூடியவர்கள் கடைகளை அடைக்கச் சொல்லலாம். ஆனால் கடைகளை அடைப்பதும் அடைக்காததும் அவர்கள் விருப்பத்தைப் பொறுத்தது. வண்டிகளை ஓட்ட வேண்டாம் என்று சொல்லலாம். ஆனால் வண்டிகளை ஓட்டுவதும், நிறுத்துவதும் அவர்கள் விருப்பம். சைக்கிளை ஓட்ட வேண்டாமென்று சொல்லலாம். ஆனால் சைக்கிளை ஓட்டுவதும், ஓட்டாமல் இருப்பதும் சைக்கிள் சொந்தக்காரனைப் பொறுத்தது. அப்படி இருக்கும்போது போராட்டக்காரர்கள் அன்று காலையிலிருந்தே பாதையெல்லாம் மதில் சுவர்களை எழுப்பினர்கள். பாதையெல்லாம் மரங்களை வெட்டிப்போட்டு, பெரிய பெரிய கற்களைப் பரப்பி மதில் சுவர்போல் எழுப்பி, போக்குவரத்தைத் தடை செய்தார்கள். அன்று அவர்கள் செய்த கொடுமை கொஞ்சநஞ்சமல்ல. அதற்குக் காரணம் இந்த பொதுவுடைமைப் பூங்காவிலே இருக்கின்ற திரு. கல்யாண சுந்தரம் தான். அவர்கள் அடிக்கடி அங்கு வந்துபோய்க்கொண்டிருந்தார்கள். அவர்கள் வந்து போன காரணத்தினால்தான் அங்கு வன்முறை ஏற்பட்டது. 5-ந் தேதி காலை 5 மணிக்கு 150 பேர்களை இரண்டு லாரிகளில் கொண்டுவந்து அங்கே இறக்கிவிட்டார்கள். அதனால்தான் அங்கு வன்முறைகள் ஏற்பட்டு, தப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. வழியெல்லாம் வெட்டிய மரங்களையும், கற்களையும் போட்டு வைத்திருந்தால் போக்குவரத்திற்கு பெருத்த இடைஞ்சல் ஏற்பட்டது. போலீஸார் வந்த கார்கள் அங்கே போகமுடியாமல் தடைப்பட்டன. அப்போது போலீஸார் மீது கற்களை வீசினர்கள். அவர்கள் வந்த ஜீப்களை கவிழ்த்துவிட்டார்கள். ஜீப்புகளுக்கு எண்ணெய் ஊற்றி தீ வைத்தார்கள். போலீஸாரை அடித்தார்கள். மிகப் பயங்கரமான முறையில் அவர்களைத் தாக்கினர்கள். அவர்களுடைய அடியையும், கல்லெறியையும் போலீஸார் தடுத்து, தடுத்து மூழங்கை முதல் மணிக்கட்டுவரை பலத்த காயம் ஏற்பட்டது. அந்தப் பகுதி மக்களைக் கேட்டாலும் இதையெல்லாம் சொல்வார்கள். "கம்யூனிஸ்டுகளின் பயங்கர செய்கையினால் எங்களுடைய பிள்ளைகளை நாங்கள் இழக்க வேண்டி வந்துவிட்டது" என்று தாய்மார்கள் கண்ணீர்விட்டுச் சொன்னார்கள். பாதையெல்லாம்—ரோட்டிலே கல்லை உருட்டிவைத்து, மரங்களை வெட்டிப்போட்டு, போக்குவரத்திற்கு இடைஞ்சல் செய்து, போலீஸாரை கொடுமைப்படுத்தி, பல உயிர்களையும் போக்குவதற்குக் காரணமாக இருந்தவர்கள் இந்த மா பாவிகள்—கம்யூனிஸ்டுகள் தான் என்பதைத் தெரிவித்துக்கொள்ளவிரும்புகிறேன்.

அது அல்லாமல் ஆத்தூர் பள்ளிக்கு அருகே 500 தார் டின்கள் இருந்தன. அவற்றை உருட்டிக் கொண்டுவந்து வைத்தார்கள். அங்கே வேல்முருகன் தியேட்டரைத் திறந்து வைத்தார் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அதனால் அந்த தியேட்டரைத் தாக்கினர்கள். அங்குள்ள சிண்டிகேட் காங்கிரஸ்காரர்கள் வன்முறையாளரிடத்தில் சொன்னர்கள், கற்களைக் கொண்டுவந்து

[திரு. வி. பழனிவேலு] [1972 ஆகஸ்ட் 11

குவிக்காதீர்கள் என்று. கற்களைக் கொண்டுவந்து குவித்தார்கள். வேல்முருகன் தியேட்டரைத் தாக்காதீர்கள் என்றார்கள். ஓகோ, தாக்கவேண்டும் போலிருக்கிறது என்று தியேட்டரைத் தாக்கி கண்ணாடிகளை எல்லாம் நொறுக்கித் தள்ளினார்கள்.

அது மட்டுமல்ல—கழகத் தோழர்கள் எங்கெங்கு இருக்கிறார்களோ, தி.மு.க.-க்காரர்கள் கண்ணில்பட்டால் அவர்களை எல்லாம் பிடித்துத்தாக்கச் சொன்னார்கள். அப்படிப்பட்டவர்கள்தான் இன்று இங்கு வந்து தாம் ஏதும் அறியாதவர்களைப்போலப் பேசுகிறார்கள். இப்படிப்பட்ட உயிர்ச் சேதம் ஏற்பட வேண்டிய நிலைமை யாரால் ஏற்பட்டது? பொதுவுடைமைப் பூங்காவாதிகளால் தான் ஏற்படுத்தப்பட்டது என்றால் மிகையாகாது. அப்படிப்பட்டவர்கள் இங்கே மாய்மாலமாகப் பேசுகிறார்கள். இறந்துவிட்டார்களே, குண்டு அடிப்பட்டுச் செத்தார்களே என்று சொல்கிறார்கள்.

நானும் சேலம் ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்த்தேன். அடிப்பட்டவர்கள் ஒவ்வொருவரிடமும் பத்து நிமிடங்களுக்கு மேல் பேசி அவர்களது கருத்தைக் கேட்டேன். "எப்படி ஐயா இந்த நிலைமை ஏற்பட்டது" என்கிறபோது "கம்யூனிஸ்டுகள்தான் இந்த ஏற்பாடுகளைச் செய்தார்கள். 5 மணிக்கு லாரியில் வந்து இறங்கினார்கள், அதுவரை எந்தவிதமான தொந்தரவும் ஏற்படவில்லை, அவர்கள் வந்தவுடன் எல்லாம் நடந்துவிட்டது" என்றார்கள். தாய்மார்கள் இங்கே இருப்பதனால் சொல்லக்கூட வெட்கப்படுகிறேன். போலீஸ் அதிகாரி ஒருவரது மர்மஸ்தானத்தைப் பிடித்து நசுக்கியிருக்கிறார்கள். அவர் இன்னமும் ஆஸ்பத்திரியில் காலை அகட்டி வைத்துக்கொண்டேதான் படுத்திருக்கிறார். எல்லாவற்றுக்கும் காரணம் இந்த கம்யூனிஸ்டு தோழர்கள்தான். இப்படி அங்கங்கே இதுபோன்ற மகத்தான காரியங்களை எல்லாம் செய்துவிட்டு, இங்கே பேசுகிறபோது தி.மு.க. காரர்களால்தான் இந்த நிலைமை ஏற்பட்டது என்று அப்பட்டமாகப் புளுகுகிறார்கள். அவர்கள் அம்மாதிரி சொல்வதற்கு என்ன காரணம்? இந்த தி.மு.க. அரசு விவசாயிகளுக்கு நல்லபல காரியங்களைச் செய்து வருகிறது. பம்பு செட்டுகள் போடப்பட்டு அங்கங்கே மின் இணைப்புக் கொடுக்கப் படுவதனால் அவர்கள் எல்லோரும் முன்னேறிவிட வாய்ப்பு இருக்கிறது. ஐந்து குதிரை பவர் மோட்டாரை ஓட்டி ஒரு மணி நேரத்துக்கு தண்ணீர் பாய்ச்ச 45 பைசா, 48 பைசாதான் ஆகிறது. அதே அளவு தண்ணீரை ஆயில் என்ஜின் போட்டு ஓட்டினால் ஒரு ரூபாய் பத்து காசு ஆகிறது. ஏற்றம் கொண்டு இறைத்தால் 5 ரூபாய் செலவாகிறது. 5 ரூபாய் செலவு செய்துகொண்டிருக்கிற நிலையில் விவசாயிகள் விடப்பட்டால் அவர்கள் எந்தத் தலைமுறையில்தான் முன்னேற முடியும்? பிரிட்டிஷ் ஆட்சி முதல் காங்கிரஸ்காரர்களது கடைசிக் காலம் வரையில் 3 லட்சம் பம்பு செட்டுகளுக்குத்தான் மின் இணைப்புக்

1972 ஆகஸ்ட் 11] [திரு. வி. பழனிவேலு]

கொடுத்தது—தி.மு.க. அரசு இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள்ளேயே 3 லட்சம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுத்துவிட்டது. இன்னும் 6 லட்சம் பம்பு செட்டுகளுக்கு கனெக்ஷன் கொடுக்கவும் இருக்கிறார்கள். 1974-க்குள் மின் சப்ளை இல்லாத இடமே இருக்கக் கூடாது என்று திட்டமிட்டு வேலை செய்கிறார்கள். இந்தக் காரியங்களை எல்லாம் செய்து முடித்துவிட இவர்களுக்கு வழிவிட்டால் எந்தக் காலத்திலும் விவசாய மக்களை தி.மு. கழகத்திடம் இருந்து பிரிக்க முடியாது போய்விடும் என்கிற தீய நோக்கத்தோடுதான் திட்டமிட்டு இந்தச் சதிச் செயல்களில் இறங்கினார்கள். . . . (மணி அடிக்கப்பட்டது.)

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 9-ஆம் தேதி அன்று இந்தப் பேரவையில் இந்த அமைச்ச ரவையின் மீது நம்பிக்கை இல்லை என்பதாக திரு. ஹாண்டே அவர்களால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எதிர்த்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூறவிரும்புகிறேன்.

கடந்த இரண்டு நாட்களாக இங்கே திராவிட முன்னேற்றக் கழக அரசு விவசாயிகளுடைய பிரச்சினையைக் கவனிக்காது துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள் என்கிறவண்ணம் பேசினார்கள். திரு. கே. டி. கே. அவர்கள் கூட பேசும்போது குறிப்பிட்டார். மதுரையில் மகாநாடு நடத்தினார்களே, துப்பாக்கிச் சூட்டினால் இறந்தவர்களுக்கு ஒரு சிறிய அனுதாபமாவது தெரிவித்தார்களா என்று ஏறத்தாழ நிகழ்ச்சி நடந்த மறுநாளோ, அதற்கு அடுத்த நாளோ செயற்குழு கூட்டத்திலேயே சென்னையில் திராவிட முன்னேற் றக் கழகத் தலைமையினர் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றினார்கள். துப்பாக்கிச் சூடு நடந்தது என்று தெரிந்தவுடனேயே நமது மாண்புமிகு மதிப்பிற்குரிய முதல்வர் அவர்கள் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தி நல்ல தொரு அறிக்கையை விடுத்திருக்கிறார்கள்.

இதைச் சொல்வதற்குக் காரணம் காங்கிரஸ்காரர்கள் கடந்தகால வரலாற்றைச் சற்றுத் திரும்பிப் பார்க்கவேண்டும். எப்போதுமே 67-க்கு முற்பட்ட காங்கிரஸ் ஆட்சியைப் பற்றிச் சொல்கிறீர்களே, அவர்கள் ஆட்சியைப் போக்கிவிட்டு நீங்கள் அதனால் தானே வந்திருக்கிறீர்கள், மீண்டும் எதற்காக பழயதைப்பற்றிச் சொல்கிறீர்கள் என்று கேட்பார்கள். நான் மேற்கோள் தான் காட்டுகிறேன். அவர்கள் சுட்டார்கள்; ஆகவே நாமும் சுடவேண்டும் என்கிற எண்ணம் அரசுக்கு வரவேண்டும் என்று சொல்லவில்லை. துப்பாக்கிச் சூடு நடந்தது உண்மைதான். மோட்டாரில் அடிப்பட்டாலும் சாவுதான்— நோய்வாய்ப்பட்டாலும் சாவுதான்—துப்பாக்கிச் சூடு பட்டாலும் சாவுதான். இறந்தபட்டது உண்மை. கடந்தகாலத்தைச் சிந்தித்துப்பாருங்கள். திரு. கே. டி. கே. அவர்களுக்கு அந்த நிகழ்ச்சி தெரியும். ஜவாலியன்வாலாபாக்

[திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி] [1972 ஆகஸ்ட் 11

படுகொலை என்று சொன்னார்கள். பத்திரிகையிலே பார்த்தோம். ஊரில் உள்ள ஊர்க்காரர்கள் அத்தனைபேர்களையும் ஒரு பள்ளியில் பிடித்து, அடைத்து, அதிகாரி வந்தவுடனே, மிலிட்டரிக்கு ஆள் எடுப்பது போல அவர்களுக்குள்ளே வலிமை மிக்க 20 வயது முதல் 25 வயதுக்குள் உள்ள ஐந்து பேர்களைப் பிடித்து கைகளைக் கட்டி, பின்புறமாகச் சுட்டு வீழ்த்தினார்களே —அந்த துப்பாக்கிச் சூட்டினால் உயிரிழந்தவர்கள் சவத்தை கொடுக்காவிட்டால் என்ன நடந்திருக்கும் தெரியுமா என்று கேட்டார்கள். மனிதாபிமானத்தோடு இந்தச் சர்க்கார் ஊர்வலம் எடுத்துப்போக சவத்தை கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அப்போது இறந்து, போஸ்ட் மார்டம் ஆனவுடன் பெற்றோர்களிடம் அந்தச் சவத்தை ஒப்படைக்க கேட்பதற்காக மதுரை சென்றபோது இன்னும் எத்தனைபேர் சாக வந்திருக்கிறீர்கள் என்றுதான் போலீஸ் இன்ஸ்பெக்டரும் சரி, கலெக்டரும் சரி கேட்டார்கள். ஒருவர் பிரேதத்தைக்கூட அவரது பெற்றோர்களிடம் கொடுத்ததாகச் சரித்திரம் இல்லை.

ஆனால் அன்றைக்கு அதுமட்டுமல்ல. உளுத்திமடை என்ற கிராமத்தில் ஒரு போலீஸ் லாரி சகதியில் சிக்கிக்கொண்டுவிட்டது. அதைத் தள்ளிவிட வாருங்கள் என்று கிராமத்திலுள்ள மக்களை அழைத்துச்சென்றார்கள். அவர்களும் லாரியைத் தள்ளிவிட்டார்கள். லாரியைத் தள்ளிவிட்டு அவர்கள் திரும்பியபொழுது அவர்கள் எல்லாம் சுடப்பட்டார்கள். அதேபோல ஒரு கிராமத்திலே ஒரு போலீஸ் லாரி வருகிறது, வந்தவுடன் போலீஸ் லாரி வந்திருக்கிறதே, என்ன விஷயம் என்று மக்கள் அங்கே சென்று பார்த்த பொழுது அவர்களையும் சுட்டிருக்கிறார்கள். இவையெல்லாம் நான் இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம், அவர்கள் குருவியைப்போல் காக்கையைப்போல் சுட்டுச்சுட்டு மக்களை வீழ்த்தினார்கள். அப்படிச் சுட்டுச்சுட்டு வீழ்த்தியது காங்கிரஸ் கட்சி ஆட்சிதான். இன்றைக்கு நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கின்ற கட்சியினர் அன்றைக்கு அதைப்பற்றி கேட்க வாயே திறந்ததில்லை. மதிப்பிற்குரிய அனந்தநாயகி அம்மையார் அவர்கள் அன்றைக்குப் பேசாமல்தான் இருந்தார்கள். நான் ஜாதியைப் பற்றிக் குறிப்பிட விரும்பவில்லை, இருந்தாலும் குறிப்பிடுவதற்காக மன்னிக்க வேண்டுகிறேன். முக்குலத்தோர் . . .

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்த நிகழ்ச்சியைப்பற்றி கனம் உறுப்பினர் அவர்கள் இந்தச் சபையிலே ஒரு பத்துத் தடவாவது பேசியிருக்கிறார்கள். மீண்டும் மீண்டும் அதைப்பற்றியே கோரஸ் பாடுவது போல் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். அன்று நடந்தது, அதற்கு முன்பு நடந்தது, அதற்கும் முன்பு நடந்தது என்றெல்லாம் பேசிக்கொண்டே போனால் . . . .

1972 ஆகஸ்ட் 11]

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, கோரஸ் பாடுவது என்றால் 10, 15 பேர்கள் சேர்ந்து பாடுவதுதான் கோரஸ் பாடுவது ஆகும். ஆனால் அவர் தனியாக அவருடைய கருத்தைச் சொல்வது எப்படித் தவறாகும்?

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : முக்குலத்தோர் இனத்தைப் பற்றி அவர்கள் பத்துத் தடவையாவது பேசியிருப்பார்கள் இதுவரையில். இன்னும் அவர்கள் அதைப்பற்றிச் சொல்லிக்கொண்டே இருக்கவேண்டுமா?

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : அன்றைய தினம் நடந்த அவ்வளவு பெரிய திகழ்ச்சிக்கு நீதிவிசாரணை போடவில்லை. ஆனால் இன்றைக்கு முதல்வர் கலைஞர் அவர்கள் துப்பாக்கிச் சூடு நடந்த மறு நிமிடத்திலேயே நான்கு நீதிபதிகளைப் போட்டு—எதிர்க்கட்சிக்காரர்களின் கோரிக்கைக்காகக் காத்திராமல்—மனிதாபிமானத்தோடு ஏற்பாடு செய்தார்கள். அதைக் கம்யூனிஸ்டு கட்சியினர் உள்ளபடியே பாராட்டுவதை விட்டுவிட்டு இன்றைக்கு நம்பிக்கை இல்லை என்று சொல்கிறார்கள்.

அதேபோன்று ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே இறந்தார்கள், சுடப்பட்டார்கள். அந்த இயக்கம் ஒரு கட்சியைச் சேர்ந்தது என்று குறிப்பிட்டார்கள் கம்யூனிஸ்டு கட்சியினர். ஆனால் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், இந்தத் தமிழ்நாட்டிலே உள்ள ஒவ்வொரு தமிழ் மகனும், தமிழ்மொழி பேசுகின்ற தமிழனும் எந்த விதமான கட்சி சார்பும் இல்லாமல் மக்களுடைய எழுச்சியாகத்தான் அந்த இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்ததே தவிர, ஒவ்வொரு தமிழனும் அதை அருந்தொண்டாக, ஒரு பெருந்தொண்டாகத்தான் கருதி ஈடுபட்டார்களே தவிர, அதிலே அரசியல் சூழ்ச்சியோ அல்லது இன்றைய விவசாயப் போராட்டத்திற்கு இருந்த பின்பாடுகளோ, அதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அன்றைய தினம் அதைப்பற்றியும் நீதிவிசாரணை இல்லை. ஆனால் இன்றைய கலைஞர் ஆட்சியில் யாரும் கோரிக்கை விடாமலேயே நீதிவிசாரணைக்கு உத்திரவிடப்பட்டிருக்கிறது. விவசாயப் போராட்டத்தின் பிரதிநிதிகள் சொன்னதன் காரணமாகத்தான் அதைத் தள்ளிப் போட்டார்கள். நீதிவிசாரணை வேண்டுமென்றால் முதலமைச்சர் மீண்டும்கூடப் போடலாம் என்று சொன்னார்கள்.

உறுப்பினர் திரு. காளிமுத்து அவர்கள் மானமதுரையிலே நடந்ததைப் பற்றிச் சொன்னார்கள். இராஜபாளையத்தில் நடந்ததைப்பற்றி குறிப்பிட்ட திரு. சுப்பு அவர்கள் அதை மறுத்தார்கள். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கூட கடைகளை அடைக்கவேண்டுமென்று சொன்னால் அடைக்கத் தானே வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் கட்சி ஆட்சியில் இருக்கிற

[திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி] [1972 ஆகஸ்ட் 11

கோனா மாநிலத்தில் மக்கள் விரும்பாத ஒரு பிரச்னைபற்றி மக்களுக்கு ஒவ்வாத முறையில் ஒரு போராட்டத்தை இளைப்பிவிட்டு, சாலையில் வண்டிகள் போகக்கூடாது, மக்கள் போகக்கூடாது, சினிமா நடக்கக்கூடாது, கடை இருக்கக்கூடாது, ரயில் போகக்கூடாது என்று சொல்கிறார்கள் என்றால் அவர்கள் ஒரு தனியாட்சி நடத்துகிறார்கள், ஒரு தனி சர்க்கார் நடத்துகிறார்கள் என்றுதான் கருதவேண்டும். இங்கே அப்படி அவர்கள் நினைத்தபடி நடக்க வேண்டுமென்று சொன்னால் அவர்கள் என்ன தனி சர்க்கார் நடத்துகிறார்களா? அப்படி நினைத்தபடி நடக்க வேண்டுமென்று சொன்னால், மக்கள் வாழ்கிற நிலை பாதிக்கப்படும், போக்குவரத்து இருக்காது என்ற நிலையில் அதை அரசு கவனிக்க வேண்டாமா என்ற எண்ணம் அவர்களுக்கு இல்லை.

மாணமதுரையிலே காலையிலேயே ஐந்தரை மணிக்கே ஆரம்பித்து விட்டார்கள். போலீஸார் ஐந்தாறு பேர்கள்தான் இருந்தார்கள். நிலைமை கட்டுக்கடங்காமல் போக ஆரம்பித்தது. போராட்டம் என்ற பெயரால் ரயில்களை நிறுத்தவும் கடைகளை உடைக்கவும், இதன் காரணத்தினால், என்னுடைய நண்பர் வாஹித் என்பவரின் கடையில் இருந்த அண்டா, சட்டி, பால் போன்ற பதார்த்தங்கள் எல்லாம் தூக்கியெறியப்படவும், சப்-இன்ஸ் பெக்டரைக் கல்லால் அடித்தபிறகும், தன்னுடைய உயிரைப் பாதுகாப் பதற்காக தன்னுடைய மனைவி மக்களுக்காக தான் வாழவேண்டியிருக்கிறது என்ற நிலையில் தற்காப்பிற்காகத்தான் அவர்கள் சுட்டார்களே தவிர, அரசு சுடச்சொல்லி அவர்கள் சுடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ராஜபாளையத்தில் வன்முறை எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை என்று மற்ற கட்சிக்காரர்கள் சொன்னார்கள். ஐந்தாம் தேதியன்று பந்த் என்ற பெயரில் அங்கே பறந்த தி.மு.க. கொடிமரங்களை வெட்டிவெட்டிப் போட்டார்கள். அதுமட்டுமல்ல, எங்கள் உத்தமத் தலைவர் தேவர் அவர்கள் சிலையை உடைத் தார்கள். பி. எஸ். கே. சிலையை உடைத்தாக அவர்கள் சொன்னார்கள். யார் யாருடைய சிலையை உடைத்தாலும் அது தவறுதான். எங்கள் தலைவர் தேவருடைய சிலையை . . .

திரு. க. சுப்பு: ஒரு எக்ஸ்ப்ளனேஷன் சொல்ல விரும்புகிறேன். அங்கே வைக்கப்பட்டுள்ள தேவர் சிலை ஒரு சமூகத்தினரால் மட்டும் வைக்கப்பட்ட தல்ல. எல்லோரும் சேர்ந்து வைத்ததுதான். அங்கே அவருடைய சிலையை உடைக்கப்போவதாக யாரோ கதைக்கட்டிவிட்டார்கள். ஆனால் அந்தச் சிலை உடைக்கப்படவில்லை. ஆகவே உண்மையில்லாத செய்தியைச் சொல்ல வேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1972 ஆகஸ்ட் 11]

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : ஆனால் அங்கே உள்ள தேவர் அவர்களின் படத்தைத் தாக்கியபொழுது—கனம் உறுப்பினர் அவர்கள் மனசாட்சியோடு சொல்லவேண்டும்—நான் உதாரணத்திற்காகச் சொல்ல விரும்புகிறேன். ஜாதியில் எனக்கு நம்பிக்கை கிடையாது. அங்கே அந்தப் போராட்டத்தில் ராஜாக்கள் பங்குகொண்டார்கள், நாடார்கள் பங்குகொண்டார்கள், அரிசனங்கள் பங்குகொண்டார்கள், ஆகவே ஜாதி வேறுபாட்டைக் கிளப்பிவிடக்கூடிய நிலைமையில் அந்தப் போராட்டம் அங்கு நடந்தது. அதற்குப் பிறகு கலெக்டர் அவர்களும், எஸ்.பி. அவர்களும் அழைத்து ஐக்கியப்படுத்தினர்கள் என்பதை நாம் பத்திரிக்கையில் பார்த்தோம் . . . .

(திரு. க. சுப்பு அவர்கள் எழுந்தார்கள்.)

ஐ ஆம் நாட் யில்டிங் சார் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள்.

திரு. க. சுப்பு : இல்லாததைச் சொல்வதனால் நான் அதை மறுத்துப் பேச வேண்டியிருக்கிறது . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள். ஒரு உறுப்பினர் பேசும்பொழுது நீங்கள் குறுக்கிட அந்த உறுப்பினர் அனுமதி கொடுத்தால் தான் நீங்கள் பேசலாம். அல்லது பாயின்ட் ஆப் ஆர்டரில் பேசலாம். அல்லது நீங்கள் கூற வேண்டியதை உங்கள் கட்சித் தலைவரிடம் சொல்லிப் பேசச் சொல்லலாம்.

திரு. க. சுப்பு : ஆன் ஏ பாயின்ட் ஆப் ஆர்டர் சார் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உண்மையிலேயே பாயின்ட் ஆப் ஆர்டர் இருந்தால்தான் பேசவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்டால் அனுமதிக்கவேண்டியதுதான். ஆனால் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்துவிட்டபிறகு பாயின்ட் ஆப் ஆர்டர் எதுவும் உண்மையில் சொல்லாமல் இருந்தால் அவருக்கு மறுபடியும் பத்து பாயின்ட்ஸ் ஆப் ஆர்டர்வரை கேட்பதற்கு அனுமதி மறுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவருக்கு மட்டுமல்ல, மறுபடியும் யாருக்கும் கொடுக்கக்கூடாது. இந்த பாயின்ட் ஆப் ஆர்டரை எடுத்துவிடுவது கூட நல்லது என்று நினைக்கிறேன்.

[1972 ஆகஸ்ட் 11

திரு. க. சுப்பு : அவர்கள் பேசும்பொழுது ஜாதிப் பிரச்னை என்னுடைய தொகுதியில் இருந்ததுபோல் பேசினார்கள். என்னுடைய தொகுதியில் அப்படியொரு பிரச்னையைக் கிளப்பவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். போராட்டத்திலே கலந்துகொண்டவர்களில் ஜாதி வேற்றுமைகள் கிடையாது. எல்லா ஜாதியினர்களும் இருந்தார்கள். நான் வேண்டுமானால் பட்டியல் தருகிறேன். ஆனால் ஜாதிகளால் நடத்தப்பட்ட போராட்டம் என்று சொல்லி ஜாதிக்கலவரம் நடந்ததுபோல் சொல்வது தவறு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அம்மாதிரியான ஒரு கலவரத்தை நண்பர் அவர்கள் ஏற்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். சட்டசபையிலே தவறான தகவல் கொடுப்பது என்றால் என்ன அர்த்தம்? அது பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லையா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்டசபைக்குத் தவறான தகவலைத் தருகிறார்கள் என்றால் அது சரியான தகவலா இல்லையா என்று எப்படி முடிவு செய்யலாம்? நீங்கள் சொல்வது உண்மை என்பதை எப்படி எடுத்துக் கொள்வது?

திரு. க. மு. இராசகோபால் : பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள். வாவா ஒழுங்கைக் கடைப்பிடிக்கும் முறை விட்டுவிடப்பட்டு வருகிறது. நீங்கள் ஏன் நடுவில் எழுந்து பேசுகிறீர்கள்? தலைவர் நிற்கும்பொழுது யாரும் நிற்கக் கூடாது. திரு. சுப்பு அவர்களின் தலைவர் பேசும்பொழுது சொல்லலாம். அது உண்மையான தகவலா அல்லவா என்று சொல்லலாம். உண்மையான தகவல் என்றால் அதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

திரு. என். கணபதி : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார், காலையிலே மாண்புமிகு சுப்பு அவர்கள் பேசும்பொழுது ஏதோ தவறான தகவல் கொடுத்து விட்டார்கள் என்று திரு. லத்தீப் அவர்கள் எழுந்து, பெரிய தகராறுக்கிடையே இடம் கொடுக்கப்பட்டது. இப்பொழுது ஒன்றுமில்லாத சாதாரண விஷயத்தை திரு. சுப்பு அவர்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் மூலம் கிளப்பி விளக்கம் கேட்கிறார்கள். அவருக்கு ஒரு சட்டம், லத்தீப்பிற்கு ஒரு சட்டமா என்பதற்கு தீர்ப்பளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கணபதி எழுப்பிய பாயின்ட் ஆஃப் ஆர்டருக்கு இப்பொழுது பதில் சொல்லியிருக்கிறேன்.

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : தான் ஆதாரத்தோடு சொல்கிறேன், பத்திரிகையில் வந்த செய்தி.

1972 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பத்திரிகைச் செய்தியை ஆதாரமாகக் காட்டக்கூடாது.

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் வந்து அமைதியை ஏற்படுத்தினார்கள். அங்கே நாடார்கள், அரிசன மக்கள், முக்குலத்தோர் ஆகியோர் ஒன்று சேர்ந்ததாக வரலாறு இல்லை. அதற்கான காரணத்தை விசாரித்ததில், உண்மையைச் சொல்கிறேன், நேரடியாகப் பார்த்தவரை சொல்கிறேன், உறுதியாகச் சொல்கிறேன், ஏதோ நாடார் வீட்டுப் பெண் கீழே சிகப்பு உடையும், மேலே கறுப்பு ஜாக்கெட்டும் போட்டுக்கொண்டு இருந்தார், நான் இதைச் சொல்வதால் தாய்மார்கள் வருத்தப்பட வேண்டாம்—மேலே உள்ள சட்டையைப் பிடித்து இழுத்திருக்கிறார்கள். அதனால்தான் அந்த இன மக்கள் வெறுப்பு கொண்டு இந்த 3 இனத்தவர்களும் ஒன்று சேர்ந்து விவசாயப் போராட்டம் என்று, ஏற்கெனவே இருந்த வெறுப்பின் காரணமாக தங்கள் இனத்திற்கு, தங்கள் கட்சிக்கு ஆதரவு தேட முற்பட வேண்டுமென்று செய்திருக்கிறார்கள் என்று அந்த ஊரிலிருந்த மக்கள் பேசிக்கொண்டார்கள் என்ற உண்மையான தகவலைச் சொல்கிறேன். அதை நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

ஆகவே, திராவிட முன்னேற்றக் கழக அரசு மக்கள்மீது வெறுப்பு கொண்ட அரசு அல்ல. சுட வேண்டுமென்று எண்ணக்கூடிய அரசு அல்ல, பொய் வழக்குகள் போட வேண்டுமென்று நினைக்கக்கூடிய அரசு அல்ல, உண்மையிலேயே பொய் வழக்குப் போடக்கூடிய நிலை 1967-க்கு முன்னால் இருந்தது, நிரபராதிகளை ஐ.பி.சி. செக்ஷனில் சேர்த்து, அதிலே நாங்களெல்லாம் இரண்டு, மூன்று ஆண்டுகள் அனுபவித்தவர்கள். அந்தக் காலத்தில் எப்படி வழக்கு போடப்பட்டது என்பது எனக்குத் தெரியும். நான் ஒரு கிராமத்தில்—அந்தக் கிராமத்திற்கு நான் செல்லவேயில்லை—துப்பாக்கிப் பிடித்துச் சுட்டதாகப்போட்டு 3 ஆண்டுகள் புதுக்கோட்டை சிறையிலே இருந்தேன் 1967-க்கு முன்பு. ஆனால் இப்பொழுது பொய் வழக்கு போடும் நிலையில்லை. உண்மையிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருபவர்கள் ஒரு ஜாயிண்ட் குழு போட்டு வேண்டுமானால், மத்தியஸ்தர்களை வேண்டுமானால் அனுப்பி ஒவ்வொரு ஊரிலும் என்ன நடந்தது என்று பரிசீலித்து பாருங்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஊழியர்களை போலீசிலே தலையிட்டு அவர்களுக்கு வேண்டியதைச் செய்கிறது என்றும், ஒரு தலைப்பட்சமாக இருக்கிறது என்றும் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மிகமிக வேதனையான நிலை. உலகுக்கு ஒரு பக்கம் இடி என்றால் இந்த

[திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி] [1972 ஆகஸ்ட் 11

அரசுக்கு இரண்டு பக்கங்களிலும் இடி. திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ள எங்களைப் போன்றவர்கள் இந்தப் போலீஸ் அதிகாரிகளிடத்திலே நியாயத்தைச் சொன்னாலும் எங்கள் தலையிடுகிறோம் கவனிப்பதில்லை. நாங்கள் சொல்லியும் நடக்கவில்லை. எதிர்க்கட்சிகாரர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்மீதும், அமைச்சர்கள்மீதும் எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகளைக் கவனிப்பதில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே மனசாட்சியின்படி பாருங்கள். இதற்கு ஒரு சிறிய உதாரணத்தைச் சொல்ல வேண்டுமென்றால், தூங்குகின்றவர்களைச் சுலபமாக உசப்பிவிடலாம், ஆனால் தூங்குகிறவர்களைப் போல் படுத்துக்கொண்டிருப்பவர்களை சுலபத்தில் உசுப்ப முடியாது. ஆகவே, உண்மையிலேயே நியாயமான கோரிக்கைகள் இருந்தால் அவைகளை முதலமைச்சர் அவர்களையும், அமைச்சர்களையும் சந்தித்துக் கூறி, அதை வாதிப்பது இந்த அரசில் கஷ்டம் இல்லை. முன்பிருந்த அரசில் யாருக்கும் பேட்டி கொடுத்ததில்லை. ஆகவே, அந்த அளவில் அரசாங்கம் நல்ல பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு, உண்மையிலேயே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நான் மனதார மறுத்து, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு மற்றவர்களும் ஆதரவு தர வேண்டுமென்ற கோரிக்கையைவிட்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அங்கத்தினர் அவர்கள் பேசும்பொழுது எங்கள் கட்சி என்று சொன்னார்கள். அவர் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக சட்டமன்றத்தில் இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு போலவைத் துணைத் தலைவர்: மன்றத்திற்கு இன்னும் தகவல் வரவில்லை. அவர் சுயேச்சை உறுப்பினராக இருக்கிறார்.

திரு. ஏ. ஆர். பெருமாள்: இன்னும் 32 நிமிஷங்கள்தான் இருக்கின்றன. 4 பேர் பேசுவதற்கு எவ்வளவு நிமிஷங்கள் கிடைக்கும்?

மாண்புமிகு போலவைத் துணைத் தலைவர்: இதற்கு எல்லாக் கட்சித் தலைவர்களும் பொறுப்பேற்க வேண்டும். நான் ஆரம்பத்திலேயே கூறினேன் கட்சித் தலைவர்கள் இதற்கு ஒத்துழைக்கின்றீர்கள்.

*திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசும்பொழுது இந்தப் பக்கத்திலேயிருக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் சார்பில் மட்டும் அல்லாமல் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களாயிருந்தபோதும் அவர்கள் தனிப்பட்டமுறையில் எங்களிடத்தில்

1972 ஆகஸ்ட் 11] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

சொல்லும் விஷயத்தை, ஆளுங்கட்சியில் இருப்பதால் வெளிப்படையாகச் சொல்ல முடியாமல் இருப்பவர்களுக்காகவும் சேர்த்துச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்

(பல குரல்கள்—பாயின்ட் ஆப் ஆர்டர், சார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சொன்னது சரியர தவரு என்பது ஒருபுறம் இருக்கட்டும். அதற்காக அத்தனை பேரும் பாயின்ட் ஆப் ஆர்டர்கள் எழுப்பக்கூடாது. பாயின்ட் ஆப் ஆர்டர் என்ருல் ஒருவர் எழுந்து கேட்கட்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதைக்கேட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் யாரும் ஆத்திரப்பட வேண்டியதில்லை. ஆளுங்கட்சிக்காரர்கள் இதை ஆதரித்தார்கள் என்று அவர்கள் சொல்லும்பொழுது இந்தியாவின் ஆளுங்கட்சி என்ற கருத்தில் சொல்லியிருப்பார்கள். ஆகவே நம்முடைய நண்பர்கள் இதை விட்டுவிடலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இந்தியாவை ஆளும் கட்சியைச் சேர்ந்தவன்தான் நான் ஆளுங்கட்சி என்று நான் குறிப்பிடும்பொழுது இங்கே ஆளுகின்ற கட்சியைத்தான் குறிப்பிடுகிறேன். துணைத் தலைவரவர்களே, நேற்று இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அரங்கண்ணல் அவர்கள் ஒன்றைச் சொன்னர்கள். அண்ணு அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபிறகு கூறியதை மேற்கோள் காட்டினர்கள். அதனைத் தான் நானும் மேற்கோள் காட்ட விரும்புகிறேன். என்னுடைய நினைவு சரியாக இருந்தால் அண்ணு அவர்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்றவுடன் திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் கூறியதாக எனக்கு நினைவு, இங்கே ஏற்பட்டிருப்பது கழகத்தின் ஆட்சிதானே தவிர கழகத்தவர்களுக்கான ஆட்சி அல்ல என்று சொன்னதாக எனக்கு ஞாபகம். அந்த வார்த்தைகளிலே வேறுபாடு இருக்கலாம். ஆனால் அவர்கள் சொன்னதன் கருத்து இது. ஆனால் அந்தக் கருத்திற்கு நேர்மாறுக இங்கே காரியங்கள் நடைபெறுகின்றன என்பதைத்தான் நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன், அதுதான் என்னுடைய குறையும், குற்றச்சாட்டும் ஆகும். அதை வைத்து நான் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே ஏற்கனவே பல விஷயங்கள் நடந்திருக்கின்றன. இப்பொழுது அதற்கெல்லாம் மூத்தாய்ப்பு வைத்ததைப்போல் இந்த விவசாயப் போராட்டத்தின் போது நடந்திருக்கிறது. நான் முதலமைச்சரவர்களுக்குச்

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1972 ஆகஸ்ட் 11

சொல்லிக்கொள்வேன், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்தப் போராட்டத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என்பதைவிட முதலமைச்சர் என்ற வகையிலே இந்தப் பிரச்னையை அணுகியிருந்தால் இந்த விஷயம் இந்த அளவிற்கு முற்றி இருக்காது என்பது என்னுடைய கருத்து. ஆனால் முதலமைச்சர் என்ற முறையைவிட திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என்ற வகையிலே இந்தப் பிரச்னையை அணுகிவிட்டார் என்பதுதான் நான் கூறுகின்ற குற்றச்சாட்டு. எனக்கு முன்பு பேசிய திரு. ஆலடி அருணா அவர்கள் ஒப்புக் கொண்டார்கள் ஆரம்பத்தில் வன்முறை இருக்கவில்லை என்று. மின்சாரக் கட்டணக் கோரிக்கையைத்தான் வைத்தார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அவர்கள் கூறியதில் ஒரு குறை இருந்தது. கம்யூனிஸ்ட் கட்சி சேர்ந்தபிறகுதான் 12 அம்சக் கோரிக்கை வந்தது என்று கூறினார்கள். அப்படி அல்ல. முதலிலேயே வந்துவிட்டது. ஆனால் அந்தக் கோரிக்கைகளின் தன்மையை வைத்துப் பார்க்காமல் அரசியல் பிரச்னை என்று, அரசாங்கத்தைக் கவிழ்க்கின்ற பிரச்னை என்று கட்டுப்பாடான பிரச்சாரம் மாதிலம் முழுவதும் நடந்ததை அறிந்து வேதனைப்பட்டேன். இது அரசியல் என்று சொல்கிறார்கள். நான் சொல்லிக்கொள்கிறேன், இதை அரசியல் ஆக்கியது ஆளுங்கட்சியே தவிர போராட்டத்தை நடத்தியவர்கள் அல்ல என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஜூன் 7-ம் தேதிக்குப் பிறகுதான் அரசியல் கட்சிகள் என்ற வகையில் சேர்ந்தார்கள். அதற்கு முன்பு வைத்த கோரிக்கைகளில் அரசியல் கிடையாது, பேசிய பேச்சில் அரசியல் கிடையாது. மன்றுடியார் தலைவர் என்று சொல்கிறார்கள். நிலப்பிரபுக்கள் என்று சொல்கிறார்கள். வியப்பாக இருக்கிறது. நிலச்சீர்திருத்தச் சட்டம் வந்து, அதை சிறப்பாக அமல் படுத்தியிருக்கிறோம், என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது நிலப்பிரபுக்கள் இருக்கிறார்கள் என்று சொல்வதில் சிறிதும் பொருத்தம் இல்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மன்றுடியார் அவர்களுக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது என்று உறுப்பினர் அவர்களுக்குத் தெரியுமா? எந்தப் பாதுகாப்பின்கீழ் நிலம் இருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்களா? இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைப் பற்றிய விவரம் தெரியுமா? மன்றுடியார் அவர்களும், அவர்களது குடும்பத்தாரும், இதில் ஈடுபட்டிருக்கிற பலரும் நிலப் பிரபுக்கள் என்ற ஆதாரத்தை வேண்டுமானால் தருகிறேன். அப்படி இல்லை என்று எந்த ஆதாரத்தை வைத்து மறுக்கிறார்கள் என்பதை தெரிய விரும்புகிறேன்.

1972 ஆகஸ்ட் 11]

திரு. ஏ. சுப்பிரமணியம்: திரு. மன்ருடியார் அவர்கள் நிலப்பிரபு இல்லே என்று சொல்ல வரவில்லே. ஏன் நிலப்பிரபுக்களே நிலப்பிரபுக்களாக இவ்வளவு ஆண்டுகளாக வைத்திருக்கிறீர்கள் என்றுதான் கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: விதிவிலக்குகளே ரத்து செய்வதற்கு மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம். எல்லாரும் சேர்ந்து பேசி நல்ல பல திட்டங்களேத் தந்திருக்கிறீர்கள். இந்தக் கூட்டத் தொடரிலேயே அது பற்றி விவாதிக்க இருக்கிறோம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மன்ருடியார் அவர்களின் நிலத்தைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது என்பதை நான் உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பேசுகிறவர்களுக்கும் அது உபயோகமாக இருக்கும். அவர் பாவம், பரம ஏழை 1995 ஏக்கர் இருக்கிறது அவர்களது பெயரில். இன்றைய தேதியிலும் அப்படியே இருக்கிறதா என்று கேட்பீர்கள். எப்படி அது முடிந்தது என்று கேட்பீர்கள். ஏற்கனவே இருந்த அரசாங்கம் மாட்டுப் பண்ணே வைக்க விதிவிலக்கு கொடுத்தது. அதை அளிக்க மனு கொடுத்தார்கள். அப்போதிருந்த அரசு 880 ஏக்கர் அளவிற்கு விதிவிலக்கு கொடுத்தது. மிச்ச நிலத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் நோட்டீஸ் கொடுத்திருக்கிறது. பின் மன்ருடியார் அவர்கள் ஹைகோர்ட்டுக்குப் போய் ஸ்டே வாங்கி, உயர்நீதி மன்றத்தில் தீர்ப்பு வழங்கவில்லே. அது இந்த அரசாங்கம் செய்த தவறு அல்ல, ஏற்கனவே இருந்த அரசாங்கம் செய்த தவறு.

திரு. ஏ. சுப்பிரமணியம்: மீண்டும் கூறுகிறேன். இந்த அரசு வந்து ஐந்தாண்டுகளுக்கு மேலாகிறது. இவ்வளவு காலமாக ஏன் விட்டு வைத்திருக்கிறீர்கள்? எவ்வளவு சீக்கிரமாக எடுத்துக்கொள்கிறீர்களோ அந்த அளவிற்கு அதை நான் வரவேற்பேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அது மாட்டுப் பண்ணேக்கு ஸ்டே. இவ்வளவு காலம் ஏன் காத்திருந்தீர்கள்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அந்தச் சட்டம் நாளையதினம் தாக்கலாகிறது. ஒரு மாதத்திற்கு முன்னர் அறிவித்தாகிவிட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி: நிலப்பிரபுத்துவத்தை ஒழித்துக் கட்டுவது என்பதை கொள்கையாக வைத்திருக்கிறீர்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நிலப்பிரபுத்துவத்தை இந்த ஆட்சி இருக்கிற வரையில் ஒழித்துத்தான் தீருவோம் என்பதை உறுதியாகச் சொல்கிறேன். அதுதான் அரசாங்கத்தின் கொள்கை.

[1972 ஆகஸ்ட் 11

திரு. ஏ. சுப்பிரமணியம்: இந்த விவசாயப் போராட்டம் தொடங்கிய தற்குப் பிறகாவது நிலப்பிரபுத்துவத்தை ஒழிப்பது என்பது இவர்கள் கொள்கையாக வந்திருப்பதை நான் வரவேற்கிறேன், மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திரு. சுப்பிரமணியம் அவர்கள் இப்படி ஒரு தவறான தகவலைச் சொல்லக்கூடாது. இந்தப் போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பே பல விதிவிலக்குகளை அகற்றி விடவேண்டிய ஒரு முடிவிற்கு வந்து, இந்த மன்றத்தில் தங்களைப் போன்றவர்கள் சீரிய கருத்துக்களையெல்லாம் இந்த அரசுக்கு வழங்கி, அதன் அடிப்படையில் விதிவிலக்குகளை அகற்றி வருகிறோம். அதில் இது ஒரு கட்டம். அவற்றை விலக்கவேண்டும் என்பதில் இந்த அரசாங்கம் பின்வாங்கியதில்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம்: மன்றுடியார் அவர்களின் காலஞ்சென்ற தம்பி அந்தப் பக்கத்தில் இருந்தவர். அவர் மறைந்துவிட்டார். அந்த இடத்தை நிரப்பவேண்டுமென்று, மன்றுடியாரின் குடும்பத்தைச் சேர்ந்தவர், ஆலை முதலாளி ஒருவரை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நாடாளுமன்ற இடைத் தேர்தலில், பழைய காலத்தில் அந்தக் கட்சிக்காகப் பாடுபட்டவர்கள் இருந்த போதிலும், இவரை நிறுத்தி வைத்து வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள். எனக்கு அவர் பேரில் மதிப்பு உண்டு, மரியாதை உண்டு. நிலப்பிரபுக்கள் . . , .

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பட்டக்காரர் அவர்களுக்கு 1995 ஏக்கர் நிலம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் மோகன்ராஜுக்கு எவ்வளவு ஏக்கர் நிலம் இருக்கிறது என்று சொல்லமுடியுமா?

திரு. ஏ. சுப்பிரமணியம்: அவரும் ஜமீந்தார் குடும்பத்தைச் சார்ந்தவர் தான். (ஆரவாரம்.) இன்று அவர் ஆலை முதலாளியாகவும் இருக்கிறார்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: எந்த ஆலைக்கு அவர் முதலாளி என்பதை நிரூபிக்கவேண்டும். தவறான தகவலை தயவுசெய்து சொல்ல வேண்டாம்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: சோமனூர் அம்பாள் ஆலைக்கு அவரும் அவர் சகோதரர்களும் முதலாளிகள்.

திரு. ஏ. சி. நரசிம்மன்: சபையில் உறுப்பினர்களாக இல்லாதவர்களைப் பற்றி இங்கு இப்படிப்பட்ட விவாதம் நடத்துவது நியாயமா?

1972 ஆகஸ்ட் 11]

திரு. ஏ. சுப்பிரமணியம் : கோரிக்கைகள் வைக்கப்பட்டன. அவற்றைப் புறக்கணிக்கிற போக்கினை இந்த அரசு கடைப்பிடித்தது. கோரிக்கைகளை வைத்து அரசியல் பண்ணுகிறார்கள், அரசினைக் கவிழ்க்கப் பார்க்கிறார்கள் என்று ஆளும் கட்சித் தரப்பிலிருந்து பிரச்சாரம் செய்யப்பட்டது. அப்போராட்டம் சிலவிடங்களில் நான்கு நடத்தது, சிலவிடங்களில் நன்கு நடக்கவில்லை. அதுவே என் வாதத்திற்கு ஆதாரம். இந்தப் போராட்டம் எங்கு விவசாயிகள் மிகவும் அல்லல்படுகிறார்களோ, எங்கு கடன் சுமைக்கு ஆளாகியிருந்தார்களோ, எங்கு ஆழமான கிணறுகள் தோண்டவேண்டிய நிலைமை இருந்ததோ, எங்கு மின்சாரத்திற்காக அதிகப் பணம் செலவழிக்க வேண்டிய நிலை இருந்ததோ அவ்விடங்களில் தான் போராட்டத்தின் வேகம் இருந்தது. தஞ்சை போன்ற இடங்களில், காலால் தள்ளி தண்ணீர் பாய்ச்சு இன்ற இடங்களில் போராட்டத்திற்கு வேகம் இல்லை. இதுதான் உண்மை. முதலில் கோரிக்கைகள் வைக்கப்பட்டபோதே அரச பரிசிலனை செய்து ஏற்றிருக்கலாம். காலம் கடத்தியது மட்டுமல்ல. முதல் அமைச்சர் அவர்கள் என்ன காரணம் என்று சொல்லமுடியாது, விவசாயச் சங்கத் தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்த தயார் என்று சொன்னபோது அவர்களை அழைத்து பேசியிருக்கலாம். இதில் கௌரவப் பிரச்னை என்ற முறையில் பார்க்க வேண்டியதில்லை. அழைத்திருக்கலாம், பேசியிருக்கலாம், பிரச்னையைத் தீர்த்திருக்கலாம். நானாக அழைக்க மாட்டேன், அவர்களாக வரட்டும் என்று சொல்லிக்கொண்டு இருந்துவிட்டார்கள். பிறகு கிளர்ச்சி நடந்தது. அதில் வன்முறை இருக்கவில்லை. ஆலடி அருணா அவர்களே அதைச் சொன்னார்கள். மே 26-ம் தேதி ஹர்த்தால் நடந்தபோது ஒரு சிறிய வன்முறை கூட நடக்கவில்லை. பின்னர், ஏற்கனவே நடந்ததுமாதிரி ஒரு பிரசாரம் செய்யப்பட்டது. குண்டு வைத்திருக்கிறார்கள் என்ற செய்தி வந்தது.

இதில் வேடிக்கை என்னவெனில், இந்த ஆட்சியில், வைக்கிற குண்டுகள் வெடிக்காத குண்டுகளாக இருக்கின்றன. இப்படிச் சில செய்திகள் வந்தன. பிறகுதான் வன்முறை நடந்தது. வன்முறைச் செயல்களை யார் செய்தார்கள் என்பதற்காகச் சொல்கிறேன். மே மாதம் 23-ம் தேதி பெண்கள் மறியலில் ஈடுபட்டார்கள். அப்படி ஈடுபட்ட பெண்களை போலீசார் வண்டியில் ஏற்றி ஒரு மைல் தொலைவிற்கு சென்று சுற்றிச்சுற்றி வந்து அவர்களை அங்கு விட்டு விட்டார்கள். அதுகுறித்து நான் டி.எஸ்.பி. (எஸ்.பி.) க்கு போன் செய்தேன் ஒன்றும் தெரியாது என்று அவர்கள் சொன்னார்கள். இரவு 12 மணி அளவில் அவர்களை விட்டார்கள். இரண்டு பெண்களை அடித்தார்கள். அலுவலகத்தில் நான் உட்கார்ந்திருந்த போது ஒரு மைல் நடந்து அவர்கள் வந்திருக்கிறார்கள். அப்போதும் போன் செய்தேன். டி.ஐ.ஜி.-க்கு. தெரியாது எனக்கு என்று

சொல்லிவிட்டார்கள். பந்த் நடப்பதற்கு முன்னால்—பந்த் 5-ம் தேதி நடக்கிறது—4-ம் தேதிக்கு முன்னால் 2-ம் தேதி செயல்வீரர்கள் கூட்டம் நடக்கிறது. கொள்கை விளக்கக் கூட்டம் நடக்கிறது. ஜூன் 25-ம் தேதி முதல் அமைச்சர் அவர்கள் இங்கு பேசுகிறார்கள். நேற்று அவர்கள் சொன்னார்கள், வன்முறையை ஆதரித்துச் சொல்லவில்லை என்று அண்ணா வழி நடப்பதாகச் சொன்னேன் என்று சொன்னார்கள். பிறகு பத்திரிகைகளைப் படித்துப்பார்த்தேன். அவர்கள் சொல்லியிருப்பது வன்முறைதான் வேண்டுமென்று சொல்லி கட்டளையிட்டால் முதல் அமைச்சர் பதவியைத் துறந்துவிட்டு அதற்கு தலைமை தாங்கத் தயார் என்று பேசியிருக்கிறார்கள். அண்ணா வழி என்ன வழி என்று சொல்லவில்லை. சொல்லாமல் விட்டு விட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அண்ணா வழி பலாத்கார வழி என்கிறீர்களா? காந்தி வழி என்று சொன்னால் என்ன வழி என்று மக்களுக்குப் புரிகிறதோ அதுபோல் அண்ணா வழி என்று சொன்னால் மக்களுக்குப் புரியும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: அண்ணா வழி என்ற பெயரால், அண்ணா சொன்ன கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற பெயரால் பல காரியங்கள் நடைபெறுகின்றன. அண்ணா வழி என்பதற்கு இப்பொழுது என்ன விளக்கம் சொல்கிறார்களோ தெரியாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நாங்கள் அண்ணா வழி தான் சென்று கொண்டிருக்கிறோம். நீங்கள்தான் அடிக்கடி வழி தவறிப்போளக் கொண்டிருக்கிறீர்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: மது விலக்கை ரத்து செய்தவுடனேயே யார் வழி தவறிவிட்டார்கள் என்பது தெரிந்துவிட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உங்கள் காங்கிரஸ் ஆளுகின்ற மஹாராஷ்டிரத்தின் நிலைமை என்ன?

திரு. ஏ. சுப்பிரமணியம்: மராட்டியர்கள் அண்ணா வழி செல்லவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவர்கள் காந்தி வழியில் செல்கிறார்களா?

திரு. ஏ. சுப்பிரமணியம்: ஆகவே, நீங்கள் வழி தவறி செல்கிறீர்கள் என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள். அதன் பிறகு மீண்டும் ஜூன் 7-ம் தேதி மாட்டுவண்டி ஊர்வலத்திற்குப் பிறகு தலைவர்கள் சென்னைக்கு

1972 ஆகஸ்ட் 11] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

வருகிறார்கள், பேச்சு வார்த்தைகள் நடத்துவார்கள் என்று பத்திரிகையில் செய்தி வந்தது. அப்படி வந்ததற்குப் பிறகு ஒரு அறிக்கை வருகிறது. அறிக்கை என்ன சொல்கிறது? முதல் அமைச்சர் அறிக்கையிலே சொல்கிறார்கள். "முதல்வர் பேசுவதற்கு ஒப்புக்கொண்டார். அதனால் போராட்டம் நிறுத்தப்பட்டது" என்று பத்திரிகைகளில் வந்த செய்தி தவறானது. தமிழக அரசு மீது உள்ள விரோத மனப்பான்மையால் வெளியிடப்பட்டதேயாகும். "அவர்கள் போராட்டத்தை நிறுத்திவிட்டு என்னை சந்தித்துப் பேசவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்கு முன்னாலே ஏற்கனவே கலெக்டர் அவர்கள் சொல்லியிருக்கிற செய்தி பத்திரிகையிலே வந்திருக்கிறது. அந்த பத்திரிகையும் எங்கள் பத்திரிகை அல்ல. "மாட்டு வண்டி ஊர்வலத்திற்குப் பிறகு விவசாயப் பிரதிநிதிகள் கலெக்டர் வி. சிவகுமார் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தினர்கள். போராட்டத்தைக் கைவிடுவதாக விவசாயிகள் சங்கம் ஒப்புக்கொண்டது" என்று 7-ம் தேதி இரவு கலெக்டரை டெலிபோனில் கேட்டபொழுது, "செப்ரசெண்டேடிவ் என்று இருப்பதை செப்ரெசெண்டெட் என்று பத்திரிகையாளர்கள் தவறுக எழுதிக் கொண்டு சென்று விட்டார்கள். விவசாய சங்க செப்ரசெண்டேடிவ்ஸ் என்று தான் இருக்கிறது" என்று அவர் சொன்னார். "அரசாங்கம் கேட்டுக்கொண்டதினால் தான் அவர்கள் நிறுத்தினர்கள். அது தான் உண்மை., நீங்கள் பேசுவதற்கு வாருங்கள்" என்று அழைத்தார். அந்த அடிப்படையிலே தான், போராட்டத்தை நிறுத்தக்கூடாது என்று வாதித்த விவசாயிகளோடு இரவெல்லாம் வாதாடி அவர்களை ஒப்புக் கொள்ள வைத்தோம். முதல் அமைச்சர் அவர்கள் பிறகு சொன்னார்கள். இம்மாதிரி நாங்கள் அழைக்கவில்லை, அவர்களாகவே போராட்டத்தை நிறுத்திவிட்டு வந்தார்கள் என்று. உண்மைக்கு புறம்பாக அறிக்கை விட்டார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் பேச்சு வார்த்தைக்கு மறுத்ததாகச் சொல்வது ஒரு பெரிய குற்றச்சாட்டாகும். அதுவும் அதை நிபத்தனையாக வைத்து போராட்டத்தை நிறுத்திவிட்டோம் என்று சொன்னால் நான் பெரிய குற்றவாளி ஆகிறேன். ஆகவேதான் 'பேச்சு வார்த்தைக்கு ஒப்புக் கொண்டார், அதனால் தான் போராட்டம் நிறுத்தப் பட்டது' என்ற செய்தியை மறுத்தேன், அவர்களோடு எப்பொழுதும் பேசுவதற்குத் தயாராக இருக்கிறேன். "போராட்டத்தை நிறுத்திவிட்டுப் பேச்சு வார்த்தைக்கு வந்திருக்கிறார்கள், நான் பேசுவதற்குத் தயாராக இருக்கிறேன்" என்றுதான் சொன்னேன்.

[1972 ஆகஸ்ட் 11

திரு. ஏ. சுப்பிரமணியம்: முதல்வர் அவர்கள் மிக நல்ல ராஜதந்திரி என்பது எனக்குத் தெரியும், ஆனால் இந்த விஷயத்தில் அவர்கள் அந்த ராஜதந்திரத்தைக் காட்டவில்லை. கட்சித் தலைவராகச் செயல்பட்டுவிட்டார். நான் அவரைச் சென்று பார்த்தாக முதலமைச்சர் நேற்று கூறினர். நானுகச் செல்லவில்லை. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் 'நீங்கள் முதல் அமைச்சரைப் பாருங்கள், இதைப்பற்றி பேசுங்கள்' என்று சொன்னர். முதலமைச்சரிடம் நான் சொன்னேன், "நீங்கள் இம்மாதிரி அறிக்கை விட்டிருக்கக்கூடாது. பேச்சுவார்த்தைகளுக்கு வந்தபொழுது போராட்டத்தை நிறுத்துவதில் அக்கறை செலுத்தி நல்ல படியாக முடிந்திருக்கவேண்டும். ஆனால் நீங்கள் அந்த வழியில் உங்களுடைய ராஜதந்திரத்தைக் கையாளவில்லை. போராட்டத்தை மீண்டும் நடத்துவதற்கு வழி செய்துவிட்டீர்கள்" என்பதை நானே சுட்டிக்காட்டிச் சொன்னேன். அதன் பிறகு போராட்டம் தொடர்ந்து நடந்தது.

வன்முறை என்று ஆளும் கட்சித் தோழர்கள் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இங்கே சொன்னர்கள். வன்முறை நடந்தது என்று சொன்னர்கள். மக்கள் தரப்பில் சில வன்முறைகள் ஆங்காங்கு நடந்திருக்கக் கூடும் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் யார் அதனைத் தொடங்கிவைத்தார்கள்? எப்படி நடந்தது என்பதனை நிச்சயம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஜூலை 4-ம் தேதி அன்று கோவையிலே தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், இவர்களின் தலைமையில் போலீஸ் லாரி, போலீஸ் உதவியோடு ஆயுதங்களோடு பல இடங்களில் ஊர்வலமாக வந்து, கடைக்காரர்களை மிரட்டினர்கள்; ஆனந்தவிகடன், அலைஓசை போன்ற பத்திரிகைகளை கடைகளிலிருந்து எடுத்து நெருப்புவைத்தார்கள். அதைப்பற்றி நான் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். ஒரு கோஷத்தைச் சொல்கிறார்கள். என்ன? "நாளை கடை அடைத்தால், நீங்கள் என்றைக்கும் கடையை திறக்க முடியாது". இந்தக் கோஷம் கோவையில் மட்டுமல்ல, சேலம், ஆத்தூர், மதுரை இப்படி ஒவ்வொரு இடத்திலும் அதே கோஷம் எழுப்பப்பட்டது. துணைத் தலைவர் அவர்களே, இப்படி ஒரு கோஷம் மாநிலம் முழுவதும் ஒரே கோஷம் எப்படி வந்தது, ஒரேமாதிரியாக 'நாளை கடை திறக்கவில்லை என்றால், என்றைக்கும் திறக்க முடியாது' என்ற கோஷம், திட்டமிடாமல் எப்படி வந்தது என்று நான் கேட்கிறேன்.

அது மட்டுமல்ல. சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். போலீஸ் துணையோடு அவர்கள் சென்று அந்தக் காரியங்களைச் செய்திருக்கிறார்கள். ஆயுதங்களோடு பல இடங்களில் சென்றிருக்கிறார்கள். பத்தி அன்று பினமேடு

1972 ஆகஸ்ட் 11] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

புதூரில் மாற்று கட்சியினர்களின் வீடுகளில் புகுந்து தாக்கியிருக்கிறார்கள். போலீஸ்காரர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். 6-ம் தேதி காலையில் பல்லடத்தில் பிணத்தைக் கொடுத்து விட்டோம் என்று முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். அவர்களாக பிணத்தைக் கொடுக்கவில்லை. பிணத்தை எடுத்துக்கொண்டு தான் போவோம் என்று சொன்ன பிறகு, தொலைபேசியில் யாருடனே கலந்து பேசி—யாரோடு பேசினார்களோ தெரியாது—பிறகு பிணத்தை எடுத்துக்கொண்டு போக அனுமதித்தனர்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பல்லடத்தில் இறந்தவரின் சடலத்தை கோவை நகரத்திற்கு எடுத்துச் செல்லவேண்டிய அவசியம் என்ன?

திரு. ஏ. சுப்பிரமணியம்: போராட்டம் நடக்கும்பொழுது, பிணங்களை எங்கே எடுத்துச்செல்வது என்பது போராட்டம் நடத்துபவர்கள் தீர்மானிக்க வேண்டிய விஷயம். ஊர்வலத்தில் வன்முறை வந்தால், அமைதிக்கு இடைஞ்சல் வந்தால் நீங்கள் கேட்கலாம். 1970-ம் ஆண்டு பெருமாநல்லூரில் துப்பாக்கிப்பிரயோகம் நடந்தது. போலீஸ் சூப்பிரெண்டென்டு பிணத்தைக் கொடுக்க முடியாது என்று சொன்னார், அமைதி கெட்டு விடும் என்று சொன்னார். போலீஸ் காரர் ஒருவர் கூட வராமல், இருந்தால், அமைதி காக்கின்ற பொறுப்பை நான் ஏற்கிறேன் என்று சொல்லி, அதே போன்று அமைதியாக ஊர்வலம் நடைபெற்றது.

அதற்குப் பின்னால் இங்கே நடந்தது என்ன? ஊர்வலம் அமைதியாக வருகிறது. ஊர்வலம் வரும்பொழுது சிலர் சொல்கிறார்கள். துப்பாக்கிப் பிரயோகம் நடக்கிறது என்று ஆட்களை விரட்டுகிறார்கள். ஊர்வலம் நகர்ந்து சென்றுகொண்டிருந்ததே தவிர, ஒன்றும் செய்யவில்லை. அப்படி நகர்ந்து செல்லும்பொழுது, ஆளுங்கட்சியினர் வீடுகளின் மாடிகளிலிருந்து சோடா புட்டிகளையும், கற்களையும் மவுன ஊர்வலத்தின்மீது வீசி எறிந்தார்கள். அங்கே இருந்து கழகத் தோழர்கள் மவுன ஊர்வலத்தை வழிமறைத்து அவர்களை அடித்தார்கள். சென்னையிலும் மவுன ஊர்வலம் தாக்கப்பட்டிருக்கிறது என்று பத்திரிகையில் செய்தி வந்தது . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் கூட நீங்கள் கோவை ஊர்வலத்தைப்பற்றிச் சொல்லும்பொழுது ஒரு வேளை இருக்குமோ என்று சந்தேகப்பட்டேன். சென்னையை ஒப்பிட்டதிலிருந்து புரிந்து கொண்டேன் எப்படி இருந்திருக்கும் என்று.

திரு. ஏ. சுப்பிரமணியம்: 6-ம் தேதி அன்று காலையிலே என்னுடைய அலுவலகம் தாக்கப்பட்டது. கோவை ஜில்லாவில் பஞ்சாயத்து அலுவலகம் தாக்கப்பட்டது. தாக்கப்பட்ட அடையாளங்கள் அப்படியே இருக்கின்றன.

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1972 ஆகஸ்ட் 11

யார் தாக்கினார்கள்? தி.மு.க. நகர மன்ற உறுப்பினர்கள். அவர்கள் வெற்றிக்காக நான் பாடுபட்டேன். நகர மன்ற உறுப்பினர்கள் வங்கியின் தலைவர் தலைமையிலே கழகத் தோழர்கள் தாக்கியிருக்கிறார்கள். அலுவலகத்தின் முன்னால் 18 சைக்கிள்கள் நிறுத்தப்பட்டிருந்தன. அந்த சைக்கிள்கள் நொறுக்கப்பட்டிருக்கின்றன. ரூ. 4,000, 5,000-க்கு சேதம் விளைவிக்கப்பட்டிருக்கிறது. ஆபீஸ் போர்டு சேதமாக்கப்பட்டிருக்கிறது. அத்தனையும் நடந்தது, நடக்கும்பொழுது அங்கே போலீஸ் முன்னால் இருந்துகொண்டு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் பிறகு மாலையிலே தான் ஆங்காங்கு சில வன்முறைச் செயல்களை மக்கள் செய்திருக்கிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறது. அதற்கு முன்னால் 6-ம் தேதி மாலை வரையில் எந்த மக்கள் தரப்பிலும் எந்த வன்முறைச் செயலும் கிடையாது என்று நான் சொல்கிறேன்.

அரசாங்கத்தில் இருப்பவர்கள் எந்த வன்முறைச் செயலும் கூடாது என்று சொல்கிறார்கள். நான் அதை முழுமையாக ஆதரிக்கிறேன். நான் பல போராட்டங்களை கோவையில் நடத்தியிருக்கிறேன். வன்முறை தலைகாட்டவில்லை. வன்முறை தவிர்க்கப்படவேண்டும் என்பது எதிர்தரப்பிலுள்ளவர்களுடைய பொறுப்பு மட்டுமல்ல. அரசு அதனைப் பார்த்துக்கொள்ள வேண்டும். அரசே, ஆளுகின்ற கட்சியே வன்முறையை கட்டவிழ்த்துவிட்டு, பெரிய வன்முறைப் போராட்டம் நடந்திருக்கிறது என்று சொல்கிறார்கள்.

துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஒரு வழக்கறிஞர். பார்ஸ்ட் இன்பர்மேஷன் ரிபோர்ட் என்பது எவ்வளவு முக்கியம் என்பது உங்களுக்குத் தெரியும். எஸ்.ஐ.ஆர். முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார். பெத்துநாயக்கன்பாளையத்தில் போலீஸ் ஸ்டேஷன் தாக்கப்பட்டது. அதனால் தான் துப்பாக்கிப் பிரயோகம் என்று. அதற்குப் பிறகு பல அறிக்கைகள் வருகின்றன. போலீஸ் ஸ்டேஷன் இல்லாமல் போலீஸ் ஸ்டேஷன் தாக்கப்பட்டது என்ற செய்தியைக் கொடுத்திருக்கிறார்கள். நமக்குத் தெரியும், போலீஸ் இலாகாவில் எப்படியெல்லாம் செய்வார்கள், ஜோடிப்பார்கள் என்பது நமக்குத் தெரியும். போலீசில் எப்படி எப்படியெல்லாம் வழக்கு சோடிப்பார்கள் என்று நமக்கெல்லாம் தெரியும். இதுபற்றி பல நேரங்களிலே உயர்நீதி மன்றங்களில்கூட எடுத்துக்காட்டி கண்டித்திருக்கிறார்கள். போலீசார் என்றைக்கும் தவறு செய்ததாக ஒப்புக்கொள்ளுவதில்லை. ஐயம்பாளையம் ஒரு பிறு கிராமம். என்ன நடந்தது அங்கே? ஒன்றுமே நடைபெறவில்லை. ஆனாலும் வேண்டுமென்றே போலீசார் ஒரு பெட்ரோல் லாரியை அழைத்துக் கொண்டுபோய் அங்கே நிறுத்திவைத்து விவகாசம் செய்திருக்கிறார்கள்.

1972 ஆகஸ்ட் 11] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

சட்டம் அமைதியைப் பாதுகாப்பது மட்டும் போலீசாருடைய பொறுப்பல்ல, அதே நேரத்தில் மக்கள் ஆத்திரம் அடைந்திருந்தால் அல்லது மக்கள் கொதிப்படைத்திருந்தால் தந்திரத்தோடு சமாளிக்கவேண்டிய பொறுப்பும் அவர்களுக்கு இருக்கிறது. தடியையும் துப்பாக்கியையும் மட்டும் அவர்கள் ஏந்தியிருக்க வேண்டிய பொறுப்பு மட்டுமில்லை, அத்துடன் பொறுமையையும் நிதானத்தையும் அவர்கள் கடைபிடிக்க வேண்டிய பொறுப்பும் அவர்களுக்கு இருக்கிறது. அதுமட்டுமில்லை துணைத் தலைவர்களே, நம் மாண்புமிகு கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் பேசும்பொழுது ஆளும்கட்சி உறுப்பினர்கள் கொதித்து எழுந்தார்கள், "ஜாதியைப் பற்றிக் குறிப்பிடாதீர்" என்று. நான் சொல்லவேன் இந்த ஜாதி உணர்வினை யார் தூண்டிவிடுகிறார்கள் என்று. பஞ்சாலைத் தொழிலாளர்கள் போராட்டம் நடக்கும்போது நான் சிறைக்குள் இருந்தேன். அப்போது சிங்கநல்லூர் கூட்டத்தில் ஆளும்கட்சியைச் சேர்ந்த மேலவை உறுப்பினர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் பேசுகிறார்கள் அங்கே. என் ஜாதியைக் குறிப்பிட்டுப் பேசுகிறார்கள். நான் ஜாதியை மறந்து வெகு ஆண்டுகளாகிவிட்டன. ஆனால் இவர்கள் பிரச்சனைகளைப் பேசுவதைவிட்டுவிட்டு ஜாதியினைப் பற்றிப் பேசினார்கள். இந்த விவசாயிகள் போராட்டத்தின்போது ஆளும் கட்சியினர் பலர் ஜாதியைக் குறிப்பிட்டுப் பேசினார்கள்.

தொடக்கத்திலிருந்தே பார்க்கிறேன், இதை தவருன வழியில் அணுகியிருக்கின்றார்கள் ஆளும் பொறுப்பில் உள்ளவர்கள். இதில் ஈடுபட்டுள்ளவர்களைப் பழித்துக்கூறி இந்த இயக்கத்திற்கு ஒரு இழுக்கினை உண்டாக்கி இதை ஒழித்துக்கட்டுவது என்ற முடிவோடு இருந்த காரணத்தினால்தான் அரசு ஆரம்பத்திலிருந்தே இந்தக் கோரிக்கைகளை முறையாக அணுக முடியவில்லை, இதன்காரணமாகத்தான் இந்தப்போராட்டம் வலுப்பெற்றுவிட்டது என்ற குற்றச்சாட்டை வேதனையோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இன்னும் ஒன்றை வேதனையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். துணைத்தலைவர்களே, நமது மாநிலத்தைப்பொறுத்த வரையில் ஒரு போக்கு உருவாகியிருக்கிறது. அதாவது மாற்றுக் கருத்துக்களைச் சகித்துக்கொள்ள முடியாத ஒரு போக்கு—எதிர்ப்பினைச் சகித்துக்கொள்ள முடியாத ஒரு போக்கு—இதுதான் பாலஸ்தின் தொடக்கம். இந்த வார்த்தையை உபயோகிப்பதற்காகக் கோபித்துக்கொள்ளக்கூடாது. மாற்றுகட்சியினரின் விமரிசனத்தைத் தாங்கிக்கொள்ளமுடியாத போக்கினைப் பார்க்கிறோம். சிறையில் வேண்டுமென்றே எப்படியெல்லாம் கொடுமைப் படுத்தினார்கள்? வேலூர்ச் சிறையில் அடைக்கப்பட்டவர்களுக்கு தண்ணீரே கொடுக்கப்பட

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1972 ஆகஸ்ட் 11

வில்லே. இதுபற்றி அமைச்சர் மாதவன் அவர்களிடம் சொன்னபோது,, "வேலூரில் தண்ணீர் பஞ்சமே இல்லையே" "என்னூர் "அதனால்தான் கேட்கிறேன், ஏன் குடி தண்ணீர் கூட கொடுக்கவில்லே என்று" என்று நானும் திருப்பிக்கேட்டேன். இதே கேள்வியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பத்திரிகையாளர் கேட்டபோது, அவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? 'சிறையில் நிலப்பிரபுக்களுக்கு வேண்டிய வசதிகள் அனைத்தும் கிடைக்குமா' என்ற பொருள்பட பதில் அளித்தார். குடிதண்ணீர் கேட்பது நிலப்பிரபுக்களுக்களான வசதியா? முதல்வர் வாயிலிருந்து இப்படிப்பட்ட பதில் வந்ததே என்று வேதனைப் பட்டேன். சிறைக்குப் போயிருந்த இடத்தில் மொத்தம் 25 ஆயிரம் பேரில் ஒரு சில பெரிய நிலச்சுவான்தாரர்கள் இருந்தார்கள் என்பதை ஒப்புக்கொள்கிறேன். எந்தப் போராட்டத்தில்தான் இருக்கவில்லே? ஆளும் கட்சி நடத்திய போராட்டங்களில் இறங்கியவர்கள் எல்லாரும் பரம ஏழைகள்தானு? ஏழைகள் இருக்கிறார்கள், வசதிபடைத்தவர்களும் இருக்கின்றார்கள். சுதந்திரம் பெற்ற வெள்ளிவிழாவினைக் கொண்டாட இருக்கிறோம். யார் யார் அதில் இருந்தார்கள்? ஏழைகள் இருந்தார்கள், டாட்டாவும் பிர்லாவும் கூடத்தான் இருந்தார்கள். பிரச்சனையின் தன்மையைத்தான் பாக்க வேண்டுமே தவிர, போராட்டத்திலே சேர்ந்திருக்கின்ற ஒன்றிரண்டு நிலச்சுவாந்தாரர்களே வைத்து இந்த இயக்கத்தையே குறை கூற முற்படுவது நியாயமாகாது. இதை வேறுயாராவது சொன்னல்கூட புரிந்து கொள்ளலாம், ஆனல் நல்ல சாமர்த்தியம் உள்ளவர் ஆழமாகப் பிரச்னையைப் பார்க்கும் திறன்படைத்தவர் அவர் சொல்லும்போதுதான் அவர் வேறு நோக்கோடு இதைப் பார்த்தார், இதை ஒடுக்கிவிட வேண்டும் என்று நினைத்தார் என்று எண்ண இடம் ஏற்படுகிறது. "விவசாயச் சங்கத்தின் சார்பில் நடந்த தேர்தலில் ஒருவர் போட்டியிட்டு வெற்றிபெற்றார், அவரையும் கழகத்திற்குள் இழுத்துக்கொண்டுவிட்டோம், ஆகவே விவசாயிகளே என்ன செய்தாலும் எவரும் கேட்கமாட்டார்" என்று கழகத் தோழர்கள் கொடுத்த தவறான தகவல்களே வைத்துக்கொண்டு மொத்தத்தில் இப்படி நடந்திருக்கிறதோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

முதல்வர் அவர்கள் சொன்னர்கள் "பொய் வழக்கினைப் போட்டிருந்தால் கோர்டில் சந்தித்திருக்கலாமே, என் வாபஸ் வாங்கச் சொன்னீர்கள்" என்று. முதலமைச்சர் அவர்களும் ஒரு காலத்தில் சிறையில் இருந்தவர்தான். போலீசார் நினைத்தால் எத்தனை விதமான வழக்குகளையும் போடலாம். ஆனல் போட்ட வழக்குகளையெல்லாம் நீதி மன்றத்தில் அனைவருமே போய் சந்திப்பது என்றால் முடிகிற காரியமா என்று தயவு செய்து எண்ணிப்பார்க்க வேண்டும்.

1972 ஆகஸ்ட் 11] [திரு. எ. சுப்பிரமணியம்]

துணைத் தலைவரவர்களே 'கோர்ட்டுகளில் சந்தித்துப் பார்ப்பதுதானே' என்று சொல்லுவது ஜனநாயகத்திற்குப் பொருத்தமான வார்த்தைகளாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இன்னும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் துணைத் தலைவரவர்களே. தமிழகத்தைப் பொறுத்தவரையில் இன்று போலீஸ் என்பது ஆளும் கட்சிக்கு தூணாக நிற்கும் ஒரு அமைப்பாக முக்கால்வாசி மாறிவிட்டது. இந்தப் போராட்டத்தின்போது இதை நன்கு பார்த்தோம். இதைப்பற்றிக் கேட்டால், அதிகாரிகள் சொல்லுகிறார்கள், 'நாங்கள் என்ன செய்ய முடியும், மேலிடத்து உத்திரவு' என்று. ஆளும் கட்சியினர் எதை வேண்டுமானாலும் செய்யலாம், வழக்கு இல்லை. ஆனால் அதே காரியத்தை எதிர்தரப்பினர் செய்தால் வழக்குப்போடுவது என்ற நிலை. வலிவான மாற்றுக்கட்சியினர் இருக்கும் கோவையிலேயே இந்த நிலை என்றால், அப்படி இல்லாத இடங்களில் நிலைமை எப்படி இருக்கும் என்பதை நீங்களே எண்ணிப் பார்த்துக் கொள்ளலாம். உதாரணமாக தொழிற்சங்க அரங்கிலுள்ள நிலைமையைச் சற்று சொல்லுகிறேன். தொழிற்சாலைகளில் சில தொழிலாளர்கள் சஸ்பெண்டு செய்யப் பட்டு இருந்தால் அவர்கள் மாற்றுக் கட்சியினைச் சார்ந்தவர்களாக இருந்தால் அவர்கள் உடனே வெளியே போய்விட வேண்டும். போகவில்லை என்றால் போலீஸ் வந்து அவர்களை கைது செய்து வழக்குப் போடுகிறது. அதே தொழிலாளர்கள் ஆளும் கட்சியினைச் சார்ந்தவர்களாக இருந்தால் போலீசார் அதில் தலையிடுவதில்லை. முன்பும் இதுபற்றி இந்த அவையில் சொல்லியிருக்கிறேன், இப்போதும் சொல்லுகிறேன், இது இன்னும் நீடிக்கிறது என்றால் இது என்ன நிலைமை துணைத் தலைவரவர்களே? "எங்கள் மீது காழ்ப்பு உணர்ச்சி" என்று சில தி.மு.க. உறுப்பினர்கள் இங்கு சொன்னார்கள். எனக்குக் காழ்ப்பு உணர்ச்சி ஒன்றும் இல்லை. ஆனால் மெஜாரிட்டி இருக்கிறது என்ற காரணத்தினால் மற்றவர்களுடைய ஜனநாயக உரிமைகளைப் பறிப்பது என்றால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. வார்த்தைகளால் சொல்லும்போது மிகமிக கெட்டிக்காரத்தனமாகப் பேசிவிடுகிறார்கள், ஆனால் செயலில் வரும் போது உரிமைகள் பறிக்கப்படுகிறதைப் பார்க்கிறோம். ஆளும் கட்சி, அரசு, இரண்டும் ஒன்று என்ற நிலை உண்டாக்கிவிட்டது.

இது மட்டுமில்லை துணைத் தலைவரவர்களே, அரசாங்க நிர்வாகத்தில் ஆளும் கட்சியினரின் தலையீடு அளவில்லாமல் போய்விட்டது. சில ஆளும் கட்சித் தோழர்கள் சொல்லுகிறார்கள், எங்களுக்கும் சிரமமாக இருக்கிறது என்று. நீங்கள் விரும்புவதெல்லாம் நூற்றுக்குநூறு இன்னும் நிறைவேறவில்லை என்ற

சௌமமாக இருக்கலாம். ஒரு சில சந்தர்ப்பங்களில் கோபத்தால் அதிகாரிகளைக் கூடக் கேட்டுவிடுகிறேன் 'நீங்கள் எதற்குத்தான் இருக்கிறீர்கள்' என்று. அந்த அளவிற்கு வேதனை ஏற்படுகிறது.

கூட்டுறவுத் துறையில் எனக்கு ஒரு அனுபவம். அன்று நான் தோழமைக் கட்சித்தான், சிங்காதல்லூரில் ஒரு மகளிர வங்கி ஆரம்பிக்க வேண்டும் என்று என் கட்சித் தோழர் ஒருவர் ஸ்பான்சர் செய்தார். அவர் இன்றையதினம் தேசியக் காங்கிரசில் இருக்கிறார். அந்த வங்கியை பதிவு செய்ய வேண்டும் என்று கேட்டார். ஒரு வருஷகாலமாக ரெஜிஸ்டர் செய்யமுடியவில்லை. அதிகாரிகளைக் கேட்டால், 'பேப்பர் மேலே இருக்கிறது' என்று சொன்னார்கள். நான் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களை அணுகினேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அது என் துறையல்ல, கூட்டுறவுத் துறை ஐந்தாறு அமைச்சர்களிடம் இருக்கிறது. பல முறை எடுத்துச் சொல்லியும் அவர்களுக்கு விளங்கமாட்டேன் என்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய பொறுப்பில்தான் இருந்தது. அதுசம்பந்தமாக நானேதான் இந்த சட்ட மன்றத்தில் கேள்வி கேட்டு, அவர்களே பதில் சொன்னார்கள். அந்த பாங்குக்கு தலைவராக யாரைப்போடலாம் என்று இருந்தபோது, தி.மு. கழகத்தைச் சேர்ந்தவரைத் தலைவராகப் போடலாமா என்று கேட்டார்கள். அப்போது தான் சொன்னேன், அதற்கு 'ஸ்பான்சராக' இருந்தவரையே தலைவராகப் போடலாம் என்று. ஆனால் போடவில்லை. மீண்டும் இது பற்றி அமைச்சரவர்களைக் கேட்டேன். டைரக்டர்களை நியமிக்கும் பொறுப்பு இப்போது என்னிடம் இல்லை என்று சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : துணைத் தலைவரவர்களே, கனம் அங்கத்தினர் மீண்டும் மீண்டும் நான்தான் பொறுப்பு என்று என்னைக் காட்டி காட்டிப் பேசுகிறார்கள். அதற்கு நான் பொறுப்பு இல்லை. அது வேறு ஒரு அமைச்சரின் பொறுப்பில் இருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : டைரக்டர்களை நியமிக்கும் பொறுப்பை என்னிடமிருந்து முதலமைச்சரவர்கள் வாங்கிக்கொண்டார்கள் என்று சொன்னார்கள். நான் முதலமைச்சரையும் பார்த்துப் பேசினேன். ஆனாலும் கழகத்தைச் சேர்ந்த ஒருவரை, வங்கிக்காக எதுவும் செய்யாத ஒருவரை அந்த பாங்குக்குத் தலைவராகப் போட்டுவிட்டார்கள். கழகத்தில் ஆட்சி நடைபெறும்போது கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு சில சலுகைகள் செய்யப்படும். அதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. என்னுடைய குறை என்ன

வெள்ளரசு, மற்றவர்களுக்கு கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருந்தும், தகுதி இருந்தும் அவர்களுக்கு கொடுக்காமல், எல்லாம் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கே கொடுக்கப்படுகிறதே என்பதுதான்.

இன்னொன்று வனவாசி பக்தாடி பாரஸ்டு பிரச்சனையைப் பற்றி பேசினார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரம் ஆகிவிட்டது. சீக்கிரமாக முடியுங்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : இன்னும் ஒரு சில விஷயங்களை கூறி, முடித்து விடுகிறேன். அந்தப் பிரச்சனைக்கு நாங்கள்தான் ஆதாரவு தந்தோம் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தப் பிரச்சனை அவர் முதலமைச்சராக வருவதற்கு முன்பே நடைபெற்றது. அர்த்தநாரீஸ்வரர் கவுண்டர் தான் அதை எதிர்த்தவர் என்றும் சொன்னார்கள். அர்த்தநாரீஸ்வரர் கவுண்டரோடு சேர்ந்து மாண்புமிகு உறுப்பினர் கந்தப்பன் அவர்களும் தான் எதிர்த்துக் கொண்டிருந்தார்கள் என்பது வரலாறு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த விவாதத்தில் நாங்கள், நீங்கள் என்று பேசுங்கள். ஆனால் அப்போது ஒன்றுகச் சேர்ந்து 'நாமாக' இருந்தோம். எனவே, அந்தப் பிரச்சனையில் வேறுபடுத்தாமல் நாம் என்றே சொல்லலாமே.

திரு. ஏ. சுப்பிரமணியம் : நான் சொல்வது நீங்கள் வருவதற்கு முன்னால் நடந்த சம்பவம். 15 வருடங்களுக்கு முன்பு தொடங்கிய சரித்திரம் இது.

திரு. செ. கந்தப்பன் : 1967 தேர்தலுக்கு முன்பு, அப்போதிருந்த ஆட்சியாளர்களின் கொடுமையினால், அங்கே குடியிருந்தவர்கள் நிலத்தை விட்டு வெளியேற்றப்பட்டனர். அவர்களை மீண்டும் அங்கே குடியமர்த்த வேண்டும் என்ற பிரச்சனையில் நண்பர்கள் சுப்பிரமணியம், சுரேந்திரன் அவர்களோடு நானும், எனக்கு அருகில் இருக்கும் நண்பர் ஆறுமுகமும் பங்குகொண்டோம். அன்னை அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு ஏற்கெனவே 3, 4 மாதங்களுக்கு முன்பாகவே நிலத்தை விட்டு, வெளியேற்றப்பட்டு, திண்டாடிக் கொண்டிருந்த மக்களை அங்கு குடியமர்த்தினர்கள். பிறகு கலைஞர் அவர்கள் அவர்களுக்கு பட்டா வழங்கினர்கள். இந்த உண்மை அவர்களுக்கு தெரிந்திருந்தும், நான் எதிர்த்தேன் என்று அபாண்டமான ஒரு பழியை என்மீது சுமத்துகிறார்கள். அப்போது நடைபெற்ற அவர்கள் மாநாட்டிற்கு என்னையும் அழைத்திருந்தார்கள். அந்த மாநாட்டிலேயே இதைப்பற்றி நான் சொல்லியிருக்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: கடைசியாக நான் சொல்ல விரும்புவது . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைப்பற்றி பேசுங்கள். அதற்கு சம்பந்தமில்லாதவைகளைப்பற்றி எல்லாம் பேசி நேரத்தை வீணுக்காதீர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: துணைத் தலைவரவர்களே, தங்களுடைய கவனத்திற்கு இந்த நேரத்தில் ஒன்றை கொண்டுவர விரும்புகிறேன். இந்த விவாதத்தில் இன்னும் சில கட்சித் தலைவர்கள் பேசவில்லை. அவர்கள் பேசி முடிக்கவேண்டும். அப்போதுதான் நாளை காலை அவர்களின் உரைகளுக்கு நான் பதில் சொல்லமுடியும். அதற்கு பிறகு தீர்மானத்தை கொண்டுவந்திருக்கிற டாக்டர் ஹாண்டே அவர்களும், திரு. தங்கமணி அவர்களும் பேசவேண்டும். ஆகவே, இன்னும் எவ்வளவு நேரம் சபையை நீட்டிக்கலாம் என்று கட்சித் தலைவர்களே முடிவு செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சுப்பிரமணியம், நீங்கள் சிக்கிரம் முடியுங்கள். இன்னும் எவ்வளவு நேரத்தில் முடிப்பீர்கள்? உறுப்பினர்கள் இப்படி அதிகமாக நேரத்தை எடுத்துக்கொண்டால், அவரவர் கட்சித் தலைவர்களின் நேரம் தான் குறையும். அதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: துணைத் தலைவரவர்களே, இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். குறிப்பாக தற்போது நடைபெற்ற விவசாயிகள் போராட்டத்தில் பலபேர் உயிரிழந்திருக்கிறார்கள். அரசாங்கத்தின் கணக்குப்படி 16 பேர் இறந்திருக்கிறார்கள். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்திருக்கிறார்கள். 25,000 பேர் சிறையிலடைக்கப்பட்டார்கள். இத்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததின் நோக்கமே இந்த அரசாங்கத்தின் இப்படிப்பட்ட ஜனநாயகத்தை பழிக்கின்ற நிலை, ஜனநாயகத்தை அழிக்கின்ற நிலை மாறவேண்டும்; பல்வேறு துறைகளிலே நடைபெறுகின்ற அட்டூழியங்கள் ஒழியவேண்டும்; நிய செயல்கள் மாறவேண்டும் என்பதற்காகத்தான். ஆகவே, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நாம் குறிப்பிட்ட நேரம் மாலை 7 மணி வரை பேரவை நடைபெறும் என்று. இப்போது 7 கழிந்துவிட்டது. அதனால் 7½-க்கு முடித்துக்கொள்ளலாமா? (பல உறுப்பினர்கள்: முடித்துவிடலாம்) எதற்கும் ஒரு வரையறை இருக்கவேண்டும். இன்னும் 15 நிமிடங்கள் பேசி முடித்துவிடுங்கள்.

1972 ஆகஸ்ட் 11]

திரு. நா. வீராசாமி: துணைத் தலைவரவர்களே, எங்களுக்கு ஒதுக்கப்பட்ட மூன்று மணி நேரத்திலும், ஒரு மணி நேரத்தைக் குறைத்துக் கொண்டு, இரண்டு மணி நேரம் போதுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த இரண்டு மணி நேரத்தையாவது நாங்கள் பயன்படுத்திக் கொள்கின்ற வகையில் நேரம் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நாளைக் காலையிலும் விவாதம் நடைபெறட்டும் முதலமைச்சர் மாலையில் பதில் சொல்லலாம். எங்களுக்கு ஒதுக்கியிருக்கும் 15 நிமிடம் போதாது. இந்த 15 நிமிடத்தில் பேசுவதைவிட பேசாமலே இருந்துவிடலாம் (சில குரல்கள்—இப்படிப் பேசிக்கொண்டே இருந்தால் போதும்).

*** திரு. துரைமுருகன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்திலே எதிரும் புதிருமாக இருக்கின்ற கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்—கலைஞரின் ஆட்சியின்மீது கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரித்தும், ஆளும் கட்சியிலுள்ள நண்பர்கள் அதை எதிர்த்தும் கழிந்த இரண்டு நாட்களாகவும் இன்றும் விவாதம் நடைபெற்றிருக்கிறது. தான் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வந்தவுடனே ஏதோ பூதாகரமான விஷயங்களைக் கொண்டுவரப் போகிறார்கள், என்ன நடக்குமோ ஏது நடக்குமோ என்று அச்சப்பட்டேன். பிறகுதான் தெரிந்தது அப்படி ஒன்றும் இல்லையென்று.

டாக்டர் ஹாண்டே அவர்கள் பூனையைப் பிடித்துக்கொண்டுவந்து இதுதான் புலி என்று காட்டினார்கள். திரு. தங்கமணி அவர்கள் எலியைப் பிடித்துக் கொண்டுவந்து இதுதான் யானை என்று காட்டினார்கள். எலியும் பூனையும் உயிருள்ளனவா என்று பார்த்தால் இல்லை. செத்துப் போனவை. உயிரோட்டம் இல்லாதவை. இந்தத் தீர்மானத்தை ஆதரித்து மற்ற நண்பர்களும் சுப்பு, சுப்பிரமணியம் இன்னும் பலரும் இதேவிதமாகத்தான் பேசினார்கள்.

எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் மதுரை மாநாட்டிலிருந்து சிறிது உடல் நலமில்லாமல் வந்து இருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு ஒன்றுச் சொல்லிக்கொள்கிறேன், நீங்கள் இந்த விவாதத்திற்குப் பதிலளிக்க வேண்டிய தில்லை. நாங்களே பதில் கூறிவிடுகிறோம். ஏனென்றால் இது ஒரு பெரிய பிரச்சனையில்லை. ஒரே பாடலைப் பல ராகத்தில் பாடுகின்ற அரசியல் பாகவதர்களாகத்தான் இவர்கள் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

[1972 ஆகஸ்ட் 11

திரு. கே. டி. கே. தங்கமணி: அரசியல் கட்சிகளைப் பார்த்து, எம்.எல்.ஏ. களைப்பார்த்து அரசியல் பாகவதர்கள் என்று சொல்லலாமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சும்மா நகைச்சுவைக்காகச் சொல்கிறார். அவ்வளவுதான்.

திரு. துரைமுருகன்: ஹாண்டே அவர்கள் பேசும்போது மதுரை மேயர் முத்து அவர்களைப் பற்றித்தான் அதிகமாகப் பேசினார்கள். அடுத்து சுப்பு, தங்கமணி போன்றவர்களும் சொன்னார்கள். அப்போது எனக்கு ஒரு சந்தேகம் வந்துவிட்டது. இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் மதுரை மேயர் முத்து மீது கொண்டுவரப்பட்டதா அல்லது கலைஞர் ஆட்சிமீது கொண்டுவரப்பட்டதா தங்கமணி போன்றவர்களும் சொன்னார்கள். அப்போது எனக்கு ஒரு சந்தேகம் வந்துவிட்டது இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் மதுரை மேயர் முத்து மீது கொண்டுவரப்பட்டதா அல்லது கலைஞர் ஆட்சிமீது கொண்டுவரப்பட்டதா என்று.

மேலும் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள், இந்தத் தீர்மானம் உங்கள் நன்மைக்காகத்தான் கொண்டுவரப்பட்டது என்று. ஆடு நனைகிறதே என்று ஓநாய் கண்ணீர் விட்டமாதிரி இருக்கிறது! அடுத்து உங்கள் மாநாட்டுக்கு வரவர கூட்டம் குறைந்துவிட்டது வசூல் குறைந்துவிட்டது என்று சொன்னார்கள். பேராசிரியர் அண்ணா அவர்கள் அடிக்கடிச் சொல்வார்கள், 'கண்ணாடி வீட்டுக்காரன் கையில் கல்லை எடுக்கக்கூடாது' என்று. எங்கள் மாநாட்டுக்கு தாசில்தார்களை வைத்து பணம் வசூல் செய்ததாகவும் குற்றம் சாட்டினார். அப்படி ஒன்றும் நடைபெறவில்லை.

மதுரை மாநாட்டை அவர் பார்த்திருந்தால் எங்களுக்கு எவ்வளவு கூட்டம் வருகிறது, கூட்டம் குறைந்திருக்கிறதா கூடியிருக்கிறதா என்று தெரிந்திருப் பார்கள். மூன்று லட்சம் பேர்களுக்குமேல் அங்கே கூடி இருந்தார்கள். வேறு பல கட்சிகளும் கூட்டம் நடத்துகிறார்கள். தாசப்பிரகாஷ் ஓட்டலிலும் பிற ஓட்டுக்குப் புறங்களிலும் கூட்டம் நடத்துகிறார்கள். எங்கள் மாநாட்டு மேடை அளவுக்குக் கூட இராது. அப்படிப்பட்ட கட்சிகளுக்கு அகில இந்திய கட்சி என்று பெயர் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அகில இந்தியத் தலைவர்களும் அந்தக் கூட்டங்களுக்கு வருகிறார்கள்.

சொல்கிறார்கள், தாசில்தாரை வைத்துப் பணம் வாங்குகிறார்கள் என்று. மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே நான் பெருமையோடு சொல்லிக் கொள்வேன்—இன்றைக்கு அகில இந்தியாவிலுமே சிறப்புக் கூட்டம் போட்டு கட்டணம் வசூலிக்கிற கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான்

1972 ஆகஸ்ட் 11] [திரு. துரைமுருகன்]

இருக்கிறது. வேறு எந்தக் கட்சிக் கூட்டத்திற்கும் அழைப்புக் கட்டணம் என்று வைத்தால் யாரும் வரமாட்டார்கள். இன்றைக்குத் தமிழ்நாட்டில் கழகத் தோழர்கள் பதினைந்து லட்சம் பேர் இருக்கிறார்கள். கலைஞர் நாலைக்கே ஒரு அறிக்கை விட்டால் ஆளுக்கு ஒரு ரூபாய் என்பதாக பதினைந்து லட்சம் ரூபாய் வசூலாகிவிடும். தாலித்தாலைவிட்டு, மனியக்காரரைவிட்டு, கணக்குப் பிள்ளையைவிட்டு பணம் வசூல் பண்ணுகிற பரிதாபகரமான நிலையில் திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கவில்லை என்பதை நான் மிக திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டாவது குற்றச்சாட்டு சிறைச்சாலை சரியில்லை என்பதாகும். சிறைச் சாலை என்பது பைவ் ஸ்டார் ஹோட்டலா? சோபா கம் பெட்டா போட் டிருக்கும்? உங்கள் காலத்தில் இருந்ததைவிட இப்போது மிக நன்றாகத்தான் இருக்கின்றன. காலையில் இட்டிலி கொடுக்கிறார்கள். முன்பு இரும்புப் பாத்திரங் களில் உணவு ஆக்கினார்கள் என்றால் இப்போது பித்தளை பாத்திரங்கள் உபயோகிக்கப்படுகின்றன. (குறுக்கீடு)

இன்னொரு முறை சிறைச்சாலைக்கு வாங்க—எல்லாவற்றையும் பார்க்கலாம். வெளி உலகத்திற்கும் சிறைச்சாலைக்கும் வித்தியாசம் இல்லையா? இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது நான் சிறை சென்றேன். திரு. ஓராண்டே அவர்களுக்கு அந்த அனுபவம் இல்லை. எங்களை எல்லாம் அப்போது அழைத்து வைத்துக்கொண்டு அறிஞர் அண்ணா அவர்கள் ½ மணி நேரம் உபதேசம் செய்தார்கள். நீங்கள் எல்லாம் மாணவர்கள், ஓட்டல்களில் இலைபோட்டுச் சோறுபோடுவதுபோல இங்கே போடுவார்கள் என்று நினைக்காதீர்கள். கொடுத்ததை உண்ண வேண்டும். கஷ்டத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்பதாக சிறைச்சாலை தத்துவத்தை எடுத்து விளக்கினார்கள். நீங்கள் சிறைச் சாலை தத்துவத்தைப் புரிந்துகொள்ளவில்லை. அவை என்ன பைவ் ஸ்டார் ஹோட்டலா? அதனால்தான் உங்களில் பலர் திரும்பிவந்துவிட்டீர்கள்.

பெருமதிப்பிற்குரிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் எப்போதும் அமைதியாகப் பேசக்கூடியவர். ஆனால் இந்த முறை என்னவோ அப்படிப் பேச வில்லை. அவர் பேச்சில் காரம் இருந்தது. பொருள் இல்லை. உங்களது மகா நாட்டில் கலைஞரை, நாவலரை எல்லாம் உலகத் தலைவர்கள் என்று போட்டுக் கொள்கிறீர்களே என்றார். நாங்கள் போட்டுக்கொள்கிறோம். அதில் என்ன தவறு? எங்கள் நாவலர் அவர்கள் சொல்வார்கள். "நாங்கள் எங்கள் அண்ணாவை அறிஞர் என்று சொல்லிக்கொள்கிறோம். உங்களுக்கு எல்லாம் குத்தலானேன் குடைவானேன்!" என்று கேட்பார்கள். அதைத்தான் நானும் கேட்கிறேன். எங்கள் கட்சி மகாநாட்டில் எங்களது தலைவர்களை எல்லாம்

[திரு. துரைமுருகன்] [1972 ஆகஸ்ட் 11

நாங்கள் உலகத் தலைவர்கள் என்று போட்டுக்கொள்கிறோம். அதில் தவறு என்ன? உங்கள் மகாநாட்டில் கல்யாணசுந்தரத்தை உலகத் தலைவர் என்று போட்டுக்கொள்ளுங்களேன். யார் கல்யாணசுந்தரம் என்று கேட்பான். தொல்காப்பியர் உலகம் என்பதற்கு என்ன இலக்கணம் வகுக்கிறார்? 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்கிறார். எங்களது தலைவர்கள் அறிவாளிகள், எங்களது தலைவர்கள் சான்றோர்கள். வன்முறையாளர்களின் தலைவர்கள் அல்ல, அண்டர் க்ரவுண்டு பேர்வழிகளுக்குத் தலைவர்கள் அல்ல. உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே என்பதாக தொல்காப்பியம் வகுத்துக் கொடுத்த இலக்கணப்படி எங்கள் கலைஞரை உலகத் தலைவரே என்று போட்டு அழைக்கிறோம், எங்கள் நாவலரை உலகத் தலைவரே என்று போட்டு அழைக்கிறோம். பொச்சரிப்பு, பொறுமை—அதை உங்களால் தாங்க முடியவில்லை. எரிச்சலினால் அப்படிப்பட்டதொரு குற்றச்சாட்டைச் சொன்னீர்களே தவிர வேறு முறையில் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்த குற்றச்சாட்டு என்ன? நீதிவிசாரணை. நீதிவிசாரணை வேண்டும் என்கிறீர்கள், போடட்டுமா என்றால் வேண்டாம் என்கிறீர்கள், போட்டபோது வேறு மாநிலக்காரரைப் போட வேண்டும் என்கிறீர்கள். இந்த மன்றத்திலே முதுகுளத்தூரில் நீங்கள் சுட்டீர்கள், நாங்கள் இங்கே சுட்டோம், என்று இதில் என்ன தவறு என்று நாங்கள் கேட்கவில்லை.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது எங்கள் நாவலர் ஒரு சின்ன கமிஷனைத்தான் போடவேண்டும் என்று கேட்டார்கள். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது அன்றையதினம் எதிர்க் கட்சித் தலைவராக எங்கள் நாவலர் இங்கே வீற்றிருந்தார். ஒரு சின்ன கமிஷனையாவது போடுங்கள், உண்மை தெரியும் என்றார்கள். திரு. பக்தவச்சலம் அவர்கள் முடியாது என்று சொல்லிவிட்டார்.

எங்கள் நாவலர் அவர்கள் அன்றைக்கு திரு. பக்தவசலம் அவர்களை ஒரு சின்ன கமிஷன் போடச் சொல்லித்தானே கேட்டார். போட்டார்களா? எங்கள் கலைஞர் துப்பாக்கிச் சூடு நடைபெற்றுவிட்டது என்றவுடனே மனிதாபிமான உணர்ச்சியோடு நான்கு நீதிபதிகளை நீதி விசாரணைக்காகப் போட்டார்கள். அப்போது வேண்டாம் என்றீர்களா என்று குற்றம் சாட்டுகிறீர்களே இதில் நியாயம் இருக்கிறதா?

அடுத்து, வன்முறைகளுக்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழகம் என்கிறீர்களே, இதயத்தில் கைவைத்துப் பாருங்கள். கடந்த மூன்று மாதக்கில் நான் கேட்கிறேன்—வன்முறைக்குக் காரணம் திராவிட முன்னேற்றக்

1972 ஆகஸ்ட் 11] [திரு. துரைமுருகன்]

கழகமாக இருந்திருந்தால் இறந்தவர்கள் யாராக இருக்க வேண்டும்? திரு. ஓரண்டே அவர்கள் சைக்கிள் செயின், பைப் என்று எல்லாம் சொன்னார்கள். வன்முறைக்குச் சொந்தக்காரர்களால் தாக்கப்பட்டு சென்னையில் இறந்தது எங்கள் கட்சியைச் சேர்ந்த பிரதாப சந்திரன். அடுத்து சண்முக ராஜா, சிவகங்கையில் முத்து. மூன்று மாதத்தில் எங்கள் கட்சியைச் சேர்ந்த மூன்று பேர்களைப் பிணமாக்கித் தந்திருக்கிறீர்கள். துப்பாக்கிச் சூட்டினால் உயிரிழந்தவர்களுக்கு ஒரு வார்த்தை அனுதாபம் தெரிவித்தீர்களா என்று கேட்டார் திரு. கே. டி. கே. இறந்தவர்களுடைய மனைவிகளை எல்லாம் சென்று பார்த்துப் பேசி வந்ததாகக் குறிப்பிட்டார்கள். நான் கேட்கிறேன், கட்டிளம் காளை, கழகத் தொண்டன் பிரதாப சந்திரன் படுகொலை செய்யப்பட்டு அவன் மனைவி தாலி இழந்து கண்ணும் கண்ணீருமாக அலறி நின்றாளே, அப்போது கண்ணீர்விட்டு ஓடிவந்தீர்களா? சண்முக ராஜா கொலைசெய்யப்பட்டு அவன் மனைவி பூ விழுந்து தலைவிரிகோலமாக அழுது புலம்பி நின்றாளே, கண்ணீர்விட்டுக்கொண்டு ஓடிவந்தீர்களா? சிவகங்கை முத்து கொலைசெய்யப்பட்டு அவன் மனைவி பொட்டிழந்து, மஞ்சள் இழந்து குழந்தைகள் எல்லாம் அப்பா அப்பா என்று கதறி அழ துடிதுடித்து நின்றாளே. கண்ணீர்விட்டுக்கொண்டு ஓடிவந்தீர்களா? திராவிட முன்னேற்றக் கழகம்தான் வன்முறையைத் தூண்டிவிடுவதாகச் சொல்கிறீர்களே. உலகத்தில் சிரிக்கமாட்டார்களா? கோவை ஸ்தாபன காங்கிரஸ் கட்டிடத்தை தாக்கியது பற்றிக் குறிப்பிட்டார்கள். அங்கே சோதனை போட்டபோது இரண்டாயிரம் இரும்புத் தடிகள், எதற்காக? சாப்பாடு பொட்டலம் மூவாயிரம் கட்டி வைத்திருந்தீர்களே, எதற்காக? சுப்பு வீடு தாக்கப்பட்டது, சுந்தரம் வீடு தாக்கப்பட்டது என்கிறீர்களே, சாதாரண பாட்டாளி மக்களது வீடுகள் எத்தனை தாக்கப்பட்டிருக்கிறது? சொன்னீர்களா?

விவசாயிகள் போராட்டத்திற்கு முன் 12 அம்சக் கோரிக்கைகளை வைத்தார்கள். போராட்டத்தில் ஈடுபட்டு 12 அம்சக் கோரிக்கைகளை வைத்தார்கள். முன்னாலே 12 அம்சக் கோரிக்கை, பின்னாலே 12 அம்சக் கோரிக்கை என்று சொன்னால் வலது கம்யூனிஸ்டுக் கட்சி போராட்டத்தில் நுழைந்த பின்னர் திசை திருப்பி, கலகம் விளைவித்து, தமிழகத்தை ரத்தச் சகதியாக்கி, அந்தச் சகதியில் மீன் பிடிக்கலாம் என்றுதானே திட்டமிட்டீர்கள்? நாங்கள் வன்முறையைத் தூண்டிவிட்டோம் என்று சொல்கிறீர்கள்.

கட்டை வண்டிகளைப்பற்றிச் சொன்னீர்கள். கட்டைவண்டிச் சமாசாரம் எனக்குத் தெரியும். இரவுக்கு இரவாக கட்டைவண்டிகளைத் திருடி வந்து போட்டீர்கள்? கட்டைவண்டி திருட்டுப்போய்விட்டது என்று போலீஸ்

[திரு. துரைமுருகன்] [1972 ஆகஸ்ட் 11

ஸ்டேஷனில் எத்தனை கம்ப்ளெண்டுகள் செக்கார்டு ஆகியிருக்கிறது தெரியுமா? எவ்வளவு கட்டைவண்டித் திருடர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லட்டுமா?

மன்னார்குடியில் நடந்ததுபற்றிச் சொன்னீர்கள். என்ன நடந்தது? ஒரு கர்ப ஸ்திரியை அழைத்து வருகிறான். வண்டியைப்போட்டு வழியை மறித்திருக்கிறீர்கள். பிரசவ வேதனையால் பெண் துடிக்கிறாள். வழிவிடுங்கள். அவசர கேஸ் என்கிறபோது கூட மனிதாபிமான உணர்ச்சியோடு வழிவிடவில்லை. அந்தப் பெண்ணின் கணவன் வெறி ஏறி வண்டியைப் பிளந்து அகற்றி— அந்தப் பெண்ணை உள்ளே கொண்டுபோவதற்குள் அவள் இறந்துவிட்டாள் என்பது கேள்வி, இந்த நிலையில் முத்தண்ணன் பேசினார், குத்துக்குக் குத்து, வெட்டுக்கு வெட்டு என்று.

மதிப்பிற்குரிய திரு. கல்யாணசுந்தரம் சென்னைக் கூட்டத்திலே வந்து என்ன பேசினார்? பலாத்காரத்தில் எங்களை மிஞ்சியவர்கள் யாரும் இல்லை, தெலுங்கானாப் போராட்டம் நடத்தியவர்கள் நாங்கள். எனக்கே துப்பாக்கி சுடத் தெரியும் என்று பேசிய பிறகு இந்த நாட்டில் அவர்கள் அமைதியைக் குலைக்க என்ன என்ன சதித்திட்டங்களை வகுத்தார்கள் என்பது தெரியாதா? வன்முறைச் செயல்களுக்கு எல்லாம் காரணம் வலது கம்யூனிஸ்டுகள் தான். தேசிய காங்கிரஸ்காரர்கள் இல்லையா? சுதந்திராக் கட்சிக்காரர்கள் இல்லையா என்று கேட்கலாம். இந்தக் கட்சிகளில் தலைவர்கள் இருக்கலாம், தொண்டர்கள் இல்லை. முனியாண்டி ஹோட்டலுக்குக் கூட ஊருக்கு ஒரு ப்ராஞ்சு இருக்கிறது. இவர்களது கட்சிக் காரியாலயம் அதுபோலக் கிடையாது. பெரிய போராட்டத்தை நடத்தி விட்டதாக நீங்கள் சொல்கிறீர்கள். ஏர்க்காட்டிலே மோகன் குமாரமங்கலம் வந்திருந்தார். போராட்டத்திட்டம் தீட்டப்பட்டது. அப்போது மட்டும் மோகன் இல்லை என்று வீரபாகு கூறுகிறார். திரு. கல்யாணசுந்தரம், சோஷலிசப் பிதா, பொதுவுடைமைப் பூங்காவை இந்த நாட்டிலே மலரவைக்கப் போகின்றவர், என்ன செய்கிறார் என்றால் பட்டக்காரர் வீட்டில் உட்கார்ந்து பால் சாப்பிடுகிறார், பால் சாப்பிட்டுக்கொண்டு சொல்கிறார், நான் இங்கிருந்து பிரஸ் ரிப்போர்ட் கொடுத்ததாகச் சொல்லிவிடாதீர்கள் என்று சொல்கிறார். இப்படி இந்த அரசை கவிழ்க்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் ஒன்று சேர்ந்துகொண்டு சொல்கிறார்கள், போலீஸ் அடித்துவிட்டான், அடித்து விட்டான் என்று ஒப்பாரி வைப்பதிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைத் தவிர வேறு என்ன இருக்கிறது. மதிப்பிற்குரிய உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்கள் எதையெடுத்தாலும் அர்த்தநாரீஸ்வரக் கவுண்டர் என்று ஆரம்பித்து அவருடைய அட்வகேட்டாக மாறிவிடுகிறார் . . . .

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஒப்பாரி வைக்கிறார்கள் என்று சொல்ல லாமா ?

திரு. ஏ. சுப்பிரமணியம் : அட்வகேட்டாக இருக்கிறார் என்று சொல்கிறார், அது முறையல்ல.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஒப்பாரி வைக்கிறார்கள் என்றும் பொச்சரிப்பு என்றும் தமிழிலே சாதாரணமாகப் பயன்படுத்தாத வார்த்தைகளை எல்லாம், பொதுமேடைகளிலேகூட பேசாத வார்த்தைகளையெல்லாம், பேசியிருக்கிறார்கள். நீங்கள் அனுமதித்திருக்கிறீர்கள். ஆகவே நான் தலையிட விரும்பவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படிப்பட்ட வார்த்தைகளைக் குறைத்துக்கொள்ளுங்கள். அவையெல்லாம் சட்டமன்ற மாபுக்கு ஏற்றவையல்ல.

திரு. துரைமுருகன் : கடையை நீங்கள் திறக்காவிட்டால் எப்பொழுதும் திறக்கவிடமாட்டோம் என்று கோஷமிட்டதாக அவர்கள் சொன்னார்கள். ஆனால் அவர்கள் என்ன கோஷமிட்டிருக்கிறார்கள் என்பதுபற்றி எனக்குக் கூட புகார் வந்திருக்கிறது. கடைகளை மூடாவிட்டால் பிறகு என்றைக்கும் கடைகள் மூடித்தான் இருக்கும், ஜாக்கிரதை, மூடவேண்டும், மூடவேண்டும் என்று கோஷம்போட்டுக்கொண்டு சென்றிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு, ஏழை எளிய மக்களுக்குக் குடியிருப்பு வீடுகள் வழங்கிய அரசு, குடிசை வாரியம் அமைத்த அரசு, குடிநீர் வாரியம் அமைத்துச் செயல்படுகிற அரசு, கோழைகளை வீரர்களாக்கிய அரசு, ஏழைகளுக்கு அறிவு கொடுத்த அரசு, ஏழைகளைச் சிரிக்கவைத்த அரசு, அவர்களின் சிரிப்பில் இறைவனைக் காண்கின்ற அரசு இதற்கு நாட்டு மக்கள் ஆதரவு இருக்கிறது. அதை எப்படியாவது கவருவதற்காக, இந்த அரசை அழிப்பதற்காக டெல்லியிலிருந்து வலது சாரி கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பணம் வந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்த டெல்லியிலிருந்து அவர்களுக்கு பணம் வந்திருக்கிறது என்பதை நான் இந்த மாமன்றத்திலே அறைகூவல் விட்டுச் சொல்கிறேன் . . . .

திரு. கே. டி. கே. தங்கமணி : யாருக்கு எவ்வளவு செக் வந்து இருக்கிறது என்று சொன்னால் நாங்கள் பெற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம்.

[1972 ஆகஸ்ட் 11

திரு. துரைமுருகன்: நான் அதைச் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சிக்கு டெல்லியிலிருந்து பணம் வந்து இருக்கிறது . . . .

திரு. கே. டி. கே. தங்கமணி: பொறுப்புள்ள உறுப்பினர் பேசுகிறார். அவர்கள் ஒரு கோடி ரூபாய் வந்திருக்கிறது என்று சொன்னால்கூட நாங்கள் மறுக்கப்போவதில்லை. யாருக்கு வந்தது? இன்னருக்கு வந்தது என்று சொல்லட்டும். பின்னாலே தேர்தல் காலத்தின்போது இந்திரா காந்தி அவர்கள் எவ்வளவு கொடுத்தார்கள் என்பதைச் சொல்லுமே. யார் வாங்கினார்கள் என்பதை அவர்கள் சொல்லவேண்டும். அவர்கள் இஷ்டம் இருந்தால் சொல்லட்டும்.

திரு. துரைமுருகன்: வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சிக்கு டெல்லியிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்ப்பதற்காக பணம் வந்திருக்கிறது . . . .

திரு. கே. டி. கே. தங்கமணி: எங்களுடைய கட்சி வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியல்ல, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியாகும். எங்களுடைய கட்சி வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி என்று சொல்கிறார்கள். அவர்களுடைய கட்சி என்ன, தீவிர திராவிட முன்னேற்றக் கழகமா? அல்லது வலது முன்னேற்றக் கழகமா?

திரு. துரைமுருகன்: திராவிட முன்னேற்றக் கழக அரசை எதிர்த்துப் போராடி அழிப்பதற்காக டெல்லியிலிருந்து பணம் வந்திருக்கிறது. மறுக்க முடியாது, நான் திரும்பிக்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. க. கப்பு: குற்றச்சாட்டு வேண்டுமென்றே சொல்லவேண்டுமென்றால் நாற்றுக்கணக்கான குற்றச்சாட்டுகள் சொல்லலாம். அவர்கள் பணம் டெல்லியிலிருந்து வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். எங்கே யாருக்கு வந்திருக்கிறது என்பதைச் சொல்லவேண்டும், அதை திரும்பிக்க வேண்டும், நான் அதை சேலஞ்ச் ஆக ஏற்றுக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன்: இந்தக் கேள்வியை நீங்கள் கேட்க வேண்டுமென்று நான் நான் எதிர்பார்த்தேன். இந்த அரசாங்கம் அதற்காக ஒரு குழுவைப் போடட்டும், இதைப்பற்றி விசாரணைசெய்வதற்கு ஒரு சுப்ரீம் கோர்ட் நீதிபதியைப் போடட்டும், நான் திரும்பிக்கிறேன். அவர்கள் அப்படித்தானே கேட்கிறார்கள் . . . .

1972 ஆகஸ்ட் 11]

திரு. கே. டி. கே. தங்கமணி : பொய்யை நான்கு முறைகள் சொல்வதாலேயே உண்மையாகிவிடாது. பொய் பொய்தான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த மன்றத்திலே ஒரு கட்சியைப்பற்றிக் குற்றம்சாட்டும்பொழுது அரசாங்கம் குழு போடட்டும் அதை நிரூபிக்கிறேன் என்று சொல்லமுடியாது. இந்த மன்றத்தினுடைய விதி முறைகளின்படி உறுப்பினர்தான் நிரூபிக்க வேண்டும். இந்த மன்றத்திலே ஆதாரங்களோடு தான் பேசவேண்டும். அப்படியில்லாமல் பேசுவது நல்ல தல்ல.

திரு. கே. டி. கே. தங்கமணி : எங்களுடைய கட்சி தி.மு.க.வை அந்தக் கட்சியின் ஆதரவை நம்பி வளரவில்லை. தானாக வளர்கிறது. ஏதோ சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களிலே கூட்டுகள் ஏற்பட்டிருக்கலாம். ஆகவே, எங்களுடைய கட்சிக்கு அந்தக் கட்சியின் ஆதரவு தேவையில்லை. எங்களுடைய கட்சி அகில இந்திய ரீதியிலே இருக்கிற கட்சி, உலக ரீதியிலே இருக்கிற கட்சி, கொஞ்சம் அடக்கமாகப் பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நானும் அடக்கத்தோடு கே.டி.கே; தங்கமணி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் எந்த கட்சியையும் நம்பி வளரவில்லை. அது தானாக நிற்க முடியும். அதை திரு பித்தும் இருக்கிறோம். அவர்கள் சொன்னதுபோல் சந்தர்ப்பத்திலே ஒருவருக்கொருவர் சேர்ந்துகொண்டோம். தேர்தல் முடிந்தபிறகு கொள்கையிலே பேதம் ஏற்பட்டது. அதற்குப் பிறகு ஒன்றாக இருக்கமுடியாது. திராவிட முன்னேற்றக் கழகம் தன்னந்தனியாக நின்று இயங்கும் இயக்கம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : வேண்டுமானால் அவர்கள் தன்னந்தனியாகத் தேர்தலில் நிற்கட்டும். நின்றால் நான் அதை ஏற்கத் தயாராக இருக்கிறேன். அந்தச் சவாலை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். நான் 1957-ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியையும் திராவிட முன்னேற்றக் கழகத்தையும் எதிர்த்து நின்று வெற்றியடைந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களும் சொல்லட்டும், தனியாக நிற்கிறோம் என்று சொல்லட்டும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : திராவிட முன்னேற்றக் கழகம் வலது கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவில், அதை நம்பி, இல்லை. அவர்களை நம்பி இனி தேர்தலில் நிற்காது. அவர்களுடைய சக்தியையெல்லாம் பயன்படுத்தி முடிந்தால் 1976-லே திராவிட முன்னேற்றக் கழகத்தை அழிக்க முயற்சி எடுத்துக்கொள்ளட்டும். காலம் வரும், காத்திருப்போம்.

[1972 ஆகஸ்ட் 11

திரு. க. சுப்பு : எந்த அரசியல் கட்சியையும் அழிக்க வேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை. இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு டெல்லியிலிருந்து பணம் வருகிறது என்ற குற்றச்சாட்டை ஒரு முறையல்ல, பல முறைகள் சொல்லி இருக்கிறார்கள், அதை ஒன்று நிரூபிக்க வேண்டும் அல்லது வாபஸ் வாங்கவேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : நாங்கள் எல்லாம் 30 வருஷமாக ஒரே கட்சியிலே இருக்கிறோம். அவர்களுக்கு அவ்வளவு முனைப்பு இருந்தால் எங்களுக்கு அந்த முனைப்பு வராதா ? அவர்களாவது ஒன்றரை மாதம் சிறைக்குச் சென்றிருக்கலாம். நான் எட்டு ஆண்டுகள் சிறைசென்றிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அனுபவம் உள்ளவர் இவ்வளவு உணர்ச்சிகளுக்கு இடம்கொடுத்திருக்க வேண்டியதில்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : திரு. கே. டி; கே; தங்கமணி அவர்களுக்கு ஒன்றை நான் தெரிவித்துக்கொள்கிறேன். சிறைக்குப் போவதுதான் தகுதி என்று வைத்துக்கொண்டால் அவர்களுக்கு என்னை பிடிக்காது, நான் ஒரு தடவைகூட சிறைக்குப் போகவில்லை என்று சொல்லலாம். அவர்களுடைய தியாகத்தை யாரும் குறைத்து மதிப்பிடவில்லை. அதற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் தியாகத்தைப்பற்றிச் சொல்லியிருக்க வேண்டியதில்லை. துரைமுருகன் அவர்கள் குற்றச் சாட்டுச் சொன்னார்கள், அதை எப்படி நிரூபிக்கப் போகிறார்கள் என்று கேட்டிருக்கலாம். அதைத்தான் சொன்னேன். நாங்கள் சாதாரணமானவர்கள் தான். அவ்வளவு பெரிய தியாகத்தை வைத்துப் பார்த்தால் எங்களுக்கு இருக்கிறதிலே குறைவுதான். ஆனால் நாட்டுமக்கள் தந்து இருக்கிற யோகியதையே போதும் என்று நாங்கள் நினைக்கிறோம்.

திரு. க. சுப்பு : ஒன்று உறுப்பினர் அதை வாபஸ் வாங்க வேண்டும். அல்லது நிரூபிக்க வேண்டும். தாங்கள் ரூலிங் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : துரைமுருகன் சொன்ன குற்றச் சாட்டுக்கு அவர்கள் பொறுப்பேற்றுக்கொள்கிறார்களா அல்லது வாபஸ் வாங்குகிறார்களா என்பதுதானே தெரியவேண்டும். அதைக் கேட்கலாம், நீங்கள் உட்காருங்கள். நீங்கள் சொன்ன குற்றச்சாட்டை நிரூபிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறீர்களா என்பதை இந்த மன்றத்திற்கு அறிவிக்க வேண்டும்.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, நான் சொன்ன குற்றச் சாட்டை நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். அதற்காகத்தான் நான் சொன்னேன், அவர்கள் இங்கேயிருப்பவர்கள் யாரையாவது போட்டால் அவர்களிடத்திலே சொல்லுங்கள் என்று சொன்னால் ஒத்துக்கொள்வதில்லை. ஏனென்றால் நீதி விசாரணை என்றால் ஹைகோர்ட் ஜட்ஜை ஒத்துக்கொள்ள மாட்டேன் எல்கிறார்கள். அதேமாதிரி நானும் சொல்கிறேன், சுப்ரீம் கோர்ட் நீதிபதியைப் போட்டு . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்பதோடு நீங்கள் விட்டுவிட வேண்டும். எப்படி விசாரிப்பது என்ற பொறுப்பு இந்தப் பேரவையைப் பொறுத்தது. வெளியே உள்ள நீதிபதியோ அல்லது உலகத்திலே எவ்வளவு பெரிய நீதிபதியாக இருந்தாலும் அவர்கள் இந்த மன்றத்தில் வந்து விசாரிக்க உரிமை கிடையாது. இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் இந்த மன்றத்தைப் பொறுத்தவரையில் இதுதான் நீதி மன்றம்.

திரு. க. சுப்பு : எந்த ஆதாரத்தோடு சொல்கிறார்கள். பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு அதோடு போய்விடுவார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தங்கமணிக்கு 10 லட்சத்திற்கு செக் வந்தது என்று சொல்லட்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார்கள்என்றால் மேற்கொண்டு பேசத் தேவையில்லை.

திரு. துரைமுருகன் : அடுத்தபடியாக . . . .

Dr. H. V. HANDE : On a point of order, Sir, May I submit respectfully to the Chair that whenever any serious allegations are made against a party or persons, without going into the merits or demerits of the allegations, the normal practice in this House has been that it must be proved on the spot. If the ruling of the Hon. Deputy Speaker is followed, namely, that a Committee would be appointed to enquire into it etc., then what would happen? The Hon. Chief Minister has drawn attention to such a situation.

அபாண்டமான குற்றச்சாட்டை உண்மையா இல்லையா என்று, குற்றச் சாட்டைச் சுமத்தியபிறகு

It will be better if the hon. Member, Mr. Duraimurugan proves here and now. Otherwise, what will happen is this. For instance, the Press will publish and afterwards what is the power

of the Speaker to go into the case and what is the penalty?. All that will have to be faced. This has been discussed in the House several times. The Hon. Chief Minister himself I hope the hon. Member has great regard for the Hon. Chief Minister. has said that whenever such things are brought before the House

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, பாரும் எத்தக் குற்றச்சாட்டையும் சொல்லும்பொழுது அந்தக்குற்றச்சாட்டு யார்மீது சொல்லப்படுகிறதோ, எந்தக் கட்சியின்மீது சொல்லப்படுகிறதோ அந்தக் கட்சியின் தலைவர் அதை மறுத்தால் அப்படி மறுத்ததைத்தான் அப்பொழுது ஒப்புக்கொள்ள வேண்டும். மறுபடியும் எப்படி சந்தர்ப்பம் கிடைக்கிறதோ அப்பொழுது அவர் ஆதாரத்தோடு நிரூபிக்கலாமே தவிர, மறுத்ததுதான் அப்பொழுது செல்லுமேதவிர முதலில் சொன்ன குற்றச்சாட்டு நிற்காது. இப்பொழுது மறுக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் சட்டமன்ற நடவடிக்கைகள் தொடரவேண்டுமென்று விரும்புகிறேன். சம்பந்தப்பட்டவர்கள் மறுத்து விட்டால் மறுத்ததுதான் சட்ட மன்றத்தில் நிற்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்பொழுது குற்றச் சாட்டைச் சொல்லியிருக்கலாம். அதற்கு ஆதாரம் வேண்டுமென்று தங்கமணி அவர்களும், சுப்பு அவர்களும் கேட்கிறார்கள். ஆதாரத்தை உடனடியாக நான் காட்ட முடியாமல் பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்று சொல்கிறார். அவர் பின்னால் நிரூபிக்கிறேன் என்று சொல்கிறார். இதே மன்றத்தில் எனக்குக் கவனம் இருக்கிறது, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திர துரை என்பவர் ஒரு அமைச்சர் மீது, அப்பொழுது அமைச்சராகயிருந்த திரு. முத்துசாமி அவர்களின்மீது குற்றச்சாட்டைக் கூறினர்கள். அது கமிட்டிக்குப் போய் அந்த வழக்கு விசாரிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டது. அதைப்போல நீங்கள் ஒரு தீர்மானம் கொண்டுவரலாம். பிரிவிலிஜ் கமிட்டிக்குப் போகலாம், அதற்காக முறை இருக்கிறது. அதை விட்டு, இங்கேயே ஆதாரத்தைக் காட்டு என்று சொன்னால் அங்கே வந்து நான் பார்ப்பதா, இங்கே அனுப்புவதா, யார் பார்த்து முடிவு செய்வது? எனவே பொறுப்பேற்றுக்கொள்கிறீர்களா என்று கேட்ட தற்கு, தைரியமாக, ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்கிறார்கள். பிறகு சட்ட மன்ற மாபுப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே இந்த விஷயத்தை இதோடு விட்டுவிட்டு திரு. துரைமுருகன் அவர்களைப் பேசும்படி கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார், நானேக்கு நான் பேசும்பொழுது குற்றச் சாட்டைச் சொன்னால் நிரூபிக்க வேண்டுமென்று சொன்னால் கமிட்டி போடுங்கள், இந்த ஜட்ஜ் வேண்டாம், சுப்ரீம் கோர்ட்

ஜட்ஜைப் போடுங்கள், இன்னொரு ஜட்ஜைப் போடுங்கள் என்று கேட்போம். (குறுக்கீடு) நீங்கள் மாத்திரம் பேசும்பொழுது தானும் பேசித்தான் ஆக வேண்டும். அம்மாதிரி பேசிவிட்டு பிறகு இப்படிச் சொல்லலாம் என்று ஆகிவிட்டது. நான் நாளைக்கு ஒவ்வொரு அமைச்சர்மீதும் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளைக் கொண்டு வருவேன். இது வாலாறு காணுத தீர்ப்பாக இருக்கிறது. (குறுக்கீடு) தான் கவலைப்படவில்லை. எந்த நடவடிக்கை வேண்டு மானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். நாங்கள் இப்படித்தான் நாகரிகமிலிருந்து பேசப்போகிறோம்.

Sir, I am on a point of order. In this very same House on several occasions members have made serious allegations. It is a serious matter and the judgment of the Hon. Deputy Speaker now has dangerous repercussions. From tomorrow every member will start making allegations and we will pursue that from tomorrow

திரு. ரா. ரா. முனுசாமி: உட்காருங்கடா.

THIRU J. JAMES: Who is he to say that? How can he say so, He must withdraw it. Is it the way any member should speak in the House? If he does not withdraw it, we will have to walk out.

THIRU R. PONNAPPA NADAR: Is this in order? How can he say like that in the House ? We will walk out.

(Then, Members of the Congress (O), the Indian National Congress, the Communist Party of India (R) and the Swathanthra Parties, walked out of the House).

THIRU V. KRISHNAMOORTHY : Sir, I want to make a submission. This sort of allegation is no new thing.

தேர்தல் காலங்களிலே வெளிநாட்டிலிருந்து பணத்தைப் பெற்று தேர்தல் நடத்தினார்கள் என்று சொன்ன நேரத்தில் அங்கு ஆதாரம் கொடுக்கவில்லை. அதைப்போல.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, நண்பர் துரைமுருகன் அவர்கள் பேசும்பொழுது அவர் பேசிய வார்த்தையில் ஏற்பட்ட இந்தச் சிறு விரோதிற்குப் பிறகு, கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பணம் வந்தது என்று ஆரம்பித்த பேச்சிலிருந்து கடைசியாகப் பேசிய தொடர் வரையில் சட்டமன்ற நிகழ்ச்சிகளிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று ஆணையிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[1972 ஆகஸ்ட் 11

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்களின் கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். திரு. துரைமுருகன் அவர்களுடைய பேச்சில் பணம் வந்தது என்று சொன்னதிலிருந்து வெளிநடப்பு செய்த வரையில் உள்ள அத்தனை நிகழ்ச்சிகளையும் சபையின் நடவடிக்கைகளிலிருந்து நீக்கிவிடும்படி கூறுகிறேன். * பத்திரிகைகளிலும் பிரசுரிக்கக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : துணைத் தலைவரவர்களே, இந்த வகையிலே முன்னேற்றக் கழக அரசு ஏழை எளியவர்களுக்கு, சமுதாயத்திற்குப் பாடுபடும் இந்தச் சர்க்கரை எப்படியும் கீழே இறக்குவதன் மூலம் அகில இந்தியாவிலும் ஒரே குடையின் கீழ் கொண்டுவர வேண்டுமென்று தினைப்பவர்களும், வயது ஏறிவிட்டதாலே மீண்டும் ஆட்சி செய்ய முடியாது என்று சொல்லக் கூடிய சில தலைவர்களும், ஜாதிப்பித்துக் கொண்டவர்களும் இந்த அரசை இறக்க முற்பட்டாலும் அது முடியாது. இந்த அரசு ஏழைகளை வாழவைக்கும் அரசு, கலைஞர் தலைமையில் உள்ள அரசு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று சொன்னார்கள். முதலமைச்சரவர்கள் விவசாயிகளை அழைத்து பேசவில்லை, கவரவப் பிரச்னை பார்க்கிறார் என்று சொன்னார்கள். இந்தச் சர்க்கார் கவரவப் பிரச்னையாகப் பார்க்கவில்லை. நீங்கள் தான் பார்க்கிறீர்கள். அரசு ஊழியர்கள் சிலர் வேலை நிறுத்தம் செய்தார்கள் பட்டதாரி ஆசிரியர்கள் வேலைநிறுத்தம் செய்தார்கள்; இன்னும் என்.ஜி.ஓ.க்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். இவ்வளவுபேரையும் இந்தச் சர்க்கார் அழைத்து பேசியிருக்கிறது. கோரிக்கைகளைக் கேட்கிறது. முதலமைச்சர் பேசியிருக்கிறார். பிறகு இரகசியக் குறிப்பேட்டு முறை நீக்கப்பட்டிருக்கிறது. எனவே அதைப்போல இன்றைக்குச் சில சலுகைகளை ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகம் யார் கோரிக்கைகளை வைத்தாலும் அவற்றைப் பரிசீலிக்க எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்றைக்கும் பின்வாங்கியதில்லை என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. எங்கள் தோழர்கள் தாக்கப்பட்டார்கள், அவர்கள் வீடுகள் தாக்கப்பட்டன, இங்கு அடி, அங்கு உதை என்றெல்லாம் சொன்னார்கள். ஸ்ரீவில்லிப்புத்தூரிலுள்ள எங்கள் வட்டச் செயலாளரிடம் சொன்னார்

---

* 12—8—72-ம் தேதி இப் பகுதிகள் நீக்கப்பட வேண்டியதில்லை. நடவடிக்கைக் குறிப்பில் இடம்பெறும் என மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களால் ஆணையிடப்பட்டது.

கள், உன்னை என்றைக்கிருந்தாலும் வெட்டி தலையைக் கொண்டு வருவேசம் என்று சொல்லியிருக்கிறார்கள். வண்ணர்குடி செயலாளர் தாக்கப்பட்டிருக் கிறார். ஆம்பூரில் எங்கள் கட்சித் தொண்டர் ஒருவரின் கடையைத் தாக்கி அவரையும் அவர் தம்பியையும் காயப்படுத்தியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆபீசில் உள்ள படங்களை எடுத்துச் சென்றிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் அமைதியைக் கடைப்பிடிக்க வேண்டு மென்ற ஆசையைக் கொண்டிருக்கிற ஒரு கட்சி. வன்முறையைத் தூண்டியவர் கள்தான், வன்முறைக்கு வித்திட்டவர்கள்தான், வன்முறைக்கு தாலாட்டு பாடியவர்கள்தான் நாங்கள் வன்முறையால் பாதிக்கப்பட்டோம், பாதிக்கப் பட்டோம் என்று ஊர் பூராவிலும் பறைசாற்றுகிறார்கள். சட்ட மன்றத்திலும் பேசுகிறார்கள்.

இந்தப் போராட்டத்திலிருந்து ஒன்று நன்கு தெரிகிறது. யார் யார் அந்தப் பக்கத்தில் இருக்கிறார்கள் என்ற அடையாளம் தெரிகிறது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மன்றடியாரோடு இருக்கிறது, அர்த்தநாரீஸ்வர கவுண்டரோடு இருக் கிறது. சுதந்திரா அங்கு போய் சேர்ந்திருக்கிறது. யார் யார் எங்கு சேர்ந் திருக்கிறார்கள் என்பது இந்தப் போராட்டத்திலிருந்து நன்கு புலனாகிறது. நாட்டு மக்கள் அடையாளம் தெரிந்து கொள்ள முடிகிறது. இந்தப் போராட்ட திற்குப் பிறகு நடத்தப்பட்ட மதுரை மாநாடு மட்டுமல்ல, இடைத் தேர்தல் களிலும் நல்லமுறையில் வெற்றி வாகை சூடியிருக்கிறது முன்னேற்றக் கழகம். இந்த நாட்டு மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகிறார்கள் கலைஞர் அவர்கள். அவரது தலைமையில் இயங்கும் அரசின்மீது கொண்டு வந்திருக்கும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் புறக்கணிக்கப்பட வேண்டிய ஒன்றாகும் என்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. செ. கந்தப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பவர்கள் அவர்களுக்கு இருக்கிற பலஹீனம் காரணமாக தங்கள் மீதே நம்பிக்கை இழந்து இந்த அவையை விட்டு வெளியேறியது உண்மையில் வருந்தத்தக்கதாகும். ஒரு கருத்தை நான் உங்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன்.

இந்த மன்றத்தின் நடைமுறை பற்றி பொதுவாக கவனிக்க வேண்டிய ஒன்று. இந்தச் சம்பவத்தில் யாரோ ஒரு உறுப்பினர் ஏதோ சொன்னதாக அந்த ஓரத்தில் இருந்த நண்பர்கள் சிலர் வேகமாகப் பேசினார்களே தவிர எதைக் குறித்துச் சொன்னார்கள், என்ன சொன்னார்கள் என்று தெரியாத

[திரு. செ. கந்தப்பன்] [1972 ஆகஸ்ட் 11

அளவிற்கு நீங்கள் அதுகுறித்து அறிவிப்பதற்குள்வாகவே இந்தப் பிரச்னை முடிந்துவிட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொண்டு ஒரு சில வார்த்தைகள் நான் கூற விரும்புகிறேன்.

ஏற்கனவே சொல்லப்பட்ட கருத்துக்கள் நீங்கலாக எனக்குத் தோன்றுகிற முறையில் ஒருசில வாதங்களுக்கு மட்டும் பதில் அளிக்க விரும்புகிறேன். நேற்றையதினம் திரு. தங்கமணி அவர்கள் பேசும்போது வேளாண்மை பிரச்னை குறித்தும், அதையொட்டி நடந்த போராட்டம் குறித்தும் டெல்லியிலிருந்து வருகிற சில பத்திரிகைகள் செய்திகளைத் தரும்போது அவைகள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவாகச் செய்திகளை வெளியிட்டு விட்டார்கள் என்றும் அப்படி அவர்கள் ஆதரித்து செய்திகள் வெளியிடக் காரணம் அவைகள் பெரிய பெரிய முதலாளிகளின் ஏடுகள் என்றும் டைம்ஸ் ஆப் இந்தியாவைச் சுட்டிக்காட்டி அது ஒரு முதலாளித்துவக் கூட்டத்தை சேர்ந்த ஏடு என்றும், எனவே திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரித்து செய்திகளை வெளியிட்டுள்ளன என்றும் சொன்னார்கள். நான் கேட்கிறேன். முதலாளிகளின், பெரிய முதலாளிகளின் கைகளிலுள்ள ஏடுகள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவு காட்டுகின்றன என்றால், அது உண்மையாக இருக்குமேயானால் 62-ல், 65-ல் திராவிட முன்னேற்றக் கழகம் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டதே, அப்படி ஈடுபட்டு நடத்தியபோது அந்த ஆதரவை கொஞ்சமாவது அந்த ஏடுகள் காட்டியிருக்க வேண்டும். ஆனால் எந்த ஏட்டிலிருந்தும் எந்தவிதமான ஆதரவையும் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்பார்க்கவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு இந்த ஐந்தாறு ஆண்டுகளில் அவர்கள் சொன்னது போல் இந்த ஏடுகள் என்றைக்கும் இந்த அரசை ஆதரிக்கவில்லை. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தேசிய காங்கிரஸ் கட்சி, ஸ்தாபன காங்கிரஸ் கட்சி இந்த இயக்கங்களுக்குப் பின்பலமாக இருந்து கொண்டு அவற்றிற்கு ஆதரவான செய்திகளை வெளியிட்டிருக்கின்றன அந்த ஏடுகள். அவர்கள் பட்டியலை விட்டு விட்டு வேறு சில ஏடுகளில் குறிப்பிட்டிருப்பதை பற்றி ஒன்றை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 'ஹிதவாதா' என்ற பத்திரிகை மத்தியப் பிரதேசத்திலிருந்து வெளியிடப்படுகிற ஒரு ஏடு. சாதாரண ஒரு ஆளால் நடத்தப்படுகிற ஏடு அது. அதற்கும் எந்தவிதமான தொழில் குடும்பத்திற்கும் ஒரு தொடர்பும் இல்லை. அப்படிப்பட்ட ஒரு ஏடு. அதில் வெளியிட்டிருக்கிற ஒரு செய்தியை படித்துக் காட்ட விரும்புகிறேன் தங்கள் அனுமதியோடு

'Indeed we wonder what kind of a farmers' agitation it is that prompts farmers to cut down trees to block the highways and the village link roads. Such acts are unfarmer-like and those who

have sponsored the agitation have not shown due regard even to the damage that the agitation would do to the farmers themselves.

மேலும் சொல்கிறார்கள்.

'We quite understand the urge on the part of the Opposition Parties the Congress, in particular, to capture power, **but by** adopting wrong tactics they have let the country's sympathy go to the ruling D.M.K. instead of deriving any political or other advantage from such an agitation.'

என்று தெளிவாகக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறது. இன்னொரு ஏடு, இந்தியன் ஹெரால்ட். திரு. தங்கமணி அவர்கள் சுட்டிக்காட்டிய பட்டியலில் சேராத ஒரு ஏடு. அதிலிருந்து ஒரு குறிப்பை இம் மன்றத்தின் கவனத்திற்குச் கொண்டு வர விரும்புகிறேன். அவர்கள் தேசிய காங்கிரசைப்பற்றிக் குறிப்பிட்டு இறுதியாக ஒரு வாசகம் எழுதியிருக்கிறார்கள்.

'It is Congress participation in the bandh that is really unfortunate. It is, however, of a piece with the earlier utterances and actions of its leaders. When there was a strike in a group of companies in Madras, Union Ministers had gone there all the way from New Delhi, but instead of reasoning with the workers, they had merely added fuel to the industrial fire. Thereafter, Chief Ministers of far-off States had gone to Tamil Nadu and made **inflammatory speeches against the D.M.K. Government. The** Congress anxiety to dislodge the D.M.K. from power is both understandable and democratic, but the methods that is adopting are neither. If it is able to educate public opinion on the need for **a change of Government in Tamil Nadu, it will be past cavil. But** hitting below the belt is neither fair.'

இந்த ஏடுகளைச் சுட்டிக்காட்டுவதன் நோக்கம், நேற்று அவர்கள் முதலாளித்துவ ஏடுகள் என்பதனால் அவைகள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவு தருகிறது என்ற தவறான அடிப்படையில் அந்த ஏடுகளைப் பற்றி விமர்சித்தார்கள். இந்த விமர்சனத்தை அவர்கள் எதிர்காலத்தில் ஒத்துக் கொள்வார்களா என்று கேட்கிறேன். எக்கனமிக் டைம்ஸ், பைனான்ஷியல் எக்ஸ்ப்ரஸ், அம்ரித்பசார் பத்திரிகா போன்ற பத்திரிகைகள், அவர்களது பட்டியலில் சேராத பத்திரிகைகள், பல இருக்கின்றன. அவைகள் ஏறத்தாழ ஒருமித்த கருத்தைத்தான் இந்தப் பேராட்டம் சம்பந்தமாக அரசுக்கு ஆதரவாக எழுதியுள்ளன. திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சி என்பதற்காக எழுதப்பட்டவை அல்ல அவை. இந்திய அரசின் கையில்தான்

[திரு. செ. கந்தப்பன்] [1972 ஆகஸ்ட் 11

இந்தப் பத்திரிகைகளுக்கு கோட்டா வழங்கும் அதிகாரம் இருக்கிறது. ஆனால் இந்த மாதிரி அரசு அப் பத்திரிகைகளைக் கட்டுப்படுத்தக் கூடிய அரசு அல்ல. இந்த ஆட்சிக்கு எதிரான போக்கை எடுத்துக் கொண்டிருக்கிற சில ஏடுகள்கூட இப் போராட்டத்தில் நடுநிலை வகித்து அரசுக்கு ஆதரவான தலையங்கங்கள் எழுதியுள்ளன, செய்திகள் வெளியிட்டுள்ளன. அதை இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள அரசியல் தெளிவு உள்ளவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். ஆனால் தம் தமிழகத்தில் உள்ள ஏடுகள்தான், போராட்டத்திற்கு அருகாமையில் இருந்து கொண்டிருக்கிற ஏடுகள்தான், உண்மை நிலையை நன்கு புரிந்து கொண்டிருக்கிற ஏடுகள்தான் அரசியல் நோக்கத்தை மனதில் வைத்துக் கொண்டு உண்மையைத் திரித்து எழுதினார்கள் என்பதை நம்மால் புரிந்து கொள்ளமுடிகிறது. பல நேரங்களில் இங்கு பேசுகிற போது மாநிலசுயாட்சி கோரிக்கையைக் கூறி நிராவிட முன்னேற்றக் கழக மாநாடுகளில் பேசப்பட்ட கருத்துக்களை எடுத்துக் கூறி பிரிவினைக்கு அது வித்திடுகிறது என்று குறிப்பிட்டார்கள். வரலாற்றுச் செய்திகளை சொல்வதைக் கூட கண்டித்து, அதுபோன்ற வரலாற்றுச் செய்திகளைச் சொல்வது மறைமுகமாக பிரிவினைக்குத் தூண்டுவதாகும் என்று சொன்னார்கள். 47-ல் சுதந்தரம் பெற்று 25-வது ஆண்டு வெள்ளிவிழாவைக் கொண்டாட இருக்கிறோம். நாடு சுதந்திரம் அடைந்த இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான் 49-ல் நான் சார்ந்திருக்கிற இந்த இயக்கம் தோன்றி வளர்ந்தது. மிகவும் வேகமாக வளர்ந்தது. நியாயமான வாதங்களை அடிப்படையாகக் கொண்டு வளர்த்துள்ள இயக்கம் எங்கள் இயக்கம் என்பதை இந்தியத் துணைக் கண்டம் ஏன் உலகமே ஒத்துக் கொண்டிருக்கிறது. ஆர்வத்தோடு நம்மைப் பார்க்கிறார்கள். சில கோணங்களில் ஆச்சரியத்தோடு கூட நம்மைப் பார்க்கிறார்கள்.

வளர்ச்சி கட்டம் விரிவாகிக் கொண்டே இருந்த நேரத்தில், மாநில சுயாட்சி பிரச்னை வடிவு எடுத்த நேரத்தில் டெல்லி பாராளுமன்றத்தில் இந்த வாதங்கள் எழுப்பியது பற்றி எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. பிரிவினைக் கோரிக்கையை கைவிட்ட பிறகு பார்லிமென்டில் ஒரு முறை மொரார்ஜிதேசாய் அவர்கள் துணைப் பிரதமராக இருந்த நேரத்தில் இந்தப் பிரச்னையைப் பற்றி ஒரு வாதம் வந்தபொழுது, தி.மு.க. உறுப்பினர்களைப் பார்த்த வண்ணம் சொன்னார்கள் 'நீங்கள் எவ்வளவுதான் முயற்சித்தாலும், இந்தி இந்த நாட்டின் ஆட்சி மொழியாக வந்து தான் தீரும்' என்று குறிப்பிட்டார்கள். அப்பொழுது பாராளுமன்றத்தில் நான் எழுந்திருந்து சொன்னேன், 'அப்படி வந்துவிட்டால் இந்தியா இருக்காது' என்று குறிப்பிட்டேன். அன்றைக்கு இந்திய அரசியல் சட்டத்தின் கீழ் இருக்கிற ஒரு சில சட்டங்களின் கீழ் அந்த வாசகம் தவறுன

1972 ஆகஸ்ட் 11] [திரு. செ. கந்தப்பன்]

வாசகமாகும். ஆனால், எந்தச் சந்தர்ப்பத்தில், எந்த அடிப்படையில், எந்த வாதத்தில் என்று பார்க்க வேண்டும். ஒரு சில வார்த்தைகளைச் சொன்னதாலேயே பெரிய இந்தியா என்கிற கற்கோட்டை இடிந்துவிடும், அதிர்ந்து விடும், வார்த்தைகளினால் அந்தக் கட்டடம் அதிர்ந்து விடும் என்று எண்ணினால், இந்திய நாட்டைப்பற்றி நினைப்பவர்கள் இவ்வளவு பலஹீனத்தனமாக இருக்கிறார்களே என்றுதான் பரிதாபப்படுகிறேன்.

இருபத்தைந்து ஆண்டு காலமாக உருவாக்கப்பட்ட இந்த நாட்டின் ஒற்றுமை சாதாரணமாக அடிப்படை வாதங்களை எழுப்பினால் அதிர்ந்து விடும் என்று நினைப்பது அவர்களுடைய பலஹீனத்தைத் தான் காண்பிக்கிறது. உண்மையை எடுத்துச் சொல்வதற்கு அஞ்சுகிறார்கள். கண்மூடித்தனமான வாதங்கள் என்று மனப்பால் குடிக்க ஆசைப்படுகிறார்கள். நடைமுறையில் என்ன இருக்கிறது? 1947-க்குப் பின்னாலே இந்திய துணைக்கண்டம் அரசியல் சட்டம் வந்த பிறகு மாநிலவாரியாகப் பிரச்னைகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. மாநிலங்களுக்கு இடையே கூட பிரச்னைகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. மாநிலங்களுக்கு இடையே நதிப் பிரச்னை, நீர் பங்கீடு பிரச்னை சில மாநிலங்களில் இன்னும் தீர்க்கப்பட வில்லை. இல்லாத இடங்களில் கூட அந்தப் பிரச்னைகள் தோற்றுவிக்கப்படுகின்றன. தொழில்சங்கத் தகராறுகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. இல்லாத இடங்களில் தோற்றுவிக்கப்படுகின்றன.

அதைப்போல நாடாளுமன்றத்தில் ஒரு முறை தடந்ததைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் ரிகார்டு பூர்வமாகச் சொல்கிறேன். பல நண்பர்கள் தங்கள் மாநிலங்களைப் பற்றிப் பேசுகிறபொழுது தங்கள் தங்கள் மாநிலம் புறக்கணிக்கப்பட்டதாக ஒரு முறை பேசினார்கள். அப்பொழுது திரு. சவான் அவர்கள் பாராளுமன்றத்தில் 'ஏதோ மாநில நண்பர்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படியானால் மத்திய அரசின் வருமானம் எங்கே போகிறது' என்று ஒரு கேள்வியைக் கேட்டார்கள். அப்பொழுது சில நண்பர்கள் குறிப்பிட்டார்கள். அரசியல் அமைப்பைப் பார்த்தால் ஏதோ மாநிலங்களிடையே அதிருப்தி ஏற்படுகிறது; அத்த அளவுக்கு அரசியல் அமைப்பில் ஏதோ கோளாறு இருக்கிறது, ஒவ்வொரு வரும் தன்னுடைய மாநிலம் வஞ்சிக்கப்படுவதாக நினைக்கிறார்கள், மத்திய அரசு என்ன தான் செய்கிறது, பணம் தவறுகச் செலவழிக்கப்படுகிறதா, நிர்வாக வகையில் பணம் ஒழுகிப் போகிறதா என்ற சூழ்நிலை ஏற்படுகிறது என்றெல்லாம் கேட்டார்கள். உலகத்தில் நடு நிலைமையாக உள்ளவர்கள் என்று ஒத்துக்கொள்ளக் கூடிய அரசியல்வாதிகள் ஒத்துக்கொள்கிற பிரச்னைகள்,

[திரு. செ. கந்தப்பன்] [1972 ஆகஸ்ட் 11

அப்படிப்பட்ட பிரச்னைகள், வாதங்கள் எழுப்பப்படுகின்றபொழுது, வரலாறு களைச் சொல்லும்பொழுது, வரலாற்றுச் சான்றுகளைச் சொல்லும்பொழுது, நடைமுறைச் சான்றுகளைச் சொல்லும்பொழுது, அரசியல் நோக்கத்தோடு வேண்டும் என்றே அது தான் எதோ பெரிய பிரிவினை பூதம் என்று பேசப்படுகிறது, எதிர்க்கட்சி நண்பர்களால்.

மதுரை மாநாடு நடந்தது, தர்மபுரி மாநாடு நடந்தது. எந்த மகா நாடாக இருந்தாலும், மாநாடு முடிந்த பிறகு தமிழகத்தில் சில எடுகள் சூற்றச்சாட்டுக் கூறவேண்டுமென்றே திட்டமிட்டு குற்றச்சாட்டுக்காக இன்னென்னர் இப்படி இப்படி பேசினர்கள் என்று ஒரு தவி காலமே ஒதுக்குகிறார்கள். சில நண்பர்கள் சொன்னபடி கோரசாக எல்லோரும் அதைப்பற்றிச் சொல்கிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசியல் நோக்கமே தவிர, வேறு எந்த நோக்கமும் இதற்குச் சொல்ல முடியாது. அரசியல் நோக்கம் தவிர வேறு எந்த நோக்கம் இருக்க முடியும்? ஜனநாயகத்தின் அடிப்படையே வாதப் பிரதிவாதங்கள் தான். அரசியல் கருத்துக்களோ, வாதங்களோ எழுப்புவதற்கு நீங்கள் அஞ்சுகிறீர்கள், பயப்படுகிறீர்கள் என்று சொன்னால் உங்களுடைய அடிப்படையே பலஹீனமானது என்பதை உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முன்னாலே துரைமுருகன் அவர்கள் சொன்னமாதிரி வேறு பிரச்னைகளை அதிகமாகச் சொல்கின்ற அளவுக்கு இங்கே வாதங்கள் எழுப்பப்படவில்லை என்பது உண்மை.

ஒன்றுமட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சமீபத்தில் உத்திரப் பிரதேசத்தில் துப்பாக்கிச் சூடு பிரச்னை வந்தபொழுது அந்த மாநில முதல் அமைச்சர் அங்கிருக்கிற போலீஸ் படையை ஸ்டார்ம் போர்ஸ், தாக்குகின்ற படை என்று சொன்னதாக அந்தச் செய்தி பல்வேறு ஏடுகளிலே வந்திருக்கிறது. தமிழகத்தில் தாக்குகின்ற படை இல்லை என்பது மட்டும் அல்ல. நல்ல வேளையாக முன்பு முதல் அமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் விரும்பாமல் போனாலும் கூட, தமிழகத்தின் நல்ல காலம், அண்ணா மலர்ந்து, கலைஞர் மிளிர்ந்த காலத்தில் போலீஸ் படை என்பது மாறி அது காவல் படை என்று அழைக்கப்பட்டது. தாக்குகின்ற படை தமிழகத்தில் இல்லை. காவல் படை தான் இருக்கிறது. ஸ்டார்ம் போர்ஸ் அல்ல.

ஆயிரக்கணக்கான உதாரணங்கள் கொடுக்கலாம். மாற்றுக் கட்சி அருமை நண்பர்கள் கடந்த இரண்டு நாட்களாகப் பேசியிருக்கிறார்கள். ஒரு நண்பர் சொல்கிறார், தி.மு.க. ஆயுதம் வைத்திருந்தது என்று சொன்னார். சைக்கிள் செயின் வைத்திருந்தார்கள், குண்டாந்தடி வைத்திருந்தார்கள், போலீசோடு சேர்ந்து கொண்டு அவர்கள் சில காரியங்களை செய்தார்கள் என்று எதிர்க்

1972 ஆகஸ்ட் 11] [திரு. செ. கந்தப்பன்]

கட்சி நண்பர்கள் சொன்னார்கள். ஒரு நாளைக்குக் கூட ஏதோ ஒரு விஷயத்தை சுட்டிக்காட்டி தி.மு.க.-வைச் சேர்ந்தவர்கள் ஆயுதம் தாங்கி இந்தக் கூரியங் களைச் செய்தார்கள் என்று கோடிட்டுக் கூடப் பேசவில்லை. பொத்தாம் பொது வாகப் பேசப்பட்டது. தாக்குதலுக்கு உடந்தையாக நடந்து கொண்டது முன்னேற்றக் கழகம் என்று பேசினார்கள். எங்கள் தரப்பைச் சேர்ந்த துரை முருகன் தெளிவாகச் சுட்டிக்காட்டினார். மூன்று பிணங்கள் தி.மு.க.-வில் விழுந்தது. அந்தப் பிணங்களைத் தாக்கியது யார் என்று கேட்டார்? எங்கள் தோழர்கள் சாகக்கூடிய முறையில் தாங்களா தாக்கியிருப்போம்' என்று கேட்டார். அந்தக் கருத்தை இதுவரையில் நண்பர்கள் மறுத்துச் சொல்ல வில்லை. மறுக்கவும் முடியாது.

மிக சாமர்த்தியமாக ஒரு வாதத்தை எதிர்க் கட்சி நண்பர்கள் எடுத்து வைக்கிறார்கள். கலைஞர் ஒரு ராஜதந்திரி, தி.மு.க.வினர் நன்றாகப் பேசத் தெரிந்தவர்கள் என்றெல்லாம் சொல்கிறார்கள். எங்களிடம் இவர்கள் ஒரு வகையில் வல்லுநர்களாக இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் ஒத்துக்கொள்கிறேன். காரணம், அவர்கள் மீது இருக்கும் குற்றத்தை எடுத்துச் சொல்வதற்கு முன்னதாக, அவர்கள் மிக நல்லவர்கள் போல ஆகி, எங்கள் மீது குற்றத்தைச் சாட்டுகிறார்கள். சாதாரணமாக நமக்கெல்லாம் தெரியும். சைக்கிளில் செல்பவர் தெருவில் போகும்பொழுது யார் மீதாவது ஏற்றி, அதனால் அவர் கீழே விழுந்துவிட்டால், அந்த சைக்கிளில் வந்தவர் மிக சாமர்த்தியமாக சொல்வார். அடிபட்டு கீழே விழுந்தவர் எழுந்திருப்பதற்கு முன்பே, கைக்கிளில் வந்தவர் 'இப்படியா கண்மூடித்தனமாக வந்து கைக்கிளில் விழுவது' என்று ஆக்ரோஷமாகப் பேசிவிடுவார். அதனால் விழுந்தவன் தான் தான் தப்பு செய்து விட்டோமோ என்று கொஞ்சம் ஒதுங்கிக் கொண்டாலும் ஒதுங்கிக் கொண்டுவிடலாம். அதைப்போல தி.மு.க. ஒதுங்கிக்கொள்ளும் என்று கருதவேண்டாம். அப்படிக் கருதிக்கொண்டு குற்றம் சாட்டலாம் என்பதை மறந்துவிடுங்கள். தாங்கள் நியாயவாதிகளாக மாறி, தி.மு.க.-வை குற்றம் சாட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். படை நடத்துவதில் முந்திக் கொண்டு தாக்குவது என்று ஒரு தத்துவம் உண்டு, மாற்றான் தாக்கிய பிறகு அவனைத் தாக்குவதற்கு முயற்சி எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக நாமே முந்திக் கொண்டு அவனைத் தாக்குவது என்பது போரில் ஒரு நல்ல முறை. அந்த மாதிரி முறையை மாற்றுக் கட்சியினர் கடைப்பிடிக்கிறார்கள். நாங்கள் அம்மாதிரி ஏமாளிகளாக இருந்து கொண்டிருப்போம், தயார் இல்லாமல் இருப்போம் என்று நீங்கள் கருதிக்கொள்ள வேண்டாம். மக்கள் சக்தியால் கட்டப்பட்டது தி.மு.க. மக்கள் வேர்வை இதற்கு நீராக இருக்கிறது. மக்களுடைய ரத்தம் உரமாக இருக்கிறது. பல பேர் தியாக ரத்தத்தினால் கட்டப்பட்ட கோட்டை

இது. நியாயத்தின் அடிப்படையில் கட்டப்பட்ட கோட்டை இது. எண்ணிக் கையைப் பொறுத்து கட்டப்பட்ட கோட்டை அல்ல. நியாயமான கருத்துக்களை வைத்து கட்டப்பட்ட கோட்டை இது. மன்றுடியார் தோட்டத்தில் மலர்ந்த கூத்தலில் சூடுகிற மலர் அல்ல இது. குப்பையில் கிடந்த குண்டுமணி. மன்றுடியாரைப் போல் ஆயிரம் மன்றுடியார் வந்தாலும் எங்களை தகர்க்க முடியாது என்று இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஒரே ஒரு கருத்தை மட்டும் இறுதியாக நான் ரெகார்டுக்காகச் சொல்ல விரும்புகிறேன். முன்னாள் பி.சோ. கட்சியைச் சேர்ந்த சுப்பிரமணியம் அவர்கள் இப்பொழுது இந்திரா காங்கிரஸ் கட்சியில் இருக்கிறார். அந்த நாரீசுவர கவுண்டர் மாவட்ட கமிட்டித் தலைவராக இருக்கிறார். அவர் கீழே இருக்கிற காரணத்தினால், நண்பர் சுப்பிரமணியம் அவர்கள் அவரை ஆதரிக் கிறார். அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அவர் இப்பொழுது இங்கே இல்லை என்பது தான் என்னுடைய வருத்தம். இருந்தாலும் இந்தக் கேள்வியை ரெகார்டுக்காக இங்கே சொல்வது பொருத்தம் என்று கருது கிறேன். அந்தநாரீசுவர கவுண்டருக்கு 700 ஏக்கர் கொண்ட தோட்டம் இருக் கிறது. கடந்த 15, 16 ஆண்டுகளாக நண்பர் சுப்பிரமணியம் அவர்களும், அவருடன் இருக்கிற சுரேந்திரன் அவர்களும் பெரிய போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் போராட்டம் என்ன ஆயிற்று என்று இந்த நேரத்தில் கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைகின்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

4. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders*

196. Notification issued with G.O. Ms. No. 264, Co-operation, dated the 16th June 1972. in regard to an amendment to the **Tamil Nadu Money Lenders Rules, 1959. [Laid on the Table of the House, under section 22 (3) of Tamil Nadu Money Lenders Act, 1957 (Tamil Nadu Act XXVI of 1957).]**